# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் ன்றாம் சுற்றுத்தரமதிப்பீட்டில்A+(CGPA:3.64)தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல்தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி -630 003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# பி.லிட்.,- தமிழ்- இளங்கலை இலக்கியம்

## இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

## 10731 – சமய இலக்கியம்

Copy Right Reserved For Private use only

**Author :**
**Dr. K. MURUGESAN**
Assitant Professor and Head
Department of Tamil
Kongunadu Arts and Science College
Coimbatore - 641029

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**
**Dr. V. THIRUVENI**
Assistant Professor of Tamil,
Directorate of Distance Education,
Alagappa University,
Karaikudi -630003.

| எண். | பாடத்திட்டம் - பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | **பிரிவு 1: திருமந்திரம் - பாண்டிய நாட்டுப் பதிகங்கள்** | |
| கூறு 1. | திருமூலர் - திருமந்திரம் -திருமூலர் தம் வரலாறு கூறுதல் - கழக வெளியீடு (135 - 156) | 1 |
| கூறு 2. | ஆண்டாள் - திருப்பாவை முழுவதும் (30பாடல்கள்) | 12 |
| கூறு 3. | திருநாவுக்கரசர் - பாண்டிய நாட்டு பதிகங்கள் | 33 |
| கூறு 4. | திருவாலவாய் 'வேதியாவேத'- திருவாலவாய் - 'மூளைத்தானை' | 40 |
| | **பிரிவு 2: பதிகங்கள்** | |
| கூறு 5. | திருப்பத்தூர் 'புரிந்த அமரர்' | 47 |
| கூறு 6. | திருஇராமேச்சுரம் - 'பாசமுங்' | 54 |
| கூறு 7. | திருப்பூவணம் -'வடிவேறு'- என்று தொடங்கும் பதிகங்கள் ஆக 1 முதல் 27 பாடல்கள் | 60 |
| கூறு 8. | திருப்பூவணம் -'மாதமர்'- என்று தொடங்கும் பதிகங்கள் ஆக 28 முதல் 53 பாடல்கள் | 72 |
| | **பிரிவு 3: திருவாசகம்** | |
| கூறு 9. | மாணிக்கவாசகர் - திருவாசகம் - திருவார்த்தை (10 பாடல்கள்) | 84 |
| கூறு 10. | திருவாசகம் - எண்ணப்பதிகம் (10 பாடல்கள்) | 91 |
| கூறு 11. | திருவாசகம் – யாத்திரை பத்து (10 பாடல்கள்) | 95 |
| | **பிரிவு 4** | |
| | **சித்தர் - வள்ளலார் - மஸ்தான் சாகிபு - இரட்சண்ய மனோகரம்** | |
| கூறு 12. | குதம்பைச்சித்தர் பாடல்கள் (32 கண்ணிகள்) | 100 |
| கூறு 13. | சிவப்பிரகாசர் - சோணசைல மாலை (முதல் 30 பாடல்) - இராமலிங்க வள்ளலார் - தெய்வமணி மாலை | 109 |
| கூறு 14. | மஸ்தான் சாகிபு : பராபரக் கண்ணி – எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை : இரட்சண்ய மனோகரம் (முதல் 50 பாடல்கள்) | 150 |

**கூறு 1. திருமந்திரம்**

1.1. திருமந்திரம்-அறிமுகம்
1.2. குறிக்கோள்கள்
1.3. சிவன் சேவடி போற்றுவோம்
1.4. அம்பிகையின் திருவடி வணங்குதல்
1.5 பிறப்பின் காரணம் கூறுதல்
1.6. ஆணவமலம் ஒடுங்க வேண்டுதல்
1.7. தேவர்கள் வணங்கும் திருவடி
1.8. நிறைவான அருள் வேண்டுதல்
1.9. ஐந்தெழுத்து மந்திரம் ஓதுதல்
1.10. திருமுறைகளை அறிவித்த இறைவன்
1.11. திருவடிப் பெருமை சுட்டுதல்
1.12. தொகுத்துக் காண்போம்
1.13. சோதித்தறியும் வினாக்கள்
1.14. பயிற்சி வினா
1.15. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு 2. ஆண்டாள் - திருப்பாவை**

2.1 திருப்பாவை – அறிமுகம்
2.2 குறிக்கோள்கள்
2.3. பாவை நோன்பு கடைப்பிடித்தல்
2.4. மழை வேண்டிப் பாடுதல்
2.5. பாவை நோன்பு செய்வதற்குத் தோழிகளைத் துயிலெழுப்புதல்

2.6. தன் மகள்களை எழுப்பி விடுமாறு தாய்மார்களை வேண்டுதல்
2.7. முகில்வண்ணனைப் பாடும் பாடல் கேட்கவில்லையா?
2.8. புகழ் பாடுவதே நம் பணி
2.9. பெண்களின் உரையாடல்
2.10. பறை வேண்டுதல்
2.11. நப்பின்னையைத் துயில் எழுப்புதல்:
2.12. சரணாகதியை உணர்த்துதல்
2.13. திருமாலின் புகழ் பாடுதல்
2.14. கூடாரை வெல்லக்கூடியவன்
2.15. உனக்கே அடிமை செய்வோம்
2.16. தொகுத்துக் காண்போம்
2.17. சோதித்தறியும் வினாக்கள்
2.18. பயிற்சி வினா
2.19 மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-3**

**திருநாவுக்கரசர் - பாண்டி நாட்டுப் பதிகங்கள்**
**திருவாலவாய்ப் பதிகங்கள் (நான்காம் திருமுறை--திருநாவுக்கரசர்)**

3.1 திருத்தேவாரம் - அறிமுகம்
3.2 குறிக்கோள்கள்
3.3. காட்சி தருமாறு இறைவனை வேண்டுதல்
3.4. பிறவிப்பிணியை நீக்குமாறு வேண்டுதல்
3.5. அச்சத்தை நீக்குமாறு வேண்டுதல்
3.6. தொகுத்துக் காண்போம்
3.7. சோதித்தறியும் வினாக்கள்
3.8. பயிற்சி வினா
3.9. மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-4**

**திருஆலவாய்ப் பதிகம்**
**(ஆறாம் திருமுறை - திருநாவுக்கரசர்)**

4.1 திருவாலவாய் - அறிமுகம்
4.2. குறிக்கோள்கள
4.3 இறைப் பேரானந்தம் வேண்டுதல்
4.4. சிவனருளைச் சிந்தித்திருத்தல்
4.5. இறைவனின் திருத்தோற்றத்தைப் பாடுதல்
4.6. தேவாதிதேவனைச் சிந்தித்திருத்தல்
4.7. தொகுத்துக் காண்போம்
4.8. சோதித்தறியும் வினாக்கள்
4.9. பயிற்சி வினா
4.10. மேலும் பயில்வதற்கான நூல்.

**பிரிவு-2 பதிகங்கள்**

**கூறு-5 : திருப்புத்தூர்ப் பதிகம்**
**(ஆறாம் திருமுறை -திருநாவுக்கரசர்)**

5.1 திருப்புத்தூர் - அறிமுகம்
5.2 குறிக்கோள்கள்
5.3. திருப்புத்தூர்த் திருத்தளியின் சிறப்பு
5.4. இறைவனின் திருவிளையாடல்களைச் சுட்டுதல்
5.5. வினைகளைத் தீர்க்கும் இறைவன்
5.6. தொகுத்துக் காண்போம்
5.7. சோதித்தறியும் வினாக்கள்

5.8. பயிற்சி வினா
5.9. மேலும் பயில்வதற்கான நூல்.



**கூறு-6**

**திருவிராமேச்சுரப் பதிகம்**

**(நான்காம் திருமுறை -திருநாவுக்கரசா்)**

6.1 திருவிராமேச்சுரம் - அறிமுகம்
6.2 குறிக்கோள்கள்

குறிப்புகள்

6.3. பதிக வரலாறும் அறிமுகமும்
6.4. திருமால் அமைத்த திருவிராமேச்சுரத்தின் சிறப்பினைப் பாடுதல்
6.5. கடையனுக்கும் கடைத்தேற்றம் நல்கும் திருத்தலம்
6.6. அரக்கா்களை இறைவன் அழித்த தன்மையை நெஞ்சிற்குரைத்தல்
6.7. தொகுத்துக் காண்போம்
6.8. சோதித்தறியும் வினாக்கள்
6.9. பயிற்சி வினா
6.10. மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-7**

**7.1.திருப்பூவணப் பதிகங்கள்**

**(ஆறாம் திருமுறை - திருநாவுக்கரசா்)**

7.1.1. திருநாவுக்கரசரின் திருப்பூவணம் - திருஞானசம்பந்தரின் திருப்பூவணம் - அறிமுகம்
7.1.2 குறிக்கோள்கள்
7.1.3. திருப்பூவணப் பதிகம்
7.1.4. இறைவனின் திருத்தோற்றத்தைக் கண்டு பாடுதல்
7.1.5. நஞ்சுண்ட கண்டனாகிய இறைவன்
7.1.6. இராவணனின் ஆணவம் நீக்கிஅருள் புரிந்தமை
7.1.7. சிவனின் திருவிளையாடல்களைப் பாடுதல்

**7.2.திருப்பூவணப் பதிகம்**

**(முதல் திருமுறை -திருஞானசம்பந்தா்)**

7.2.1. திருப்பூவணத்தின் இயற்கை அழகைப் பாடுதல்
7.2.2. அடியாா்களுக்கு அருளும் தன்மையைப் பாடுதல்
7.2.3. அம்மையப்பராகக் காட்சி தருதல்
7.2.4. தேவாதிதேவா்கள் வணங்கக்கூடிய தலம்
7.2.5. தொகுத்துக் காண்போம்
7.2.6. சோதித்தறியும் வினாக்கள்
7.2.7. பயிற்சிகள் வினாக்கள்
7.2.8. மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-8**

**8.1.திருப்பூவணப் பதிகம்**

**(மூன்றாம் திருமுறை -திருஞானசம்பந்தா்)**

8.1.1 திருஞானசம்பந்தரின் திருப்பூவணப் பதிகம்-அறிமுகம்
8.1.2. குறிக்கோள்கள்
8.1.3. இறைவன் முப்புரங்களை அழித்தவன்
8.1.4. இறைவன் வேதங்களை அறிவித்தவன்
8.1.5. மாதொருபாகனாகிய கயிலை மலையான்
8.1.6. பிற சமயத்தாரைக் கடிதல்

**8.2.சுந்தரரின் திருப்பூவணப் பதிகம்**

**(ஏழாம் திருமுறை)**

8.2.1 சுந்தரா் திருப்பூவணத் தலப்பெருமை பாடுதல்
8.2.2. இறைவனின் திருமேனி வடிவம்
8.2.3. இராவணனை அழித்தவன்

8.2.4. இடபத்தை வாகனமாக உடையவன்

**8.3.கருவூர்த்தேவரின் திருப்பூவணப் பதிகம்**
**(ஒன்பதாம் திருமுறை)**

8.3.1. சோலைகளும் நீர்நிலைகளும் நிறைந்த தலம்
8.3.2. அடியார்களின் இன்னிசைப் பாடல்களுக்கு மயங்குபவன்
8.3.3. இறைவனின் பெருமையும் அடியாரின் சிறுமையும்
8.3.4. இறைவனின் கருணையை எண்ணிப் பாடுதல்
8.3.5. பதிகப்பயன் உரைத்தல்
8.3.6. தொகுத்துக் காண்போம்
8.3.7. சோதித்து அறியும் வினாக்கள்
8.3.8. பயிற்சி வினாக்கள்
8.3.9. மேலும் பயில்வதற்கான நூல்.

**பிரிவு-3**
**திருவாசகம் - மாணிக்கவாசகர்**
**கூறு-9 திருவார்த்தை**

9.1. திருவாசகம் - அறிமுகம
9.2. குறிக்கோள்கள்
9.3. இடவையில் அளித்த அருள்
9.4. வலை வீசிய அருட்செயல்
9.5. அடியார்களை ஆட்கொண்ட பெருமை
9.6. மண்டோதரிக்காக அருளிய தன்மை
9.7. பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த அருட்செயல்
9.8. வேற்றுமை கெடுத்து அருள் செய்த தன்மை
9.9. வலைவாணன் மகளை மணந்துத
9.10. துன்பம் நீக்கி என்னை ஆண்டது
9.11. வளையல் விற்ற திருவிளையாடல்
9.12 தொகுத்துக் காண்போம்
9.13. சோதித்து அறியும் வினாக்கள்
9.14 பயிற்சி வினாக்கள்
9.15 மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-10 திருவாசகம் - எண்ணப்பதிகம்**

10.1. எண்ணப்பதிகம்-அறிமுகம்
10.2. குறிக்கோள்கள்
10.3. அடியார்களுள் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுதல்
10.4. உன்னைப் பிரிந்து தரியேன் எனல்
10.5. உருக்கி உயிர் உண்ணும் இன்பம்
10.6. தொடர்ந்தேன் பிரிந்து ஆற்றேன்
10.7. புன்மையால் புறமானேன்; நாணுகின்றேன் எனல்
10.8. என் உள்ளே உன்னை நிறுத்தினேன்; இரங்குவாய் எனல்
10.9. தொகுத்துக் காண்போம்
10.10. சோதித்து அறியும் வினாக்கள்
10.11. பயிற்சி வினாக்கள்
10.12. மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-11 திருவாசகம் - யாத்திரைப் பத்து**

11.1. யாத்திரைப்பத்து-அறிமுகம்
11.2. குறிக்கோள்கள்
11.3. அன்பர்களே! அவன் கழல் புகுவோம்!
11.4. அவன் கழலையே எண்ணுவோம்
11.5. பொய் நீக்கிப் பொன் அடிக்கே செல்வோம்
11.6. அவன் திருக்குறிப்பைக் கடைப்பிடிப்பீராக

11.7. காலம் இனி இல்லை; ஒருப்படுமின்
11.8. நெஞ்சம் உருகி நிற்போம்
11.9. நில்லா உலகில் நில்லோம்
11.10. திருக்கதவம் திறந்துள்ளது
11.11. பொய்யை விட்டுச் செல்வோம்
11.12. இன்றே வந்து ஆள் ஆகாதீர் மருள்வீர்
11.13. தொகுத்துக் காண்போம்
11.14. சோதித்து அறியும் வினாக்கள்
11.15. பயிற்சி வினாக்கள்
11.16. மேலும் பயில்வதற்கான நூல்.

**பிரிவு-4**

**சித்தர் - வள்ளலார் - மஸ்தான் சாகிபு - இரட்சண்ய மனோகரம்**

**கூறு-12 - சித்தர் - குதம்பைச் சித்தர்**

12.1. குதம்பைச் சித்தர் - அறிமுகம்
12.2. குறிக்கோள்கள்
12.3. தவத்தின் சிறப்பைப் பாடுதல்
12.4. ஆசையை நீக்குக
12.5. எது ஞானம் என உணர்தல்
12.6. உண்மையான ஞானி என்பவர் யார்?
12.7. பற்று அற்று இருத்தலே சிறப்பு
12.8. முத்தி பெற்றவர்களின் சிறப்பு
12.9. புறப்பூசை வழிபாடுகள் தேவையில்லை
12.10 ராஜயோகம் அறிந்திருத்தல்
12.11. அகங்காரம் நீக்கியவர் ஞானி
12.12. தொகுத்துக் காண்போம்
12.13. சோதித்து அறியும் வினாக்கள்
12.14 பயிற்சி வினாக்கள்
12.15 மேலும் பயில்வதற்கான நூல்.

**கூறு-13**

**13.1.சிவப்பிரகாசர் - சோணசைல மாலை (முதல் 30 பாடல்கள்)**

13.1.1. சோணசைல மாலை மற்றும் தெய்வமணிமாலை – அறிமுகம்
13.1.2. குறிக்கோள்கள்
13.1.3. கருத்து விளக்கம்
13.1.4. சமயக்குரவர்களால் பாடப்பட்ட பெருமை
13.1.5. சிவத்தலங்களில் சிறப்புப் பெற்ற திருவண்ணாமலை
13.1.6. உடம்பினை நீக்கி இறையருளில் கலக்க விரும்புதல்
13.1.7. சிற்றின்ப ஆசைகளை நீக்கிப் பேரின்பம் காட்டுவாய்
13.1.8. என் கல்மனம் உருகவில்லையே
13.1.9. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும்
13.1.10. ஆணவ மலம் ஒடுங்க வேண்டுதல்
13.1.11. விசத்தை உண்டு தேவர்களைக் காத்த அருள்செயல்
13.1.12. உலகக் காட்டுக்களிலிருந்து விடுவிக்க வேண்டுதல்
13.1.13. அம்மையப்பராகக் காட்சி தருமாறு வேண்டுதல்
13.1.14. உடலின் மீது இருக்கும் பற்றை நீக்குவாய்
13.1.15. பிறவி வேர் அறுப்பாய்
13.1.16. அடியார் கூட்டத்தோடு தன்னையும் சேர்க்குமாறு வேண்டுதல்
13.1.17. அறியாமையைப் போக்குமாறு வேண்டுதல்
13.1.18. பிறை அணிந்த பெம்மானைப் பாடுதல்
13.1.19 இகழ்ச்சியும் புகழ்ச்சியும்
13.1.20. ஊனக் கண்ணும் ஞானக் கண்ணும்

13.1.21. மங்கையர்பால் மயக்கம் நீக்குவாய்
13.1.22. முருகனுக்கு ஒப்பான சிவனைப் பாடவேண்டும்
13.1.23. அடியார்களைக் காத்த பெருங்கருணை
13.1.24 எமபயத்தை நீக்கியருளி முக்தி தருவாய்
13.1.25. சுந்தரருக்காக இறைவன் தூது சென்ற பெருமையைப் பாடுதல்
13.1.26. சரணாகதியை அளிக்க வேண்டுதல்
13.1.27. பெண் மயக்கத்தைத் தீர்ப்பாய்
13.1.28. தேடிக் காண முடியாத திருவடிகள்
13.1.29. திருஞானசம்பந்தருக்கு அருள்புரிந்த தன்மையைத் தனக்கும் வேண்டுதல்
13.1.30. இறைவனைப் புகழ்ந்து பாடுதல்
13.1.31. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் அருளியமை
13.1.32. திருத்தொண்டு புரிய அருள் வேண்டுதல்
13.1.33. மலை வடிவ இறைவனை மலர்களால் அர்ச்சித்தல்

**13.2. இராமலிங்க வள்ளலார் - தெய்வமணி மாலை**

13.2.1. என்னுள் முருகா உன் திருவடி ஓங்கட்டும்:
13.2.2. தீயவர்களொடு சேராமல் காப்பாய்
13.2.3. உன்னை அடைய முடியாமல் தவிக்கிறேன்
13.2.4. உன்னையன்றி வேறு தெய்வமில்லை
13.2.5. குற்றங்கள் சேராமல் தடுப்பாய்
13.2.6. தூய மனம் தருவாய்
13.2.7. ஒளிநெறியைக் காட்டுவாய்
13.2.8. வாய்மையும் தூய்மையும் தருவாய்
13.2.9. அடியாரின் உறவு வேண்டும்
13.2.10. மயக்கத்தைத் தீர்ப்பாய்
13.2.11. மெய்ப்புகழ் பெற வேண்டுதல்
13.2.12. அடியவரை வணங்குவதே பேரின்பம்
13.2.13. திருவடிப் பெருமை
13.2.14. உடல் பற்றை நீக்குவாய்
13.2.15. நிலையான செல்வத்தை நாடும் மனம் தருவாய்
13.2.16. ஆசையைத் துறக்கச் செய்வாய்
13.2.17 பாடும் பணியைத் தருவாய்
13.2.18. அடியார்களின் மெய்யுள்ளம்
13.2.19. எனக்கு கதி நீதான்
13.2.20. அரக்கர்களை அழித்துத் தேவர்களைக் காத்தவன்
13.2.21. மனதை அடக்க வழி கூறுவாய்
13.2.22 அலைபாயும் மனதை அடக்குவிப்பாய்
13.2.23. குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய்
13.2.24. மெய்ப்பொருளும் அருள்நெறியும்
13.2.25. நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு உணர்த்துவாய்
13.2.26. பழவினைகளைத் தீர்ப்பாய்
13.2.27. எனக்கு எல்லாம் கிடைக்கும்
13.2.28. உன் அருள் வேண்டி நிற்கிறேன்
13.2.29. உன் திருவடிகளில் பற்றுக் கொள்ளச் செய்
13.2.30. வறுமையைப் போக்குவாய்
13.2.31. தொகுத்துக் காண்போம்
13.2.32. சோதித்து அறியும் வினாக்கள்
13.2.33. பயிற்சி வினாக்கள்
13.2.34. மேலும் பயில்வதற்கான நூல்.

## கூறு-14

### 14.1.மஸ்தான் சாகிபு - பராபரக்கண்ணி



14.1.1. பராபரக்கண்ணி – இரட்சண்ய மனோகரம் - அறிமுகம்
14.1.2. குறிக்கோள்கள்
14.1.3. பராபரத்தின் இயல்பும் இயக்கமும்
14.1.4. ஈடு இணையில்லாதவன் இறைவன்
14.1.5. என்னை இப்போதே ஆட்கொள்வாய்
14.1.6. உடல் நிலையற்றது
14.1.7. அனைத்தும் நீயே
14.1.8. உலகப் பற்றுக்களைக் களைந்து முத்தி தருவாய்
14.1.9. என் மீது இரக்கம் காட்டுவாய்
14.1.10. தீமைகளிலிருந்து என்னைக் காப்பாய்
14.1.11. கருணை காட்டுவாய்



### 14.2.இரட்சண்ய மனோகரம் - எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை

14.2.1. இரட்சண்ய மனோகரம்
14.2.2. உள்ளம் பெருங்கோயில்
14.2.3. கைவிடாமல் காத்தருள்வாய்
14.2.4. இறைவழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்துவாய்
14.2.5. அனைத்தும் உன் விருப்பமே
14.2.6. பாவங்களை மன்னித்து அருள்வாய்
14.2.7. எனக்கு அடைக்கலம் தருவாய்
14.2.8. உனக்குச் சேவை செய்ய அருள்வாய்
14.2.9. பாவங்களை மன்னித்து இரக்கம் காட்டுவாய்
14.2.10. தொகுத்துக் காண்போம்
14.2.11. சோதித்து அறியும் வினாக்கள்
14.2.12. பயிற்சி வினாக்கள்
14.2.13. மேலும் பயில்வதற்கான நூல்.

# பிரிவு-1-திருமந்திரம்-பாண்டியநாட்டுப்பதிகங்கள் -திருமூலர் - பாண்டி நாட்டுப் பதிகங்கள் கூறு:1- திருமூலர் தம் வரலாறு கூறுதல்

குறிப்புகள்

## 1.1. திருமந்திரம் - அறிமுகம்

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட தமிழ் சைவ சமயப் படைப்பு ஆகும். இந்நூல் மெய்யியல் நூல் வகையைச் சேர்ந்தது. சிவமே அன்பு, அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமந்திரம் தமிழ் ஆகம நூல் என்று அழைக்கப்படுகிறது. இந்நூலுக்கு திருமந்திரர் திருமந்திர மாலை என்று பெயரிட்டுள்ளார். தமிழ் மூவாயிரம் என்றும் அழைக்கப்படுகிறது. திருமந்திரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. இந்த உட்பிரிவானது தந்திரம் என்று அழைக்கப்படுகிறது. இதனில் 232 அதிகாரங்கள், 3100 செய்யுட்கள் உள்ளன. ”அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம் எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்” என்ற மற்றொரு பாடலால் அவர் எழுதியது பல கோடி பாடல்கள் என்பதும் நமக்குக் கிடைத்துள்ளது. மூன்றாயிரம் பாடல்கள் மட்டுமே என்பது ஆய்வாளர்களின் கருத்து. ”ஒன்றே குலம், ஒருவனே தேவன்...”என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்கச் செய்திகள் திருமந்திரத்தில் அழகாக திருமூலர் விளக்கியுள்ளார். ஆன்மிகம், மருத்துவம், அறிவியல், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை எனக் கூறலாம்.

தேவர் குறளும், திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும், முனிமொழியும் - கோவை
திருவாசகமும், திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்

என்பது ஔவையார் பாடல். திருக்குறள், நால்வேதங்கள், மூவரின் தேவாரம், மணிவாசகர் திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் ஆகிய 11 நூல்களின் கருத்தும் மனிதரைப் புனிதம் ஆக்கும் ஒரே வழியையே காட்டுகின்றன என்று ஔவையார் பாடியுள்ளதே திருமந்திரத்தின் சிறப்புக்குச் சாட்சியாகும். திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது. உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. திருமந்திரத்தில் திருமூலர் தம் வரலாற்றைக் கூறும் பகுதி இங்குப் பாடப்பகுதியாக (135 முதல் 16 வரையுள்ள பாடல்கள்) இடம்பெற்றுள்ளது

குறிப்புகள்

## 1.2. குறிக்கோள்கள்:

தான் பிறந்த காரணத்தைத் திருமூலர் தானே சுட்டிக் காட்டியுள்ள தன்மையைத் தெரிந்து கொள்வீர்கள்.

ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளாகிய பிறவாயாக்கைப் பெரியோன் சிவபெருமானை வணங்கினால் முன்னை வினை முழுவதும் கழிந்து போகும் என்றும், பதியாகிய இறைவனைச் சென்றடையத் தடையாக இருக்கின்ற மும்மலங்களை நீக்கி திருவருள் துணையோடு இறைவனடியைப் போற்றுவோம் என்றும் திருமூலர் வலியுறுத்துவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

தமிழ் வேதமறைகள் அத்தகைய வழிகாட்டுதலைச் சிறப்பாகக் காட்டுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 1.3. சிவன் சேவடி போற்றுவோம்:

**நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு**
**புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து**
**அந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்**
**சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே**

ஆலமர் செல்வனாம் நந்தியெங் கடவுளின் திருவடியினைத் தரைமேற் கொண்டு, கொண்டவாறே இறுப்பு மெய்யாம் புத்தியின்கண் நிலைபெறச் செய்து செந்தமிழ்ப் போற்றித்தொடர் புகன்று வழிபட்டு வளரும் மதியினைப் புனைந்த திருச்சடையினை உடைய சிவபெருமானை நாடொறும் உள்ளத்தின்கண்ணே நாடி உயிர்க்கு உறுதி பயக்கும் செந்தமிழ்ச்சிவாகமம் மொழியலுற்றேன் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

**செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்**
**அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்**
**தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே**

ஆருயிர்களை மாட்டுச் சிவப்பண்பு நிறைவதற்காம் வழிவகை ஆக்கும் கருவிநூல் சிவாகமம் எனப்படும். அம்முறையானே அருளிச் செய்தவன் ஆலமர் செல்வனாகிய நந்தியெம் பெருமான். அவன் திரு வடிப்புனை கொண்டு அப் பெயரே பெற்றுத் திகழுமாறு என்னைக் கொண்டும் இயற்றியருளினன், ‘நள்ளிருளிலும் நட்டம் நாதன் பயின் றாடலின்’ பொன்னம்பலமும் ஆருயிர்களின் நெஞ்சுத் தாமரையும் தப்பிலாமன்று எனத் தமிழகச் செந்நெறிச் சான்றோர் திருவருளின் திறத்தால் தொன்மையே நன்மையாக மொழிந்தனர். அத் திருக்கூத்தினை அவனருளால் கண்டபின் ஒப்பில்லாத அளவிலா ஊழிகள் அமர்ந்திருந்தேன்.

## 1.4. அம்பிகையின் திருவடி வணங்குதல்:

**இருந்தவக் காரணங் கேளிந் திரனே**
**பொருந்திய செல்வப் புவனா பதியாம்**
**அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்**
**பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே**

குறிப்புகள்

செம்பொருளின் துணிவாம் சித்தாந்த முதன்மை மாணவர் எழுவருள் ஒருவனாய் இந்திரனே! என்னைச் சிவபெருமான் தென்னாட்டின்கண் இருத்தியருளிய காரணம் கூறுகின்றேன். கேட்பாயாக, எல்லாவுலகங்கட்கும் தூமாயைச் செல்வ உலகத்துக்கு முழு முதல்வியாம் உடையாள் அருந்தவச் செல்வி எனப்படுவள். அவள் அனைத்துயிரும் சிவ வழிபாட்டுத் தவத்தினைக் கை ஏற்றுப் புரிதற்பொருட்டுத் தானே தவக்கோலம் தவத்தினைக் கை ஏற்றுப் புரிதல் பொருட்டுத் தானே தவக்கோலம் பூண்டு சிவவழிபாடியற்றி உணர்த்தியருளினள். அதனால் அருந்தவச் செல்வி எனப் பெயர் பூண்டனள். அவள் திருவடியை அடியேன் நீங்காப் பெருங்காதல் ஓங்குதலான் வழிபட்டு இருந்து வந்தனன்.

## 1.5. பிறப்பின் காரணம் கூறுதல்:

**மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்**
**நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு**
**முலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்**
**சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே**

திருமூல நாயனார் தம் மெய்கண்ட மாணவருள் ஒருவராகிய மாலாங்கரைப் பார்த்து அருளுகின்றனர் மாலாங்கரே! சிவவுலகை நீங்கி ஓங்கிய தென்தமிழ் நாட்டகத்துக்கு அருள் என்னைக் கொண்டு வந்த காரணம் கூறுகின்றேன் கேள். சிவபெருமான் திருமலைக்கண் அழகிய நீலவண்ணத் திருமேனியும், நேரிய பொன்மணி அணிகளும் பூண்ட அம்மையுடன் திருவைந்தெழுத்தே திருவுருவாகக் கொண்டு ஒலிமுடியும் நாதாந்தத்துச் செய்தருளும் திருக்கூத்தின் அடிப்படை உண்மைக் காரணங்களை மொழிந்தருளினன். அத்தகைய அருளொழுக்கு நிறைந்த தமிழ்முறையினை வேதமெனவும் சிவாகமம் எனவும் கூறுப அதைச் செப்புதற் பொருட்டே யான் வந்தேன் எனக் குறிப்பிடுகின்றார்.

**நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்**
**பேருடை யாளென் பிறப்பறுந் தாண்டவள்**
**சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை**
**சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே**

திருவாவடுதுறைக்கண் சிறந்த அணிகலன் அணிந்து விளங்கும் திருவருளம்மை உயர்வற உயர்ந்த ஒருபேரின்பத் திருப்பெயரினள், அடியேனுடைய பிறப்பினை அறுத்து ஆண்டவள் அவளே சிவனுடன் விட்டு நீங்காது இடப்பாகத்து ஒட்டியுறையும் சிப்பினையுடையவள். அத்தகைய எல்லாச் சிறப்பினையும் உடைய திருவளம்மையின் திருவடியினைச் சேர்ந்திருந்தேன்.

**சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்**
**சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை**
**சேர்ந்திருந்த தேன்சிவ போதியின் நீழலிற்**
**சேர்ந்திருந்த தேன்சிவன் நாமங்கள் ஓதியே**

சிவமங்கைதன் பங்கனாகிய சிவபெருமானைக் கூடியிருந்தேன். சிவனுக்குச் சிறப்பாக உடைய திருவாவடுதுறைக்கண் கூடியிருந்தேன். திருவாவடுதுறைத் திருக்கோயில்கண் மேல்பாலுள்ள திரு அரசமரத்து நிழலில் கூடியிருந்தேன். சிவன் திருநாமம் திருவைந்தெழுந்தென்ப அது 'நந்திநாமம் நமச்சிவாயவே' என்பதனால் உணரலாம். பண்டையோர் மந்திர எழுத்துக்களை மாத்திரை கூட்டியும் குறைத்துங் கடைக்குறைத்தும் கையாண்டு வந்தனர். அதனாலேயும் அது மறை எனவும் பெயர் பெற்றது. இவ்வுண்மை 'அவ்வுடன்' என்று தொடங்கும் சிவஞான சித்தியார் (4:1-1) திருப்பாட்டின்கண் சிவஞான முனிவர் உரைத்தருளிய உரையைக் கொண்டு உணரலாம். சிவ நாமங்கள் நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்பனவாம். இவை நன்னெறி நான்மைக்கும் முறையே உரிய மேன்மை மந்திரங்களாகும்.

## 1.6. ஆணவமலம் ஒடுங்க வேண்டுதல்:

**அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்**
**புகலிடத் தெம்மெய்யைப் போதவிட் டானைப்**
**புகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி**
**இகலிடத் தேஇருள் நிங்கிநின் றேனே**

அனைத்துலகின்கண் வாழும் எல்லாவுயிர்கட்கும் உயிர்க்குயிராய் நிற்கும் மெய்ப்பொருளை, எல்லா அண்டங்களும் மாயா காரியமாக வெளிப்படுதற்கு வினைமுதற் காரணமாய் நிற்கும் வித்தை என்றும் நின்று பொன்றாப் பேரின்பத்தினைத் தெவிட்டாதருளும் வீடு பேற்று நிலைக்களமான புகலிடத்தை அவ்விடத்து அருளால் அடியேனைப்பேற்று புகவிட்ட உண்மை அறிவின்ப வடிவினைப் பகலும் இரவும் ஓவாது பணிந்து தொழுது பெரும்பாலும் மாறுபாட்டினைத் தரும். இவ்வுலகத்திடத்து அருளால் ஆணவவல்லிருளினின்றும் நீங்கி நின்றேன் என்று பாடுகின்றார்.

## 1.7. தேவர்கள் வணங்கும் திருவடி:



**இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே**



அருளால் தரப்பெற்று நடமாடுந் திருக்கோவிலாகிய இவ்வுடம்பகத்தே அளவிலாக் காலம் சிவன் இருக்கச் செய்ய இருந்தேன் வாடகை வீட்டிலிருப்பார் இருப்பு வீட்டுக்குடையவர் கட்டளைப்படியே முட்டின்றி முடியும் என்பது இதற்கு ஒப்பு இராப் பகலற்ற இடமென்பது மறப்பு நினைப்பும் அற்று நெஞ்சம் வஞ்சமின்றிச் சிவன் திருவடிக்கே இடமாக இருப்பது எனவே மறவா நினைவுடன் இருந்தேன் என்பதாம். விண்ணாடவர் உற்ற போதெல்லாம் உன்னாடித் தொழும்பதம் திருவடி அத் திருவடியே புகலிடமாக இருந்தேன். என்னை ஆட்கொண்டருளும் நந்தியெங் கடவுளின் திருவடிக்கீழ் தாடலைபோல் ஒடுங்கி இருந்தேன் என்கின்றார்.

## 1.8. நிறைவான அருள் வேண்டுதல்:

**ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு**
**ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்**
**ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து**
**நானும் இருந்தேன்றற் போதியின் கீழே**

திருவடியுணர்வின் முதல்வியாக விளங்கும் திருவருளால் நந்திக்குரிய திருவாவடுதுறையின்கண் குற்றமற்ற ஒன்பது கோடி ஊழிகள் தவமிருந்தேன் திருமுறைச் செந்தமிழ்த் திருப்பாட்டுக்கள் ஓதிச் சிவபெருமானை வழிபாடாகிய அருச்சனையைப் புரிந்தேன். இத் திருமுறைகளே ஞானப்பால் என்க. அதனைச் சிவபெருமானுக்குச் சூட்டுதல் ஆட்டுதல் போதம விளைவிக்கும் நிலைக்களம் போதி. அ∴து அரசமரம் அறிவுக் கூறாம் பிள்ளையார் அரச மரத்தடியில் எழுந்தருளியிருப்பதும் இதனை வலியுறுத்தும் அடியேனும் அத்தகைய நல்ல போதி மரத்தின் கீழ் இருந்தேன் என்க. எனவே உளப்பான்மைக்குத் தக்கவாறே உறைவிடமும் நாடுவர் நிறையருளினர் என்பது துணிபு என்கிறார்.

**செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்**
**வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்**
**பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்**
**ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே**

நன்னெறியில் ஒழுகும் ஒழுக்கத்தால் திருவடியுணர்வு கைவரப் பெறும் அவ்வுணர்வால் நினைப்பில் தோன்றும் சித்தசன் என்னும் கருவேளை முனிந்து வெல்லுதல் கூடும். அவர்களே மிக்கோராவர்.

அவர்கள் சிவ முனிவர்கள் என்று அழைக்கப்படுவர். முனிவர் களாகவும் தேவர்களாகவும் அசுரர்களாகவும் மக்களாகவும் நாளும் வளர்ந்து பெருகும் இத் திறத்தார்மாட்டு நுண்ணிய வான் வழியாக அருள் துணைக் கொண்டு வந்தனன்.

**சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்**
**உத்தம மாகவே ஓதிய வேதத்தின்**
**ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி**
**அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே**

சிவபெருமான் திருவருளால் திருவடியுணர்வு கைவரப் பெற்ற மெய்கண்ட மேலோர் உள்ளத்தில் அமையும் நூல்களில் அமையும் நூல்களில் தலைமையாக இறைவன் எழுப்ப முறையாக எழுந்து ஓதப்பெறும் ஒண்தமிழ் மறைமுறையாகிய முன்னை வேதாகமங்களை ஒப்பச் சொல்லையும் பொருளையும் அடியேற்கு உள்நின்று அத்தன் அருளால் உணர்த்தியருளினன்.

**நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று**
**ஆய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்**
**ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்**
**தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே**

திருவடிப் பேற்றிற்கு நேர்வழியாயுள்ள நான்கினுள் நேர்ந்திடும் அடிப்படைச் சீலம் என்னும் சரியை நெறி இத்தன்மைத்தென்று ஆய்ந்தவர் கந்துரு காலாங்கி முனிவரும். கஞ்சமலையமான் முனிவரம் என்க. அவ்விருவர்களையும் நோக்கித் திருமூலர் அருளுகின்றனர். இச் சீலம் இந் நிலவுலகத்துத் தனிமுதற் சிவனெறியாகிய சுத்த சைவத்துக்கு ஆராய்ந்து கடைப்பிடிக்கும் உயிராம் என்பது பொருளாகும்.

## 1.9. ஐந்தெழுத்து மந்திரம் ஓதுதல்:

**நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே**

திருவருளால் திருவடியுணர்வால் அடியேன் பெற்ற இறவாப் பேரின்பம் இவ்வையகம் பெற்று இன்புறுமாக செந்நெறிச் செல்வர்களாகிய நற்றவத்தான் உயர்ந்தோர், இடையறாது பெருங் காதலால் பற்றி நின்ற விழுமிய முழுமுதற் சிவம் மறைப்பொருளாகும். அப்பொருளினை எய்தும் மெய்நெறி சொல்லிடின், ஊனாகிய நெஞ்சத்திடத்து ஓசை அருவாய் நிற்கும் அதன்பின் ஆருயிரின்கண் அவ்வோசை உணர்வுருவாய்த் திகழும் அம் மந்திரம் செந்தமிழ் நான்மறைச் 'சிவசிவ' இந்தத் தனிப்பெருந்

தமிழ்மறையினை ஆருயிர் இடையறாது அழுந்த அழுந்தக் கணிக்கக் கணிக்கத் திருவடியில் தலைக்கூடும்.





**பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்**
**சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி**
**மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை**
**உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே**

சிவன் பிறவா யாக்கைப் பெரியோனாதலின் பிறப்பிலி முதல்வன் எனப்படுவன். அவனை நந்தியென்னும் திருப்பெயரான் அழைப்பர். சிவவுலகத்தில் வாழும் வானவராகிய வழிப்பேற்றினர் சிறப்பொடு திருமுறையோதி வழிபடுவர் தம் நெஞ்சினுள் செந்தமிழ்த் திருமுறையாம். இத் திருமந்திரமாலையினைத் திருவடி உறைப்புடன் திருவருளுடன் கூடிநின்று மறவா நினைவுடன் இடையாறது ஒதுதலும் இயல்பாகும் என்பது பொருள்.

**சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்**
**மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்**
**இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி**
**உதாசனி யாதுட னேஉணர்ந் தேமால்**

அருளோனாகிய சதாசிவக் கடவுள் அருளிச் செய்தது என்றும் மாறா மெய்ம்மை மறை முப்பொருள் தேற்றும் தமிழ்மறை ஒருபுடையாக முத்தமிழினை முறையே உயிர் உள்ளம் உடல் என உலகியலிற் கொள்ளலாம். முத்தமிழ் - இயல், இசை, கூத்து. அவற்றையே வீட்டியலிற் கொள்ளுங்கால் இறை உயிர் தளை எனக் கொள்ளுதல் சாலும் இத்துணை நாளும் அளவாயுண்ணும் அமைவுடையவனாக விருந்தேன். முத்தமிழ் வேதத்துக்கு உறைவிடமாக உள்ளத்தினையே அமைத்தேன். அம் மறையினைப் புறக்கணிக்காது திருவருளுடன் கூடியுணர்ந்தோம்.

**அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்**
**எங்குமி காமைவைத் தானுல கேழையும்**
**தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்**
**பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே**

ஆருயிரின் உடலகத்து உணவினைச் செரிக்கத் தக்கவாறு அகட்டுத் தீ அமைத்தனன். அத்தீ அவ்வளவுக்கு மேல் மிகாமலிருப்பதும் அவன் திருவாணையே அதுபோல் கடலகத்தும் அது காலமல்லாக் காலத்தும் பொங்கி மிகுந்து, உலகத்தை அழித்துவிடாதபடி ஒரு தீயினை அமைத்தனன். ஆதனால் ஏழுலகமும் கேடின்றி நிலை பெறுவவாயின அதுபோல உலகத்தின்கண் ஆணவல்லிருள் மிகுந்து ஆருயிர்களின்

அறிவைத் தடைப் படுத்திப் பிறப்புக்கு ஆளாக்கும் தன்மை மிகாமைப் பொருட்டுத் தமிழ்த் திருமறையும் திருமுறையும் முறையே புகழ்நூல் பொருள்நூல் வகையான் அமைத்தருளினன். திருமறை – நால்வர் முதலிகள் முதலாயினார் அருளிய பதினொரு திருமுறைகள் திருமுறை- திருமூலர் சொல்லாகிய தமிழாகமமும் மெய்கண்ட நூல்களும் இங்ஙனம் அமைத்தருளினவன் மெய்ப்பொருளாகிய சிவன் என்க.

## 1.10. திருமுறைகளை அறிவித்த இறைவன்:

**பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்**
**கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க**
**பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்**
**அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே**

கற்பன கற்றுத் திருவருள் துணையால் பொற்புற நிற்பார் புலவரெனப் படுவார். 'தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகைய' ராகிய நல்லொழுக்கினர் புலவர் அப் புலவரே பண்டிதர் எனப்படுவர் பண்டைக் காலத்து மொழிகளுள் துணையாந்தன்மை வாய்ந்த மொழி பதினெட்டு. பதினெட்டு மொழிக்கண்ணும் கூறப்படும் பொருட் கருத்தினை உள்ளவாறுணாவார் பண்டிதரென்க. அப் பதினெட்டு மொழிகளையும் தக்கார் வாயிலாக அருளிச் செய்தவன் அனைத்தண்டங்கட்கும் முதல்வனாய் விளங்கும் அரன் என்னும் திருப் பெயரினையுடைய சிவபெருமான்.

**பின்னைநின் றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே**

'அயல் வழக்கின் துறைவெல்லும் அசைவில் செந்தமிழ் வழக்கே' திருவடியுணர்வைக் கூட்டுவிக்கும் அருள் வழக்காகும். அத்தமிழ் வழங்கும் நாடே சிவனடி சேர்ப்பிக்கும் நற்றவம் புரிதற்கேற்ற பழநாடாகும். இந் நாட்டகக்கத்துத் தோன்றி முன்னமே நன்னெறி நான்மை நற்றவத்தினை முயன்று செய்கிலாதவர் பின்னும் பிறப்பெடுத்தத் துன்புறுவர். என்னே அவர்தம் பேதைமை சிவபெருமான் என்னை நன்றாகப் படைத்தருளினன் தன்னை ஏனையார் திரிபின்றி உள்ளவாறு உணர்ந்து உய்தற்குக் கருவியாகிய செந்தமிழ்த் திருமுறையினை ஓதி வழிபடுதல் வேண்டும் எனத் திருவுள்ளங் கொண்டனன் சிவன். அத்தகைய தமிழ் அருள் நூலை அடியேனைக் கொண்டு பாடுவிக்கவும் எண்ணினன். அங்ஙனமே என்னைத் 'தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு' இருத்தியருளினன் தமிழ் பரப்பியவர் ஆளுடைய பிள்ளையார் என்று குறிப்பிடுகின்றார்.

## 1.11. திருவடிப் பெருமை சுட்டுதல்:

குறிப்புகள்

**பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற**
**தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்து**
**அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்**
**நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே**

பெற்றமாகிய ஆனேறும் மானும் மழுவும் பூண்டது திருவருளோடும் ஆருயிரோடும் அனைத்துலகோடும் பிரிவற்றுப் பின்னலாய் நின்றளும் சிவபெருமானின் திருவணையாகும். மேலும் இவை திருவடி தலைக் கூட்டும் அறமும் அவ்வறத்தினை அறிவூட்டும் செறிதமிழ்மறை முறையாகிய மெய்ந்நூலும், அந் நூலின் வழி ஒழுகுவதற்கு உறுதுணையாகிய படைப்பு காப்பு துடைப்பு ஆகிய முத்தொழில் ஆணையும் குறிப்பனவாகும். இதனால் அறத்தைச் செலுத்துபவனும், மறையின் ஒலிக்குள் ஒலியாய் நிற்பவனும், அயன் அரி அரன் என்னும் மூவர்க்கும் திருவாணை அருள்பவனும் சிவனே என்பது தெளிவாகும். இயங்குதிணை நிலத்திணை என்னும் இருவேறுயிர்களின் மெய்ம்மையினையும் உணர்த்தியருளினன். அடியேன் முடியின்மீது தன் திருவடியினையும் சூட்டியருளினன் அவன் எங்கள் நந்திக் கடவுளாகிய சிவனே.

.

**நேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை**
**மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை**
**ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர**
**வீயத்தை முற்றும் விள்ககியிட் டேனே**

நேயமாகிய அறியப்படும் பொருளையும், ஞானமாகிய அறிவையும், ஞாதுருவாகிய அறிவோனையும், உணர்வு மெய்யாகிய தூவா மாயையையும், உடல் மெய்யாகிய மூலப் பகுதி என்ற மாயத்தையும், உணர்த்து மெய்யாகிய தூமாயை ஆதலால் அம் மாமாயையையும், வனப்பாற்றலாகிய பரைத்தொகுதியையும். கடந்து, மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனாகிய அழிவில்லாத முழுமுதல் விழுப்பொருள் சிவன் அச் சிவனை அவனருளால் அவன் தாளுணர்த்த முழுதும் விளக்கியிட்டேன். இதன்கண் விளக்கப்பட்ட பொருள் எட்டு. அவை முறையே அறியப்படும் பொருள், அறிவு, அறிவோன், உடல் மெய், உணர்வு மெய், உணர்த்து மெய், வனப்பாற்றல், சிவன் என்ப அறியப்படும் பொருள் நிலையிலாப் பொருள் நிலைப்பொருள் என இருவகைய அவற்றுள் நிலையிலாப் பொருள் சுட்டுணர்வால் காணப்படும் உலகு உடல் முதலியன நிலைப்பொருள் சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் காணவொண்ணாத ஆனால் முற்றுணர்வால் காணவொண்ணும் இறை அருள் உயிர் முதலியன. அறிவு சுட்டறிவு, சிற்றறிவு, முற்றறிவு என மூவகைப்படும்.

சுட்டறிவு என்பது உயிர் மாயாகாரிய அகப்புறக் கருவிகளைத் துணைக்கொண்டு மாயாகாரியப் பொருள்களை உணர்தல் சிற்றறிவென்பது இக்கருவிகளைக் கொண்டு உணரும் நான் இக்கருவிகளுக்கு வேறான அறிவுப்பொருள் என்று உள்நின்று அருள் உணர்த்த உணர்தல் முற்றறிவென்பது சிவ பெருமான் சிவகுருவாய் எழுந்தருளி வந்து சிவமாக்கி ஆட்கொண்டதும் திருவருளே கருவியாய்த் திருவடியை உணர்தல் அறிவோன் என்பது என்றும் அடிமையாய்ச் சார்ந்ததன் தன்மையாய் நின்று பயன்துய்க்கும் ஆருயிராகும். உடல்மெய், இருப்பத்துநான்கு தத்துவங்களைக் கொண்டது உணர்வுமெய். ஏழு தத்துவங்களைக் கொண்டது உணர்த்துமெய் ஐந்து தத்துவங்களைக் கொண்டது. வனப்பாற்றல் திருவருளாகிய உண்மை இயற்கைப் பேரறிவுப் பெரும்பொருள் சிவன். அத் திருவருளை உடைய திருவடிப் பேரின்பத்தை ஆருயிர்க்குக் காட்டிக் கண்டு ஊட்டிவரும் ஒப்பில்லாத விழுமிய முழுமுதலாம் உண்மை அறிவு இன்ப எழிலுருவினன்.

**விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி**
**அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி**
**துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து**
**வளப்பில் கயிலை வழியில்வந் தேனே**

மேலோதியவற்றை விளக்கியருளியவன் மேலாகிய மெய்யுணர்வுப் பேரொளி அவன் அளவில்லாத பெருமையையுடையவன் இன்ப வடிவினனாகிய நந்தி ஆருயிர்களை நடுங்கச் செய்யும் ஆணவ வல்லிருனை அவ்வுயிர்களாலேயே அடக்கும் அருட்பெருங் கூத்தன் அவன் செவியறிவுறுத்திய திருவைந்தெழுத்தினைச் சிறப்புற உணர்வில் பதித்து, அவன் திருவாணைவழி வளப்பம் மிக்க திருக்கயிலைமலையின்கணுள்ள நந்தி மரபில்யான் வந்தேன்.

**நந்திஅரு னாலே மூலனை நாடிப்பின்**
**நந்திஅரு ளாலே சதாசிவ னாயினேன்**
**நந்திஅரு னால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்**
**நந்திஅரு ளாலே நானிருந் தேனே**

நந்தியாகிய சிவபெருமான் திருவருளால் மூலன் உடம்பினுட் புகுந்தேன் பின்னும் அந் நந்தியருளாலேயே ‘சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேத’ மாகலின் இத் தமிழாகமத்தை ஓதினேன் என்னை? அருளோனாகிய சதாசிவ மெய்யினின்றும் நூல் வருதல் வாய்மையாகலினென்க. தமிழாகமம் ஓதுதலே சதாசிவாதல் அவனருளாலேயே திருவடிப் பேற்றின்பமாகிய அம்மையினை இம்மையே பெற்றுள்ளேன். அந் நந்தியெங்கடவுள் திருவருளானே இவ் வுலகத் திருத்துள்ளேன் எனக் குறிப்பிடுகின்றார்.

## 1.12. தொகுத்துக் காண்போம் :

இந்த மண்ணுலகத்தில் தான் பிறந்த காரணத்தைத் தானே சுட்டிக் காட்டியுள்ளார் திருமூலர்

ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளாகிய பிறவாயாக்கைப் பெரியோன் சிவபெருமானை வணங்கினால் முன்னை வினை முழுவதும் கழிந்து போகும் என்றும், பதியாகிய இறைவனைச் சென்றடையத் தடையாக இருக்கின்ற மும்மலங்களை நீக்கி திருவருள் துணையோடு இறைவனடியைப் போற்றுவோம் என்றும் திருமூலர் வலியுறுத்துவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

தமிழ் வேதமறைகள் அத்தகைய வழிகாட்டுதலைச் சிறப்பாகக் காட்டுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 1.13. சோதித்தறியும் வினாக்கள்:

1. திருமூலர் தன் பிறப்பின் காரணத்தை எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
2. சிவபெருமானின் திருவடிப் பெருமையை ஆசிரியர் எவ்வாறு புலப்படுத்துகின்றார்?
3. மும்மலங்களின் தன்மைகளைத் திருமூலர் எவ்விதம் தெளிவாக்குகின்றார்?
4. தமிழ் வேதமறைகளின் மேன்மைகளை ஆசிரியர் உணர்த்தும் தன்மையை எழுதுக.

## 1.14. பயிற்சி வினா:

1.திருமூலர் தன்வரலாற்றை கூறும் நிலையில் வெளிப்படும் சிவப்பரம்பொருளின் இறையியல்புகளைப் புலப்படுத்துக.

## 1.15. மேலும் பயில்வதற்கான நூல்:

1.திருமூலர், திருமந்திரம் (விளக்கவுரை) கழக வெளியீடு, சென்னை, 1982.

குறிப்புகள்

# கூறு-2 ஆண்டாள் - திருப்பாவை

## 2.1.திருப்பாவை – அறிமுகம்

பெரியாழ்வார் நந்தவனத்தில் துளசிச் செடிக்கருகில் ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்து, அக்குழந்தைக்குக் 'கோதை' எனப் பெயர் இட்டு வளர்த்து வந்தார். கோதை திருமால் மீது காதல் கொண்டு, நாள்தோறும் திருமாலுக்காகக் கட்டப்படும் மாலையைத் தான் அணிந்து பின்னர் திருமாலுக்கு அணிவிக்கத் தந்தார். இதனை அறிந்த பெரியாழ்வார் கோதையைக் கண்டித்தார். திருமால், பெரியாழ்வார் கனவில் தோன்றி, 'நின்மகள் சூடிக் கொடுத்த மாலையே எனக்கு மகிழ்வுதரும். அப்படியே செய்க' என்றார். அதனால் கோதைக்குச் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்ற பெயரும் ஏற்பட்டது. பின்னர் பெரியாழ்வார் திருமாலின் வேண்டுகோளின்படி திருவரங்கத்திற்குத் தம் மகளை மணக்கோலத்துடன் அழைத்துச் சென்றார். கோதை இறைவனுடன் இரண்டறக் கலந்தார். ஆண்டாள் பாடியவை திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் ஆகும். ஆண்டாளின் பாடல்களைப் 'பள்ளமடை' என்றும், பிற ஆழ்வார்களின் பாடல்களைப் 'மேட்டுமடை' என்றும் வைணர்கள் கூறுவர். திருப்பாவைக்கு ஆண்டாள் இட்டபெயர் சங்கத் தமிழ் மாலை முப்பது என்பதாகும். இவை பாவை நோன்பின் சிறப்பினையும், திருமாலை வழிபடுவோர் அடையும் பெருமைகளையும் எடுத்துரைக்கின்றன.

## 2.2. குறிக்கோள்கள்:

மார்கழி மாதத்தில் இளம்பெண்களால் கடைப்பிடிக்கப்படும் பாவை நோன்பின் மூலமாக இவ்வுலக மக்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற ஆண்டாள் விழைகின்றாள் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாத தேவையாகிய மழை குறைவின்றிக் கிடைக்கவும், கால்நடைச் செல்வங்கள் பெருகவும் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

இறைவனைத் துதிப்பதைத் தவிர வேறு பணி எமக்கு இல்லை என்றும், அவனுடைய பறையாகிய அருளைப் பெறுவதிலேயே தனக்கு எங்களுக்கு இன்பம் என்றும் பாடுகின்ற ஆண்டாள் சரணாகதித் தத்துவத்தை அழகாக எடுத்துப்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 2.3. பாவை நோன்பு கடைப்பிடித்தல்:

**“மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினொ நேரிழையீர்!**

குறிப்புகள்

**சீாமல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!**

**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்!**

**ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்**

**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்**

**நாரா யணனே நமக்கே பறைதருவான்**

**பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்''**

வளம் நிறைந்த ஆயர்பாடியின் செல்வச் சிறுமியர்களே! பொருத்தமான அணிகலன்கள் அணிந்திருக்கும் இளம் பருவப் பெண்களே! மாதங்களில் சிறந்த மார்கழியும் பூரண வெண்ணிலவு நிறைந்த நன்னாளும் நமக்கு வாய்த்தது. பகைவரைத் தாக்கும் கொடுந்தொழிலையுடைய கூர்மையான வேலாயுதம் தாங்கிய நந்தகோபனுக்குக் குமரனாகப் பிறந்தவன் கண்ணபிரான். அழகு நிறைந்த கண்களை உடையவளான யசோதைப் பெருமாட்டிக்குச் சிங்கக்குட்டி போலிருப்பனுமாவான். மழைமேகமாகிய கருநிற அழகிய திருமேனியையும் செந்தாமரை போன்ற திருக்கண்களையும் கதிரவனைப் போல ஒளியும் திங்களைப் போலக் குளிர்ச்சியும் பொருந்திய அழகிய திருமுகமுடைய நாராயணனே நமக்கு நோன்புக்குத் தேவையான இசைக்கருவியான முழவுக்கருவியாகிய பறையைப் பரிசிலாகத் தருவது உறுதி.

ஆகவே உலகத்தவர்கள் நம் பத்தியைப் பாராட்டும்படி மழை பெய்யவிருக்கிறது. நீங்களும் திருமாலின் திருவடியைக் கொண்டாடி நோன்பிலே உறுதியுடன் நீராடுவதற்கு விருப்பமுடன் வந்துள்ளீர்கள் வாருங்கள் பாவைகளே! என ஆண்டாள் அழைக்கின்றாள்.

**"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்**

**செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்**

**பையத் துயின்ற பரமனடிபாடி**

**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**

**மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்**

**செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**

**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**

**உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்**

இப்பூவிலகிலே வாழ்கின்றவர்களே! திருமாலின் திருவடிகளைத் தவிர பற்று ஒன்றுமிலாத நாங்கள் பாவை நோன்பு மேற்கொள்ளும் வழிகளைக் கூறுவோம். திருப்பாற்கடலில் அனைத்தும் அறியும் யோகத்துயில் மேற்கொண்டுள்ள பரந்தாமனின் திருவடிகளைப் போற்றிப் பாடி, மகிழ்வுடன்

பாவை நோன்புக்கு அங்கமாகச் செய்ய வேண்டிய கிரியைகளைச் நான் சொல்கிறேன்.

- நோன்புக் காலத்தில் நெய், பால் ஆகியவற்றைத் தவிர்த்து விடுவோம்.
- விடியற்காலையிலேயே நீராடுவோம்.
- அதன்பின்னர் கண்களுக்கு மைதீட்டி ஒப்பனை செய்து கொள்ள மாட்டோம்.
- கூந்தலில் பூச்சூடிப் புனைய மாட்டோம். சான்றோர்கள் வெறுத்து ஒதுக்கிய தீயசெயல்களை மேற்கொள்ள மாட்டோம்.
- தீயகோள் சொற்களைப் பிறரிடத்தில் சென்று சொல்ல மாட்டோம்.
- குருநாதர், சான்றோர்களுக்கு உரிய காலங்களில் வெகுவினயத்துடன் சமர்ப்பிக்கப்படும் காணிக்கையாகிய ஐயத்தையும் இல்லையே என்று கேட்கும் எவர்க்கும் பரிவுடன் இடுகின்ற பிச்சையையும் இந்நோன்புக் காலத்தில் தவறாது எம் சக்தியளவு இடுவோம்.
- ஐயம் - தானம் (தாமே சென்று வலியக் கொடுப்பது) பிச்சை – தருமம் (பிறர் கேட்டுத் தருவது).
- இவ்வாறு நோன்பினைக் கடைப்பிடித்து பிறவித்துயரிலிருந்து உய்வடையும் வழிகளை நினைத்துச் செயல்பட்டு உயர்வடைவோம்.

ஞானபக்தி யோகத்திலே நோன்பிருக்கும் இவ்வடியவர்கள் உண்ணும் சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்று இருப்பதால் உலக போகங்களை நுகர்வதில்லை.

## 2.4. மழை வேண்டிப் பாடுதல்:

**ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்**
**தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்து- ஏலோர் எம்பாவாய்**

மாவலியிடம் மூன்றடி மண்கேட்டு வந்த திருமால் ஓங்கிய பேருருவம் எடுத்தார். வாமனனாக வந்தவர் உலகளந்த உத்தமனாக ஆனார். அப்பெருமானின் புகழைப்பாடி பாவைத் தெய்வத்திற்கு நோன்பின்

நோக்கத்தைக் கூறி வழிபடுவதினால் விளையும் உலக நன்மைகளை இப்பாடலில் ஆண்டாள் கூறுகிறாள்.



நாடு முழுவதும் மாதந்தோறும் மூன்று மழை பெய்யும். அம் மழையும் தீங்கின்றிப் பெய்யும். அதாவது சிறிதும் மழையின்றிக் கெடுத்தலோ அல்லது பொறுக்க முடியாதவாறு முற்றிலும் பெய்து கெடுத்தலோ இன்றித் தேவையான அளவு மழை பெய்ய வேண்டும். நீர்வளத்தினால் வானளவு ஓங்கிய செந்நெல் பயிர்களின் நடுவே கயல் மீன்கள் துள்ளி விளையாடும். அங்குள்ள அழகிய குவளை மலரில் புள்ளிகளை உடைய வண்டுகள் தேன் உண்டு அங்கேயே உறங்கி விடும். மேய்ச்சல் நிலம் நன்கு வளமுடன் கிடைத்து உண்டதால் பசுக்கள் செழுமை பெற்றன. மாட்டுத் தொழுவில் புகுந்து இடையர்கள் பால் கறக்கும் போது இடைவிடாமல் குடம் குடமாக பெரும் பசுக்கள் வள்ளலைப் போலப் பாலைத் தருகின்றன. உலகெங்கும் நீங்காத செல்வம் நிறைகிறது. பசிப்பிணி நீங்குகின்றது. இவை அனைத்தும் மழையினால் கிடைத்த நன்மைகள் ஆகும். எனவே பாவைத் தெய்வத்தை நீராடி வழிபட்டு உத்தமனாகிய பரந்தாமனைப் பாடுவோம் வாருங்கள் என்கிறாள்.

**ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்து ஏறி**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து**
**பாழியந் தோள் உடைப் பற்பநாபன் கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்று அதிர்ந்து**
**தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீர் ஆட மகிழ்ந்து-ஏலோர் எம்பாவாய்**

கடல் நீரால் மழையாகிய கண்ணனே! மழையைப் பெய்விப்பாயாக! நீ சிறிதும் மறுக்காதே எங்கள் வேண்டுகோளைப் புறக்கணிக்காதே!

கடலில் நீரை முகந்து ஆரவாரத்துடன் மேலேறுகிறது மழை மேகம். மேகத்தின் தோற்றமோ ஊழிக்காலத்து முதற்பொருளாகிய திருமாலின் திருமேனி போல வடிவம் கறுத்திருக்கின்றது. வலிமை மிக்க தோள்களை உடைய பத்மநாபனின் கையில் ஒளிவீசும் சுதர்சன சக்கரம் போல ஒளிவீசுகிறது. மின்னல், திருமாலின் வலம்புரிச்சங்காகிய பாஞ்சசன்னியம் போல் நிலைத்து ஒலிக்கிறது இடி, சார்ங்கம் எனப்படும் திருமாலின் கை வில்லானது வெளியிடும் அம்பு மழைபோல மழைநீரானது உலகத்தவர் வாழ்ந்திடப் பெய்ய வேண்டும். அவ்வாறு பெய்வதற்குத் திருமாலே உன்

கொடைத்தன்மையில் மாறாது அருள்புரிவாயாக! உன் அருள் மழையில் நாங்களும் மார்கழி நீராடலை மகிழ்ந்து ஆடுகின்றோம்.

## 2.5. பாவை நோன்பு செய்வதற்குப் தோழிகளைத் துயிலெழுப்புதல்:

குறிப்புகள்

**மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில் தோன்றும் அணி-விளக்கைத்**
**தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை**
**தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசு ஆகும் செப்பு-ஏலோர் எம்பாவாய்**

மாயச் செயல்களையுடைய மாயவன், நிலைபெற்ற புகழுடைய வடமதுரையில் பிறந்த மதுரையர் மன்னன், தூய்மையும் ஆழமும் நிறைந்த யமுனை ஆற்றங்கரையை உரிமையாகப் பெற்ற யமுனைத்துறைவன், பசுக்களை மேய்த்துத் திரிந்த யாதவன், ஆயர் குலத்தின் ஒளிவிளக்காகத் திகழ்பவன், தாயாகிய தேவகியின் பிறந்த வயிற்றுக்குப் பெருமை சேர்த்த பெரியோன், வயிற்றில் கயிறு கட்டி உரலிலே பிணைக்கப்பட்டிருந்தால் தாமோதரன் என்ற பெயர் கொண்டவன். இத்தனை பெருமையுடைய கண்ணனைப் போற்றி நீராடித் தூயவர்களாய் வந்து தூயமலரிட்டு வணங்கி வாயினால் பாடி மனத்தினால் தியானித்தால் கடந்த காலத்தில் அறியாது செய்த பிழைகளும் மன்னிக்கப்படும். எதிர்காலத்தில் செய்ய இருக்கும் தவறுகளும் நம்மை அணுகாமல் மறைந்து தீயில் விழுந்த தூசினைப்போல் தூய்மையாகும். மனம் வாக்கு காயத்தால் அவன் புகழைப் பாடுவோம்! வாருங்கள்!

**புள்ளும் சிலம்பின காண் புள்-அரையன் கோயிலில்**
**வெள்ளை விளி சங்கின் பேர்-அரவம் கேட்டிலையோ?**
**பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சு உண்டு**
**கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஓச்சி**
**வெள்ளத்து அரவிற் துயில் அமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மெள்ள எழுந்து அரி என்ற பேர்-அரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்து-ஏலோர் எம்பாவாய்**

பறவையினங்கள் மாறி மாறிப் பேசிக் கொள்கின்றன. காலையில் இரைதேடப் புறப்படும் முன் கலந்துரையாடல் செய்கின்றன. பறவைத் தலைவனாகிய கருடனின் இறைவனாகிய திருமாலின் திருக்கோயிலில் அனைவரையும் அழைக்கும் வெண்மை நிறமுடைய சங்கின் பேரொலி

கேட்கவில்லையா? பெண் பிள்ளையே எழுந்து வருக! தாயுருவில் வந்த பேயாகிய பூதகியின் மார்பில் பாலுண்பது போல அவளைச் சாய்த்தவன் கண்ணன், வஞ்சனைமிக்க சகடாசுரன் கலங்கி அழியும்படி காலால் உதைத்தவன் பாலகிருஷ்ணன், திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீது துயில் கொள்ளும், உலகத்திற்கு மூலப் பொருளாகிய திருமாலை முனிவர்களும் யோகிகளும் தமது மனதில் தியானித்தனர்.

அடியவர்கள் இதயத்தில் வீற்றிருக்கும் அவன் அசைந்துவிடாதபடி மெல்ல எழுந்து நம் வினைகளை அரிக்கும் அரி என்ற திருநாமத்தை வாய்விட்டு உச்சரிக்கும் பேரொலியானது பாவை நோன்பிற்கு நீராடவரும் பெண்களாகிய எங்கள் செஞ்சிற் புகுந்து குளிர்வித்தது. பெண்ணே இனியாவது துயில் எழுக!

**கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து**
**பேசின பேச்சு- அரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே**
**காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து**
**வாச நறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த தயிர்-அரவம் கேட்டிலையோ?**
**நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி**
**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?**
**தேசம் உடையாய் திற-ஏலோர் எம்பாவாய்**

மதிநிலை மறந்து உறங்குகின்ற பேய்ப்பெண்ணே எல்லா இடங்களிலும் ஆனைச்சாத்தன் எனும் பறவைகள் தம்முள் மகிழ்ந்து ஒன்றோடொன்று கீச்கீச்சென்று பேசுகின்ற பேச்சொலி ஆரவாரம் காதில் விழவில்லையா? பூச்சூடியதால் நறுமணமுள்ள கூந்தலினையுடைய இடைப் பெண்கள் கழுத்தில் அணிந்துள்ள தாலிச் சரட்டில் அடுத்தடுத்துக் கோக்கப்பட்ட காசு, பிறப்பு என்னும் பொன்தாலிகள் கலகலவென மெல்லொலி எழும்படியாக கைகளை மாற்றி மாற்றி அசைத்து மத்தினைக் கொண்டு தயிர்கடையும் கரகரவென்று பேரொலி கேட்கவில்லையா? மத்தொலியும் மங்கலத் தாலியின் ஒலியும் உன் உறக்கத்தைக் கலைக்கவில்லையா? என்று கேட்கிறாள்.

**கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு**
**மேய்வான் பரந்தன காண் மிக்கு உள்ள பிள்ளைகளும்**
**போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்**
**கூவுவான் வந்து நின்றோம் கோதுகலம் உடைய**
**பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு**
**மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய**

**தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்**
**ஆவா என்று ஆராய்ந்து அருள்- ஏலோர் எம்பாவாய்**

திருமாலின் அன்புக்குரிய குதுகலம் மிக்க பதுமைபோன்ற பெண்ணே! கிழக்குவானம் வெளுத்து விட்டது. எருமைகள் வைகறைப்பனி தங்கிய பனிப்புல் மேய்வதற்கு வீட்டுக் கொல்லைத் தோட்டங்களில் பரவிச் சென்றுள்ளன. பால் கறப்பதற்கு முன் காலாற வீட்டுக்கருகில் பொடிநடை போடுகின்றன. எஞ்சியுள்ள சிறுமியர்களும் நோன்பு நீராடலுக்குப் புறப்பட்டு விட்டன. அவர்களைப் போய்விடாமல் தடுத்து நிறுத்தி கூவுகின்றோம். பெண்ணே துயில் எழுக! கண்ணபெருமாளைப் பாடிப் பரிசலாக அருளைப் பெறுவோமாக!

குதிரை உருவமெடுத்து வந்த கேசி என்னும் அரக்கனின் வாயைப் பிளந்து எறிந்தவனும் கம்சனது சபையில் மற்போர் செய்யும் மல்லர்களுடன் மோதி மாளச்செய்த தேவாதிதேவனாகிய திருமாலை அணுகி அடிபணிந்தால் ஆகா என்று வரவேற்று நமக்கு எந்த நன்மையைச் செய்தால் உய்வடைவோம் என்று ஆராய்ந்து அருள் செய்வான். பெண்ணே அக்கருத்தை ஏற்று எழுந்து புறப்படுவாயாக! எனக் கட்டளை இடுகிறாள்.

## 2.6. தன் மகள்களை எழுப்பி விடுமாறு தாய்மார்களை வேண்டுதல்:

**தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத்**
**தூமம் கமழத் துயில்-அணைமேல் கண்வளரும்**
**மாமான் மகளே மணிக் கதவம் தாள் திறவாய்**
**மாமீர் அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்**
**ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?**
**ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?**
**மா மாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று**
**நாமம் பலவும் நவின்று ஏலோர் எம்பாவாய்**

தூய மாணிக்க மணிகள் பதிக்கப்பட்டு அமைக்கப்பட்ட மாளிகையில் நாற்புறமும் விளக்குகள் எரிய, சந்தனம், அகில் முதலியவற்றின் நறுமணப் புகை கமழ மென்மையான பஞ்சணை மீது துயில் கொள்ளும் மாமன் மகளே! உன் மாளிகையின் மாணிக்க கதவின் தாழ்ப்பாளைத் திறந்திடுவாயாக!

மாமீர்! உள்ளே உறங்குகின்ற உன் மகளை எழுப்ப மாட்டீர்களா? உன் மகள் வாய்திறந்து பதிலே அளிக்காததால் ஒருவேளை ஊமையோ? நாங்கள் இத்தனை நேரம் இசை பாடியும் ஏன் என்று கேட்காததால் வெசிப்புலன் இவ்வாதவளோ? அல்லது சோம்பலினால் உறக்கத்தை நீட்டிக்கும் அனந்தலாடுகின்றாளோ? மந்திரத்தினால் கட்டப்பட்டு பேருறக்கத்தில் வீழ்த்திப் படுக்கையிலிருந்து எழமுடியாதவாறு காவலிட்டு

வைத்துள்ளார்களோ? மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று திருமாலின் திருநாமங்களைப் பலகால் வாயராச் சொல்லிச் சொல்லி முழுவதும் கற்றுவிட்டோம். இனியாவது உன்மகள் உறக்கத்திலிருந்து எழக்கூடாதா?



**நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்**
**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?**
**நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்**
**தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?**
**ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே**
**தேற்றமாய் வந்து திற-ஏலோர் எம்பாவாய்**

கடந்த பிறவியில் நோன்பு நோற்று வானுலக இன்பங்களை எல்லாம் மண்ணுலகில் அனுபவித்து வரும் செல்வ மகளே! வாயில் கதவைத்தான் திறக்கவில்லையாயினும் வாய் திறந்து ஒரு சொல்லையாவது பதிலாகத் தரக்கூடாதா? நறுமணம் கமழும் துளசி மாலையை முடியில் சூடிய நாராயணன் நாம் துதித்துப் போற்றும் பரிசாகிய அருளைத் தரும் அறவடிவானவனாவான். முன்னொரு காலத்தில் இராமாவதாரத்தில் இராமபிரானால் எமன் வாயில் இரையாக வீழ்த்தப்பட்ட கும்பகா்ணன் உறக்கப் போட்டியில் உன்னிடம் தோல்வியடைந்து அவனது பெருந்துயிலை உனக்கே ஒப்படைத்து விட்டானா? பெருஞ்சோம்பலையுடையவளே, துயிலைக் கைவிட்டுத் தெளிந்து வந்து கதவைத் திறப்பாயாக!

## 2.7. முகில்வண்ணனைப் பாடும் பாடல் கேட்கவில்லையா?

**கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து**
**செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்**
**குற்றம் ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே**
**புற்றரவு-அல்குற் புனமயிலே போதராய்**
**சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்**
**முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்**
**சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ**
**எற்றுக்கு உறங்கும் பொருள்?-ஏலோர் எம்பாவாய்**

கன்றுகளுடன் கூடிய பசுக்கூட்டங்களின் பாலைக் கறந்து வாழ்கின்ற வாழ்க்கையுடைமையும், பகைவா்களின் வலிமை கெடும்படியாகப் போர் செய்யும் வலிமையும், பிறரை வஞ்சித்து வாழும் தன்மையும் என ஒருவகைக் குற்றம் இல்லாதவா்களாகிய கோவலா் குடியில் பிறந்த பொன்கொடி போன்றவளே! புற்றில் வாழும் பாம்பின் படம் போன்ற

இடையுடையவளே! காட்டில் திரிகின்ற மயில் போன்ற சாயலை உடையவளே! செல்வமுள்ள பெண் பிள்ளையே! எழுந்து வருவாயாக!

உன் சுற்றத்தினரும் தோழிகளுமாகிய அனைவரும் திரண்டு வந்து உன் திருமாளிகையின் முற்றத்தில் கூடிநின்று முகில் வண்ணனாகிய கண்ணனின் பெயர்களைப் போற்றிப் பாடுகின்றோம்! அதைக் கேட்ட பின்பும் சிறிதும் சலியாமல் ஒன்றும் பேசாமல் நீ உறங்குவதன் பொருள் யாது?

**கனைத்து இளங் கற்று- எருமை கன்றுக்கு இரங்கி**
**நினைத்து முலை வழியே நின்று பால் சோர**
**நனைத்து இல்லம் சேறு ஆக்கும் நற் செல்வன் தங்காய்**
**பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றி**
**சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற**
**மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்**
**இனித் தான் எழுந்திராய் ஈது என்ன பேர் உறக்கம்**
**அனைத்து இல்லத்தாரும் அறிந்து-ஏலோர் எம்பாவாய்**

இளங்கன்றுகளை உடைய எருமைகள் தாம் இருக்குமிடத்தை அறிவிப்பது போலக் கனைத்துக் கதறும். மேலும் தம் கன்றுகளை இரக்கத்துடன் நினைத்து அக்கன்றுகளுக்கு ஊட்டும் நினைவுடன் மடிசுரந்து இடைவிடாமல் பால் பெருகி வழிவதால் இல்லம் முழுவதும் ஈரமாகிச் சேறாகிய விடுமளவு சிறந்த செல்வத்தையுடைய கோவலரின் அன்புத் தங்கையே! மார்கழிமாதப் பனியானது எங்கள் தலையில் வீழும்படியாக உனது மாளிகையின் வாசலின் முன் நின்று, அன்பு மனைவியைத் தன்னிடமிருந்து பிரித்தான் என்ற சினத்தினால் தென்னிலங்கை, அரசனாகிய இராவணனைக் கொன்று அழித்தவனும் நேயத்துடன் நினைக்கின்றவர்களின் மனத்திற்கு இனியவனுமாகிய இராமபிரானை நாங்கள் பாடுகின்றோம்.

அதைக் கேட்டும் நீ வாய்திறந்து பேசவில்லையே என்று ஆற்றாமையுடன் நிற்கின்ற எங்களின் வருகையை அறிந்து இனியாவது எழுந்திரு! இஃது என்ன மிகுதியான ஒயாத தூக்கம்? உன் மாளிகை வாசலில் திரண்டு நின்று உன்னை எழுப்புகின்ற நிலையில் அக்கம்பக்கத்து வீட்டார்கள் அனைவரும் துயில் கலைந்து எழுந்துவிட்டார்கள்! இனியாவது எழுந்திரு!

**புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்**
**கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைபாடிப் போய்**
**பிள்ளைகள் எல்லாரும் பாவைக்-களம் புக்கார்**
**வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று**
**புள்ளும் சிலம்பின காண் போது-அரிக் கண்ணினாய்**
**குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே**

**பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ நன்னாளால்**
**கள்ளம் தவிர்ந்து கலந்து-ஏலோர் எம்பாவாய்**



கண்ணபிரானை அழித்துவிடக் கருதி கம்சனால் ஏவப்பட்ட பகாசுரன் என்ற அரக்கன் கொக்கு உருவமாய் வந்து யமுனை நதிக்கரையில் கண்ணனை விழுங்கிவிட்டான். பகாசுரனின் நெஞ்சினைப் பற்றி எரிக்கத் தொடங்க ; பொறுக்கமுடியாமல் கண்ணனை உமிழ்ந்து விட்டான். பின்பு கண்ணனைத் தன் மூக்கால் குத்தும் போது அவன் வாய் அலகுகளைப் பற்றிப் பிளந்து எறிந்தான் கண்ணபிரான். இது கிருஷ்ணாவாரத்தில் நிகழ்ந்தது.

கொடியவனான இராவணனின் முடித்தலைகளைக் கிள்ளிக் களைந்தான் இராமபிரான். இது இராமாவதாரத்தில் நிகழ்ந்தது. இரண்டு திருமூர்த்திகளையும் ஒன்றாகப் பாடுகின்றனர் பாவை நோன்புப் பெண்கள். திருமாலின் வீரப் புகழைப் பாடிக் கொண்டு எல்லாப் பெண்களும் நோன்பு நோற்பதற்குக் குறிக்கப்பட்ட இடத்தில் புகுந்தனர்.

பெண்ணே! அதிகாலையின் விடி வெள்ளி எழுந்துவிட்டது. வியாழன் மறைந்து விட்டது, உறக்கும் கலைந்த பறவைகள் கூட்டொலி எழுப்பின. மலர் போன்ற குளிர்ந்த கண்களையுடைய அழகியே! உடல் குதுகலமடையும்படியும் குளிரை விரட்டும்படியும் ஆற்றைக் குடைந்து நீராடாமல் படுக்கையில் கிடக்கலாமோ? பாவையே திருமாலின் அன்பைப் பெறுவதற்குரிய இந்த நல்லநாளைக் கள்ளத்துடன் புறக்கணிக்காமல் எங்களோடு கலந்து நீராட வருவாயாக!

## 2.8. புகழ் பாடுவதே நம் பணி:

**உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்**
**செங்கற்பொடிக் கூறை வெண்பற் தவத்தவர்**
**தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போதந்தார்**
**எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்**
**நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்**
**சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடு-ஏலோர் எம்பாவாய்**

உங்கள் புழைக்கடைத் தோட்டத்தில் இருக்கின்ற நீர்நிலையிலே செங்கழுநீர்ப் பூக்களானவை மலர்ந்து இதழ்கள் விரித்தன. ஆம்பல் மலர்கள் வாய்மூடிக் குவிந்து விட்டன! அதுமட்டுமல்ல, காவிப்பொடியில் தோய்த்தெடுத்து ஆடைகளையணிந்த வெண்மையான பற்களையுடையத் தவசிகள் தத்தம் திருக்கோயில்களுக்குச் சென்று திருக்காப்பினை நீக்கித் திருப்பள்ளியெழுச்சிக்குரிய சங்கினை ஒலிப்பதற்கு சென்றனர்.

நேற்று எங்களுடன் பேசும் போது நானே முந்தி வந்து எழுப்புகிறேன் என்று சொல்லிச் சென்ற நங்கையே! சொன்னபடி எழுப்பவில்லையே என்ற நாணமும் இல்லாதவளே! இனிய பேச்சுகளால் எங்களைக் கவரவல்ல நாவுடையவளே! சங்கையும் சக்கரத்தையும் ஏந்துகின்ற தாமரைக் கண்ணனைப் பாடுவதற்கு எழுவாயாக!

## 2.9. பெண்களின் உரையாடல்:

**எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ**
**சில் என்று அழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்**
**வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்**
**வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக**
**ஒல்லை நீ போதாய் உனக்கு என்ன வேறு உடையை?**
**எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக்கொள்**
**வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க**
**வல்லானை மாயனைப் பாடு-ஏலோர் எம்பாவாய்**

எழுப்புவோர் : ஏடி! விளங்கி நிற்கும் இளங்கிளியே! இத்தனைபேர் திரண்டு வந்தும், பொழுது விடிந்த பின்பும் உறங்குகின்றாயோ?

உறங்குபவள் : பெண்களே! இதோ புறப்பட்டு விட்டேன். நெஞ்சில் வெறுப்புடன் வெடுக்கென்று அழையாதீர்கள்.

எழுப்புவோர் : வாய்ப்பேச்சில் வல்லவள் நீ. உன் கட்டுரைகளையும் உன் வாயையும் நீண்ட நாட்களாகவே நாங்கள் அறிவோம்!

உறங்குபவள் : என்னைப் பற்றி இத்தனை விரிவாகப் பேசுகின்ற நீங்கள் தான் வல்லமையுள்ளவர்கள். ஆனால் நீங்கள் சொல்வதை மறுக்காமல் நானே வல்லவள் என்று இருந்து விட்டுப் போகிறேன்! போகட்டும்!

எழுப்புவோர் : வாய்பேசியது போதும்! சீக்கிரமாக நீ எழுந்து வருவாயாக! உனக்கு மட்டும் தனியாக அனைத்தும் உரைக்க வேண்டுமா? நீ அப்படி என்ன தனித்தன்மையுடன் இருக்கின்றாய்?

உறங்குபவள் : பாவை நோன்புக்கு வரவேண்டியவர்கள் எல்லாரும் வந்து விட்டனரா?

எழுப்புவோர் : எல்லோரும் வந்து விட்டனர். ஐயமிருந்தால் நீயே எழுந்து வந்து எண்ணிப்பார்த்துக் கொள்.

உறங்குபவள் : இவ்வளவு விரைவாக எதற்கு வரச் சொல்கிறீர்கள்?

எழுப்புவோர் : கம்சனின் அரண்மனை வாயிலில் நிறுத்தியிருக்கும் குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்றவனும் பகைவர்களின் ஆற்றலை அழிக்க வல்லவனுமாகிய மாயக்கண்ணனைப் பாடுவதற்கு அழைக்கிறோம்! சீக்கிரம் எழுந்து வா!

## 2.10. பறை வேண்டுதல்:

**நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய**
**கோயில் காப்பானே கொடித் தோன்றும் தோரண**
**வாயில் காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய்**
**ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை**
**மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்**
**தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்**
**வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா நீ**
**நேய நிலைக் கதவம் நீக்கு-ஏலோர் எம்பாவாய்**

ஆயர்குலத்தலைவனாகிய நந்தகோபனின் புறவாயில் அரண்மனைக் காவலனே! கோடி மரங்கள் நடப்பட்டத் தோரணவாயிலைக் காக்கும் வாயிலோனே! மாணிக்கம் பதித்த நெடுங்கதவின் தாளைத் திறப்பீர்களாக! மாயனாகிய மணிவண்ணன் ஆயல்குலச் சிறுமியர்களாகிய எங்களுக்கு ஒலிக்கின்ற பறையைத் தருவதாக நேற்றே இசைவு தந்துள்ளான்! அதனால் அவனைத் துயில் எழுப்புவதற்குரிய திருப்பள்ளி எழுச்சியைப் பாடுவதற்கு மனத்தூய்மையுடன் வந்துள்ளோம்! ஐயனே! அகவாயில் காப்பாளனே! கேட்டவுடன் மறுத்துப் பேசாமல் கண்ணனிடம் நேயம் கொண்ட நிலையுடன் கதவை நீயே தாள் நீக்கித் திறக்க வேண்டும்!

**அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும்**
**எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்**
**கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே**
**எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்**
**அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த**
**உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்**
**செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா**
**உம்பியும் நீயும் உகந்து-ஏலோர் எம்பாவாய்**

திருவாயிலைக் காவல் காக்கும் முதல்வர்களின் அனுமதியுடன் உள்ளே நுழைந்த ஆயர்குலச் சிறுமியார்கள் நந்நகோபரையும் யசோதைப் பிராட்டியையும் கண்ணபிரானையும் பல தேவனையும் துயில் எழுப்புகின்றோம். உடுக்க உடை, குடிக்கத் தண்ணீர், உண்ணச் சோறும் தந்து அறம் புரியும் எம் தலைவனாகிய நந்த கோபாலனே! துயில் எழுக! வஞ்சிக் கொம்பு போன்ற பெண்களுக்கெல்லாம் தலைமையான ஆயர்குலத்தின் தீபவிளக்கே! எம் தலைவியாகிய யாசோதைப் பிராட்டியே விழித்தெழுவாயாக! ஆகாயத்தைக் கிழித்துக் கொண்டு உயர்ந்து வளர்த்தது எல்லாம் உலகங்களையும் அளந்தருளிய தேவாதிதேவனே! உறக்கத்தைத் தொடராமல் எழுந்தருள்க!

பொன்னாலாகிய வீரக் கழலை காலில் அணிந்திருக்கும் செல்வமகனாகிய பலதேவனே உன் தம்பியாகிய கண்ணனும் நீயும் உறங்கிக் கொண்டிராமல் எழுந்து வாருங்கள்!

## 2.11. நப்பின்னையைத் துயில் எழுப்புதல்:

**உந்து மத களிற்றன் ஓடாத தோள்-வலியன்**
**நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்**
**கந்தம் கமழும் குழலீ கடை திறவாய்**
**வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்**
**பந்தர்மேல் பல்கால் குயில்-இனங்கள் கூவின காண்**
**பந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்**
**செந்தாமரைக் கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப**
**வந்து திறவாய் மகிழ்ந்து-ஏலோர் எம்பாவாய்**

யானைப் படைகொண்டு சேனை நடத்திடக் கூடியவனும் போரில் புறமுதுகிடாத தோள் வலிமையுடைய வீரனுமாகிய நந்தகோபாலனுக்கு மருமகளே! திருமகளாகிய நப்பின்னைப் பிராட்டியே! நறுமணம் தங்கிய கூந்தலையுடையவளே! தாழ்ப்பாளைத் திறந்திடுவாய்!

விடியலில் கோழிகள் எல்லாவிடங்களிலும் பரவி கூவி நின்றன. குருக்கத்திக் கொடி எனப்படும் மாதவிப் பந்தலின் மேல் உறைகின்ற குயிலினங்கள் கூட்டமாகக் கூவுகின்றன. பந்தாடி மகிழ்கின்ற அழகுக் கரங்களை உடையவளே! உன் கணவனாகிய கண்ணபிரானின் திருநாமங்களைப் பாடுகிறோம். உன் கைவளைகள் ஒலிக்கத் தாளமிட்டு நடந்து வந்து செந்தாமரைப் பூப்போன்ற உன் கையினால் மனமகிழ்ச்சியுடன் கதவைத் திறந்திடுவாயாக!

**குத்து விளக்கு எரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்**
**மெத்தென்ற பஞ்ச-சயனத்தின் மேல் ஏறிக்**
**கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்**
**வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய்திறவாய்**
**மைத் தடங்கண்ணினாய் நீ உன் மணாளனை**
**எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்**
**எத்தனை யேலும் பிரிவு ஆற்றகில்லாயால்**
**தத்துவம் அன்று தகவு-ஏலோர் எம்பாவாய்**

தேவைப்படும் நேரங்களில் தேவையான இடங்களில் நிலத்தில் வைக்கப்படும் குத்துவிளக்குகள் நாற்புறமும் ஒளிவீசுகின்றன. யானையின் தந்தங்களினால் செய்த காலைகளையுடைய கட்டில் அவ்விடத்தில் இடப்பட்டிருக்கின்றது. அழகு, குளிர்ச்சி, மென்மை, நறுமணம், வெண்மை

எனும் ஐந்து இயல்புகளை உடைய பஞ்சசயனம் எனும் மென்மையே வடிவான படுக்கை அக்கட்டிலின் மேல் இடப்பட்டுள்ளது.

இத்தனை நலம் வாய்ந்த படுக்கையில் கொத்தாக மலரும் பூக்களைச் சூடியுள்ள கூந்தலை உடைய திருமகளாகிய நப்பின்னையை மார்பாரத் தழுவிக் கொண்டு உறங்கும் கண்ணனே! வாய்திறந்து ஒரு வார்த்தை பேசக்கூடாதா? மையிட்டு எழுதிய அகன்ற கண்களை உடைய நப்பின்னையே! நீயாவது உன் கணவனை ஒரு சிறு நொடிப்பொழுதாவது எங்களிடம் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாதா? துயில்கின்ற படுக்கையை விட்டு எழவும் விடமாட்டாயா? இருவரும் ஒருவரையொருவர் பிரிவதைக் கணநேரமும் தாங்கும் ஆற்றல் அற்றவர்களா? கண்ணா! நீ இப்படி இருப்பது அடியார்களின் அழைப்புக்கு அருள்கின்ற உன் கொள்கைக்குத் தகுதியான செயலாக இருக்காது. வருவாயாக!

**முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று**
**கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்**
**செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு**
**வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்**
**செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்**
**நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்**
**உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை**
**இப்போதே எம்மை நீர் ஆட்டுஏலோர் எம்பாவாய்**

முப்பது மூன்று பிரிவினர் ஆகிய முப்பது முக்கோடி தேவர்களுக்கும் துன்பம் வருவதற்கு முன்பே அருள் செய்து அவர்களுடைய துயரத்தை நீக்கியருளவல்ல பெருமையுள்ள கண்ணபிரானே! பகைவர்களுக்குப் பயமாகிய காய்ச்சலைக் கொடுக்கவல்ல தூய்மையானவனே! துயில் எழுவாயாக! பொற்கலசம் போன்ற விரும்பத்தக்க அழகுடைய மார்பும் சிவந்த வாயும் நுண்ணிய இடையுமுடைய நப்பின்னைப் பிராட்டியே! திருமகளே! துயில் எழுக! நோன்புக்குத் தேவையான ஆலவட்டத்தையும், கண்ணாடியையும் தருவதுடன் உன் மணவாளனாகிய கண்ணபிரானையும் எமக்குக் கொடுத்து உன் அன்பினால் எங்களை நீராட்டுவாயாக!

## 2.11. சரணாகதியை உணர்த்துதல்:

**ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீது அளிப்ப**
**மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள்**
**ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்**
**ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்**
**தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்**
**மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்**

**ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே**

**போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து-ஏலோர் எம்பாவாய்**

பால் கறப்பதற்காக ஏற்ற கலங்கள் பொங்கி வழியும் படியாக இடைவிடாமல் பாலினைச் சுரக்கும் வள்ளல்களாகிய வளமான பசுக்களைப் பெருமளவு கொண்டுள்ள நந்தகோபனுக்கு மகனாய் வாய்த்தவனே! விழித்து எழுக!. இடையர்களுக்கு அருள் செய்வதில் உறைப்பு உடையவனே! பெருமையில் பெரியோனே! உலகுக்கு ஒளி வழங்கும் ஒளியானே! பகைவர்கள் உன் வலிமையின் முன் தோற்று அச்சத்தினால் உன்னைச் சரணடைந்து வணங்குகிறார்கள். ஆனால் நாங்கள் அன்பினால் உன்னை ஆராதித்து முற்றிலும் சரணடைகிறோம். பெருமை உணர்ந்து அன்பினால் உன் திருமாளிகையின் முன் வந்து புகழ்ந்து துதிக்கின்றோம்!

**அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான**

**பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே**

**சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்**

**கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே**

**செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?**

**திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்**

**அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்**

**எங்கள்மேல் சாபம் இழிந்து-ஏலோர் எம்பாவாய்**

அழகான இடமகன்ற இப் பெரிய உலகத்தில் ஆட்சி செய்யும் மாமன்னர்கள் எல்லாம் உன் வீரத்தின் முன் தங்கள் செருக்கு அடங்கி வந்து உன் சிங்காசனக் கட்டிலின் கீழ் திரள்திரளாக வந்து உன்னடி பணிவது போல நாங்களும் உன் இருப்பிடத்தை அன்புடன் அணுகியுள்ளோம். இடுப்பில் அணியும் அணிகலனான கிங்கிணிச் சதங்கையானது பாதி திறந்தும் பாதி மூடியும் காணப்படும். அதைப் போலவே உந்தன் விழிகள் பாதி திறந்தும் பாதி மூடியும் காணப்படுகிறது. செந்தாமரைப் பூ போன்ற சிவந்த கண்களின் விழிஒளி சிறிது சிறிதாக எங்கள் மேல் படக்கூடாதா?

ஏககாலத்தில் சந்திரனும் சூரியனும் ஒரு சேரத் தோன்றியது போல் உன் அழகிய திருக்கண்கள் இரண்டினாலும் எங்களைப் பார்க்கமாட்டாயா? சூரியனைக் கண்டதும் இருள் விலகுவது போல எங்கள் தீமைகள் விலகும். சந்திரனின் குளிர்ச்சியைப் போல உன் இன்னருள் விளங்கும். எனவே உன்னிரு கண்களின் பார்வை எங்கள் மீது பட்டால் எங்களிடம் சேர்ந்துள்ள பாவச்சுமைகள் அனைத்தும் தீர்ந்து விடுமல்லவா? மனமிரங்குவாயாக!

**மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்**

**சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து**

**வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி**
**மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்**
**போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்**
**கோயில் நின்று இங்ஙனே போந்தருளி கோப்பு உடைய**
**சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த**
**காரியம் ஆராய்ந்து அருள்-ஏலோர் எம்பாவாய்**

குறிப்புகள்

மழைக்காலத்தில் மலைக் குகையில் தன் துணையுடன் ஒன்றிக் கிடந்து உறங்கும் வீரமுடைய சிங்கமானது மாரிக்காலம் முடிந்தவுடன் துயில் எழுந்து நெருப்புப் பறக்கும்படி கண்களை விழித்துப் பார்க்கும் இதுவரை வெளியில் நடந்தவற்றை எல்லாம் அறிந்து கொள்ளும், வியர்வையின் மணம் வீசும் பிடரி முடியானது சிலிர்த்துச் சிலம்பும்படியாக நான்கு திசைகளிலும் நடைபோடும், உடலினை மூர்க்கத்தனமாக நிமிர்த்திச் சோம்பலை நீக்கிப் பெருமுழக்கமாகிய வீர கர்ஜனை புரிந்து வெளியே புறப்படும்.

காயம்பூ நிறத்தையுடைய கண்ணனே! அந்த சீரிய சிங்கத்தைப் போல உன் திருமாளிகையை விட்டு வெளியே வந்து கட்டுக் கோப்பான சிறந்த சிங்கானத்தின் மீது அமர்ந்து எங்களின் குறைகளைக் கேட்டு அறிந்து தெளிந்து ஆராய்ந்து அருள் செய்வாயாக!

## 2.13. திருமாலின் புகழ் பாடுதல்:

**அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி**
**சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி**
**பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி**
**கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி**
**குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி**
**வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி**
**என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்**
**இன்று யாம் வந்தோம் இரங்கு-ஏலோர் எம்பாவாய்**

திரிவிக்கிரம அவதாரத்தில் மூவடி இடம் கேட்டு இவ்வுலகத்தை உன் காலடிகளால் அளந்தவனே! உன்னைப் போற்றுகிறோம். இராமாவதாரத்தில் தென்னிலங்கை மன்னனாகிய இராவணனின் இலங்கை மாநகரை அழித்தவனே! உன் வெற்றியைப் போற்றுகிறோம்! கிருஷ்ணாவதாரத்தில் சகடாசுரனாக வந்த எதிரி, முடியும்படியாக உதைத்து அருளியவனே! உன் புகழினைப் போற்றுகிறோம்!

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்**
**ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்**
**தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த**

**கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்**
**நெருப்பு என்ன நின்ற நெடுமாலே உன்னை**
**அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில்**
**திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி**
**வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து-ஏலோர் எம்பாவாய்**

தேவகிப்பிராட்டியாகிய ஒருத்தியின் மகனாகப் பிறந்தான் கண்ணன். பிறந்த அன்றே இரவினில் ஆயர்பாடியில் நந்தகோபர் மாளிகைக்கு வந்து சேர்ந்து யசோதைப் பிராட்டியாகிய ஒருத்தியினுடைய மைந்தனாக மறைவாக வளர்ந்து வந்தான். அவ்வாறு வளர்வதைத் தாங்கிக் கொள்ள இயலாத மாமனாகிய கம்சன் பல்வேறு தீங்குகளைக் கண்ணனுக்கு எதிராகப் புரிந்தான். கண்ணனின் முடிவுக்குப் பிறகு "ஐயோ! என் மருமகன் மறைந்தானே" என்று துக்கப்படலாம் என்ற கருத்துடன் இருந்தான். ஆனால் அவன் ஏவிய அனைத்துத் தீங்குகளையும் முறியடித்து அவன் திட்டத்தைப் பிழையாக்கிக் கஞ்சனின் வயிற்றில் அச்சத்தை உருவாக்கும் நெருப்பாக நின்றான் கண்ணன். தேவகி வயிற்றுக்குப் பிள்ளையாய் பிறந்தவன் கம்சனின் வயிற்றுக்கு நெருப்பாகத் தகித்தான்.

பிறந்த தாயிடம் வளரமுடியாமல் வளர்ப்புத் தாயிடம் அடைக்கலமாய் வளர்ந்த திருநெடுமாலாகிய கண்ணனிடம் பறையை விரும்பிப் பெறுவதற்கு ஆயமகளிர் வருகின்றனர். அப்பறைக்கருவி கிட்டுமானால் கண்ணபிரானின் மதிப்பு மிகுந்த செல்வத்தையும் வெற்றிகளையும் புகழ்ந்து பாடிக் கண்ணனைப் பிரிந்த வருத்தம் தீர்ந்து மகிழ்வு பெறுவதாக வேண்டுகின்றனர்.

**மாலே மணிவண்ணா மார்கழி நீர் ஆடுவான்**
**மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்**
**ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன**
**பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே**
**போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே**
**சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே**
**கோல விளக்கே கொடியே விதானமே**
**ஆலின் இலையாய் அருள்-ஏலோர் எம்பாவாய்**

திருமாலே! நீலமணி போன்ற நிறமுடையவனே! ஊழி முடிவுக்காலத்தில் ஆலந்தளிரில் பள்ளி கொள்பவனே! மேன்மை பொருந்திய அடியவர்கள் மார்கழி நீராடல் நோன்புக்குத் தேவையானவற்றைக் கேட்பாயானால் என்ன தேவை என்பதைச் சொல்கிறோம்.

மார்கழி நீராடலுக்குப் புறப்படுவதற்கு முன் திருப்பள்ளி எழுச்சியை அடையாளப்படுத்தப் பால்வண்ண நிறமுடைய பாஞ்சசன்னியம் போன்ற

வெண் சங்குகள் வேண்டும். நீராட்டு ஊர்வலத்தின் புறப்பாட்டினை எங்கும் அறிவித்து ஒலிக்கும்படியாகப் பெருமை மிகுந்த பெரிய பறைகள் வேண்டும். பறைகொட்டி நாங்கள் புறப்படும் போது எங்களை எதிர்கொண்டு அழைத்துத் திருப்பல்லாண்டு பாடும் இசைவாணர்கள் வேண்டும். இசைவாணர்களுக்கு எதிராக நாங்கள் நடந்து வரும்போது ஒளியூட்டுவதற்கு அழகிய திருவிளக்குகள் வேண்டும். எங்கள் ஊர்வலம் நெடுந்தூரத்தில் இருப்பவர்களுக்கும் தெரியும்படியாகப் பிடித்துச் செல்வதற்கு உன் கருடக் கொடி வேண்டும். வைகறைப் பனியானது எங்கள் தலைமேல் விழாதபடி தடுக்க மேல்கூரைச் சீலையாகிய விதானம் வேண்டும். இவற்றையெல்லாம் கண்ணா! நீ தந்தருள வேண்டும்!

குறிப்புகள்

## 2.14. கூடாரை வெல்லக்கூடியவன்:

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்தன்னைப்**
**பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே**
**பாடகமே என்று அனைய பல் கலனும் யாம் அணிவோம்**
**ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு**
**மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்**
**கூடியிருந்து குளிர்ந்து-ஏலோர் எம்பாவாய்**

தனக்கு அடிபணியாத பகைவர்களை வெல்லும் சிறப்புடைய கோவிந்தா! உன்னை வாயராப் பாடி உன்னிடமிருந்து பறையைப் பெற்றுக் கொண்டோம். நோன்பு நோற்ற எங்களை நாட்டு மாந்தர் புகழும்படியாக உன் கையினால் பெறும் பரிசுப் பொருள்கள் பலவுண்டு. கையில் அணியும் சூடகம், தோளில் அணியும் தோள்வளை, காதுக்கிடும் தோடும், செவியின் மேல்பகுதியில் அணியும் செவிப்பூ, பாதத்தில் அணியும் பாடகம் இத்தகைய அணிகலன்களுடன் பல்வேறு வகையான ஆபரணங்களையும் உன்னிடம் இருந்து பெறுவோம். பின் நீ தரும் சேலைகளை உடுத்துக் கொள்வோம்.

அதன்பின் கலத்திலுள்ள பாற்சோறு ஆகிய அக்காரவடிசிலினை மூடும்படியாக நெய்யினைப் பெய்து அதனை எடுத்து உண்ணும் போது நெய்யானது முழங்கையில் வழிந்து விழும்படியாக நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து உண்டு உரையாடி உள்ளம் குளிர வேண்டும். நெய்யும் பாலும் உண்ணாமல் பற்றின்றி மார்கழி நோன்பு நோற்று நாங்கள் வேண்டுவது இதுவே! (கூடாரவல்லி எனும் பெயரில் இந்த விழாவினை மார்கழி இருபத்தேழாம் நாளன்று திருமாலடியவர்கள் கொண்டாடுவர்)

**கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்**
**அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்**

**பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்**
**குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா உன்தன்னோடு**
**உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது**
**அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்**
**சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே**
**இறைவா நீ தாராய் பறை- ஏலோர் எம்பாவாய்**

நிறைவே வடிவான குறையொன்றும் இல்லாத கோவிந்தா! பசுக்களை மேய்க்கப் பின் சென்று காட்டுக்குள் நுழைவோம். அதன்பின் கட்டுச் சோற்றினை அவிழ்த்து உண்ணும் எளிய வாழ்க்கையை உடையவர்கள் நாங்கள்! சிற்றறிவு படைத்த எங்கள் ஆயர் குலத்தில் எங்களில் ஒருவனாக உன்னைப் பெறும் புண்ணியமாகிய இன்பத்தைப் பெற்றுள்ளோம். உன்னோடு எங்களுக்கு உண்டான உறவினை இங்கு யார் நினைத்தாலும் ஒழிக்க முடியாது. அறியாமையும் அன்புமுள்ள பெண் பிள்ளைகளாகிய நாங்கள் உன் மீதுள்ள பேரன்பினால் மரியாதை அடைமொழி தராமல் சிறுபெயரிட்டு நேரே அழைத்திருந்தாலும் சினந்து விடாமல் எங்களுக்கு வேண்டிய பறையாகியப் பேரருளைத் தந்தருள்வாயாக!

## 2.15. உனக்கே அடிமை செய்வோம்:

**சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து உன்**
**போற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்**
**பெற்றம் மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ**
**குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது**
**இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!**
**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு**
**உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்**
**மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்**

கோவிந்தா! விடிகாலையிலேயே ஒன்றுகூடி வந்து உன்னை வழிபட்டு உன் திருவடித் தாமரைகளைப் போற்றுவதற்கான நோக்கம் உண்டு. அதனை நீ கேட்பாயாக! பசுக்களை மேய்த்து அதனால் கிடைக்கும் வளத்தினால் உணவுண்ணும் ஆயர்குலத்தில் நீ பிறந்தாய்! உனக்கு அகப்பணியும் புறப்பணியும் செய்வதே எங்கள் கடமையாகும். நீ இடும் கட்டளைகளை ஏற்று நடப்போம். நீ தரும் பேரருள் பறையாகிய முக்தியைப் பெறுவதற்கு மட்டும் உன்னை வணங்கவில்லை! எக்காலத்திலும், எங்களின் எல்லாப் பிறவிகளிலும், உன்னுடைய எவ்வவதாரங்களிலும் உன்னோடு உறவுடையவர்களாகவே கட்டுப்பட்டு வாழ்வோம். உனக்கு மட்டுமே

அடிமை செய்யும் பற்றைத் தவிர மற்றைய உலகியல் விருப்பங்களைத் தவிர்த்து அருள வேண்டும்.

**வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்**
**திங்கள்-திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி**
**அங்குப் பறைகொண்ட-ஆற்றை அணி புதுவைப்**
**பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன**
**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே**
**இங்கு இப் பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்**
**செங்கண்-திருமுகத்துச் செல்வத் திருமாலால்**
**எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்**

மார்கழி நீராட்டு நோன்பினைக் கடைபிடித்த இளஞ்சிறுமிகளே! ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த திருப்பாவைப் பாடல்கள் முப்பதையும் மார்கழி மாதத்தில் உரைப்பதனால் பெறும் பயனைக் கூறுவேன்! கேட்பீர்களாக!

திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் அளித்த மாதவனை, அழகிய திருமுடியுடைய கேசவனை மதி போன்ற முகத்தையுடைய செல்வ ஆயமகளிர் சென்று வணங்கி பறையாகிய திருவருளைப் பெற்றுக் கொண்ட நெறிமுறைகளே திருப்பாவைப் பாடல்கள் ஆகும். அழகிய நகராகிய புதுவை என்னும் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் வாழ்ந்த, தாமரை மலர் போன்ற கரங்களினால் குளிர்ந்த மாலைகளைக் கட்டும் விஷ்ணுசித்தர் எனப்படும் பெரியாழ்வாரின் திருமகளான கோதையாகிய ஆண்டாள் அருளிச் செய்த தூய செந்தமிழ்ப் பாமாலையயாகிய இம் மூப்பது பாசுரங்களையும் ஒன்றும் குறைவில்லாமல் இவ்வகையில் உரைப்பவர்கள் பெறும் பயன் உண்டு.

இப்பாவை நோன்பை நோற்றவர்கள் பெரிய மலை போன்ற நான்கு திருத்தோள்களை உடையவனும் சிவந்த திருக்கண்களும் செல்வத் திருமுகத்தையுமுடைய திருமாலின் அன்புக்குரியவர்களாய் எவ்விடத்தும் பரிபூரணமாகத் திருவருள் பெற்று இன்பமடைவர்.

## 2.16.தொகுத்துக் காண்போம் :

மார்கழி மாதத்தில் இளம்பெண்களால் கடைப்பிடிக்கப்படும் பாவை நோன்பின் மூலமாக இவ்வுலக மக்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்ற ஆண்டாள் விழைகின்றாள் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாத தேவையாகிய மழை குறைவின்றிக் கிடைக்கவும், கால்நடைச் செல்வங்கள் பெருகவும் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

இறைவனைத் துதிப்பதைத் தவிர வேறு பணி எமக்கு இல்லை என்றும், அவனுடைய பறையாகிய அருளைப் பெறுவதிலேயே தனக்கு எங்களுக்கு இன்பம் என்றும் பாடுகின்ற ஆண்டாள் சரணாகதித் தத்துவத்தை அழகாக எடுத்துப்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

குறிப்புகள்

## 2.17. சோதித்தறியும் வினாக்கள்:

1. பாவை நோன்பு கடைப்பிடித்தலை ஆண்டாள் எவ்வாறு பாடுகின்றாள்?
2. ஆண்டாள் பெண்களைத் துயில் எழுப்பும் தன்மையை விவரி.
3. இறைவனின் பெருமையை திருப்பாவைப் பாடல்கள் எவ்வாறு உணர்த்துகின்றன?
4. பெண்களின் உரையாடலின்வழி வெளிப்படும் பக்தித்திறத்தை எழுதுக.
5. இறைவனிடம் பறை வேண்டும் தன்மையை விவரி.
6. சரணாகதியின் மேன்மையை ஆண்டாள் எவ்வாறு உணர்த்துகின்றாள்?
7. இறைவனுக்கு அடிமை செய்யும் சிறப்பினை திருப்பாவை வழி விளக்குக.

## 2.18. பயிற்சி வினாக்கள்:

1. திருப்பாவைப் பாடல்களின் வழி பாவை நோன்பின் சிறப்புக்களை எடுத்துரைக்க.
2. கூட்டுவழிபாட்டின் சிறப்புக்களை திருப்பாவை எவ்வாறு உணர்த்துகின்றது?

## 2.19. மேலும் பயில்வதற்கான நூல்:

1. திவ்யப்பிரபந்தம் (மூலமும் உரையும்), திருவேங்கடவன் வெளியீடு, திருப்பதி, 1982.

குறிப்புகள்

# கூறு-3 திருநாவுக்கரசர் - பாண்டி நாட்டுப் பதிகங்கள் திருவாலவாய்ப் பதிகங்கள்

## 3.1. திருத்தேவாரம் - அறிமுகம்:

அருளொடு கூடிய சிவபரம்பொருளே திரு என வழங்கப்படுகிறது. அதுவே பெறத்தக்க செல்வமாகும். அதனை நாடி அடைந்ததன் பயனாக அடியார்கள் பெற்ற இன்பம் அவர்கள் உள்ளத்தினின்றும் தோத்திரப் பாடல்களாக ஊற்றெடுத்தன. இத்தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் வரை உள்ள இருபத்தேழு அருளாசிரியப் பெருமக்களாவர். தமிழரசர்களின் வேண்டுகோளின்படி பன்னிரண்டாக வகுக்கப் பெற்றுத் தொகுக்கப்பட்டுள்ளது. அத்தொகையே, 'பன்னிரு திருமுறை' என்ற தொகுப்பு. 'முறை' என்ற சொல் 'நூல்' என்ற பொருள் படுவது. 'திருமுறை' என்பது நிலையான செல்வத்தை மக்கள் எளிதாக அடைவதற்கு வழிகபட்டும் நூலாகும்.

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' (பெரி.,புரா., திருக்கூட்டச் சிறப்பு, பா.8) என்று சேக்கிழார் பெருமானால் போற்றப் பெறும் அருளாசிரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் திருப்பாடல்களே திருமுறை என வழங்கப் பெறுகின்றன. மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்தருளியவர் நம்பியாண்டார் நம்பி. ஞானசம்பந்தப்பெருமான் பாடிய திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களை நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும் சுந்தரர் பாடிய திருப்பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் வகுத்தளித்தருளியுள்ளார் நம்பியாண்டார் நம்பி.

முழுமுதல் பொருளாகிய சிவபெருமானை இன்னிசைச் செந்தமிழ்ப் பாடல்களால் முதன் முதல் போற்றியவர் ஆளுடைய பிள்ளையாரே ஆவார். இவற்றால் இவர்தம் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாய் அடைவு படுத்தப் பெற்றுள்ளது. நல்லூர்ப் பெருமணத்தில் சம்பந்தப் பெருமான் ஈறில் பெருஞ்சோதியில் கலந்து மறைந்த பின்னர்த் திருப்புகலூரில் நாவுக்கரசர் பெருமான் இறைவன் திருவடிகளில் கலந்து மறைந்தாராதலின் சம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்களை அடுத்து, இவர்தம் திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக வரிசைப்படுத்தப் பெற்றன.

இவ்விருவர்க்கும் காலத்தாற் பிற்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாக அமைக்கப் பெற்றது. நம்பியாண்டார் நம்பி காலத்திற்குப் பின்னும் சேக்கிழாருக்கு முன்னும் தோன்றிய பெருமக்களே எட்டு முதல் பதினொரு

திருமுறைகளைத் தொகுத்தவர்களாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்திருத்தேவரத்தில் பாண்டி நாட்டில் பாடப்பட்ட பதிகங்கள் மட்டும் இங்கு பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது.

மதுரை தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 3.'.4.கி.மீ. தூரத்தில், வையையாற்றின் தென்கரையில் அமைந்திருக்கிறது. தமிழகத்துப் பெருநகர்கள் பலவற்றிலிருந்தும் பேருந்துகளில் மதுரை செல்லலாம். பாண்டியநாட்டுத்தேவாரம் பெற்ற தலங்கள் பதினான்கில் முதன்மை பெற்றது. இது மதுரைக்கு உரிய வேறு பெயராகும். வம்மிசசேகர பாண்டியன் ஆட்சி செய்து வருங்காலத்தில் மக்கள் வசிப்பதற்கு இடம் போதாமையால், ஆதியில் இந்நகரத்திற்கு ஏற்பட்ட எல்லையைக் காட்டியருளுமாறு அவன் சிவபெருமானை வேண்டினான். பெருமானும் தனது திருக்கையில் கங்கணமாயுள்ள பாம்பை அளந்து காட்டுமாறு பணிக்க, அது வாலும் வாயும் ஒன்றுபடும்படி வட்டமாக வளைத்துக் காட்டியமையால் இப்பெயர் பெற்றது. இதற்குரிய வேறுபெயர்கள் நான்மாடக்கூடல், மதுரை, கடம்பவனம், பூலோக கயிலாயம், சிவராசதானி, துவாதசாந்தத் தலம் என்பனவாகும்.

இறைவரின் திருப்பெயர் சொக்கலிங்கப்பெருமான். இறைவியாரின் திருப்பெயர் அங்கயற்கண்ணி. இத்திருப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் “அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவாயாவது மிதுவே” என எடுத்தாண்டிருப்பது மகிழ்தற்குரியது. வடமொழியில் மீனாட்சிதேவி என்பர்.

‘பாண்டிநாடே பழம்பதி’ என்று சிறப்பித்து ஓதப்பெறும் மதுரை, பாண்டிநாட்டில் பாண்டிய மன்னர்களுக்குத் தலைநகராக விளங்குவது. புலமைமிக்க புலவர் பெருமக்கள் பலர் இருந்து தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்ய நிலைக்களம அமைந்தது. சங்கப்பனுவலாகிய பரிபாடல் மதுரைரையும் வையை நதியையும் சிறப்பித்துப் பாடுவதைக் காணலாம்.

இங்கு சிவபெருமான் செய்தருளிய அறுபத்துநான்கு திருவிளையாடல் களைப் போல வேறு எங்கும் நிகழ்ந்திலது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களுடைய பதினொரு பதிகங்களைக் கொண்டது.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அனல்வாதம் புனல்வாதம் செய்து சைவத்தைப் பாண்டிநாட்டில் நிலை பெறச்செய்த பதி. முத்திதரும் தலங்கள் ஏழனுள் ஒன்றாய் விளங்குவது. ஐந்து சபைகளுள் வெள்ளியம்பலத்தைக் கொண்டது. மூர்த்தி நாயனார் அவதரித்த திருப்பதி. மாணிக்கவாசகரது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு அறிவுறுத்தி அவனை உய்விக்கச் செய்வதற்காக, நரி பரி ஆக்கியது, பரி நரியாக்கியது முதலான திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம்.

1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்: இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கப்பெறும். இது ஆராய்ச்சிக்குச் சிறந்த நூல். இதை ஆக்கியோர் செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியாவர்.

2. கடம்பவன புராணம்: இது தொண்டைநாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதரால் இயற்றப்பெற்றது.

3. சுந்தரபாண்டியம்: இது தொண்டைநாட்டிலுள்ள வாயிற் பதியிலிருந்த அனதாரியப்பரால் எழுதப்பெற்றது.

4. திருவிளையாடற் புராணம்: இது திருமறைக்காட்டிலிருந்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பெற்றது. இது சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவது. இது தோன்றிய பின்னர், இத்தலத்திற்குரிய வேறு புராணங்களை மக்கள் விரும்பிப் படிக்காததே இதன் பெருமையை உணர்த்துவதாகும். சங்கநூல் அறிவுசான்ற திரு.ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள் இதற்குச் சிறந்த உரையெழுதியுள்ளார்கள்.

5. திருவிளையாடல் போற்றிக்கலி வெண்பா, 6. மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி: இவ்விரு நூல்களும் மேற்குறித்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பெற்றனவாகும்.

7. மதுரைக் கலம்பகம், 8. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்: இவ்விரு நூல்களும் குமரகுருபர அடிகளாரால் இயற்றியருளப் பெற்றன. இவைகளன்றி மதுரைக் கோவை, மதுரைச் சொக்கநாதர் உலா, தமிழ்விடுதூது முதலிய பல பிரபந்தங்களும் இறையனார் அருளிய களவியலும் (அகப்பொருள் இலக்கணம்) இத்தலத்தின் சிறப்பிற்கு உரியன.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அம்பிகை சிவஞானம் குழைத்து அருளிய இன்னமுதை உண்டவர். அவர் கடவுளைத் தவிர வேறு யாரையும் பாடாதவர். அவர், இப்பதியில், மங்கையர்க்கரசியாரை நோக்கி, உமைக் காண வந்தனம் என்றதோடு அவரைத் திருப்பதிகத்துள் வைத்துப் பாடியருளியுள்ளார்கள். ஆதலால், மங்கையர்க்கரசியார் பெருஞ்சிறப்பு வாய்ந்தவர் என்பது பெறப்படுகிறது.

மங்கையர்க்கரசியாரையும், குலச்சிறையாரையும் பதிகத்தில் வைத்துப் பாடும்பொழுது, மங்கையர்க்கரசியாரைக் குறிக்குங்கால் சிவன், உமை இவர்களோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். குலச்சிறையாரைக் குறிக்கும்பொழுது சிவபெருமானோடு மாத்திரம் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். இவற்றால் மங்கையர்க்கரசியார் தம் கணவரோடு வாழவேண்டும் என்று, ஞானசம்பந்தர் திருவுளங்கொண்டதாகத்

சமய இலக்கியம்

குறிப்புகள்

தோன்றுகின்றது. இக்கருத்தைத்தான் பையவே சென்று பாண்டியற்காகவே என்ற அவரது தேவாரப் பகுதியும் தெரிவிக்கின்றது.

மங்கையர்க்கரசியார் திருநீறு அணிந்திருந்த செய்தி ''முத்தின் தாழ்வடமுஞ் சந்தனக்குழம்பும் நீறுந்தன் மார்பினின் முயங்கப் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி'' என்னும் ஞானசம்பந்தரது தேவாரப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. நுணுகி ஆராயின் இவைபோன்ற பல உயரிய செய்திகளை இத்தலத்துத் தேவாரப் பதிகங்களால் அறியலாம்.

## 3.2. குறிக்கோள்கள்:

திருவாலவாய்த் தலைவனாகிய சிவனை வணங்கினால் பிறவிப்பிணி நீங்கிவிடும் என்ற நம்பிக்கையை இப்பதிகம் ஊட்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

எளியவர்களுக்கு எளியவனாகவே இறைவன் காட்சி தருவாய் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

தீமை கண்டு அஞ்சவேண்டியது இல்லை என்பதை நாவுக்கரசர் இப்பதிகத்தில் உணர்த்துவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## திருஆலவாய்ப் பதிகம் (நான்காம் திருமுறை--திருநாவுக்கரசர்)

திருநாவுக்கரசு சுவாமிகள், சீர்திகழும் பாண்டிமாதேவியாரும், திருநீற்றின் சார்வு அடையக் கூன் நிமிர்ந்த தென்னவனாரும் குலச்சிறையாரும் மிக்கக் காதலுற்றுப் பணிந்து போற்ற மதுரையில் வாழ்ந்திருந்த காலத்தில், திருவாலவாயில் அமர்ந்த செழுஞ்சுடரும் செழும் பொருள் நூல் தரும் பெருமானுமாகிய சொக்கேசரைப் பாடிய நேரிசையும் தாண்டகமும் முதலான பெருவாய்மைத் தமிழுள் ஒன்று இத்திருப்பதிகம் ஆகும்.

## 3.3. காட்சி தருமாறு இறைவனை வேண்டுதல்:

**வேதியா! வேதகீதா! விண்ணவர் அண்ணா!" என்று என்று**
**ஓதியே, மலர்கள் தூவி, ஒடுங்கி, நின் கழல்கள் காண-**
**பாதி ஓர் பெண்ணை வைத்தாய்! படர்சடை மதியம் சூடும்**
**ஆதியே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

மறைமுதல்வனே! மறைகளைப் பாடுகின்றவனே! தேவர்கள் தலைவனே! பார்வதிபாகனே! பரவிய சடையிற் பிறையைச் சூடும் ஆதிப்பெருமானே! திருஆலவாயிலுள்ள அப்பனே! உன்திரு நாமங்களைப் பலகாலும் ஓதி மலர்கள் தூவி ஒருவழிப்பட்ட மனத்தோடு உன்திருவடிகளை அடியேன் காணுமாறு அருள் செய்வாயாக என வேண்டுகின்றார்.

**நம்பனே! நான் முகத்தாய்! நாதனே! ஞான மூர்த்தி!**
**என் பொன்னே! ஈசா!" என்று என்று ஏத்தி நான் ஏசற்று, என்றும்**

**பின்பினே திரிந்து நாயேன் பேர்த்து இனிப் பிறவா வண்ணம்-**
**அன்பனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

எல்லோராலும் விரும்பப்படுபவனே! நான்கு முகங்களை உடையவனே! தலைவனே! ஞான வடிவினனே! என் பொன் போன்றவனே! எல்லோரையும் ஆள்பவனே! அன்பனே! ஆலவாயில் அப்பனே! உன்னைப் பலகாலும் துதித்து அடியேன் மனத்திரிபுகளை நீக்கி, பொறிபுலன்களின் வழியே சென்று பிறவாத வண்ணம் நாயேனுக்கு அருள் செய்வாயாக.

குறிப்புகள்

## 3.4. பிறவிப்பிணியை நீக்குமாறு வேண்டுதல்:

**ஒரு மருந்து ஆகி உள்ளாய், உம்பரோடு உலகுக்கு எல்லாம்!**
**பெரு மருந்து ஆகி நின்றாய்; பேர் அமுதின் சுவை ஆய்க1'!**
**கரு மருந்து ஆகி உள்ளாய்;-ஆளும் வல்வினைகள் தீர்க்கும்!**
**அரு மருந்து! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

ஒப்பற்ற தேவாமிருதமாய் உள்ளவனே! தேவர்களுக்கும் மக்களுக்கும் தலையான மருந்தாக உள்ளவனே! சிறந்த அமுதின் சுவையாய்ப் பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாகி உள்ளவனே! எங்கள் வலிய வினைகளைப் போக்கி எங்களை அடிமை கொள்ளும் அருமருந்தாய் ஆலவாயில் உறையும் தலைவனே! அருள் செய்வாயாக.

**செய்ய நின் கமல பாதம் சேருமா தேவர் தேவே!**
**மை அணி கண்டத்தானே! மான்மறி மழு ஒன்று ஏந்தும்**
**சைவனே!-சால ஞானம் கற்று அறிவு இலாத நாயேன்**
**ஐயனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

தேவர்தேவனே! நீலகண்டனே! மான்மறியையும் மழுப்படையையும் ஏந்தியுள்ளவனாய சைவ சமயக்கடவுளே! ஞானத்தை முறையாகக் கற்றறியும் வாய்ப்பு இல்லாத அடியேனுடைய தலைவனே! ஆலவாயில் உறையும் அப்பனே! உன்னுடைய சிவந்த தாமரை போன்ற பாதங்களை அடியேன் சேரும்படி மிகவும் அருள் செய்வாயாக.

**வெண் தலை கையில் ஏந்தி மிகவும் ஊர் பலி கொண்டு என்றும்**
**உண்டதும் இல்லை! சொல்லில், உண்டது நஞ்சு தன்னை!**
**பண்டு உனை நினைய மாட்டாப் பளகனேன் உளம் அது ஆர,**
**அண்டனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

உலகத் தலைவனே! ஆலவாய் அப்பனே! வெள்ளிய மண்டையோட்டைக் கையில் ஏந்தி மிகவும் ஊர்களில் பிச்சையெடுத்தும் அப்பிச்சை உணவை உண்ணாது விடம் ஒன்றையே உண்டவன் என்று சொல்லப்படும் உன்னை அடியேன் வாழ்வின் முற்பகுதியில் விருப்புற்று நினைக்காத குற்றத்தினேன். அத்தகைய அடியேனுடைய உள்ளம் நிறையும்படி அருள்செய்வாயாக என்று விண்ணப்பம் செய்கின்றார்.

குறிப்புகள்

## 3.5. அச்சத்தை நீக்குமாறு வேண்டுதல்:

**எஞ்சல் இல் புகல் இது" என்று என்று ஏத்தி நான் ஏசற்று, என்றும்**
**வஞ்சகம் ஒன்றும் இன்றி மலர் அடி காணும் வண்ணம்**
**நஞ்சினை மிடற்றில் வைத்த நன் பொருள் பதமே! நாயேற்கு**
**அஞ்சல்!" என்று-ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

விடத்தைக் கழுத்தில் அடக்கிய, சிவம் என்ற சொற் பொருளானவனே! ஆலவாயில் அப்பனே! என்றும் அழிவில்லாத அடைக்கலமாகும் இடம் என்று புகழ்ந்து நான் மகிழ்ந்து என்றும் வஞ்சனையின்றி உன் மலர் போன்ற திருவடிகளைத் தரிசிக்கும் வண்ணம் நாயேனுக்கு அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

**வழு இலாது உன்னை வாழ்த்தி வழிபடும் தொண்டனேன் உன்**
**செழு மலர்ப்பாதம் காண-தெண் திரை நஞ்சம் உண்ட**
**குழகனே! கோலவில்லீ! கூத்தனே! மாத்து ஆய் உள்**
**அழகனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

தெள்ளிய அலையில் தோன்றிய விடத்தை உண்ட இளையோனே! அழகிய வில்லை ஏந்தியவனே! கூத்தனே! மாற்றுயர்ந்த தங்கம் போன்றுள்ள அழகனே! ஆலவாயில் பெருமானே! குறைபாடில்லாமல் உன்னை வாழ்த்தி வழிபடும் அடியவனாகிய யான் உன்னுடைய செழித்த மலர்போன்ற திருவடிகளைத் தரிசிக்குமாறு அருள்செய்வாயாக.

**நறுமலர் நீரும் கொண்டு நாள் தொறும் ஏத்தி வாழ்த்திச்**
**செறிவன சித்தம் வைத்துத் திருவடி சேரும் வண்ணம்**
**மறி கடல் வண்ணன் பாகா! மாமறை அங்கம் ஆறும்**
**அறிவனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

கடல் நிறத்தவனான திருமாலை உடலின் ஒரு பாகமாக உடையவனே! மேம்பட்ட வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அறிபவனே! ஆலவாயில் அப்பனே! நறியமலர்களையும் தீர்த்தங்களையும் கொண்டு நாள்தோறும் புகழ்ந்து வாழ்த்தித் திருவடிகளைச் செறிதற்குரிய வழிகளை உள்ளத்துக் கொண்டு உன் திருவடிகளை அடியேன் சேரும் வண்ணம் அருள் செய்வாயாக.

**நலம் திகழ் வாயில் நூலால் சருகு இலைப் பந்தர் செய்த**
**சிலந்தியை அரசு அது ஆள அருளினாய்" என்று திண்ணம்**
**கலந்து உடன் வந்து நின் தாள் கருதி நான் காண்பது ஆக**
**அலந்தனன்!-ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

நன்மைகள் விளங்குதற்குக் காரணமான தன்வாயினால் நூற்கப்பட்ட நூலினாலே சருகான இலைகள் விழுந்து தங்கி நிழல் தரும் பந்தலாக அமைத்த சிலந்தியை மறுபிறப்பில் அரசாளும் மன்னனாகப் பிறக்குமாறு

அருள்செய்தாய் என்று உள்ளத்திலே உட்கொண்டு வந்து உன் திருவடிகளைக் காணவருந்தும் அடியேன் காணுமாறு ஆலவாயில் அப்பனாகிய நீ அருள்செய்வாயாக.

**பொடிக்கொடு பூசி, பொல்லாக் குரம்பையில் புந்தி, ஒன்றி,**
**பிடித்து நின் தாள்கள் என்றும் பிதற்றி, நான் இருக்கமாட்டேன்-**
**எடுப்பன்"என்று இலங்கைக் கோன் வந்து எடுத்தலும், இருபது தோள்**
**அடர்த்தனே! ஆலவாயில் அப்பனே!-அருள் செயாயே!**

திருநீற்றைப் பூசி அழகில்லாத இந்த உடலிலே மனம் ஒரு வழிப்பட்டு உன் திருவடிகளைப் பற்றி என்றும் அவற்றின் பெருமையை அடைவுகேடாகப் பேசிய வண்ணம் காலம் போக்க இயலாதேனாய் உள்ளேன். கயிலையைப் பெயர்ப்பேன் என்று கருதி இராவணன் வந்து அம்மலையை எடுக்க முயன்ற அளவில் அவனுடைய இருபது தோள்களையும் வருத்திய ஆலவாயில் பெருமானே! அடியேனுக்கு அருள்செய்வாயாக.

## 3.6. தொகுத்துக் காண்போம் :

திருவாலவாய்த் தலைவனாகிய சிவனை வணங்கினால் பிறவிப்பிணி நீங்கிவிடும் என்ற நம்பிக்கையை இப்பதிகம் ஊட்டும் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

எளியவர்களுக்கு எளியவனாகவே இறைவன் காட்சி தருவாய் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

தீமை கண்டு அஞ்சவேண்டியது இல்லை என்பதை நாவுக்கரசர் இப்பதிகத்தில் உணர்த்துவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 3.7. சோதித்தறியும் வினாக்கள்:

1. திருநாவுக்கரசர் இறைவனிடம் தனக்குக் காட்சி தருமாறு வேண்டுவதை விவரி.
2. தன் பிறவிப்பிணியை நீக்குமாறு நாவுக்கரசர் இறைவனிடம் எவ்வாறு விண்ணப்பம் செய்கின்றார்?
3. உலகியலில் அச்சத்தை நீக்குமாறு அப்பர் பெருமான் எவ்வாறு வேண்டுகின்றார்?

## 3.8. பயிற்சி வினா:

1. திருநாவுக்கரசர் திருவாலவாய்ப் பதிகத்தில் வேண்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.

## 3.9. மேலும் பயில்வதற்கான நூல் :

1. பி.ரா.நடராசன், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை, 2004.

குறிப்புகள்

# கூறு-4 திருஆலவாய்ப் பதிகம் (ஆறாம் திருமுறை - திருநாவுக்கரசர்)

## 4.1. திருவாலவாய் - அறிமுகம்:

ஆண்டவரசு திருப்புத்தூர் பணிந்து திருஆலவாய் சேர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்திருந்து தமிழாராய்ந்த முக்கட் பெருமானை வணங்கி எய்திய பேரானந்தத்தினிடை மூழ்கி அருளிச் செய்த திருப்பதிகம் இது.

## 4.2. குறிக்கோள்கள்:

இறைவனுடைய திருவடிகளைச் சென்று சேர்தலாகிய பேரானந்தம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று அடியார் வேண்டுவதை அறிந்து கொள்வீர்கள்

படைத்தும் காத்தும் கரந்தும் திருவிளையாடல்களைப் புரியும் இறைவனின் அற்புதங்களைச் சிற்றறிவு உடைய மனிதனால் அறிய இயலாது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

அடியார்களின் உள்ளத்தில் இருந்தும், அவர்தம் பணிகளில் நடந்தும், அவர்களுக்காகவே உடன் இருந்தும் அருளாட்சி செய்யும் இறைவனைச் சிந்தித்து இருத்தலே உயிர்களின் தலையாய கடமையாகும் என்று நாவுக்கரசர் பெருமான் அறிவுறுத்துவதைத் தெரிந்து கொள்வீர்கள்

## 4.3. இறைப் பேரானந்தம் வேண்டுதல்:

**முளைத்தானை, எல்லார்க்கும் முன்னே தோன்றி**
**முதிரும் சடைமுடி மேல் முகிழ்வெண்திங்கள்**
**வளைத்தானை வல் அசுரர் புரங்கள் மூன்றும்,**
**வரை சிலையா வாசுகி மா நாணாக் கோத்துத்**
**துளைத்தானை, சுடு சரத்தால் துவள நீறா தூ**
**முத்த வெண் முறுவல் உமையோடு ஆடித்**
**திளைத்தானை-தென் கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் தான் முன்னே நிற்பவனாய், செறிந்த சடைமுடிமேல் பிறையை வளைவாகச் சூடியவனாய், அசுரர்களுடைய மும்மதில்களையும் மேருமலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பினை நாணாகவும் கொண்டு கொடிய அம்பினாலே அழிந்து சாம்பலாகும்படி அழித்தவனாய், தூய முத்துப் போன்ற பற்களை உடைய உமாதேவியோடு விளையாடி மகிழ்ந்தவனாய் அழகிய மதுரை மாநகரத்து ஆலவாய் ஆகிய திருக்கோயிலில் உகந்தருளி இருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளையே தியானிக்கும் வாய்ப்பினை யான்

பெற்றுள்ளேனே என்று தாம் பெற்ற பேற்றின் அருமையை உணர்ந்து கூறுகின்றார்.

**விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை,**
**மேல் ஆடு புரம் மூன்றும் பொடி செய்தானை,**
**பண் நிலவு பைம்பொழில் சூழ் பழனத்தானை,**
**பசும் பொன்னின் நிறத்தானை, பால் நீற்றானை,**
**உள்-நிலவு சடைக்கற்றைக் கங்கையாளைக் கரந்து**
**உமையோடு உடன் ஆகி இருந்தான் தன்னை,-**
**தெள்-நிலவு தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

தேவருலகிலுள்ள மேலாருக்கும் மேலாயவனாய், வானத்தில் உலவிய முப்புரங்களையும் அழித்தவனாய், வண்டுகளின் பண்ணோசை நிலைபெற்ற பசிய பொழில்களை உடைய பழன நகரில் உள்ளானாய், பசும் பொன்நிறத்தனாய், வெண்ணீறு அணிந்தவனாய், சடைக்கற்றைக்குள் அடங்கிய கங்கையை உடையவனாய், உமையோடு வெளிப்படையாக உடனாகியும் அவளைத் தன் உருவில் மறைத்தும் இருப்பவனாய்த் தெளிந்த ஞானம் உடையார் பலரும் தங்கியிருக்கும் தென்கூடல் ஆலவாயில் உள்ள சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**நீர்த்திரளை நீள் சடைமேல் நிறைவித்தானை,**
**நிலம் மருவி நீர் ஓடக் கண்டான் தன்னை,**
**பால்-திரளைப் பயின்று ஆட வல்லான் தன்னை,**
**பகைத்து எழுந்த வெங் கூற்றைப் பாய்ந்தான் தன்னை,**
**கால்-திரள் ஆய் மேகத்தினுள்ளே நின்று கடுங்**
**குரல் ஆய் இடிப்பானை, கண் ஓர் நெற்றித்**
**தீத்திரளை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

கங்கையை நீண்ட சடையில் தங்கச் செய்தவனாய், பின் பகீரதன் பொருட்டாகஅதன் ஒரு பகுதியை நிலத்தின்கண் பெருகி ஓடவிட்டவனாய், பால், தயிர், நெய் என்பவற்றின் அபிடேகத்தைப் பலகாலும் உடையவனாய், பகை கொண்டு வந்தகொடிய கூற்றுவனைத் தண்டித்தவனாய், காற்றின் திரட்சியாய் மேகத்தின் உள்ளே இருந்து கொடிய இடியாக ஓசை எழுப்புபவனாய், நெற்றியின் கண்தீத்திரட்சி போன்ற கண்ணை உடையவனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச் சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

## 4.4.சிவனருளைச் சிந்தித்திருத்தல்:

**வானம், இது, எல்லாம் உடையான் தன்னை**

**வரி அரவக் கச்சானை வன்பேய் சூழக்**
**கானம் அதில் நடம் ஆட வல்லான் தன்னை, கடைக்**
**கண்ணால் மங்கையையும் நோக்கா என்மேல்**
**ஊனம் அது எல்லாம் ஒழித்தான் தன்னை**
**உணர்வு ஆகி அடியேனது உள்ளே நின்ற**
**தேன் அமுதை-தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

வான் உலகினையும் நிலவுலகினையும் தன் உடைமையாக உடையவனாய்ப் பாம்பினைக் கச்சாக அணிந்தவனாய் வலிய பேய்கள் சூழச்சுடுகாட்டில் கூத்தாட வல்லவனாய், தன் கடைக்கண்களால் உமாதேவியை நோக்கி அவள் பரிந்துரைத்த குறிப்பினையும் பெற்று என்பால் உள்ள குறைகளை எல்லாம் நீக்கினவனாய், அடியேன் உள்ளத்துள்ளே ஞானவடிவினனாய் நின்று தேன் போலவும் அமுது போலவும் இனியனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**ஊரானை, உலகு ஏழ் ஆய் நின்றான் தன்னை,**
**ஒற்றை வெண் பிறையானை, உமையோடு என்றும்**
**பேரானை, பிறர்க்கு என்றும் அரியான் தன்னை,**
**பிணக்காட்டில் நடம் ஆடல் பேயோடு என்றும்**
**ஆரானை, அமரர்களுக்கு அமுது ஈந்தானை,**
**அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்**
**சீரானை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

கயிலை மலையை இருப்பிடமாக உடையவனாய், ஏழுலகமும் பரந்து இருப்பவனாய், ஒற்றைப்பிறையை அணிந்தவனாய், உமாதேவியை விடுத்து என்றும் நீங்காதவனாய், அடியார் அல்லாதார் நினைத்தற்கு அரியனாய், பேயோடு எந்நாளும் சுடுகாட்டில் கூத்தாடுதலில் தெவிட்டாதவனாய், தான் விடத்தை உண்டு அமரர்களுக்கு அமுதம் ஈந்தவனாய், வேதமந்திரங்களைக் கூறிப் பிரமனும் திருமாலும் துதிக்கும் புகழுடையவனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**மூவனை, மூர்த்தியை, மூவா மேனி உடையானை,**
**மூஉலகும் தானே எங்கும்**
**பாவனை, பாவம் அறுப்பான் தன்னை, படி**
**எழுதல் ஆகாத மங்கையோடும்**
**மேவனை, விண்ணோர் நடுங்கக் கண்டு**

**விரிகடலின் நஞ்சு உண்டு அமுதம் ஈந்த**
**தேவனை,-தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

யாவரினும் முற்பட்டவனாய், அடியார்கள் விரும்பிய வடிவில் காட்சி வழங்குபவனாய், என்றும் மூத்தலில்லாத திருமேனியை உடையவனாய், தானே மூவுலகம் முழுதும் பரவியிருப்பவனாய், அடியவர்களின் தீவினையைப் போக்குபவனாய், ஓவியத்து எழுதவொண்ணா அழகிய உமையோடு விரும்பியிருப்பவனாய், தேவர்கள் நடுங்குதலைக் கண்டு கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அமுதத்தை ஈந்ததேவனாய் உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

குறிப்புகள்

## 4.5. இறைவனின் திருத்தோற்றத்தைப் பாடுதல்:

**துறந்தார்க்குத் தூ நெறி ஆய் நின்றான் தன்னை,**
**துன்பம் துடைத்து ஆள வல்லான் தன்னை,**
**இறந்தார்கள் என்பே அணிந்தான் தன்னை,**
**எல்லி நடம் ஆட வல்லான் தன்னை**
**மறந்தார் மதில் மூன்றும் மாய்த்தான் தன்னை,**
**மற்று ஒரு பற்று இல்லா அடியேற்கு என்றும்**
**சிறந்தானை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

பற்றறுத்த சான்றோருக்குப் பற்றுக்கோடாகும் வழியாய் இருப்பவனாய், அடியார்களுடைய துன்பத்தைப் போக்கி அவர்களை ஆட்கொள்ள வல்லவனாய், இறந்தவர்களுடைய எலும்பையே அணிந்தவனாய், இரவில் கூத்தாடவல்லவனாய்த் தன்னை மறந்த அசுரர்களின் மும்மதில்களையும் அழித்தவனாய், வேறுபற்றில்லாத அடியார்களுக்கு என்றும் மேம்பட்டு அருளுபவனாய் உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற**
**கருத்தானை, கருத்து அறிந்து முடிப்பான் தன்னை,**
**தூயானை, தூ வெள்ளை ஏற்றான் தன்னை,**
**சுடர்த் திங்கள் சடையானை, தொடர்ந்து நின்ற என்**
**தாயானை, தவம் ஆய தன்மையானை, தலை**
**ஆய தேவாதி தேவர்க்கு என்றும்**
**சேயானை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

அடியார்களுடைய வாயுள்ளும் மனத்துள்ளும் மனத்தில் தோன்றும் எண்ணத்துள்ளும் தங்கி, அவர்களுடைய விருப்பங்களை அறிந்து

நிறைவேற்றுபவனாய், மாசற்றவனாய், கலப்பற்ற வெள்ளை நிறக் காளையை உடையவனாய், பிறையைச்சடையில் சூடியவனாய், தொடர்ந்து எனக்குத் தாய்போல உதவுபவனாய்த் தவத்தின் பயனாக உள்ளவனாய், மேம்பட்ட தேவர்கள் தலைவராய திருமால் பிரமன் இந்திரன் முதலியவர்களுக்கு என்றும் சேய்மையிலுள்ளவனாய் இருக்கும்தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

## 4.6. தேவாதிதேவனைச் சிந்தித்திருத்தல் :

**பகைச் சுடர் ஆய்ப் பாவம் அறுப்பான் தன்னை,**
**பழி இலியாய் நஞ்சம் உண்டு அமுது ஈந்தானை,**
**வகைச் சுடர் ஆய் வல் அசுரர் புரம் அட்டானை,**
**வளைவு இலியாய் எல்லார்க்கும் அருள் செய்வானை,**
**மிகைச் சுடரை, விண்ணவர்கள், மேல் அப்பாலை,**
**மேல் ஆய தேவாதிதேவர்க்கு என்றும்**
**திகைச் சுடரை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

தீவினையாகிய இருளைப் போக்கும் ஞானச் சுடராய், அடியார்களின் பாவங்களைப் போக்குபவனாய்ப் பழி ஏதும் இல்லாதவனாய் நஞ்சினை உண்டு தேவர்க்கு அமுதம் ஈந்தவனாய்க் கிளைத்தெழுந்த தீயாகி அசுரருடைய மும்மதில்களையும் அழித்தவனாய், நடுவுநிலை தவறாதவனாய் எல்லா உயிர்களுக்கும் அருள் செய்பவனாய், மேலான ஒளிவடிவினனாய், விண்ணவர்களுக்கு மேலும் உயர்வு தரும் அப்பக்தியாய் உள்ளவனாய், மேம்பட்ட தேவர்களுக்கும் ஒளிகாட்டும் கலங்கரை விளக்காக உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**மலையானை, மா மேரு மன்னினானை, வளர்புன்**
**சடையானை, வானோர் தங்கள்**
**தலையானை, என் தலையின் உச்சி என்றும்**
**தாபித்து இருந்தானை, தானே எங்கும்**
**துலை ஆக ஒருவரையும் இல்லாதானை,**
**தோன்றாதார் மதில் மூன்றும் துவள எய்த**
**சிலையானை, -தென்கூடல்-திரு ஆலவா அய்ச்**
**சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

கயிலை மலையை உடையவனாய், மேரு மலையில் தங்கியிருப்பவனாய், வளர்ந்த செஞ்சடையினனாய், வானோருள் மேம்பட்டவனாய், என் தலையின் உச்சியில் என்றும் நிலைபெற்றிருப்பவனாய், எங்கும் தனக்கு நிகராவார் இல்லாதவனாய்த் தன்னை அணுகாது பகையைப்பூண்ட அசுரர் மதில்கள் மூன்றும் அழியுமாறு

பயன்படுத்திய வில்லை உடையவனாய் இருக்கும் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

குறிப்புகள்

**தூர்த்தனைத் தோள் முடிபத்து இறுத்தான் தன்னை,**
**தொல்-நரம்பின் இன் இசை கேட்டு அருள் செய்தானை,**
**பார்த்தனைப் பணி கண்டு பரிந்தான் தன்னை, பரிந்து**
**அவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை,**
**ஆத்தனை, அடியேனுக்கு அன்பன் தன்னை, அளவு**
**இலாப் பல் ஊழி கண்டு நின்ற**
**தீர்த்தனை,-தென்கூடல்-திரு ஆலவா அய்ச் சிவன்**
**அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.**

பிறன் மனைவியை விரும்பிய இராவணனுடைய தோள்களையும் பத்துத்தலைகளையும் நசுக்கியவனாய், பின் அவன் எழுப்பிய வீணை இசைகேட்டு அருள் செய்தவனாய், அருச்சுனனுடைய தொண்டினைக் கண்டு அவனுக்கு இரங்கிப் பாசுபதாத்திரம் ஈந்தவனாய், நம்பத்தகுந்தவனாய், அடியேன் மாட்டு அன்பு உடையவனாய், அளவற்ற பல ஊழிக்காலங் களையும் கண்டும் தன் நிலைபேற்றில் மாறுபடாது இருக்கும் பரிசுத்தனாகிய தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

## 4.7. தொகுத்துக் காண்போம்:

இறைவனுடைய திருவடிகளைச் சென்று சேர்தலாகிய பேரானந்தம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று அடியார் வேண்டுவதை அறிந்து கொண்டீர்கள்.

படைத்தும் காத்தும் கரந்தும் திருவிளையாடல்களைப் புரியும் இறைவனின் அற்புதங்களைச் சிற்றறிவு உடைய மனிதனால் அறிய இயலாது என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

அடியார்களின் உள்ளத்தில் இருந்தும், அவர்தம் பணிகளில் நடந்தும், அவர்களுக்காகவே உடன் இருந்தும் அருளாட்சி செய்யும் இறைவனைச் சிந்தித்து இருத்தலே உயிர்களின் தலையாய கடமையாகும் என்று நாவுக்கரசர் பெருமான் அறிவுறுத்துவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 4.8. சோதித்தறியும் வினாக்கள்:

1. இறைப்பேரானந்தத்தை திருநாவுக்கரசர் எவ்வாறு பாடுகின்றார்?
2. சிவனருளை சிந்தித்து இருத்தலின் சிறப்பினை எடுத்துரைக்க.
3. சிவபெருமான் தேவர்களுக்கு இன்னருள் புரிதலை திருநாவுக்கரசர் பாடும் பாங்கினை விவரி.

## 4.9. பயிற்சி வினா:

1. சிவனை மட்டுமே சிந்தித்துத் துதித்தலின் மேன்மையை திருநாவுக்கரசர்எவ்வாறுபுலப்படுத்துகின்றார்.

## 4.10. மேலும் பயில்வதற்கான நூல்

1. பி.ரா.நடராசன், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், 2004.

# பிரிவு-2 பதிகங்கள்

## கூறு-5 திருப்புத்தூர்ப் பதிகம் (ஆறாம் திருமுறை -திருநாவுக்கரசர்)

குறிப்புகள்

### 5.1. திருப்புத்தூர் - அறிமுகம்:

பாண்டிய நாட்டுத்தலம். தஞ்சை மதுரை பேருந்து வழித் தடத்திலுள்ளது. மதுரை, புதுக்கோட்டை, காரைக்குடி, சிவகங்கை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இத்தலம் திருப்புத்தூர் எனவும், கோயில் திருத்தளி எனவும் வழங்கும். அப்பர் சுவாமிகள் திருப்புத்தூரில் திருத்தளியான் காண் என்று பாடுகின்றார். உமாதேவியும், இலக்குமியும் பூசித்த பேறுபெற்ற தலம். இறைவன் அம்மை சந்நிதிகளுக்கு இடையில் பைரவர் சந்நிதி இருக்கிறது. பைரவர் சிறப்புடையவர். ஆனந்தக் கூத்தப்பெருமான், சிவகாமியம்மை திருவுருவங்கள் கற்சிலையாலான கண் கவரும் வனப்புடையன. விஷ்ணுவுக்கும் சந்நிதி உண்டு.

சுவாமி பெயர் புத்தூரீசர் திருத்தளிநாதர். அம்மை சிவகாமி அம்மையார். தீர்த்தம் திருத்தளித் தீர்த்தம், சிவகங்கை முதலியன. தலவிருட்சம் கொன்றை. வாகீசர், திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் நாள்களில் பாண்டி நாட்டில் சைவம் தழைக்கச் செய்து மீண்டுவந்த திருஞான சம்பந்தரால் பாண்டிநாட்டின் பெருமையறிந்து அங்குச் செல்ல விரும்பி விடைபெற்றுத் தென்திசையே போகும் பொழுது புத்தூர் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம்.

### 5.2. குறிக்கோள்கள்:

திருப்புத்தூர் திருத்தலம் இயற்கை வளங்கள் நிறைந்த அற்புதமான இடமாகத் திகழ்வதைத் தெரிந்து கொள்வீர்கள்.

இறைவனின் திருவிளையாடல்களை திருநாவுக்கரசர் நெஞ்சுருகிப் பாடும் தன்மையைத் தெரிந்து கொள்வீர்கள்.

சிவபெருமான் அடியார்களின் வினைகளைத் தீர்த்தருளும் தலமாக விளங்குவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

### 5.3. திருப்புத்தூர்த் திருத்தளியின் சிறப்பு:

**புரிந்து அமரர் தொழுது ஏத்தும் புகழ் தக்கோன்**
**காண், போர் விடையின் பாகன் காண், புவனம் ஏழும்**
**விரிந்து பல உயிர் ஆகி விளங்கினான் காண், விரைக்**
**கொன்றைக் கண்ணியன் காண், வேதம் நான்கும்**
**தெரிந்து முதல் படைத்தோனைச் சிரம் கொண்டோன்**
**காண், தீர்த்தன் காண், திருமால் ஓர் பங்கத்தான் காண்**

**திருந்து வயல் புடை தழுவு திருப் புத்தூரில்-திருத்**
**தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

தேவர்கள் விரும்பித்துதித்து வணங்கும் புகழுக்கு உரியவனும், போர்த்தொழில் வல்ல இடப ஊர்திக்குத் தலைவனும், உலகங்கள் ஏழுமாகிப் பல உயிரும் ஆகி விளங்கியவனும், மணமிக்க கொன்றைக் கண்ணியை உடையவனும், வேதம் நான்கையும் உணர்ந்து முற்படப் படைப்புத் தொழிலை மேற்கொண்ட பிரமனது சிரத்தைக் கொய்தவனும், குற்றமற்றவனும், திருமாலை ஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிப் பண்படுத்தப்பட்ட வயல்கள் நாற்புறமும் சூழ விளங்கும் திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழுஞ் சிவபெருமான் என் சிந்தையில் என்றும் நீங்காமல் நிற்பவன் ஆவான்.

**வார் ஆரும் முலை மங்கை பங்கத்தான் காண்**
**மாமறைகள் ஆயவன் காண் மண்ணும், விண்ணும்,**
**கூர் ஆர் வெந்தழலவனும், காற்றும், நீரும்,**
**குலவரையும், ஆயவன் காண் கொடு நஞ்சு உண்ட**
**கார் ஆரும் கண்டன் காண் எண்தோளன் காண்,**
**கயிலை மலைப்-பொருப்பன் காண் விருப்போடு என்றும்**
**தேர் ஆரும் நெடுவீதித் திருப் புத்தூரில்-திருத்**
**தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

கச்சணிந்த முலையினையுடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் பெரிய வேதங்கள் ஆனவனும், நிலமும் விண்ணும், வெம்மைமிகு தழலும் காற்றும் நீரும் உயர்மலையும் ஆயவனும், கொடிய நஞ்சை உண்டுகறுத்த கண்டத்தவனும், எண்டோளினனும், கயிலைமலை ஆகிய பொருப்பைத் தன் வாழிடமாகக் கொண்டவனும் ஆகித்தேரோடும் நெடுவீதிகளை உடைய திருப்புத்தூர்த் திருத்தளியில் என்றும் விருப்போடு விளங்கும் சிவபெருமான் என்சிந்தையிலே என்றும் நீங்காமல் நிலைப்பவன் ஆவான்.

## 5.4. இறைவனின் திருவிளையாடல்களைச் சுட்டுதல்:

**மின் காட்டும் கொடி மருங்குல் உமையாட்கு**
**என்றும் விருப்பவன் காண், பொருப்பு**
**வலிச் சிலைக் கையோன் காண்,**
**நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நல்**
**கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்**
**பொன் காட்டக் கடிக்கொன்றை, மருங்கே நின்ற**
**புனக் காந்தள் கை காட்ட, கண்டு வண்டு**
**தென் காட்டும் செழும் புறவின்திருப் புத்தூரில்-**

குறிப்புகள்

**திருத் தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

மின்னலும் கொடியும் போன்ற இடையினையுடைய உமையம்மையால் என்றும் விரும்பப்படும் கேள்வனும், மலையாகிய வலிமை மிக்க வில்லை வளைத்த கையினனும், நல்ல பாட்டுக்களையாக்க வல்ல புலவனாய்ச் சங்கம் போந்து நல்லபொற் கிழியைத் தருமிக்கு அருளியவனும் ஆகி, மணமிக்ககொன்றை மலர் பொன்னின் வனப்பைக் காட்ட, அருகே நின்ற மேட்டுநிலக் காந்தள் கைகளின் வடிவினைக் காட்ட, இவற்றைக் கண்டு வண்டு இசைபாடும் முல்லையும் குறிஞ்சியும் மயங்கிய வளமிக்க திருப்புத்தூர்த் திருத்தளியில் விளங்கும் சிவபெருமான் என் சிந்தையில் என்றும் நீங்காமல் நிலைப்பவன் ஆவான்.

**ஏடு ஏறு மலர்க்கமலத்து அயனும், மாலும்,**
**இந்திரனும், பணிந்து ஏத்த இருக்கின்றான் காண்**
**தோடு ஏறும் மலர்க்கடுக்கை, வன்னி, மத்தம்,**
**துன்னிய செஞ்சடையான் காண் துகள் தீர் சங்கம்**
**மாடு ஏறி முத்து ஈனும் கானல் வேலி மறைக்காட்டு**
**- மாமணி காண் வளம் கொள் மேதி**
**சேடு ஏறி மடுப் படியும் திருப் புத்தூரில்-திருத்**
**தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

இதழ்கள் நிறைந்த தாமரை மலரில் விளங்கும் நான்முகனும், திருமாலும் இந்திரனும், பணிந்து துதிக்கும் வண்ணம் இருப்பவனும், இதழ்களை உடைய கொன்றை, வன்னி, ஊமத்தை ஆகிய மலர்கள் செறிந்த செஞ்சடையினனும், குற்றமற்ற சங்கம் பக்கத்தே ஏறிமுத்தை ஈனும் கடற்கரையை எல்லையாக உடைய மறைக்காட்டில்வாழ் மணியும் ஆகி, வளவிய பயிர்களை மேயும் எருமைகரை மீது ஏறி நீர் நிலையில் படியும் திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என்சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

## 5.5. வினைகளைத் தீர்க்கும் இறைவன்:

**கரு மருவு வல்வினை நோய் காற்றினான் காண்,**
**கா மரு பூங் கச்சி ஏகம்பத்தான் காண்,**
**பெரு மருவு பேர் உலகில் பிணிகள் தீர்க்கும்**
**பெரும்பற்றத் தண்புலியூர் மன்று ஆடீ காண்,**
**தரு மருவு கொடைத் தடக்கை அளகைக்கோன்**
**தன் சங்காத்தி, ஆரூரில்-தனி யானை காண்**
**திரு மருவு பொழில் புடை சூழ் திருப் புத்தூரில்-**
**திருத் தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

பிறப்பைப் பொருந்துவதற்கு ஏதுவாகிய வலிய வினை நோயை நீக்கியவனும், விருப்பம் வருதற்குரிய பொலிவுடன் விளங்கும் கச்சிஏகம்பனும், நிலையாமைப் பெருமை மேவும் பெரிய நிலவுலகில் பொருந்தும் பிணிகளைத் தீர்க்கும் குளிர்ச்சிமிக்க பெரும் பற்றப் புலியூர் மன்றாடியும், கற்பகத்தருப் போலக் கொடுக்கும் பெருமை மிக்க கையினை உடைய அளகைக் கோன் ஆகிய குபேரனுக்கு மிக்க நண்பனும், ஆரூரில் அமர்ந்த ஒப்பற்ற யானையும் ஆகித் திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

**காம்பு ஆடு தோள் உமையாள் காண, நட்டம்**
**கலந்து ஆடல் புரிந்தவன் காண் கையில் வெய்ய**
**பாம்பு ஆட, படுதலையில் பலி கொள்வோன் காண்**
**பவளத்தின் பருவரை போல் படி மத்தான் காண்**
**தாம்பு ஆடு சின விடையே பகடாக் கொண்ட**
**சங்கரன் காண் பொங்கு அரவக்கச்சையோன் காண்**
**சேம்பு ஆடு வயல் புடை சூழ் திருப் புத்தூரில்-**
**திருத் தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

மூங்கில் போன்ற தோளுடைய உமையம்மை காணுமாறு பல கூத்து விகற்பங்களையும் கலந்து ஆடியவனும், சீற்றம்மிக்க பாம்பு கையில் கங்கணமாய்ப் பொருந்தி ஆடத் தலை ஓட்டில் பிச்சை ஏற்பவனும், பவளத்தால் ஆன பெரிய மலை போன்ற வடிவினனும், கயிற்றால் பிணித்தற்குரிய சினமிக்க இடபத்தையே யானை என மதிக்கத்தக்க ஊர்தியாகக் கொண்ட சங்கரனும், பொங்கும் சினப் பாம்பையே அரைப்பட்டிகையாகப் புனைந்தவனும் ஆகி நீர்ச் சேம்புகள் நிறைந்த வயல்கள் நாற்புறமும் சூழ்ந்த திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

**வெறி விரவு மலர்க்கொன்றை, விளங்கு திங்கள்,**
**வன்னியொடு, விரிசடை மேல் மிலைச்சினான் காண்**
**பொறி விரவு கதம் நாகம், அக்கினோடு பூண்டவன்**
**காண் பொரு புலித்தோல் ஆடையான் காண்**
**அறிவு அரிய நுண்பொருள்கள் ஆயினான் காண்**
**ஆயிரம் பேர் உடையவன் காண் அம் தண் கானல்**
**செறி பொழில் சூழ் மணி மாடத் திருப் புத்ரில்-**
**திருத் தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

மணம்நாறும் கொன்றை மலரையும் விளக்கமுடைய திங்களையும் வன்னியையும் விரிந்த சடைமேல் சூடியவனும், புள்ளிகள் பொருந்திய கோபிக்கும் நாகத்தையும், எலும்பினையும் அணியாகப் பூண்டவனும்,

போர்க்குணமுடைய புலியினது தோலை ஆடையாகக் கொண்டவனும், அறிதற்கரிய நுண்பொருள்களாய் ஆனவனும், ஆயிரம் பேர் உடையவனும் ஆகி, அழகியதும், குளிர்ந்ததும் ஆகிய கடற்கரையிடத்தே நெருங்கி விளங்கும் பொழில்கள் சூழ்ந்ததும், வரிசையாயமைந்த மாடங்களை உடையதுமாகிய திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

**புக்கு அடைந்த வேதியற்கு ஆய்க் காலற் காய்ந்த**
**புண்ணியன் காண் வெண் நகை வெள்வளையாள் அஞ்ச,**
**மிக்கு எதிர்ந்த கரி வெருவ, உரித்த கோன் காண்**
**வெண்மதியைக் கலை சேர்த்த திண்மையோன் காண்**
**அக்கு அரும்பு பெரும் புன்னை நெருங்கு சோலை**
**ஆரூருக்கு அதிபதி காண் அம் தண் தென்றல்**
**திக்கு அணைந்து வரு மருங்கில்-திருப் புத்தூரில்-**
**திருத் தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

தன்பால் அடைக்கலம் புக்க வேதியன் மார்க்கண்டேயனுக்காக இயமனைக் கோபித்துக் கொன்ற புண்ணியனும், வெள்ளிய பற்களையும் வெள்ளிய வளையல்களையும் உடைய உமையம்மை அஞ்சுமாறு சினம் மிக்கு எதிர்த்த யானை நடுங்க அதன் தோலை உரித்தவனும், வெள்ளிய மதிப்பிறையைத் தலையில் தரித்து அருளியவனும், மன்மதன் வில்லாகக் கொள்ளுதற்கு வாய்ப்புடைய அக்கரும்பும், பெருமைமிக்க புன்னையும் நெருங்கிய சோலைமிக்க ஆரூர்க்கு அதிபதியும் ஆகி, மெல்லிதாய்க் குளிர்ந்த தென்றல் வடக்குத் திக்கினை அணையவரும் இடத்தில் உள்ள திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

**பற்றவன் காண், ஏனோர்க்கும் வானோருக்கும்**
**பராபரன் காண் தக்கன் தன் வேள்வி செற்ற**
**கொற்றவன் காண் கொடுஞ்சினத்தை அடங்கச்**
**செற்று, ஞானத்தை மேல் மிகுத்தல் கோளாக் கொண்ட**
**பெற்றியன் காண் பிறங்கு அருவிக் கழுக்குன்றத்து**
**எம் பிஞ்ஞகன் காண் பேர் எழில் ஆர் காமவேளைச்**
**செற்றவன் காண் சீர் மருவு திருப் புத்தூரில்-திருத்**
**தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

அண்டினார்க்குத் துணையானவனும், தேவர்க்கும் மற்றையவர்க்கும் அவரின் வேறுபட்டு மேலானவனும், அவரோடு கலந்து நின்று அவரைப் போலக் கீழானவனும், தக்கனது வேள்வியை அழித்த வெற்றியினனும்,

கொடிய சினத்தை முற்றிலும் அழித்தவனும், ஞானத்தை மேன்மேலும் வளரச் செய்தலைத் தன்கொள்கையாகக் கொண்டவனும், அருவி விளங்கும் கழுக்குன்றில் யாம் வணங்கும் தலைக்கோலம் உடையவனும், மிக்க எழில் படைத்த மன்மதனை விழித்து அழித்தவனும், ஆகி, புகழ்மிக்க திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

**உரம் மதித்த சலந்தரன் தன் ஆகம் கீண்ட ஓர்**
**ஆழி படைத்தவன் காண், உலகு சூழும்**
**வரம் மதித்த கதிரவனைப் பல் கொண்டான் காண்,**
**வானவர்கோன் புயம் நெரித்த வல்லாளன் காண்,**
**அர மதித்துச் செம்பொன்னின் ஆரம் பூணா**
**அணிந்தவன் காண், அலைகடல் சூழ் இலங்கை வேந்தன்**
**சிரம் நெரித்த சேவடி காண் திருப் புத்தூரில்-திருத்**
**தளியான் காண் அவன் என் சிந்தையானே.**

தனது வலியைப் பெரிதாக மதித்த சலந்தரனின் உடலைப் பிளந்த ஒப்பற்ற ஆழியைப் படைத்தவனும், உலகினைச் சூழவருவோனாய் எல்லாராலும் மேலாக மதிக்கப்பட்ட சூரியனுடைய பல்லைப் பறித்தவனும், இந்திரனுடைய புயத்தை நெரித்த வன்மை உடையவனும், பாம்பினைச் செம்பொன் ஆரமாகவும் பூணாகவும் மதித்து அணிந்தவனும், அலைகடல் சூழ் இலங்கைக்கு இறையாகிய இராவணனுடைய சிரங்களை நெரியச் செய்த சேவடியினனும் ஆகி, திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

## 5.6. தொகுத்துக் காண்போம்:

திருப்புத்தூர் திருத்தலம் இயற்கை வளங்கள் நிறைந்த அற்புதமான இடமாகத் திகழ்வதைத் தெரிந்து கொண்டீர்கள்.

இறைவனின் திருவிளையாடல்களை திருநாவுக்கரசர் நெஞ்சுருகிப் பாடும் தன்மையைத் தெரிந்து கொண்டீர்கள்.

சிவபெருமான் அடியார்களின் வினைகளைத் தீர்த்தருளும் தலமாக விளங்குவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 5.7. சோதித்தறியும் வினாக்கள்:

1. திருப்புத்தூர்த் திருத்தளியின் சிறப்புகளை நாவுக்கரசர் எவ்வாறு பாடுகின்றார்?
2. இறைவனின் திருவிளையாடல்களை திருப்புத்தூர்ப் பதிகத்தின்வழி எடுத்துரைக்க.
3. பக்தர்களின் வினைகளைத் தீர்க்கும் இறைவனின் பெருமைகளை தேவாரம் எவ்வாறு காட்டுகின்றது?

4. தன்னை வணங்கும் அடியார்களுக்கு இறைவன் அருள் புரியும் தன்மையை திருநாவுக்கரசர் பாடுவதை எடுத்துரைக்க.



## 5.8. பயிற்சி வினா:

1. திருப்புத்தூர்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை திருநாவுக்கரசர் எவ்வாறு போற்றுகின்றார்?
2. உள்ளக்கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்ய முடியும் என்பதை திருப்புத்தூர்த் திருத்தல தேவாரப் பாடல் கொண்டு நிறுவுக.

## 5.9. மேலும் பயில்வதற்கான நூல்:

1. பி.ரா.நடராசன், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், 2004.

குறிப்புகள்

# கூறு - 6 திருவிராமேச்சுரப் பதிகம் (நான்காம் திருமுறை -திருநாவுக்கரசர்)

## 6.1. திருவிராமேச்சுரம் - அறிமுகம்:

பாண்டி நாட்டுத் தலங்களுள் இது எட்டாவது தலமாகிய இராமேச்சுரம் தொடர் வண்டி நிலையத்திற்கு 1.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கீழ்க்கடற்கரையில் அமைந்த இத்தலத்திற்குத் தமிழ் நாட்டின் அனைத்துப் பெருநகர்களிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. பேருந்துக் கடற்பாலம் கட்டிய பிறகு ஆலயம் வரை பேருந்துகள் செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இராவணனைக் கொன்ற பெரும் பழி நீங்கும் பொருட்டு இராமபிரானால் எழுந்தருளுவித்து வழிபடப்பெற்ற கோயில் ஆதலால் இப்பெயர் பெற்றது. (இராம-ஈச்சுரம் ஸ்ரீ இராமேச்சுரம். ஈச்சுரம் ஸ்ரீ கோயில்.) இச்செய்தி தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன், பூவியலும் முடிபொன்றுவித்த பழிபோயற, ஏவியலுஞ் சிலையண்ணல் செய்த இராமேச்சுரம் என்னும் இப்பதிக்குரிய ஞானசம்பந்தர் தேவார அடிகளால் இனிது விளங்குகின்றது. சேக்கிழாரும் “சேதுவின் கண் செங்கண்மால் பூசைசெய்த சிவ பெருமான்றனைப் பாடி” எனக் கூறியுள்ளார்.

இறைவரின் திருப்பெயர் - இராமநாதர். இராமேச்சுரத்தில் எழுந்தருளச் செய்வதற்காகச் சிவலிங்கம் கொண்டுவரக் காசிக்குச் சென்ற அனுமன் திரும்பிவரக் காலந்தாழ்த்தினமையால், சீதாபிராட்டியார் மணலால் குவித்துச் செய்த இலிங்கத்தை இராமபிரான் பூசித்தார். அவரே இராமநாதர் எனப் பெயர்பெறுவர். அனுமன் கொண்டுவந்த இலிங்கத்தை மூலலிங்கத்தின் வடபால் எழுந்தருள்வித்தார். அவரே விசுவலிங்கம் எனப் பெயர்பெறுவர்.

இறைவியாரின் திருப்பெயர் - மலைவளர் காதலி. இத்திருப் பெயரை ஞானசம்பந்தர் ‘ஒரு பாகம் மலைவளர் காதலி பாட ஆடிமயக்கா’ என எடுத்து ஆண்டிருக்கின்றார். தீர்த்தம் - அக்நி தீர்த்தம், ராம தீர்த்தம், இலக்குமண தீர்த்தம், தனுக்கோடி முதலியன. இது சோதி லிங்கத் தலங்கள் பன்னிரண்டனுள் ஒன்றாகும். இப்பதிக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, அப்பர் பதிகம் ஒன்று, ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

இத்தலத்தைப்பற்றி “மறவாளிலங்கை யிறைமகனை உதைத்த பழியால் மருண்டு, அரியன்று அறவாள் நேமியளித்தவனை யருச்சித்தகன்ற அணிநகர்” எனப் பரஞ்சோதியார், திருவிளையாடற் புராணம் அருச்சனைப்

படலத்தில் கூறியுள்ளார். இலங்கைக்குச் செல்ல இராமபிரான் அணைகட்டிய இடம் சேது என்னும் பெயர்பெறும். அங்கே இராமபிரான் தன் வில்லின் முனையால் தோண்டிய தீர்த்தம் தனுக்கோடியாகும்.



இராமேச்சுரத்திலிருந்து தெற்கே 18 கி.மீ. தூரத்தில் தனுக்கோடி இருக்கின்றது. சேது ஸ்நானம் செய்பவர்கள் இங்குத்தான் செய்தல் வேண்டும். இத்தீர்த்தத்தில் நீராடச் செல்பவர்கள், தனுக்கோடி தொடர்வண்டி நிலையத்திலிருந்து செல்லுதல் நல்லது. அங்கிருந்து அதன் தூரம் 3 கி.மீ. தூரமாகும். இத்தலத்திற்கு நிரம்ப அழகிய தேசிகரால் பாடப்பெற்ற சேதுபுராணம் அச்சிடப்பெற்றுள்ளது. ‘‘நீடுதநுக்கோடியினை நினைந்தாலும், புகழ்ந்தாலும், நேர் கண்டாலும் வீடுபெற லெளிதாகும்’’ (சேதுபுராணம், தனுக்கோடிச் சருக்கம்) என்னும் அடிகள் இத்தனுக்கோடியின் பெருமையினை விளக்குவதாகும்.

## 6.2. குறிக்கோள்கள்:

கோயில்களில் தனிச்சிறப்புடைய இராமேசுவரத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன் திருமாலுக்கு அருள்புரிந்தவன் என்பதை இத்தேவாரப் பாடல் உணர்த்துவதை அறிந்து கொள்வீர்கள்.

சிற்றின்பங்களைப் பேரின்பங்களாகக் கருதிக்கொண்டு மயங்கிக் கிடக்கும் நெஞ்சை நோக்கி, இராமேசுவரத்தில் வீற்றிருக்கும் இறைவனை நினைத்து நன்னெறி அடைவாய் அடியார் என்று வழிகாட்டுவதை அறிந்து கொள்வீர்கள்.

வலிய அரக்கனாகிய இராவணனின் தோள்வலிமை குன்றச் செய்து தேவர்களைக் காத்த திருமாலின் பெருமையைப் பாடுவதைப் போலத் தோன்றினாலும், அத்திருமாலின் கைகளால் பூசிக்கப்பெற்ற பெருமையுடைய சிவபெருமானைப் பாடி சரணாகதி அடையுமாறு தன் நெஞ்சிற்கு உணர்த்துவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 6.3.பதிக வரலாறும் அறிமுகமும்:

நாவரசர், தென்னிலங்கை இராவணனது சிரம் பத்தும் துணித்த மன்னவன் இராமனுக்கு வரும் பெரும் பாதகம் தீர்த்த பிஞ்ஞகனைத் தொழுவதற்கு நினைந்து போய்த் தேவர்தொழுந் தனி முதலைத் திருவிராமேச்சுரத்து மேவிய சங்கரனைப் பாடியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம்.

## 6.4. திருமால் அமைத்த திருவிராமேச்சுரத்தின் சிறப்பினைப் பாடுதல்:

**பாசமும் கழிக்ககில்லா அரக்கரைப் படுத்து, தக்க**
**வாசம் மிக்க(அ)லர்கள் கொண்டு, மதியினால் மால் செய் கோயில்**

**நேசம் மிக்கு அன்பினாலே நினைமின், நீர், நின்று நாளும்!**
**தேசம் மிக்கான் இருந்த திரு இராமேச்சுர(ம்)மே.**

நீக்க வேண்டிய பாசத்தை நீக்கும் ஆற்றல் இல்லாத அரக்கர்களை அழித்து மேம்பட்ட சிவஞானத்தால் இராமனாய் அவதரித்த திருமால் அமைத்த கோயிலிலே ஒளிமிக்க சிவபெருமான் உகந்தருளியிருக்கும் இராமேச்சுரத்தை வாசனை மிக்க பூக்களை அர்ப்பணித்து நாள்தோறும் நிலையாகப் பற்றுமிகுந்த அன்போடு எல்லோரும் விருப்புற்று நினையுங்கள்.

**முற்றின, நாள்கள் என்று முடிப்பதே காரணம்(ம்) ஆய்**
**உற்ற வன் போர்களாலே உணர்வு இலா அரக்கர் தம்மைச்**
**செற்ற மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைப்**
**பற்றி, நீ பரவு,-நெஞ்சே!-படர்சடை ஈசன்பாலே!**

நெஞ்சே! அரக்கர்கள் உயிர்வாழ்வதற்கு வகுத்த நாள்கள் முடிந்து விட்டதனால் அவர்களை அழிப்பதனையே காரணமாகக் கொண்டு ஏற்பட்ட வலிய போரினால் மெய்யுணர்வு இல்லாத அரக்கர்களை அழித்த இராமன் ஆகிய திருமால் அமைத்த இராமேச்சுரத்தை உகந்தருளியிருக்கும், பரவிய சடையை உடைய சிவபெருமானிடத்துப் பற்றினைக் கொண்டு நீ முன் நின்று போற்றுவாயாக என்று ஆணையிடுகின்றார்.

## 6.5. கடையனுக்கும் கடைத்தேற்றம் நல்கும் திருத்தலம்:

**கடல் இடை மலைகள் தம்மால் அடைத்து, மால், கருமம் முற்றி,**
**திடல் இடைச் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்**
**தொடல் இடை வைத்து நாவில் சுழல்கின்றேன், தூய்மை இன்றி,**
**உடல் இடை நின்றும் பேரா ஐவர் ஆட்டுண்டு, நானே.**

கடலிடத்தை மலைகளால் அடைத்துத் திருமால் தம் செயலை முடித்துப் பின் கடலை அடுத்த மேட்டில் செய்த இராமேச்சுரத்தை, இவ்வுடம்பினின்றும் நீங்காத ஐம்பொறிகளால் தம் விருப்பப்படி செயற்படுத்தப்பட்டுத் தூய்மையின்றி, நாவிடை வைத்துப் போற்றுதலைச் செய்து தடுமாறுகின்றேன் என்கின்றார்.

**குன்று போல்-தோள் உடைய குணம் இலா அரக்கர் தம்மைக்**
**கொன்று போர் ஆழி அம் மால் வேட்கையால் செய்த கோயில்-**
**நன்று போல் நெஞ்சமே! நீ நன்மையை அறிதியாயில்,**
**சென்று நீ தொழுது உய்கண்டாய்!-திரு இராமேச்சுர(ம்)மே.**

நெஞ்சமே! நீ நன்மையை அறிவாயானால் மலைகளைப் போன்ற தோள்களையுடைய நற்பண்பு இல்லாத அரக்கர்களைக் கொன்று போரிடும் சக்கராயுதத்தை உடைய திருமால் விருப்பத்தோடு அமைத்த இராமேச்சுரக் கோயிலை, சென்று தொழுது கடைத்தேறுவாயாக. அறியாயாயின் நின் நிலை நன்றல்ல.

**வீரம் மிக்கு எயிறு காட்டி விண் உற நீண்டு அரக்கன்**
**கூரம் மிக்கவனைச் சென்று கொன்று உடன் கடல் படுத்துத்**
**தீரம் மிக்கான் இருந்த திரு இராமேச்சுரத்தைக்**
**கோரம் மிக்கு ஆர் தவத்தால் கூடுவார் குறிப்பு உளாரே.**

கடலைச் சேது கட்டித்தடுத்து, வீரம் மேம்பட்டுக் கோரைப் பற்களை வெளியே காட்டிக் கொண்டு வானளாவ உயர்ந்த கொடுமைமிக்க அரக்கனாகிய இராவணனை இலங்கைக்குச் சென்று அங்கே கொன்று, மீண்டு பேராற்றலுடைய திருமால் கோயில் செய்து வழிபட்டிருந்த இராமேச்சுரத்தை, அஞ்சத்தகும் பான்மையுள்ள தீவிர சாதனைகளால் சென்றடைவார் தம் குறிக்கோள் நிரம்பப் பெறுவர்.

**ஆர், வலம் நம்மின் மிக்கார்?' என்ற அவ் அரக்கர் கூடிப்**
**போர் வலம் செய்து மிக்குப் பொருதவர் தம்மை வீட்டித்**
**தேர் வலம் செற்ற மால் செய் திரு இராமேச்சுரத்தைச்**
**சேர்,-மட நெஞ்சமே!-நீ செஞ்சடை எந்தைபாலே!**

மட நெஞ்சமே! 'நம்மை விட வலிமை மிக்கவர் யாவர்' என்று செருக்குற்ற அவ்வரக்கர்கள் ஒன்று கூடிப் போரிலே வெற்றியைக் கருதி வலிமைமிக்குப் போரிட்டாராக, அவர்களை அழித்து அவர்களுடைய தேர்ப்படையின் வலிமையையும் போக்கிய திருமால் அமைத்த இராமேச்சுரத்தை அணுகிச் செஞ்சடைப் பெருமான்பால் அடைவாயாக.

## 6.6. அரக்கர்களை இறைவன் அழித்த தன்மையை நெஞ்சிற்குரைத்தல்:

**வாக்கினால் இன்பு உரைத்து வாழ்கிலார் தம்மை எல்லாம்**
**போக்கினால் புடைத்து, அவர்கள் உயிர் தனை உண்டு, மால் தான்**
**தேக்கு நீர் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தை**
**நோக்கினால் வணங்குவார்க்கு நோய்வினை நுணுகும் அன்றே.**

இனிமையாகப் பேசுதற்கு அமைந்த வாயாலே இனிய சொற்களைப் பேசி வாழாத அரக்கர்களை அழிக்கத்தக்க படைகளால் தாக்கி அவர்கள் உயிரை உண்டு திருமால் கடல் நீரைத் தேக்கிய அணையின் கரையில் அமைத்த கோயிலாகிய இராமேச்சுரத்தை அகநோக்கிலும் புறநோக்கிலும் கண்டு தரிசித்துத் தலையால் வணங்குபவருடைய நோய்களும் வினைகளும் அழிந்துவிடும்.

**பலவும் நாள் தீமை செய்து பார் தன் மேல் குழுமி வந்து**
**கொலை விலார் கொடியர் ஆய அரக்கரைக் கொன்று வீழ்த்த,**
**சிலையினான் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்**
**தலையினால் வணங்குவார்கள் தாழ்வர் ஆம், தவம் அது ஆமே.**



குறிப்புகள்

பலகாலமாக இவ்வுலகில் கூட்டமாகத் தோன்றித் தீமைகளையே செய்து கொல்லும் வில்லை ஏந்திய கொடியவர்களான அரக்கர்களைக் கொன்று வீழ்த்திய வில்லை ஏந்திய திருமால் அமைத்த இராமேச்சுரக் கோயிலைத் தலையினால் வணங்கும் அடியவர்கள் பின் உடம்பாலும் முழுமையாக விழுந்து வணங்குவார்கள். அச்செயல் தவப் பயனால் நிகழ்வதாகும்.

**கோடி மா தவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்**
**வீடவே சக்கரத்தால் எறிந்து, பின் அன்பு கொண்டு,**
**தேடி, மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தை**
**நாடி வாழ்!-நெஞ்சமே, நீ!-நன்நெறி ஆகும் அன்றே.**

நெஞ்சே! பல ஆண்டுகள் சிறந்த தவத்தைச் செய்து, ஒழுக்கக் கேடு உள்ள அரக்கர்களை எல்லாம் அவர்கள் அழியுமாறு சக்கரம் முதலிய படைகளால் அழித்துப் பின்னர் தக்க இடத்தைத் தேடித் திருமால் அமைத்த இராமேச்சுரத்தை நீ விரும்பிச் சென்று வாழ்வாயாக. அதுவே உனக்கு நன்னெறியாம் என்று வழிகாட்டுகின்றார்.

**வன்கண்ணர், வாள் அரக்கர், -வாழ்வினை ஒன்று அறி(ய்)யா**
**புன் கண்ணர் ஆகி நின்று-போர்கள் செய்தாரை மாட்டி,**
**செங்கண் மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்**
**தம் கணால் எய்த வல்லார் தாழ்வர் ஆம், தலைவன் பாலே.**

அகத்தில் உள்ள வன்மையைப் புறத்தில் காட்டும் கண்களை உடைய கொடிய அரக்கர்கள் வாழும் செயலை அறியாராய்த் துன்புறுத்தும் இயல்பினராய் நின்று போர்களைச் செய்ய, அவரை அழித்துச் சிவந்த கண்களை உடைய திருமால் அமைத்த இராமேச்சுரக் கோயிலைத் தம் கண்ணால் தரிசிக்கும் நற்பேறு உடையவர்கள் சிவபெருமான் பக்கலிலேயே தங்கும் வாய்ப்பினைப் பெறுவர் என உறுதிகூறுகின்றார்.

**வரைகள் ஒத்தே உயர்ந்த மணி முடி அரக்கர் கோனை**
**விரைய முற்று அற ஒடுக்கி, மீண்டு மால் செய்த கோயில்-**
**திரைகள் முத்தால் வணங்கும்-திரு இராமேச்சுரத்தை**
**உரைகள் பத்தால் உரைப்பார், உள்குவார், அன்பினாலே.**

மலைகளை ஒத்து உயர்ந்த, மணிகள் வைத்து இழைக்கப்பட்ட கிரீடங்களை உடைய அரக்கர் தலைவனான இராவணனை விரைவாக அடியோடு அழித்துத் தமிழகம் திரும்பித் திருமால் செய்த கோயிலாய் அலைகள் முத்துக்களைச் சமர்ப்பித்து வணங்கும் திரு இராமேச்சுரத்தை முன்னைய இப்பத்துப் பாடல்களாலும் போற்றுபவர்கள் அன்பினாலே தியானித்து நற்பேறு பெறுபவராவர்.

குறிப்புகள்

## 6.7.தொகுத்துக் காண்போம் :

கோயில்களில் தனிச்சிறப்புடைய இராமேசுவரத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன் திருமாலுக்கு அருள்புரிந்தவன் என்பதை இத்தேவாரப் பாடல் உணர்த்துவதை அறிந்து கொண்டீர்கள்.

சிற்றின்பங்களைப் பேரின்பங்களாகக் கருதிக்கொண்டு மயங்கிக் கிடக்கும் நெஞ்சை நோக்கி, இராமேசுவரத்தில் வீற்றிருக்கும் இறைவனை நினைத்து நன்னெறி அடைவாய் அடியார் என்று வழிகாட்டுவதை அறிந்து கொண்டீர்கள்.

வலிய அரக்கனாகிய இராவணனின் தோள்வலிமை குன்றச் செய்து தேவர்களைக் காத்த திருமாலின் பெருமையைப் பாடுவதைப் போலத் தோன்றினாலும், அத்திருமாலின் கைகளால் பூசிக்கப்பெற்ற பெருமையுடைய சிவபெருமானைப் பாடி சரணாகதி அடையுமாறு தன் நெஞ்சிற்கு உணர்த்துவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 6.8. சோதித்தறியும் வினாக்கள்:

1.திருமால் தன் கரங்களால் பூசித்த இராமேசுவரத் திருத்தலத்தின் இறைவனை தேவாரம் எவ்வாறு போற்றுகின்றது?

2.கடையனுக்கும் கடைத்தேற்றம் கிட்டும் என்பதை இப்பதிகம் உணர்த்துமாற்றைப் புலப்படுத்துக.

3.இறைவன் அரக்கர்களை அழித்துத் தேவர்களைக் காத்த தன்மை இப்பதிகத்தில் எவ்விதம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

## 6.9. பயிற்சி வினா:

1.திருவிராமேச்சுவரத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை திருநாவுக்கரசர் பாடும் தன்மையை எடுத்துரைக்க.

2.நெஞ்சொடு கிளத்தல் என்னும் அடிப்படையில் திருநாவுக்கரசர் தன் நெஞ்சிற்கு எவற்றை அறிவுறுத்துகின்றார்?

## 6.10. மேலும் பயில்வதற்கான நூல்:

1. பி.ரா.நடராசன், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், 2004.

குறிப்புகள்

# கூறு - 7 திருப்பூவணப் பதிகங்கள் (ஆறாம் திருமுறை--திருநாவுக்கரசர்)

## 7.1.1.திருநாவுக்கரசரின் திருப்பூவணம் -திருஞானசம்பந்தரின் திருப்பூவணம் - அறிமுகம்:

பாண்டிநாட்டுத் தலம். மதுரைக்குக் கிழக்கே வைகையின் தென்கரையில் 18.கி.மீ. தூரத்தில் இத்தலம் இருக்கிறது. மதுரையிலிருந்து பேருந்துகள் உள்ளன. இது பிரமன் பூசித்த தலம். நான்மறையோன் கழலே சென்றுபேணி ஏத்த நின்ற தேவர்பிரான் இடமாம், என்பது சம்பந்தர் தேவாரம். பொன்னனையாள் என்னும் தாசிக்காகச் சொக்கலிங்கப் பெருமான் சித்தர் வடிவாக எழுந்தருளி ரசவாதம் செய்து சோமாஸ் கந்தர் திருவுருவத்தை அமைக்க அருள் செய்தனர் என்பது திருவிளை யாடற்புராணத்துட் காணப்படும் வரலாறு.

இத்தலம் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் ஒருங்கு கூடி வழி பட்ட தலமாக இருந்தது என்பதனை ‘முன்சேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திருப்பூவணம்’ என்னும் ஞானசம்பந்தரின் வாக்காலும், ‘உதியருடன் வன்றொண்டர் தாமிருந்த இடங்கெழுமி வளவனார் மீனவனார் வளம்பெருக மற்றவரோடும் அளவளாவிய விருப்பால் அமர்ந்து கலந்து இனிதிருந்தார்’ என்னும் சேக்கிழார் திருவாக்காலும் அறியலாம். இறைவன் பூவணநாதர். இறைவி மின்னம்மை. விருட்சம் பலா. தீர்த்தம் வைகை.

திருஞானசம்பந்தர் கருவிலே திருவுடையவராக உருக்கொண்டும், மெய்ஞ்ஞானக் குழந்தையாகவும், உவமையிலாக் கலைஞானமும் திருப்பெருகு சிவஞானமும் வாய்க்கப் பெற்றவர். சம்பந்தப் பெருமானின் அருட்பாடல்கள் தென்னாட்டிர்க்கு மட்டுமல்ல, எந்நாட்டவர்க்கும் எக்காலத்தவர்க்கும் எச்சமயத்திற்கும் பொருந்தும் பேறுபெற்றவை. திருஞான சம்பந்தர் திருவருளை முற்றிலும் உணர்த்தும் அனுபவித்தவராதலால் அவருடைய திருப்பாடல்கள் அனைத்தும் உணர்வின் வெளிப்பாடுகளாக வெளிப்பட்ட அருள் தன்மையை “எனது உரை தனதுரையாக” என இலம்பையங்கோட்டூர் பதிகத்தில் தான் போசுவதெல்லாம் இறைவனின் பேச்சு என்றே குறிப்பிடுகின்றார். இறைவன் எங்கு நீக்கமற நிறைந்திருப்பவன் ஆதலால் இறை விளங்குமிடமெல்லாம் இறையருளும் விளங்கி நிற்கும் என்றும் இறைவன் திருவுருவைக் காணவும் திருவருளைப் பெறவும் நம் முன்னோர்கள் பக்திநெறியை மேற்கொண்டனர்.

பக்திநெறியினால் இறைவனைக் காணமுடியும் என்பதை அருளாளர்கள் உணர்த்துகின்றனர். பக்தியுடன் பதிகம்பாடி இறையருளைப் பெறக்கூடிய அரிய வழியை இம்மண்ணுலகிற்கு அளத்தவர் திருஞானசம்பந்தர். இறைவனை வழிபடுவதற்கு ஏற்றமொழி தமிழ்மொழி; அம்மொழிக்கு அளவற்ற மந்திர ஆற்றல் உண்டு என்றெல்லாம் நிரூபித்துக்காட்டியவர் சம்பந்தப் பெருமான். அவருடைய திருப்பூவணம் பதிகம் நமக்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

சமய இலக்கியம்

குறிப்புகள்

## 7.1.2. குறிக்கோள்கள்:

அடியார்களுக்காக இறைவன் ஆடிய திருவிளையாடல்களை நெஞ்சுருக நாவுக்கரசர் பாடுகின்றார் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

ஆலகால விசத்தைத் தான் உண்டு தேவர்களைக் கர்த்து அருளிய கருணையை வியந்து பாடுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

கண்களில் மறையாத கலைவடிவமாக இறைவன் திகழ்வதைப் பாடும் நாவுக்கரசர் காணத்தக்க காட்சியாக இறைவனையே போற்றுகின்ற பாங்கினைத் தெரிந்து கொள்வீர்கள்.

இயற்கை எழில் கொஞ்சும் திருத்தலமாகிய திருப்பூவணத்தை திருஞானசம்பந்தர் போற்றுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

இயற்கையும் இறைவனும் ஒன்றாகவே காட்சிதரும் அற்புதத்தைக் கண்டு மகிழ்கின்றார் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

அம்மையப்பராகக் காட்சி கொடுத்து, தேவாதிதேவர்கள் வந்து வணங்கும் சிறப்புடைய ஈசனைப் பாடிப்பரவி மரணமிலாப் பெருவாழ்வு பெறுவோம் என்று சுட்டுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 7.1.3. திருப்பூவணப் பதிகம்:

ஆளுடைய அரசர், திருவாலவாயினின்றும் போந்து திருப்பூவணத்தை அடைந்து திருக்கோயிலினுள் சென்றபொழுது. நெடியவனுக்கும் அறிவரியவராகிய இறைவர் நேரே தோன்றக் கண்டு இறைஞ்சி, அத்தோற்றத்தை எல்லாம் தோன்ற விரித்துப் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம்.

## 7.1.4. இறைவனின் திருத்தோற்றத்தைக் கண்டு பாடுதல்:

**வடி ஏறு திரிசூலம் தோன்றும் தோன்றும்; வளர்**
**சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்**
**கடி ஏறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்**
**காதில் வெண் குழைதோடு கலந்து தோன்றும்**
**இடி ஏறு களிற்று உரிவைப்போர்வை தோன்றும்**
**எழில் திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்**
**பொடி ஏறு திருமேனி பொலிந்து தோன்றும்-பொழில்**

**திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

சோலைகள் விளங்கும் திருப்பூவணத்தை உகந்தருளியிருக்கும் புனிதராகிய சிவபெருமான் பக்கல், அடியார்களுடைய மனக்கண்முன் கூர்மை பொருந்திய மூவிலைச் சூலமும், நீண்ட சடைமீது அணிந்த பிறையும், நறுமணம் மிக்க கொன்றைப் பூவினால் ஆகிய முடி மாலையும், காதுகளில் கலந்து தோன்றும் குழையும், தோடும், இடிபோல ஒலித்து வந்தயானையின் தோலாகிய போர்வையும், அழகு விளங்கும் முடியும், திருநீறணிந்த அப்பெருமானுடைய திருமேனியும் காட்சி வழங்குகின்றன.

**ஆண் ஆகிப் பெண் ஆய வடிவு தோன்றும்**
**அடியவர்கட்கு ஆர் அமுதம் ஆகித் தோன்றும்**
**ஊண் ஆகி ஊர் திரிவான் ஆகித் தோன்றும்**
**ஒற்றை வெண் பிறை தோன்றும்; பற்றார் தம்மேல்**
**சேண் நாக வரைவில்லால் எரித்தல் தோன்றும்**
**செத்தவர்தம் எலும்பினால் செறியச் செய்த**
**பூண் நாணும் அரை நாணும் பொலிந்து தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் ஆணும் பெண்ணுமாகிய வடிவும், அடியவர்களுக்குக் கிட்டுதற்கரிய அமுதம் போன்று இனிமை தரும் செயல்களும், உணவுக்காக ஊர்களில் திரியும் காட்சியும், ஒற்றை வெண்பிறையும், பகைவருடையமும் மதில்களையும் நீண்ட பாம்பினை மலையாகிய வில்லில் நாணாகப் பூட்டி எரித்த செயலும், இறந்தவருடைய எலும்புகளால் உடம்பில் பொருந்துமாறு பூண்ட மாலையும் அரைஞாணும் அடியவர் மனக்கண்களுக்கு விளக்கமாகக் காட்சி வழங்கும் என்று குறிப்பிடுகின்றார்.

**கல்லாலின் நீழலில் கலந்து தோன்றும் கவின்**
**மறையோர் நால்வர்க்கும் நெறிகள் அன்று**
**சொல் ஆகச் சொல்லியவா தோன்றும் தோன்றும்**
**சூழ் அரவும், மான்மறியும், தோன்றும் தோன்றும்**
**அல்லாத காலனை முன் அடர்த்தல் தோன்றும்**
**ஐவகையால் நினைவார் பால் அமர்ந்து தோன்றும்**
**பொல்லாத புலால் எலும்பு பூண் ஆய்த் தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களுக்கு மனக்கண் முன்னர், அவர் கல்லாலின் நிழலில் அமர்ந்த காட்சியும், மேம்பட்ட மறைகளை ஓதும் சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் வேத நெறிகளைச் சொற்களால் விளக்கியமை போல மோனநிலையிலிருந்து

சொல்லிய காட்சியும், அவர் உடலைச் சுற்றுமாறு அணிந்த பாம்புகளும் ஏந்திய மான் குட்டியும், அறத்தின் உண்மையை உணர்ந்தவன் அல்லாத காலனை ஒறுத்த காட்சியும், தம்மை நினையும் அடியவர்பால் ஐவகை நிறத்தோடு விரும்பி வழங்கும் காட்சியும், யாவரும் அருவருக்கும் புலாலின் சுவட்டினை உடைய எலும்பினாலாகிய அணிகலன்களும் காட்சி வழங்கும்.

**படை மலிந்த மழுவாளும் மானும் தோன்றும்**
**பன்னிரண்டு கண் உடைய பிள்ளை தோன்றும்**
**நடை மலிந்த விடையோடு கொடியும் தோன்றும்**
**நால்மறையின் ஒலி தோன்றும்; நயனம் தோன்றும்**
**உடை மலிந்த கோவணமும் கீளும் தோன்றும்**
**ஊரல் வெண் சிரமாலை உலாவித் தோன்றும்**
**புடை மலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களுடைய மனக்கண் முன்னர்ப் படைக்கலமாம் நன்மை நிறைந்த மழுவும், அவர் ஏந்தியமானும், அருகில் இருக்கும் பன்னிரண்டு கைகளை உடைய முருகப்பெருமான் வடிவும், விரைந்து செல்லும் காளையும், அக்காளை வடிவம் எழுதிய கொடியும், நான்மறையின் ஒலியும், முக்கண்களும், உடையாக அமைந்த கீளும் கோவணமும், பற்களை உடைய வெள்ளிய மண்டை ஓட்டு மாலையும், அவரைச் சுற்றிக் காணப்படும் பூதங்களின் மகிழ்வும் காட்சி வழங்கும்.

### 7.1.5. நஞ்சுண்ட கண்டனாகிய இறைவன்:

**மயல் ஆகும் தன் அடியார்க்கு அருளும் தோன்றும்,**
**மாசு இலாப் புன்சடைமேல் மதியம் தோன்றும்**
**இயல்பு ஆக இடு பிச்சை ஏற்றல் தோன்றும்; இருங்கடல்**
**நஞ்சு உண்டு இருண்ட கண்டம் தோன்றும்**
**கயல் பாயக் கடுங் கலுழிக் கங்கை நங்கை ஆயிரம்**
**ஆம் முகத்தினொடு வானில்- தோன்றும்.**
**புயல் பாயச் சடை விரித்த பொற்புத் தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் அடியார்களுடைய மனக்கண் முன்னர் தம்மிடம் பேரன்பு கொள்ளும் அடியவர்களுக்கு அவர் அருள் செய்யும் செயலும், அழுக்கற்ற சிவந்த சடையின் மேல் அணிந்த பிறையும், பிச்சை ஏற்கும் அவருக்கு அடியவர்கள் வழக்கமாக இடும் பிச்சையை அவர் ஏற்கும் காட்சியும், பெரிய கடலில் நஞ்சினை உண்டதனால் இருண்ட கழுத்தும், கயல்கள் பாயுமாறு விரைவான

கலங்கள் வெள்ளமாக ஆயிரமுகத்தோடு வானிலிருந்து இறங்கிய கங்கை தன்னுள் அடங்குமாறு சிவபெருமான் விரித்த சடையின் அழகும் காட்சி வழங்கும் என்று உறுதி கூறுகின்றார்.

## 7.1.6. இராவணனின் ஆணவம் நீக்கிஅருள் புரிந்தமை:

**பார் ஆழி வட்டத்தார் பரவி இட்ட பல்மலரும்,**
**நறும்புகையும், பரந்து தோன்றும்**
**சீர் ஆழித் தாமரையின்மலர்கள் அன்னதிருந்திய**
**மா நிறத்த சேவடிகள் தோன்றும்**
**ஓர் ஆழித் தேர் உடைய இலங்கை வேந்தன் உடல்**
**துணித்த இடர் பாவம் கெடுப்பித்து, அன்று,**
**போர் ஆழி முன் ஈந்த பொற்புத் தோன்றும்-பொழில்**
**திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண்களின் முன்னர் அழகுக் கடலாய் உள்ள தாமரை மலர் போன்ற அழகிய நிறத்தை உடைய திருவடிகளும், அத்திருவடிகளின் மீது பூமண்டலத்தில் உள்ளவர்கள் துதித்து அருச்சித்த பல மலர்களும், காட்டிய புகைகளும், ஒப்பற்ற சக்கரங்களை உடைய தேரை உடைய இராவணனுடைய உடலை அழித்த திருமாலுடைய துன்பம் தரும் தீவினையைப் போக்கி அவருக்குச் சக்கரம் வழங்கிய அழகிய செயலும் காட்சி வழங்கும்.

**தன் அடியார்க்கு அருள்புரிந்த தகவு தோன்றும்**
**சதுர்முகனைத் தலை அரிந்த தன்மை தோன்றும்**
**மின் அனைய நுண் இடையாள் பாகம் தோன்றும்**
**வேழத்தின் உரி விரும்பிப் போர்த்தல் தோன்றும்**
**துன்னிய செஞ்சடை மேல் ஓர் புனலும் பாம்பும்**
**தூய மா மதி உடனே வைத்தல் தோன்றும்**
**பொன் அனைய திருமேனி பொலிந்து தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர் தம் அடியவர்களுக்கு அருள்புரிந்த மேம்பட்ட செயலும், பிரமனுடைய தலை ஒன்றனை நீக்கிய செயலும், மின்னலை ஒத்த நுண்ணிய இடையை உடைய பார்வதியை இடப்பாகமாகக் கொண்ட வடிவும், யானைத்தோலை விரும்பிப் போர்த்திய வனப்பும், செறிந்த சடைமீது கங்கை, பாம்பு, பிறை போன்ற இவற்றை வைத்துப் பொன்போன்ற திருமேனி பொலிந்து தோன்றும் வனப்பும் தோற்றம் வழங்கும் என்கின்றார்.

குறிப்புகள்

## 7.1.7. சிவனின் திருவிளையாடல்களைப் பாடுதல்:

**செறி கழலும் திருவடியும் தோன்றும் தோன்றும்**
**திரிபுரத்தை எரிசெய்த சிலையும் தோன்றும்**
**நெறி அதனை விரித்து உரைத்த நேர்மை தோன்றும்**
**நெற்றிமேல் கண் தோன்றும் பெற்றம் தோன்றும்**
**மறுபிறவி அறுத்து அருளும் வகையும் தோன்றும்**
**மலைமகளும் சலமகளும் மலிந்து தோன்றும்**
**பொறி அரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியவர்களின் மனக் கண்முன்னர் அப்பெருமானுடைய செறிந்த வீரக்கழலும், திருவடிகளும், முப்புரங்களை அழித்த வில்லும், நால்வருக்கு உண்மை நெறியை மோனநிலையில் விரித்துரைத்த நுண்மையும், நெற்றிக்கண்ணும், வாகனமாம் காளையும், அடியார்களுடைய மறுபிறவியை நீக்கி அருள் செய்கின்ற கூறுபாடும், பார்வதியின் வடிவும், கங்கையும், புள்ளிகளை உடைய பாம்பும், பிறைச் சந்திரனும் காட்சி வழங்கும்.

**அருப்பு ஓட்டு முலை மடவாள் பாகம் தோன்றும்**
**அணி கிளரும் உரும் என்ன அடர்க்கும் கேழல்-**
**மருப்பு ஓட்டு மணிவயிரக்கோவை தோன்றும் மணம்**
**மலிந்த நடம் தோன்றும் மணி ஆர் வைகைத்**
**திருக்கோட்டில் நின்றது ஓர் திறமும் தோன்றும்**
**செக்கர்வான் ஒளி மிக்குத் திகழ்ந்த சோதிப்**
**பொருப்பு ஓட்டி நின்ற திண்புயமும் தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர்க் கோங்கு அரும்பினை ஒத்த முலையை உடைய பார்வதிக்கு வழங்கிய இடப்பாகமும், இடியைப் போல அழிக்கும் ஆற்றலுடைய மகாவராகத்தினுடைய மணிவயிரக் கோவையைத் தோற்கச் செய்யும் ஒளியை உடைய மருப்பும், வையை நதிக்கரையில் நிற்கும் காட்சியும், உமாதேவி மகிழ்தற்குக் காரணமாக அவர் ஆடிய அழகிய கூத்தும், சிவந்த வானத்தினும் ஒளிமிக்கு விளங்கும், மலைகளைத் தம் திண்மையால் தோற்கடிக்கும் வலிய புயங்களும் காட்சி வழங்கும்.

**ஆங்கு அணைந்த சண்டிக்கும் அருளி, அன்று, தன்**
**முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும்**
**பாங்கு அணைந்து பணி செய்வார்க்கு அருளி, அன்று,**

**பலபிறவி அறுத்து அருளும் பரிசு தோன்றும்**
**கோங்கு அணைந்த கூவிளமும் மதமத்த(ம்)மும் குழற்கு**
**அணிந்த கொள்கையொடு கோலம் தோன்றும்**
**பூங்கணை வேள் உரு அழித்த பொற்புத் தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர்த் தம்மைச் சரணமாக அடைந்து சண்டேச நாயனாருக்கு அருள் செய்து தாம் முடிமேல் சூடிய மாலையை அவருக்கு வழங்கிய காட்சியும், தம்பக்கல் அடைந்து தொண்டு செய்யும் அடியவர்களுக்கு அருள் செய்து அவர்களுடைய பல பிறவிகளையும் போக்கும் தன்மையும், கோங்கு வில்வம் ஊமத்தம் மலர் என்பவற்றை அணிந்த அழகும், பூக்களை அம்புகளாக உடைய மன்மதனுடைய உருவத்தை அழித்த வனப்பும் காட்சி வழங்கும்.

**ஆர் உருவ உள்குவார் உள்ளத்துள்ளே அவ் உரு**
**ஆய் நிற்கின்ற அருளும் தோன்றும்**
**வார் உருவப்பூண் முலை நல் மங்கை தன்னை**
**மகிழ்ந்து ஒருபால் வைத்து உகந்த வடிவும் தோன்றும்**
**நீர் உருவக் கடல் இலங்கை அரக்கர் கோனை**
**நெறு நெறு என அடர்த்திட்ட நிலையும் தோன்றும்**
**போர் உருவக் கூற்று உதைத்த பொற்புத் தோன்றும்-**
**பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியவர்களின் மனக்கண் முன்னர்த் தம்மை ஒன்றிய உள்ளத்தோடு தியானிப்பவர் உள்ளத்தில் அவர்கள் தியானித்த அதே வடிவில் இருக்கின்ற காட்சியும், கச்சின்மேல் அணிகலன்களை அணிந்த தனங்களை உடைய பார்வதியை ஒருபாகமாக வைத்து மகிழ்ந்த வடிவமும், நீர் நிறைந்த வடிவுடைய கடலால் சூழப்பட்ட இலங்கையின் மன்னனான இராவணன் உடம்பினை நெறு நெறு என்னும் ஓசை ஏற்படுமாறு நசுக்கிய நிலையும், போரிடும் வடிவத்தை உடைய கூற்றுவனை உதைத்த அழகிய செயலும் காட்சி வழங்கும்.

## 7.2.1. திருப்பூவணத்தின் இயற்கை அழகைப் பாடுதல்:

**அறையார்புனலு மாமலரு மாடரவார் சடைமேல்**
**குறையார்மதியுஞ் சூடிமாதோர் கூறுடையா னிடமாம்**
**முறையார்முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள்தாம் வணங்கும்**
**திறையாரொளிசேர் செம்மையோங்குந் தென்றிருப் பூவணமே.**

ஆரவாரித்து வரும் கங்கையும், ஆத்தி மலரும், ஆடும் பாம்பும் பொருந்திய சடையின் மேல், ஒரு கலையாய்க் குறைந்த பிறை மதியையும்

சூடி மாதொருபாகனாக விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய இடம், நீதியோடு கூடியவராய் முடிசூடி ஆளும் பாண்டியர், சேரர், சோழர் ஆகிய மூவேந்தர்களும் வணங்குவதும், வையை ஆற்றின் அலைகள் வீசுவதும், புகழோடு கூடியதும், வயல் வளம் மிக்கதுமாகிய அழகிய திருப்பூவணமாகும்.

**மருவார்மதின்மூன் றொன்றவெய்து மாமலையான் மடந்தை**
**ஒருபால்பாக மாகச்செய்த வும்பர்பிரா னவனூர்**
**கருவார்சாலி யாலைமல்கிக் கழன்மன்னர் காத்தளித்த**
**திருவான்மலிந்த சேடர்வாழுந் தென்திருப் பூவணமே.**

பகைவர்களாகிய திரிபுர அசுரர் மதில்கள் மூன்றையும் ஒருசேர எய்து அழித்தோனும், மலையரையன் மகளாகிய பார்வதிதேவியை ஒருபால் கொண்டு தேவர்கள் தலைவனாக விளங்குவோனும் ஆகிய சிவபிரானது ஊர்' கருக்கொண்ட நெற்பயிர்கள் கரும்புகள் ஆகியன நிறைந்ததும் வீரக்கழல் புனைந்த மன்னர்கள் காப்பாற்றிக் கொடுத்த செல்வவளத்தால் சிறந்த மேலானவர்கள் வாழ்வதுமான அழகிய பூவண நகராகும்.

**போரார்மதமா வுரிவைபோர்த்துப் பொடியணி மேனியனாய்க்**
**காரார்கடலி னஞ்சமுண்ட கண்ணுதல் விண்ணவனூர்**
**பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப் பன்மணி பொன்கொழித்துச்**
**சீரார்வாரி சேரநின்ற தென்திருப் பூவணமே.**

போர்ப் பயிற்சியுடைய மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்து, திருநீற்றுப் பொடி அணிந்த மேனியனாய், கருநிறம் பொருந்திய கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டவனாய், நுதல்விழி உடையவனாய் விளங்கும் சிவனது ஊர், நிலவுலகை வளம் செய்வதற்கு வந்த வையையாறு வாய்க்கால் வழியே பரப்பிப் பலவகை மணிகளையும் பொன்னையும் கொழித்து வளம் செய்யும் அழகிய திருப்பூவணமாகும் என்று சுட்டிக்காட்டுகின்றார்.

## 7.2.2. அடியார்களுக்கு அருளும் தன்மையைப் பாடுதல்:

**கடியாரலங்கற் கொன்றைசூடிக் காதிலோர் வார்குழையன்**
**கொடியார்வெள்ளை யேறுகந்த கோவணவன் னிடமாம்**
**படியார்கூடி நீடியோங்கும் பல்புகழாற் பரவச்**
**செடியார்வைகை சூழநின்ற தென்திருப் பூவணமே.**

மணம் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி ஒரு காதில் நீண்ட குழை அணிந்தவனாய், வெண்மையான விடைக்கொடியைத் தனக்குரியதாகக் கொண்டவனாய், கோவணம் அணிந்தவனாய் விளங்கும் சிவபிரானது இடம், நிலவுலக மக்கள் ஒருங்கு கூடி நீண்டு விரிந்த தன்

புகழைக் கூறி வணங்கப் புதர்கள் நிறைந்த வைகையாறு சூழ்ந்துள்ள அழகிய திருப்பூவணமாகும்.

**கூரார்வாளி சிலையிற்கோத்துக் கொடிமதில் கூட்டழித்த**
**போரார்வில்லி மெல்லியலாளோர் பான்மகிழ்ந் தானிடமாம்**
**ஆராவன்பிற் றென்னர்சேரர் சோழர்கள் போற்றிசைப்பத்**
**தேரார்வீதி மாடநீடுந் தென்றிருப் பூவணமே.**

கூர்மை பொருந்திய அம்பை வில்லில் பூட்டி, கொடிகள் கட்டிப் பறந்த மும்மதில்களின் கூட்டுக்களையும் ஒருசேர அழித்த போர்வல்ல வில் வீரனும், மெல்லியலாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு மகிழ்பவனுமாகிய சிவபிரானது இடம், குன்றாத அன்போடு பாண்டியர் சேரர் சோழர் ஆகிய மூவேந்தர்கள் போற்றத் தேரோடும் திருவீதியையும் மாட வீடுகளையும் உடைய அழகிய திருப்பூவணமாகும்.

**நன்றுதீதென் றொன்றிலாத நான்மறை யோன்கழலே**
**சென்றுபேணி யேத்தநின்ற தேவர்பிரா னிடமாம்**
**குன்றிலொன்றி யோங்கமல்கு குளிர்பொழில் சூழ்மலர்மேல்**
**தென்றலொன்றி முன்றிலாருந் தென்றிருப் பூவணமே.**

நன்மை தீமை என்பனவற்றுள் ஒன்றும் இல்லாதவனும், நான்கு வேதங்களை அருளியவனும், தேவர்களின் தலைவனுமான சிவபிரான் தன் திருவடிகளை அடைந்து அன்பர்கள் போற்றி அருள் பெறுமாறு நின்ற இடம், பொதிய மலையில் பொருந்தி அங்கு நிறைந்த ஓங்கிய குளிர் பொழில்களில் உள்ள மலர்களிற் படிந்து வந்து தென்றல் முன்றில்களில் தங்கி மகிழ்விக்கும் அழகிய திருப்பூவணமாகும்.

## 7.2.3. அம்மையப்பராகக் காட்சி தருதல்:

**பைவாயரவ மரையிற்சாத்திப் பாரிடம் போற்றிசைப்ப**
**மெய்வாய்மேனி நீறுபூசி யேறுகந் தானிடமாம்**
**கைவாழ்வளையார் மைந்தரோடுங் கலவியி னானெருங்கிச்**
**செய்வார்தொழிலின் பாடலோவாத் தென்றிருப் பூவணமே.**

படம் பொருந்திய வாயினை உடைய பாம்பை இடையில் கட்டிக் கொண்டு, பூதகணங்கள் போற்றிப் பாட, மேனி முழுதும் மெய்மை வடிவான திருநீற்றைப் பூசி, விடையேற்றை ஊர்ந்து வரும் சிவபிரானது இடம், கைகளில் வளையல்களை அணிந்துள்ள இளமகளிர் தம் காதலர்களோடு புணர்ச்சி விருப்புடையராய் நெருங்கிச் செய்யப்படும் கலவி பற்றிய பாடல்களின் ஓசை நீங்காத அழகிய திருப்பூவணமாகும்.

**மாடவீதி மன்னிலங்கை மன்னனை மாண்பழித்துக்**
**கூடவென்றி வாள்கொடுத்தாள் கொள்கையி னார்க்கிடமாம்**
**பாடலோடு மாடலோங்கிப் பன்மணி பொன்கொழித்து**

**ஓடிநீரால் வைகைசூழு முயர்திருப் பூவணமே.**

மாடவீதிகள் நிலைபெற்ற இலங்கை மன்னன் இராவணன் பெருவீரன் என்று மக்கள் பாராட்டிய சிறப்பை அழித்து, அவன் பிழை உணர்ந்து பாடி வேண்டிய அளவில் உடன் வெற்றி நல்கும் வாளைக் கொடுத்து ஆளும் அருட்கொள்கையாளனாகிய சிவபிரானுக்குரிய இடம், ஆடல் பாடல்களால் மிக்க சிறப்புடையதும், பல்வகை மணிகளையும் பொன்னையும் அடித்து ஓடிவரும் நீரோடு வைகையாறு சூழ்ந்ததுமான உயர்ந்த திருப்பூவணமாகும்.

குறிப்புகள்

## 7.2.4. தேவாதிதேவர்கள் வணங்கக்கூடிய தலம்:

**பொய்யாவேத நாவினானும் பூமகள் காதலனும்**
**கையாற்றொழுது கழல்கள்போற்றக் கனலெரி யானவனூர்**
**மையார்பொழிலின் வண்டுபாட வைகைமணி கொழித்துச்**
**செய்யார்கமலந் தேனரும்புந் தென்றிருப் பூவணமே.**

என்றைக்கும் பொய்யாகாத வேதங்களை ஓதும் நாவினன் ஆகிய நான்முகனும், மலர்மகள் கணவனாகிய திருமாலும், தம் கைகளால் தன் திருவடிகளைத் தொழுது போற்ற, சிவந்த எரி உருவான சிவபிரானது ஊர், கருநிறம் பொருந்திய சோலைகளில் வண்டுகள் பாடுவதும், வைகை ஆறு மணி கொழித்து வளம் சேர்ப்பதும், சிவந்த தாமரை மலர்களில் தேன் அரும்பி நிற்பதுமான அழகிய திருப்பூவணமாகும்.

**அலையார்புனலை நீத்தவருந் தேரருமன்பு செய்யா**
**நிலையாவண்ண மாயம்வைத்த நின்மலன் றன்னிடமாம்**
**மலைபோற்றுன்னி வென்றியோங்கு மாளிகை சூழ்ந்தயலே**
**சிலையார்புரிசை பரிசுபண்ணுந் தென்றிருப் பூவணமே.**

அலைகள் வீசும் நீரில் நீராடாது அதனைத் துறந்த சமணரும் புத்தரும் புண்ணியப் பேறு இன்மையால் அன்பு செய்து வழிபாட்டில் நிலைத்திராது அவர்கட்கு மாயத்தை வைத்த குற்றமற்ற சிவபிரானுக்குரிய இடம், வெற்றி மிக்க மாளிகைகள் மலைபோல் நெருங்கி அமைய அவற்றைச் சூழ்ந்து கருங்கல்லால் ஆகிய மதில்கள் அழகு செய்யும் அழகிய திருப்பூவணமாகும்.

**திண்ணார்புரிசை மாடமோங்குந் தென்றிருப் பூவணத்துப்**
**பெண்ணார்மேனி யெம்மிறையைப் பேரிய லின்றமிழால்**
**நண்ணாருட்கக் காழிமல்கு ஞானசம்பந்தன் சொன்ன**
**பண்ணார்பாடல் பத்தும்வல்லார் பயில்வது வானிடையே.**

வலிமை பொருந்திய மதில்களும் மாடவீடுகளும் நிறைந்த அழகிய திருப்பூவணத்தில் பெண்ணொரு பாகனாம் திருமேனியோடு விளங்கும் எம் தலைவனாகிய சிவபிரானைப் பெருமை பொருந்திய இனிய தமிழால்

பகைவராய புறச்சமயத்தவர் அஞ்சுமாறு சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் சொல்லிய இவ்விசைத் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் ஓதவல்லவர் வாழ்வது வான் உலகமாகும்.

## 7.2.5. தொகுத்துக் காண்போம் :

குறிப்புகள்

இயற்கை எழில் கொஞ்சும் திருத்தலமாகிய திருப்பூவணத்தை திருஞானசம்பந்தர் போற்றுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

இயற்கையும் இறைவனும் ஒன்றாகவே காட்சிதரும் அற்புதத்தைக் கண்டு மகிழ்கின்றார் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

அம்மையப்பராகக் காட்சி கொடுத்து, தேவாதிதேவர்கள் வந்து வணங்கும் சிறப்புடைய ஈசனைப் பாடிப்பரவி மரணமிலாப் பெருவாழ்வு பெறுவோம் என்று சுட்டுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

அடியார்களுக்காக இறைவன் ஆடிய திருவிளையாடல்களை நெஞ்சுருக நாவுக்கரசர் பாடுகின்றார் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

ஆலகால விசத்தைத் தான் உண்டு தேவர்களைக் கர்த்து அருளிய கருணையை வியந்து பாடுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

கண்களில் மறையாத கலைவடிவமாக இறைவன் திகழ்வதைப் பாடும் நாவுக்கரசர் காணத்தக்க காட்சியாக இறைவனையே போற்றுகின்ற பாங்கினைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 7.2.6. சோதித்தறியும் வினாக்கள்:

1. திருஞானசம்பந்தர் திருப்பூவணத்து இறைவனின் வடிவழகை எவ்வாறு பாடுகின்றார்?
2. திருப்பூவணத்து இயற்கை அழகை அடியார் பாடுவதை எடுத்துரைக்க.
3. தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய திருப்பூவணத்து இறைவன் தன் அடியார்களுக்கு அருளும் தன்மையை திருஞானசம்பந்தர் பாடுவதை எடுத்துரைக்க.
4. திருப்பூவனத்து இறைவனின் திருத்தோற்றத்தைக் கண்டு நாவுக்கரசர் பாடிய நிலையை விவரி.
5. நஞ்சுண்டு உயிர்களைக் காத்த தன்மையை ஆசிரியர் எவ்வாறு பாடுகின்றார்?
6. திருப்பூவனத்து இறைவனின் திருவிளையாடல்களைப் புலப்படுத்துக.
7. சிவபெருமான் முப்புரங்களை அழித்த தன்மையைத் தேவாரம் எங்ஙனம் பாடுகின்றது?

## 7.2.7. பயிற்சி வினாக்கள்:

1. திருப்பூவணம் இயற்கை எழிலுடைய தலம் என்பதை ஞானசம்பந்தரின் தேவாரத்தை முன்னிறுத்தி நிறுவுக.
2. திருப்பூவணத்து இறைவனை சம்பந்தர் எவ்வாறெல்லாம் பாடி மகிழ்கின்றார்?
3. திருப்பூவணத்து இறைவன் தனக்கு எவ்வாறெல்லாம் தோற்றம் காட்டி அருள்புரிந்த தன்மையை திருநாவுக்கரசர் பாடுகின்றார்?
4. இறைவனுடைய தோற்ற வருணனை அடியார்களின் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கும் ஓவியம் - இக்கூற்றை மெய்ப்பிக்க.

## 7.2.8. மேலும் பயில்வதற்கான நூல் :

1. பி.ரா.நடராசன், திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், 2004.

# கூறு-8 8.1. திருப்பூவணப் பதிகங்கள் (மூன்றாம் திருமுறை -திருஞானசம்பந்தர்)

குறிப்புகள்

## 8.1.1. திருப்பூவணப் பதிகங்கள் - அறிமுகம்:

திருப்பூவணத் தலத்தின் இறைவனை திருஞானசம்பந்தர் (மூன்றாம் திருமுறை) சுந்தரர் (ஏழாம் திருமுறை) கருவூர்த்தேவர் (ஒன்பதாம் திருமுறை) ஆகியோர் பாடியுள்ள பதிகங்கள் இங்கு பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன.

## 8.1.2. குறிக்கோள்கள்:

மாதொருபாகனாகக் கயிலை மலையில் வீற்றிருக்கும் இறைவனை திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் பாடுவதை அறிந்து கொள்வீர்கள்.

முப்புரங்களை எரித்து தேவர்களைக் காத்த பெருமையை உடைய இறைவனின் அளப்பரிய கருணையை எடுத்துரைப்பதை அறிந்து கொள்வீர்கள்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் மட்டும் பிற சமயத்தவராகிய சமண, பௌத்தர்களைச் சாடுதல் என்ற அணுகுமுறை காணப்படுவதை அறிந்து கொள்வீர்கள்.

மக்களின் வினைகளைத் தீர்க்கும் இறைவன் திருப்பூவணத்தில் எழுந்தருளி இருப்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

அவனுடைய வடிவழகைக் கண்டு மயங்காத உயிர்கள் இல்லை என்பதை சுந்தரர் அறிவிப்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

பொதுவாக தேவாரப் பதிகங்களில் இடம்பெறக்கூடிய கூறாகிய இராவணனின் ஆணவம் அழித்த தன்மை சுந்தரரின் தேவாரத்திலும் பதிவாக்கப் பட்டுள்ளதைத் தெரிந்து கொள்வீர்கள்.

கருவூர்த்தேவர் பாடியுள்ள திருப்பூவணப் பதிகம் இயற்கையை அழகாகச் சித்தரிப்பதை அறிந்து கொள்வீர்கள்.

சோலைகளும் நீர்நிலைகளும் நிறைந்துள்ள திருப்பூவணத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன் அடியார்களின் இன்னிசைப் பாடல்களுக்கு மயங்கக்கூடிய தன்மை உடையவன் என்பதை அறிந்து கொள்வீர்கள்.

இறைவனுக்கு இருக்கக்கூடிய பெருமை என்பது மலையைப் போலவும், அப்பெருமையை உணராது இருக்கும் அடியார்களின் சிறுமையும் கருவூர்த்தேவர் பாடுகின்றார் என்பதை அறிந்து கொள்வீர்கள்.

## 8.1.3. இறைவன் முப்புரங்களை அழித்தவன்:

**மாதமர் மேனிய னாகி வண்டொடு**

**போதமர் பொழிலணி பூவ ணத்துறை**

**வேதனை விரவலர் அரண மூன்றெய்த**

**நாதனை அடிதொழ நன்மை யாகுமே.**

**குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை**
**பொருந்திய பொழிற்றிருப் பூவ ணத்துறை**
**அருந்திறல் அவுணர்தம் அரண மூன்றெய்த**
**பெருந்தகை அடிதொழப் பீடை யில்லையே.**

குறிப்புகள்

குருந்து, மாதவி, கோங்கு, மல்லிகை மலர்ந்துள்ள சோலைகளை உடைய திருப்பூவணம் என்னும் திருத் தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அரு வலிமை உடைய அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் அம்பு எய்து அழித்த பெருந்தகையான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, துன்பம் யாவும் நீங்கும்.

உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக்கொண்டு, வண்டமர்கின்ற மலர்கள் உள்ள சோலையுடைய அழகிய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து அருளுகின்ற, துன்பம்தரும் பகையசுரர்களின் மூன்று கோட்டைகளையும் அம்பு எய்து அழித்த நாதனான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ எல்லா நலன்களும் உண்டாகும் .

**வானணி மதிபுல்கு சென்னி வண்டொடு**
**தேனணி பொழிற்றிருப் பூவ ணத்துறை**
**ஆனநல் லருமறை அங்கம் ஓதிய**
**ஞானனை அடிதொழ நன்மை யாகுமே.**

## 8.1.4. இறைவன் வேதங்களை அறிவித்தவன்:

வானில் அழகுறத் திகழும் சந்திரனைத் தொடுமளவு உயர்ந்தோங்கிய, வண்டு நுகரும் தேனையுடைய மலர்களுள்ள அழகிய சோலையையுடைய திருப்பூவணத்தில் வீற்றிருந்தருளுகின்ற, நலம்தரும் நான்கு வேதங்களையும், அவற்றின் ஆறு அங்கங்களையும் ஓதியருளிய ஞானவடிவினனான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, எல்லா நலன்களும் உண்டாகும் .

**வெந்துயர் உறுபிணி வினைகள் தீர்வதோர்**
**புந்தியர் தொழுதெழு பூவ ணத்துறை**
**அந்திவெண் பிறையினோ டாறு சூடிய**
**நந்தியை அடிதொழ நன்மை யாகுமே.**

கொடுந்துன்பம் தரும் நோயும், அதற்குக் காரணமான வினைகளும் சிவனருளாலேயே தீரும் என்பதை நிச்சயித்து, அவனைத் தொழுது போற்றுகின்றவர்கள் வசிக்கும் திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, மாலைக்காலத்தில் உதிக்கும் வெண்பிறையோடு

கங்கையும் சூடிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, எல்லா நலன்களும் உண்டாகும்.

**வாசநன் மலர்மலி மார்பில் வெண்பொடிப்**
**பூசனைப் பொழில்திகழ் பூவ ணத்துறை**
**ஈசனை மலர்புனைந் தேத்து வார்வினை**
**நாசனை யடிதொழ நன்மை யாகுமே.**

நறுமணம் கமழும் மலர்மாலைகளை அணிந்துள்ள மார்பில், திருவெண்ணீற்றினைப் பூசி, சோலைகளையுடைய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான், மலர்புனைந்து ஏத்தும் அன்பர்களின் வினையைப் போக்குவான். அப்பெருமானின் திருவடிகளைத் தொழ எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**வெறிகமழ் புன்னைபொன் ஞாழல் விம்மிய**
**பொறியர வணிபொழிற் பூவ ணத்துறை**
**கிறிபடு முடையினன் கேடில் கொள்கையன்**
**நறுமல ரடிதொழ நன்மை யாகுமே.**

நறுமணம் கமழும் புன்னை, புலிநகக் கொன்றை முதலான மரங்கள் நிறைந்த அழகிய சோலையையுடைய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, கோவண ஆடை தரித்த, அழிதலில்லாத கொள்கைகளை உடைய சிவ பெருமானின் நறுமணமிக்க மலர் போன்ற திருவடிகளைத் தொழ, எல்லா நலன்களும் உண்டாகும்.

### 8.1.5. மாதொருபாகனாகிய கயிலை மலையான்:

**பறைமல்கு முழவொடு பாட லாடலன்**
**பொறைமல்கு பொழிலணி பூவ ணத்துறை**
**மறைமல்கு பாடலன் மாதொர் கூறினன்**
**அறைமல்கு கழல்தொழ அல்லல் இல்லையே.**

பறையின் ஒலியும், முழவின் ஓசையும் ஒலிக்கப் பாடி ஆடுபவன் இறைவன். அமைதி தவழும் சோலையையுடைய அழகிய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவன். நால்வேதங்களையும் பாடுபவன். உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு கூறாகக் கொண்டவன். அப்பெருமானின் ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளைத் தொழத் துன்பம் சிறிதும் இல்லை.

**வரைதனை யெடுத்தவல் லரக்கன் நீள்முடி**
**விரல்தனில் அடர்த்தவன் வெள்ளை நீற்றினன்**
**பொருபுனல் புடையணி பூவ ணந்தனைப்**
**பரவிய அடியவர்க் கில்லை பாவமே.**

கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த வலிமை வாய்ந்த அரக்கனான இராவணனின் நீண்ட முடிகளைத் தம் காற் பெருவிரலை ஊன்றி அடர்த்தவர் சிவபெருமான். தம் திருமேனி முழுவதும் திருவெண்ணீற்றினைப் பூசி, ஒலிக்கின்ற கங்கையைத் தம் சடைமுடியின் ஒரு பக்கத்தில் அணிந்து திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற அப்பெருமானைத் தொழுது போற்றும் அடியவர்களின் பாவம் நாசமாகும்.

**நீர்மல்கு மலருறை வானும் மாலுமாய்ச்**
**சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்**
**போர்மல்கு மழுவினன் மேய பூவணம்**
**ஏர்மல்கு மலர்புனைந் தேத்தல் இன்பமே.**

நீரில் வளரும் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், திருமாலும், தன்னைத் தொழுபவர்களை நன்னெறிப்படுத்தும் இறைவனின் சிறந்த திருவடிகளைச் சேர்தற்கு இயலாத வராயினர். போர்த் தன்மையுடைய மழுப்படையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருப்பூவணத்தை அழகிய மலர் கொண்டு போற்றுதல் இன்பம் தரும்.

**மண்டைகொண் டுழிதரு மதியில் தேரரும்**
**குண்டருங் குணம்அல பேசுங் கோலத்தர்**
**வண்டமர் வளர்பொழின் மல்கு பூவணம்**
**கண்டவ ரடிதொழு தேத்தல் கன்மமே.**

## 8.1.6. பிற சமயத்தாரைக் கடிதல்:

மண்டை என்னும் ஒருவகைப் பாத்திரத்தை ஏந்திப் பிச்சையெடுத்துத் திரிகின்ற புத்தர்களும், சமணர்களும், இறையுண்மையை உணராது கூறும் பயனற்ற பேச்சைக் கேளாது, வண்டுகள் மொய்க்கின்ற வளமுடைய சோலைகள் நிறைந்த திருப்பூவணம் என்னும் திருத்தலத்தைத் தரிசித்து அங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றுதல் நம் கடமையாகும்.

**புண்ணியர் தொழுதெழு பூவ ணத்துறை**
**அண்ணலை யடிதொழு தந்தண் காழியுள்**
**நண்ணிய அருமறை ஞானசம் பந்தன்**
**பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே.**

புண்ணியர்கள் தொழுது போற்றுகின்ற திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற தலைவரான சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றி, அழகிய, குளிர்ச்சியான சீர்காழியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பாடல்களை ஓதவல்லவர்களின் பாவம் யாவும் நீங்கும்.

## 8.2. சுந்தரரின் ஏழாம் திருமுறைத் திருப்பூவணப் பதிகம்

### 8.2.1. சுந்தரர் திருப்பூவணத் தலப்பெருமை பாடுதல்:



**திருவுடை யார்திரு மாலய னாலும்**
**உருவுடை யார்உமை யாளையொர் பாகம்**
**பரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும்**
**புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ!**

திருமால், பிரமன் ஆகிய காரணக் கடவுளரிலும் மேலான செல்வத்தை உடையவரும், தமது திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாக உடையவரும், அன்புடையவராய்த் தம்மை அடைவாரது வினைகளைத் தீர்க்கும் விருப்பம் உடையவரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, ‘திருப்பூவணம்’ என்னும் தலம் இதுதானோ?

**எண்ணி யிருந்து கிடந்தும் நடந்தும்**
**அண்ண லெனாநினை வார்வினை தீர்ப்பார்**
**பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்**
**புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ!**

இருப்பினும், கிடப்பினும், நடப்பினும், தம்மையே முதல்வராக ஓர்ந்து நினைவாரது வினைகளை நீக்குபவரும், அறவடிவினருமாகிய இறைவர், பண்ணாகிய இசைபோலப் பொருந்திய மொழியினையுடைய மகளிர் பலர் இனிய பாடல்களைப்பாட எழுந்தருளியிருக்கின்ற, திருப்பூவணம் என்னும் திருத்தலம் இதுதானோ?

**தெள்ளிய பேய்பல பூத மவற்றொடு**
**நள்ளிருள் நட்டம தாடல் நவின்றோர்**
**புள்ளுவ ராகும் அவர்க்கவர் தாமும்**
**புள்ளுவ னார்உறை பூவணம் ஈதோ!**

தெளிவையுடைய பல பேய்பூதங்களுடன், செறிந்த இருளில் நடனத்தைப் புரிகின்றவரும், வஞ்சகராகின்றவருக்குத் தாமும் வஞ்சகராவோரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, ‘திருப்பூவணம்’ என்னும் திருத்தலம் இதுதானோ?

**நிலனுடை மான்மறி கையது தெய்வக்**
**கனலுடை மாமழு ஏந்தியோர் கையில்**
**அனலுடை யார்அழ கார்தரு சென்னிப்**
**புனலுடை யார்உறை பூவணம் ஈதோ!**

### 8.2.2. இறைவனின் திருமேனி வடிவம்:

நிலத்தை வாழும் இடமாக உடைய மான் கன்று கையிடத்ததாக, தெய்வத் தீயாம் தன்மையை உடைய பெரிய மழுவை ஒரு கையில் பிடித்து, அதனோடே மற்றொரு கையில் நெருப்பை உடையவரும் ஆகிய

இறைவர் எழுந்தருளியுள்ள 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ? என்று வியக்கின்றார்.

**நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார்**
**கடைகடை தோறிடு மின்பலி என்பார்**
**துடியிடை நன்மட வாளொடு மார்பில்**
**பொடிஅணி வார்உறை பூவணம் ஈதோ!**

பெருமித நடையையுடைய நல்ல ஆனேற்றின் மீது ஏறுபவரும், மகளிரது வாயில் தோறும் சென்று, 'பிச்சை இடுமின்' என்று இரப்பவரும், உடுக்கை போலும் இடையினை உடைய தேவியின் அழகிய மேனியின் பொலிவோடு, சாம்பலைப் பூசிக்கொள்வோரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

**மின்னனை யாள்திரு மேனி விளங்கவோர்**
**தன்னமர் பாகம தாகிய சங்கரன்**
**முன்னினை யார்புரம் மூன்றெரி யூட்டிய**
**பொன்னனை யான்உறை பூவணம் ஈதோ!**

மின்னல் போலும் மாதராள் திருமேனி தனது திருமேனியின் ஒரு பாகத்தில் விளங்க விரும்பிவைத்த 'சங்கரன்' என்னும் பெயரையுடையவனும், தன்னை நினையாதவரது அரண்களை முன்பு தீக்கு இரையாக்கிய, பொன் போலும் நிறத்தை உடையவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியுள்ள 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

**மிக்கிறை யேயவன் துன்மதி யாலிட**
**நக்கிறை யேவிர லாலிற வூன்றி**
**நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம்**
**புக்குறை வான்உறை பூவணம் ஈதோ!**

### 8.2.3. இராவணனை அழித்தவன்:

தனது தலைமையை எல்லை கடந்து மதித்தவனாகிய இராவணனது தீய எண்ணங் காரணமாக, வெகுளி நகை செய்து, தனது இடமாகிய கயிலையை, அவன் நெரியுமாறு, விரலால் சிறிதே ஊன்றி, தன்னையே உருகி நினைவாரது ஒப்பற்ற நெஞ்சிலே குடிபுகுந்து, ஒருஞான்றும் நீங்காது உறையும் இறைவன் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

**இப்பதிகத்தில் 8-ம் செய்யுளும் 9-ஆம் செய்யுளும் சிதைந்து போயிற்று.**

**சீரின் மிகப்பொலி யுந்திருப் பூவணம்**
**ஆர விருப்பிட மாவுறை வான்றனை**
**ஊரன் உரைத்தசொன் மாலைகள் பத்திவை**

**பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே.**

### 8.2.4. இடபத்தை வாகனமாக உடையவன்:

அழகினால் மிகப் பொலிகின்ற, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலத்தில், விருப்பம் மிக இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை, நம்பியாரூரன் பாடிய இச்சொல் மாலைகள் பத்தினையும் இந்நிலவுலகில் பாடுபவர், தம் பாவத்தை அறுப்பவராவர்.

### 8.3. கருவூர்த்தேவரின் திருப்பூவணப் பதிகம்

**திருவருள் புரிந்தாள் ஆண்டுகொண் டிங்ஙன்**
**சிறியனுக் கினியது காட்டிப்**
**பெரிதருள் புரிந்தா னந்தமே தரும்நின்**
**பெருமையிற் பெரியதொன் றுளதே**
**மருதர சிருங்கோங் ககில்மரம் சாடி**
**வரைவளங் கவர்ந்திழி வையைப்**
**பொருதிரை மருங்கோங் காவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

மருது, அரசு, பெரிய கோங்கு, அகில் என்னும் மரங்களை முரித்துக்கொண்டு மலையில் தோன்றும் பொருள்களை அடித்துக்கொண்டு மலையிலிருந்து இறங்கி ஓடிவருகின்ற வையை நதியின் ஒன்றோடொன்று மோதும் அலைகள் தம் பக்கத்தில் ஓங்கக்கொண்ட, கடைவீதிகளையுடைய திருப்பூவணம் என்ற தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானே! திருவருள் புரிந்து அடியேனை அடிமையாக இவ்வுலகில் ஆட்கொண்டு இன்பம் தரும் பொருள் இது என்று அறிவித்து மிகுதியாக அருள்புரிந்து ஆனந்தத்தை வழங்குகின்ற உன் பெருமையைவிட மேம்பட்ட பொருள் ஒன்று உளதோ?

**பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்**
**பன்னெடுங் காலம்நிற் காண்பான்**
**ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த**
**எளிமையை என்றும்நான் மறக்கேன்**
**தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்**
**தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்**
**பூம்பணைச்சோலை ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

### 8.3.1. சோலைகளும் நீர்நிலைகளும் நிறைந்த தலம்:

தேனோடு கூடிய தண்ணீரை உடைய, மானிடர் ஆக்காத நீர்நிலையில் உள்ள வாளைமீன்கள் தம் வாயில் கொள்ளும் வண்ணம் தெளிந்த தேன் பாய்ந்து ஒழுகும் பூக்களையுடைய வயல்கள், சோலைகள்

இவற்றை அடுத்த, கடைத்தெருக்களையுடைய திருப்பூவணத்தில் கோயில் கொண்டவனே! பாம்புப்படுக்கையில் துயின்ற திருமால், பிரமன் முதலிய தேவர்கள் மிகநெடுங்காலமாக உன்னைக் கண்களால் காண முயன்று வருந்தியிருக்கவும் அடியே னுடைய உள்ளத்தில் பரம்பொருளாகிய நீ வந்து சேர்ந்த எளிவந்த தன்மையை எக்காலத்தும் அடியேன் மறக்கமாட்டேன்.

**கரைகடல் ஒலியின் தமருகத் தரையிற்**
**கையினிற் கட்டிய கயிற்றால்**
**இருதலை ஒருநா இயங்கவந் தொருநாள்**
**இருந்திடாய் எங்கள்கண் முகப்பே**
**விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்**
**வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த**
**புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

### 8.3.2. அடியார்களின் இன்னிசைப் பாடல்களுக்கு மயங்குபவன்:

விரிவாக நிகழ்த்தப்படுகின்ற திருவிழாவிலே தன் பின்னே வருகின்ற அடியார்களுடைய பாடல்களைக் கேட்கும் விருப்பத்தால் எம் பெருமான் தன் திருமுடியை அசைக்கவே தன் முடியிலிருந்து விழுந்த பூக்கள் மிகுதியாக அமைந்து தூர்க்கின்ற கடைத்தெருக்களையுடைய திருப்பூவணத்தில் கோயில் கொண்டு இருக்கும் பொருளே! ஒலிக்கின்ற கடல் ஒலிபோல உடுக்கையின் அரைக்கும் உன் கைக்குமாகக் கட்டப்பட்டுள்ள கயிற்றினால் அதன் இருபக்கமும் ஒருநாவே சென்று தாக்கி ஒலியை எழுப்ப வந்து ஒருநாள் எங்கள் கண்களின் முன்னே காட்சி வழங்குவாயாக.

**கண்ணியல் மணியின் சூழல்புக் கங்கே**
**கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன்**
**நுண்ணியை யெனினும் நம்ப நின் பெருமை**
**நுண்ணிமை யிறந்தமை அறிவன்**
**மண்ணியல் மரபின் தங்கிருள் மொழுப்பின்**
**வண்டினம் பாடநின் றாடும்**
**புண்ணிய மகளிர் ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

### 8.3.3. இறைவனின் பெருமையும் அடியாரின் சிறுமையும்:

ஒளி இல்லாத இடத்தில் இருள் நிறைந்திருக்கும் என்ற மண்ணுலக முறைப்படி இருள் தங்கியிருக்கும் சோலையின் உயர்ந்த பகுதியில் வண்டினங்கள் பாட, அவற்றின் பாடலுக்கு ஏற்ப ஆடும் செல்வ மகளிரை

சமய இலக்கியம்

குறிப்புகள்

உடைய, கடைத்தெருக்கள் அமைந்த திருப்பூவணத் திருத்தலத்தில் கோயில் கொண்டருளிய பெருமானே! கண் மணி இருக்கும் இடத்தில் நீ புகுதலால் அங்குத்தானே உன்னைக்கூடி உன்னுள் ஒடுங்கிய அடியேனுக்கு அவ்வாறு நீ சிறியையாய் இருந்தாய் எனினும் எம்மால் விரும்பப்படும் பெருமானே! உன் பெருமை சிறுமையைக் கடந்தது என்பதனை அடியேன் அறிவேன்.

**கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்**
**கள்ளரை மெள்ளவே துரந்துன்**
**அடியிணை இரண்டும் அடையுமா றடைந்தேன்**
**அருள்செய்வாய் அருள்செயா தொழிவாய்**
**நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க**
**நிலைவிளக் கலகில்சா லேகப்**
**புடைகிடந் திலங்கும் ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

உயரமான அடுக்குக்களை உடைய மாட வீடுகளில் இரவு நேரத்தில் இருளைப் போக்குவதற்கு அணையாது உள்ள விளக்குக்கள் சாளரங்களுக்கு வெளியே ஒளியை வீசுகின்ற, கடைத்தெருக்களையுடைய திருப்பூவணம் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற பெருமானே! கொடிய வினையாகிய பாசக்கடலைக் கடந்து ஐம்பொறிகளாகிய திருடர்களை மெதுவாக விரட்டி உன் திருவடிகள் இரண்டனையும் நூல்களில் சொல்லப்பட்ட நெறிக்கண் நிற்கும் முறையானே அடைந்துவிட்டேன். அடியேனுக்கு அருள் செய்வதோ, அருள் செய்யாது விடுப்பதோ உன் திருவுள்ளம்.

**செம்மனக் கிழவோர் அன்பு தாஎன்றுன்**
**சேவடி பார்த்திருந் தலச**
**எம்மனம் குடிகொண் டிருப்பதற் கியான்ஆர்**
**என்னுடை அடிமைதான் யாதே**
**அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள**
**அரிவையர் அவிழ்குழற் சுரும்பு**
**பொம்மென முரலும் ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

## 8.3.4. இறைவனின் கருணையை எண்ணிப் பாடுதல்:

அடியவர்களுடைய மனம் மகிழ்வதற்கு அமைந்த நாள்களில் ஒருநாள் சிவபெருமான் ஆகிய நீ பிச்சைக்கு எழுந்தருள, உன்னைக் காதலித்த மையலால் மகளிருடைய அவிழ்ந்த கூந்தலில் வண்டுகள் பொம் என்ற ஒலியோடு இசைக்கும், கடைத்தெருக்களை உடைய திருப்பூவண

நகரில் கோயில் கொண்டருளும் பெருமானே! செம்மையான மனத்தை உடைய அடியவர்கள் உன்னுடைய திருவருளை வேண்டி உன் திருவடிகளைப் பார்த்துக் கொண்டிருந்து வருந்தவும், அடியேனுடைய மனத்தில் நீ இருப்பிடம் கொண்டு இருப்பதற்கு அடியேன் யாது தகுதி உடையேன்? அடியேனுடைய அடிமைதான் எத்தன்மையது? உன் செயலுக்கு உன் அளவற்ற கருணையே காரணம் என்பதாம்.

**சொன்னவில் முறைநான் காரணம் உணராச்**
**சூழல்புக் கொளித்தநீ யின்று**
**கன்னவில் மனத்தென் கண்வலைப் படும்இக்**
**கருணையிற் பெரியதொன் றுளதே**
**மின்னவில் கனக மாளிகை வாய்தல்**
**விளங்கிளம் பிறைதவழ் மாடம்**
**பொன்னவில் புரிசை ஆவண வீதிப்**
**பூவணம் கோயில்கொண் டாயே.**

ஒளி மிகுந்த பொன்மயமான மாளிகைகளின் கோபுரம், விளங்குகின்ற இளைய பிறைச் சந்திரன் தவழும்படியான உயர்ந்த மாடி வீடுகள், பொன் மிகுந்த மதில், கடைத்தெருக்கள் இவற்றை உடைய திருப்பூவணத் திருத்தலத்தில் கோயில் கொண்டருளிய பெருமானே! சொற்களை ஒலிக்கும் முறைப்படி சொல்கின்ற காரணத்தை அடியேன் எட்டலாகாத இடத்தில் புகுந்து மறைந்த நீ இன்று கல்லையொத்த உருகாத மனத்தை யுடைய அடியேனுடைய கண்களாகிய வலையில் உன்னை அகப்படுத்திக் கொண்ட கருணையைக் காட்டிலும் மேம்பட்ட செயல் வேறு உளதோ?

**இப்பதிகத்தில் 8-ஆம் செய்யுளும் 9-ஆம் செய்யுளும் சிதைந்து போயிற்று.**

**பூவணம் கோயில் கொண்டெனை ஆண்ட**
**புனிதனை வனிதை பாகனை வெண்**
**கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்**
**குழகனை அழகெலாம் நிறைந்த**
**தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்**
**திகழ்கரு வூரனேன் உரைத்த**
**பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்**
**பரமன துருவமா குவரே.**

## 8.3.5. பதிகப்பயன் உரைத்தல்:

திருப்பூவணத் திருத்தலத்தில் கோயில் கொண்டு அடியேனைத் தன் அடியவனாகக் கொண்ட புனிதனாய், பார்வதி பாகனாய், வெள்ளிய கோவண ஆடையை உடுத்து வெள்ளிய மண்டையோட்டினை ஏந்தும் இளையனாய்,

எல்லா அழகுகளும் முழுமையாக நிறைந்த தீ நிறத்தவனாகிய சிவபெருமானுடைய செய்திகளாகச் சிறந்த வேதங்களை ஆராயும் விளக்கமுடைய கருவூர்த்தேவனாகிய அடியேன் சொல்லிய பாக்களின் தன்மை பொருந்திய தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பொருளோடு ஓதி நினைவிற்கொண்டு பாட வல்லவர்கள் சிவபெருமானுடைய சாரூப்பியத்தை அடைவார்கள்.

## 8.3.6 தொகுத்துக் காண்போம்:

மாதொருபாகனாகக் கயிலை மலையில் வீற்றிருக்கும் இறைவனை திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் பாடுவதை அறிந்து கொண்டீர்கள்.

முப்புரங்களை எரித்து தேவர்களைக் காத்த பெருமையை உடைய இறைவனின் அளப்பரிய கருணையை எடுத்துரைப்பதை அறிந்து கொண்டீர்கள்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் மட்டும் பிற சமயத்தவராகிய சமண, பௌத்தர்களைச் சாடுதல் என்ற அணுகுமுறை காணப்படுவதை அறிந்து கொண்டீர்கள்.

மக்களின் வினைகளைத் தீர்க்கும் இறைவன் திருப்பூவணத்தில் எழுந்தருளி இருப்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

அவனுடைய வடிவழகைக் கண்டு மயங்காத உயிர்கள் இல்லை என்பதை சுந்தரர் அறிவிப்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

பொதுவாக தேவாரப் பதிகங்களில் இடம்பெறக்கூடிய கூறாகிய இராவணனின் ஆணவம் அழித்த தன்மை சுந்தரரின் தேவாரத்திலும் பதிவாக்கப் பட்டுள்ளதைத் தெரிந்து கொண்டீர்கள்.

கருவூர்த்தேவர் பாடியுள்ள திருப்பூவணப் பதிகம் இயற்கையை அழகாகச் சித்தரிப்பதை அறிந்து கொண்டீர்கள்.

சோலைகளும் நீர்நிலைகளும் நிறைந்துள்ள திருப்பூவணத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன் அடியார்களின் இன்னிசைப் பாடல்களுக்கு மயங்கக்கூடிய தன்மை உடையவன் என்பதை அறிந்து கொண்டீர்கள்.

இறைவனுக்கு இருக்கக்கூடிய பெருமை என்பது மலையைப் போலவும், அப்பெருமையை உணராது இருக்கும் அடியார்களின் சிறுமையும் கருவூர்த்தேவர் பாடுகின்றார் என்பதை அறிந்து கொண்டீர்கள்.

## 8.3.7. சோதித்து அறியும் வினாக்கள்:

1. கருவூர்த்தேவர் பாடும் திருப்பூவணத்துத் தலத்தின் சிறப்புகளை எழுதுக.
2. திருப்பூவணத்தின் இயற்கை அழகை விவரி.
3. திருஞானசம்பந்தரின் திருப்பூவணப் பதிகத்தின் தனித்தன்மைகள் யாவை?

4. கயிலை மலை இறைவனை தேவாரம் எவ்வாறு போற்றுகின்றது?
5. சமண சமயத்தை திருஞானசம்பந்தர் எவ்வாறு கண்டிக்கின்றார்?
6. திருப்பூவணம் பற்றி நீவீர் அறிவன யாவை?
7. மற்ற திருத்தலங்களைவிடத் திருப்பூவணம் எத்தகைய சிறப்புடையது?

### 8.3.8. பயிற்சி வினாக்கள்:

1. திருப்பூவணத்துத் தலத்தின் பெருமையை சுந்தரர் எவ்வாறு பாடுகின்றார்?
2. சிவபெருமானின் திருமேனி வடிவம் தன்னை ஈர்த்த தன்மையை சுந்தரர் தேவாரம் எவ்விதம் உணர்த்துகின்றது?
3. திருஞானசம்பந்தரின் திருப்பூவணப் பதிகம் எடுத்துரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
4. கயிலை மலையானாகிய இறைவனின் அருட்சிறப்பை திருப்பூவணத்துப் பதிகம் எவ்வாறு புலப்படுத்துகின்றது?
5. இன்னிசைப் பாடல்களுக்கு இறைவன் மயங்கும் தன்மையை கருவூர்த்தேவர் எவ்விதம் பாடுகின்றார்?
6. இறைவனின் கருணைப்பெருக்கை இப்பதிகம் எவ்வாறு காட்டுகின்றது?

### 8.3.9. மேலும் பயில்வதற்கான நூல் :

1. பி.ரா.நடராசன், பன்னிரு திருமுறைகள், உமா பதிப்பகம், 2004.

# பிரிவு-3 திருவாசகம் கூறு-9 - திருவார்த்தை

## 9.1. திருவாசகம் - அறிமுகம் :

பரந்து விரிந்த இப்பூவுலகில் வியாபிக்கும் புறஇருளைப் போக்குவதற்குச் சூரியனின் ஒளிக்கற்றைகள் காரணமாவதைப் போல, அக மனதில் தோன்றுகின்ற அஞ்ஞானமாகிய இருளைப் போக்குவதற்கு ஆண்டவனின் மேல் வைக்கின்ற பக்தி காரணமாகின்றது. சைவ சமயத்தைப் பொருத்த வரை பக்தி என்பது இறைவனின் திருவடி நிழலில் நிலைத்திருக்க அனைத்தும் ஆணவ மலத்தில் கட்டுண்டு, தன்னிலை அறியாது, அறியாமையில் மூழ்கியிருத்தலால் இறைநிலையின் மேன்மையினை அறிய இயலாமல் போகின்றது.

ஆணவ மலம் ஒடுங்கவும், இப்பிறப்பின் சிறப்பினை உணரவும் இறைவன் தானே கருவாக இருந்து அவனை நினைக்க வைத்து, அவனது தாளினை அடைவதற்கு அருள்புரிவான் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு. அவ்வகையில் சைவ சமயச் சான்றோர்கள் இறைவனை நீள நினைத்து, கைதொழுது, திருவடிப்பேறு கைவராப் பெற்று, மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற பெருந்தகையாளர்கள். மணிவாசகப் பெருமானின் திருவாக்கில் மலர்ந்துள்ள திருவாசகப் பனுவல்கள் கல்நெஞ்சைக் கூடக் கனியச் செய்யக்கூடிய வலிமை பெற்றவை.

சுந்தரருக்குப் பின் பக்தி இயக்க வரலாற்றில் அறிமுகமாகும் மாணிக்கவாசகர் மேற்பட்ட மூவரையும் விட அனுபவநிலையில் வேறுபட்டு உயர்ந்து நின்றவர். மேற்படி மூவரும் இறையருளை நாடி நின்றவர்கள் ஆனால் மாணிக்கவாசகர் அந்த அருளைப் பெற்றுத் திளைத்தவர். அந்த அனுபவத்தைச் சொற்களில் வடித்ததன் மூலம் தமிழுக்குப் பக்தியின் மொழி என்ற பெருமையை ஈட்டித் தந்தவர்.

பாரத நாட்டுச் சான்றோர், உலக இறக்கத்திற்குக் காரணமாய் இருக்கும் சக்தி ஒன்று உண்டு என்ற கொள்கையினர். அச் சக்தியைக் ‘கடவுள்’ அல்லது இறைவன் என்று வழங்கினர். இவ்விறைவன் மட்டுச் செலுத்தும் கனிந்த ‘அன்பே’ ‘பக்தி’ எனப்படுகின்றது. “சிறந்த நூல் என்பது ஒரு பெருங்கலைஞனின் உயிர்த்துடிப்பாகும். அதன் வாணாளைக் கடந்து பல காலம் நிறை பெற்று வாழ்வாற்காகப் பக்குவம் செய்யப்பட்ட அவனுடைய உயிர் அனுபவம் ஆகும்” என்று ஆங்கிலப் புலவர் மில்டன் குறிப்பிடும் கருத்தை இவண் நோக்குவோமாயின் சாலப் பொருந்தும் எனற அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் தன்னுடைய இலக்கியக் கலை என்ற நூலில் சுட்டிக்காட்டுகின்றார்(ப.17) இக்கூற்றுக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய திருவாசகத்தில் இடம்பெற்றுக்க திருவார்த்தை, எண்ணப்பதிகம்,

யாத்திரை பத்து ஆகிய மூன்று பதிகங்கள் மட்டும் நமக்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

## 9.2. குறிக்கோள்கள்:

குறிப்புகள்

உலக உயிர்கள் உய்திபெற வேண்டும் என்ற பெருங்கருணையால்தான் இறைவன் அருட்காட்சி தருகின்றான் என்று திருவாசகம் கூறுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

தன்னுடைய அடியார்களுக்காக இறைவன் வலையல் விற்ற செயலை மணிவாசகர் பாடுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

நாயன்மார்களின் வாழ்வியலில் இறைவன் பல்வேறு அற்புதங்களைச் செய்து திருவிளையாடல் புரிந்த தன்மை இப்பதிகத்தில் பாடப்பட்டுள்ளதைத் தெரிந்து கொண்டீர்கள்.

இப்பதிகத்தில் மணிவாசகர் தன்னுடைய அருள் அனுபவத்தை நம்மிடையே பகிர்ந்து கொள்கின்றார். இறைவனின் பெருங்கருணையை உலக உயிர்களுக்கு அறிவித்து அதன்வழியாக அன்புறுதல் என்ற நிலையில் பாடப்பட்டது இப்பதிகம்

**மாது இவர் பாகன், மறை பயின்ற**
**வாசகன், மா மலர் மேய சோதி,**
**கோதில் பரங்கருணை, அடியார்**
**குலாவு நீதி குணமாக நல்கும்**
**போதலர் சோலைப் பெருந்துறை, எம்**
**புண்ணியன், மண்ணிடை வந்திழிந்து,**
**ஆதிப் பிரமம் வெளிப்படுத்த**
**அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே.**

பெண்ணமர்ந்த பாகத்தன், மந்திரங்கள் பொருந்திய மொழி உடையான், இதயமலரில் வீற்றிருக்கும் ஒளிவானவன், குற்றமற்ற மேலான அருள்வடிவன், அடியார்கள் கொண்டாடும் நீதியானவன், நீதியினையே குணமாகக் கொண்டருள் புரிகின்ற அரும்புகள் மலர்கின்ற சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில் தங்கிருளிய எமது புண்ணியமூர்த்தி, மண்ணுலகத்தே இறங்கிவந்து எல்லாவற்றிற்கு முதலாகிய பெரும்பொருளை வெளிப்படுத்திய அருட் செய்கையை அறியும் தன்மையார் எமது தலைவராவர்.

## 9.3. இடவையில் அளித்த அருள்:

**மால், அயன், வானவர் கோனும் வந்து**
**வணங்க, அவர்க்கு அருள் செய்த ஈசன்,**
**ஞாலம் அதனிடை வந்திழிந்து**
**நன்னெறி காட்டி, நலம் திகழும்**
**கோல மணி அணி மாடம் நீடு**

குறிப்புகள்

**குலாவும் இடவை மட நல்லாட்குச்**
**சீலம் மிகக் கருணை அளிக்கும்**
**திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே.**

திருமாலும், பிரமனும், தேவர்கட் கரசனாகிய இந்திரனும் வந்துபணிய அவர்கட்கு அருள்புரியும் ஆண்டவன். உலகத் தினிடை குருவாகி இறங்கிவந்து ஞானநெறியினை அறிவுறுத்தி அழகு விளங்குகின்ற நல்ல வடிவுடைய ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடங்களை உடையதாய் நெடுநாள் விளங்குகின்ற திருவிடை மருதூரில் ஒரு பெண்ணடியவர்க்குக் குணநயமிகும்படியாக அருள் செய்த வகையினை அறிபவர்கள் எமது தலைவராவர்.

## 9.4. வலை வீசிய அருட்செயல்:

**அணிமுடி ஆதி அமரர் கோமான்,**
**ஆனந்தக் கூத்தன், அறுசமயம்**
**பணிவகை செய்து, படவு அது ஏறிப்**
**பாரொடு விண்ணும் பரவி ஏத்தப்**
**பிணிகெட, நல்கும் பெருந்துறை எம்**
**பேரருளாளன், பெண் பால் உகந்து,**
**மணிவலை கொண்டு, வான் மீன்விசிறும்**
**வகை அறிவார் எம்பிரான் ஆவாரே.**

அழகிய சடைமுடியை உடைய முதல்வன், விண்ணவர் தலைவன், ஆனந்தக் கூத்துடையவன், அறு சமயங்களும் தன்னை வணங்கும்படி செய்து மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் வாழ்த்தி வழிபட அவர்கள் பிறவிநோய் ஒழியும்படி அருள் செய்யும் பெருந்துறையையுடைய நமது பெருங்கருணையாளன், (வலைஞர் மகளாகிய) உமையம்மையாகிய பெண்ணினைமணக்க விரும்பித் தோணியேறி. ஆழகியவலை கொண்டு பெரிய கெளிற்று மீனை வீசிப் பிடிக்குந் திறத்தை அறியுந் தன்மையார் எமது தலைவராவர்.

## 9.5. அடியார்களை ஆட்கொண்ட பெருமை:

**வேடுருவாகி. மகேந்திரத்து**
**மிகு குறை வானவர் வந்து, தன்னைத்**
**தேட இருந்த சிவபெருமான்,**
**சிந்தனை செய்து, அடியோங்கள் உய்ய,**
**ஆடல் அமர்ந்த பரிமா ஏறி,**
**ஐயன், பெருந்துறை ஆதி, அந்நாள்**
**ஏடர்களை எங்கும் ஆண்டு கொண்ட**
**இயல்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.**

மகேந்திர மலையில் வேட்டுவ வடிவங்கொண்டு தன்பாலிரத்தற்குரிய மிகுந்த குறைகளை உடைய விண்ணவர் போய்த் தன்னைத் தேடும்படியாக வீற்றிருந்தருளிய சிவபெருமான், அடியோங்கள் உய்வதை எண்ணி வலிமை பொருந்திய குதிரையில் ஏறினவன், தலைவனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்தில் தன்னுடைய நண்பர்களை எவ்விடத்து மாட்கொண்டருளிய தன்மையை அறியவல்லா ரெமது தலைவராவார்

## 9.6. மண்டோதரிக்காக அருளிய தன்மை:

**வந்து, இமையோர்கள் வணங்கி ஏத்த,**
**மாக்கருணைக் கடலாய், அடியார்**
**பந்தனை விண்டு அற நல்கும், எங்கள்**
**பரமன், பெருந்துறை ஆதி, அந்நாள்**
**உந்து திரைக்கடலைக் கடந்து, அன்று,**
**ஓங்கு மதில் இலங்கை அதனில்**
**பந்தாணை மெல் விரலாட்கு அருளும்**
**பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே.**

விண்ணவர்கள் வந்து தன்னை வணங்கி வாழ்த்த அவர்கட்குப் பேரருள் புரியுங்கடலாய், அன்பர்களுடைய பாசக்கட்டு நீங்கி யொழியும்படி அருள் செய்யுமெங்கள் மேலோனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்திலே, திரைவீசுகின்ற கடலைக் கடந்து உயர்ந்த மதில் சூழ்ந்த இலங்கையின்கண், பந்தின் வடிவமைந்த மெல்லிய விரலை உடைய வண்டோதரிக்கு அருள் புரிந்த வகையினை யறிவார் எமது தலைவராவர்.

## 9.7. பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த அருட்செயல்:

**வேவத் திரிபுரம், செற்ற வில்லி,**
**வேடுவனாய், கடி நாய்கள் சூழ**
**ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே**
**எம் பெருமான் தான், இயங்கு காட்டில்**
**ஏவுண்ட பன்றிக்கு இரங்கி. ஈசன்,**
**எந்தை, பெருந்துறை ஆதி, அன்று**
**கேவலம் கேழலாய்ப், பால் கொடுத்த**
**கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.**

திரிபுரங்கள் வெந்துபோகும்படி கோபித்த வில்லாளன், வேட வடிவங்கோண்டு, காவல் நாய்கள் சூழந்துவரத் தாம் ஏவுகின்ற பணியைச் செய்யும் விண்ணவர் முன்செல்ல எம்பிரான் தான் செல்லுகின்ற காட்டில் அம்பு வைத்திறந்த தாய்ப் பன்றிக்கு இரங்கி ஆண்டவன் அப்பன், திருப்பெருந்துறை முதல்வன், அந்நாளில் தனிப் பன்றி வடிவங்கொண்டு,

குறிப்புகள்

பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுத்த திருவுள்ளக் கருத்தை யறியும் தன்மையார் எமது தலைவராவர்.

## 9.8. வேற்றுமை கெடுத்து அருள் செய்த தன்மை:

**நாதம் உடையதோர் நற் கமலப்**
**போதினில் நண்ணிய நன்னுதலார்,**
**ஓதிப் பணிந்து, அலர்தூவி, ஏத்த,**
**ஒளிவளர் சோதி, எம் ஈசன்; மன்னும்,**
**போதலர் சோலைப் பெருந்துறை எம்**
**புண்ணியன்; மண்ணிடை வந்து தோன்றிப்,**
**பேதம் கெடுத்து அருள் செய்பெருமை**
**அறிய வல்லார் எம்பிரான் ஆவாரே.**

வண்டின் ரீங்கார ஒலியினை யுடைய அழகிய தாமரை மலர்களில் விரும்பி வைகும், அழகிய நெற்றியையுடைய ராகிய, கலை மகளும், திருமகளும் வாழ்த்தி வணங்கி மலர் தூவி வழிபடும்படி ஒளி மிகுகின்ற சோதி வடிவனாகிய எமது ஆண்டவன், வீற்றிருக்கும், மலர்கள் விரிகின்ற பொழில் சூழ்ந்த திருப்பெருந் துறையின் கண் எமது புண்ணியமூர்த்தி மண்ணுலகத்தே குருவாய்த் தோன்றியருளி வேற்றுமையைக் கெடுத்து அருள்செய்கின்ற பெருமையை அறிய வல்லவர்கள் எமது தலைவராவர்.

## 9.9. வலைவாணன் மகளை மணந்தது:

**பூவலர் கொன்றை அம் மாலை மார்பன்,**
**போர் உகிர் வன்புலி கொன்ற வீரன்,**
**மாது நல்லாள், உமை மங்கை பங்கன்,**
**வண் பொழில் சூழ் தென் பெருந்துறைக் கோன்,**
**ஏதில் பெரும் புகழ் தென் பெருந்துறைக் கோன்,**
**இரும் கடல் வாணற்குத் தீயில் தோன்றும்**
**ஓவிய மங்கையர் தோள் புணரும்**
**உருவறிவார் எம்பிரான் ஆவாரே.**

அழகு விளங்குகின்ற கொன்றைப் பூவினாலாகிய மாலையையணிந்த மார்பன், போர் செய்தற்குரிய நகங்களைக் கொண்ட வல்லமை மிகுந்த புலியினைக் கொன்ற வீரன். உமை மங்கை பாகன். வளம் பொருந்திய சோலை சூழ்ந்த அழகிய திருப்பெருந்துறை மன்னன், குற்றமற்ற பெரும்புகழையுடைய எங்கள் ஆண்டவன், பெரிய கடலரசனுக்கு நெருப்பிற் றோன்றிய சித்திரம் போன்ற அழகிய நங்கையர் தோள்களைச் சேர்ந்தருளும் அவன் திருவடிவை அறியவல்லார் எமது தலைவராவர்.

## 9.10. துன்பம் நீக்கி என்னை ஆண்டது:

**தூவெள்ளை நீறணி எம்பெருமான்,**
**சோதி மகேந்திர நாதன், வந்து**
**தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்,**
**தென்னன், பெருந்துறை ஆளி, அன்று**
**காதல் பெருகக் கருணை காட்டித்**
**தன் கழல் காட்டிக் கசிந்து உருகக்**
**கேதம் கெடுத்து, என்னை ஆண்டருளும்**
**கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.**

பரிசுத்தமான திருவெண்ணீறணிந்த எமது பெருமானாகிய ஒளி வடிவமான மகேந்திரமலைக் கதிபதி, தானே வந்தருளி விண்ணவர் வணங்குகின்ற திருவடியை என் தலைமீது வைத்து ஆண்டவன், அழகிய நல்ல திருப்பெருந்துறை மன்னன், அந்நாளில் எனக்கு அன்பு மிகும்படி அருள்காட்டித் தனது திருவடிகளையும் காட்டி அருளி, உள்ளங் கனித்துருகும்படி, துன்பங்களைத் தொலைத்து என்னை ஆட்கொண்டருளும் திருவுள்ளக் கருத்தை அறிவார் எமது தலைவராவர்.

## 9.11. வளையல் விற்ற திருவிளையாடல்:

**அங்கணன். எங்கள் அமரர் பெம்மான்,**
**அடியார்க்கு அமுதன், அவனி வந்த**
**எங்கள் பிரான், இரும் பாசம் தீர**
**இகபரம் ஆயது ஓர் இன்பம் எய்தச்**
**சங்கம் கவர்ந்து, வண் சாத்தினோடும்**
**சதுரன், பெருந்துறை ஆளி, அன்று**
**மங்கையர் மல்கும் மதுரை சேர்ந்த**
**வகை அறிவார் எம்பிரான் ஆவாரே.**

அழகிய அருட்கண்ணை உடையவன், எங்கள் விண்ணவர் தலைவன், அடியார்கட்குச் சாவா மருந்தானவன், நில உலகிலே குருவாகிவந்த எங்கள் பெருமான். மிக்க திறமையுடையவன். திருப்பெருந்துறை மன்னன், அவன் அடியார்களுடைய பெரிய மும்மலப்பற்று நீங்கவும், இம்மை மறுமையில் ஆவதோர் பேரின்ப மடையும் பொருட்டும் அந்நாளில் சங்கினாலாகிய வளையல்களை எடுத்துக்கொண்டு மிகுந்த விறப்பதற்குப் பெண்கள் நிறைந்த மதுரைப்பதியை அடைந்த விதத்தை அறிய வல்லார் எமது தலைவராவர்.

குறிப்புகள்

## 9.12. தொகுத்துக் காண்போம் :

உலக உயிர்கள் உய்திபெற வேண்டும் என்ற பெருங்கருணையால்தான் இறைவன் அருட்காட்சி தருகின்றான் என்று திருவாசகம் கூறுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

தன்னுடைய அடியார்களுக்காக இறைவன் வலையல் விற்ற செயலை மணிவாசகர் பாடுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

நாயன்மார்களின் வாழ்வியலில் இறைவன் பல்வேறு அற்புதங்களைச் செய்து திருவிளையாடல் புரிந்த தன்மை இப்பதிகத்தில் பாடப்பட்டுள்ளதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 9.13. சோதித்து அறியும் வினாக்கள்:

1. இடப வாகனத்தில் காட்சி தரும் இறைவனின் வடிவழகை விவரி.
2. மண்டோதரிக்காக இறைவன் எவ்வாறு அருளினான்?
3. பன்றிக்காக அருள்புரிந்த தன்மையை எழுதுக.
4. மலையரசனின் மகளை மணந்த வரலாற்றை விவரி.

## 9.14. பயிற்சி வினாக்கள்:

1. இறைவனின் திருவிளையாடல்களை மணிவாசகர் எவ்வாறு பாடுகின்றார்?
2. திருவார்த்தைப் பதிகத்தில் மாணிக்கவாசகர் எடுத்துரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## 9.15. மேலும் பயில்வதற்கான நூல்:

1. கா.சு.பிள்ளை, திருவாசகம் உரை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

குறிப்புகள்

# கூறு-10 திருவாசகம் - எண்ணப்பதிகம்

## 10.1. எண்ணப்பதிகம்-அறிமுகம்:

இப்பதிகத்தில் மாணிக்கவாசகர் தன்னுடைய எண்ணத்தை இறைவனிடம் தெரிவிக்கின்றார். தனக்கு மட்டும் அருள்புரியாமல் இறைவன் தனித்து விடுவது நியாயமாகுமா? எனக் கேட்டு அடியார் கூட்டத்தில் ஒருவனாகவே தானும் இருக்க விரும்புவதாகப் பாடுகின்றார்.

## 10.2. குறிக்கோள்கள்:

அடியார் கூட்டத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மணிவாசகர் வேண்டுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

கல்மனதையும் கசிந்துருகச் செய்யக்கூடிய வலிமை பெற்றது திருவாசகம் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் மட்டும்தான் இறைவன் அருட்காட்சி தருவான் என்பதை மணிவாசகர் பாடுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 10.3. அடியார்களுள் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுதல்:

**பார் உருவாய பிறப்பு அறவேண்டும்;**
**பத்திமையும் பெற வேண்டும்;**
**சீர்உருவாய சிவபெருமானே,**
**செங்கமல மலர்போல்**
**ஆர் உருவாய என் ஆரமுதே,**
**உன் அடியவர் தொகை நடுவே,**
**ஓர் உருவாய் நின் திருவருள் காட்டி,**
**என்னையும் உய்யக் கொண்டருளே.**

சிறப்புடைய திருவடிவங் கொள்ளுங் சிவபெருமானே, செந்தாமரைப் பூப்போன்ற அரிய செம்மேனியினனாகிய எனது கிடைத்தற்கரிய அமுதமாவானே, நிலவுலகிலே உடம்பெடுப்பதாகிய பிறப்ப ஒழியவேண்டும் அன்புடைமையைப் பெறவேண்டும். உனது அன்பர் கூட்டத்தின் நடுவே ஒப்பற்ற திருவடிவுடைய உன் திருவருள் காட்டி அடியேனையும் உய்திக்கு ஏற்றுக் கொண்டருள்க.

## 10.4. உன்னைப் பிரிந்து தரியேன் எனல்:

**உரியேன் அல்லேன் உனக்கு அடிமை;**
**உன்னைப் பிரிந்து; இங்கு ஒரு பொழுதும்**
**தரியேன், நாயேன்; இன்னது என்று**
**அறியேன்; சங்கரா! கருணையினால்**

**பெரியோன் ஒருவன். 'கண்டுகொள்' என்று, உன்**
**பெய்கழல் அடிகாட்டிப்**
**'பிரியேன்' என்று என்று; அருளிய அருளும்**
**பொய்யோ? எங்கள் பெருமானே!**



எமது தலைவனே! உனக்கடிமையா யிருத்தற்கு உரிய தகுதி உடையேனல்லேன். ஆனால் உன்னைவிட்டு நீங்கி. ஒரு சிறிது நேரங்கூட நான் தனியே இருத்தலைப் பொறுக்கமாட்டேன். நாயனைய யான் இது என்ன காரணம் என்றறிந்திலேன். பெரியோன் ஒருவன் என்மீது வைத்த இரக்கத்தால் உன்னுடைய கழல் செறித்த திருவடிகளைக் காட்டி, அவற்றைப் பார்த்துக்கொள் என்று கட்டளையிட்டு, உன்னைப் பிரியமாட்டெனென்று என்னிடம் கூறிப்போனது பொய்யாகுமோ?

## 10.5. உருக்கி உயிர் உண்ணும் இன்பம் :

**என்பே உருக, நின் அருள் அளித்து, உன்**
**இணைமலர் அடிகாட்டி,**
**முன்பே என்னை ஆண்டு கொண்**
**முனிவா, முனிவர் முழு முதலே,**
**இன்பே அருளி. எனை உருக்கி,**
**உயிர் உண்கின்ற எம்மானே!**
**நண்பே அருளாய் என்உயிர்**
**நாதா! நின் அருள் நாணாமே.**

எலும்பு உருகும்படியாக நின் திருவருளை மிக நல்கி உன் தாமரை அடிகள் இரண்டையும் காட்டிப் பக்குவம் வரும் முன்னரே என்னை ஆட்கொண்டருளிய தவ வடிவனே, துறவிகளின் முழுத் தலைவனே, பேரின்பமே கொடுத்தருளி என்னை உருகுவித்து எனது உயிர்ப்போதத்தைத் தொலைக்கின்ற எமது பெரியோனே, எனது உயிர்க்குயிரானவனே, கூசாமல் உன்னுடைய திருவருள், எனது நட்பாகும்படி அருள் செய்யவேண்டும்.

## 10.6. தொடர்ந்தேன் பிரிந்து ஆற்றேன் :

**பத்தினேறும் பணிந்திலனேறும், உன்**
**உயர்ந்த பைங்கழல் காணப்**
**பித்தினேனும், பதிற்றிலனேனும்,**
**பிறப்பு அறுப்பாய்; எம் பெருமானே!**
**முத்து அனையானே! மணி அனையானே!**
**முதல்வனே! 'முறையோ?' என்று**
**எத்தனையானும் யான் தொடர்ந்து,**
**உன்னை இனிப் பிரிந்து ஆற்றேனே.**

எமது தலைவனே! அடியேன் உன்னிடத்திற் பற்று இல்லாதவனாயினும் உன்னை வழிபடேனாயினும் உனது மேலான பசுமையான திருவடிகளைக் காண்பதற்கு ஆசைப்படேனாயினும், உன்னைத் துதித்திலேனாயினும், எனது பிறப்பைக் களையவேண்டும். ஏனெனில், முத்துப் போன்றவனே, மாணிக்கம் போன்றவனே, ஆதியானவனே, உன் பெயரைக் கூறி ஓலமிட்டு, உன்னை எந்த அளவிலாவது யான் தொடர்ந்து பற்றினமையால், இனிமேல் உன்னைப் பிரிந்து, பிரிவாற்றாமையைப் பொறுத்திருக்கமாட்டேன்.

## 10.7. புன்மையால் புறமானேன்; நாணுகின்றேன் எனல்:

**காணுமது ஒழிந்தேன் நின் திருப்பாதம்;**
**கண்டு கண் களி கூரப்,**
**பேணுமது ஒழிந்தேன்; பிதற்றுமது ஒழிந்தேன்;**
**பின்னை, எம் பெருமானே,**
**தாணுவே, அழிந்தேன்; நின் நினைந்து உருகும்**
**தன்மை, என் புன்மைகளால்,**
**காணுமது ஒழிந்தேன் நீ இனிவரினும்**
**காணவும் நாணுவனே.**

எம்பெருமானே, நினது திருவடிகளைப் பார்ப்பதை விட்டேன். பார்த்து எனது கண்கள் மகிழும்படியாகப் போற்றுவதை விட்டேன், புகழ்வதையும் விடுத்தேன். உறுதியானவனே, பின் வேறுயாது செய்தேன் என்னில் நான் அறிவு அழிவுற்றேன். உன்னை நினைந்துருகுகின்ற அடியார் தன்மை களையும், எனது கீழ்மை காரணமாக, பார்ப்பதை விடுத்தேன். ஆதலால், நீ இனிமேல் பழைய வடிவம் தாங்கி வந்தாலும் உன்னைப் பார்ப்பதற்கும் கூசுவேன்.

## 10.8. என் உள்ளே உன்னை நிறுத்தினேன்; இரங்குவாய் எனல்:

**பால் திருநீற்று எம் பரமனைப்**
**பரம் கருணையொடும் எதிர்ந்து**
**தோற்றி. மெய் அடியார்க்கு அருள்துறை அளிக்கும்**
**சோதியை; நீதி இலேன்,**
**போற்றி. என் அமுதே, என நினைந்து. ஏத்திப்**
**புகழ்ந்து. அழைத்து, அலறி, என உள்ளே**
**ஆற்றுவன் ஆக; உடையவனே, எனை,**
**'ஆவ' என்று அருளாயே!**

முதல்வனே, பால்போலும் வெள்ளிய திருநீறணிந்த பெரியோனாகிய உன்னை உனது மேலான திருவருட் சத்தியோடு எதிர்ப்பட்டுத் தோன்றி



சமய இலக்கியம்

குறிப்புகள்

உண்மை அன்பர்க்கு அருள்வழி நல்கும் ஒளியான உன்னை அறவழி நில்லாத நான், வணங்கி, எனது சாவாமருந்தே யென எண்ணி வழிபட்டுத் துதித்துக் கூவியாற்றி என் நெஞ்சகத்தே ஆறுதலுடையனாகும்படி, ஐயோ வென்றிரங்கி அருள் செய்வாயாக.

குறிப்புகள்

## 10.9. தொகுத்துக் காண்போம்:

அடியார் கூட்டத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மணிவாசகர் வேண்டுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

கல்மனதையும் கசிந்துருகச் செய்யக்கூடிய வலிமை பெற்றது திருவாசகம் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் மட்டும்தான் இறைவன் அருட்காட்சி தருவான் என்பதை மணிவாசகர் பாடுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 10.10. சோதித்து அறியும் வினாக்கள்:

1. தனக்கு மட்டும் அருள்புரியாமல் இறைவன் தனித்து விடுவது நியாயமாகுமா? எனக் கேட்கும் மணிவாசகரின் மனநிலையைப் புலப்படுத்துக.
2. இறைவன் தன்னை விட்டுப் பிரிந்த நிலையை மாணிக்கவாசகர் எவ்வாறு துன்பப்பட்டுக் கூறுகின்றார்?

## 10.11. பயிற்சி வினாக்கள்:

1. எண்ணப் பதிகத்தில் மாணிக்கவாசகர் தன்னுடைய எண்ணத்தை இறைவனிடம் எவ்வாறு தெரிவிக்கின்றார்,

## 10.12. மேலும் பயில்வதற்கான நூல்

1. கா.சு.பிள்ளை, திருவாசகம் உரை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

# கூறு-11 திருவாசகம்- யாத்திரைப் பத்து

## 11.1. யாத்திரைப்பத்து-அறிமுகம்:

குறிப்புகள்

மாணிக்கவாசகர் பாடிய யாத்திரைப் பத்துப் பாடல்கள் இறைவனின் அனுபவாதீத உணர்வை வெளிப்படுத்துகின்றது. பொய்நீக்கி மெய் அன்பு கொண்டால் அவனுடைய திருவடிகளை எளிதில் அடைந்துவிடலாம் என்று இப்பதிகம் வழிகாட்டுகின்றது.

## 11.2. குறிக்கோள்கள்:

இறைவன் என்பவன் உண்மையின் வடிவமானவன் என்பதை உணர்ந்து பொய்யை நீக்கி வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

இவ்வுலக வாழ்க்கை என்பது நிலையில்லாதது என்பதை உணர்ந்து நிலையான இறைவனின் திருவடிகளைப் பற்ற வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

உள்ளத்தூய்மைதான் பக்தியின் முதற்படி என்பதை மணிவாசகர் அறிவுறுத்துவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 11.3. அன்பர்களே! அவன் கழல் புகுவோம்!

பூவார் சென்னி மன்னன், எம் புயங்கப் பெருமான், சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து, உணர்வாய் உருக்கும் வெள்ளக்கருணையினால்,
'ஆ! ஆ!' என்னப் பட்டு, அன்பாய் ஆட்பட்டீர், வந்து ஒருப்படுமின்;
போவோம்; காலம் வந்தது காண்; பொய்விட்டு, உடையான் கழல் புகவே.

மலர் நிறைந்த முடியுடைய அரசனாகிய எமது பாம்பணிந்த பெருமான், சிறியோங்களாகிய நம்மை ஓயாமல் உள்ளத்திற் புகுந்து அறிவில் அத்துவிதமாய்க்கலந்து உருகுவிக்கும் அருள்வெள்ளங் காரணமாக, இரங்கி அருள் அளிக்கப்பெற்று அன்பராய் ஆட்பட்டவர்களே வந்து ஒருங்கி சேருங்கள். நிலையாவுலகை விடுத்து, நம்மையுடையவனது திருவடியை அடைதற்குப் போவோமாக. அதற்குரிய சமயம் வந்துவிட்டது.

## 11.4. அவன் கழலையே எண்ணுவோம் :

புகவே வேண்டாம் புலன்களில் நீர்; புயங்கப் பெருமான்பூங்கழல்கள்
மிகவே நினைமின்; மிக்க எல்லாம வேண்டா; போக விடுமின்கள்;
நகவே, ஞாலத்து உள் புகுந்து, நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத் தளராது இருப்பார் தாம் தாமே.

தெளிவாக உலகத்தே போந்து நாய்போன்று (இழிவுடைய) நம்மை ஆட்கொண்ட தகுதியுடைய பெருமானை அடைவதற்குத் தளராது ஊக்கமாயிருப்பவர் தாம் (பிறபொருள் வசப்படாத) தாமாகவே இருக்கும் தம் வயமுடையவராவர். ஆதலால், ஐம்புல விடயங்களில் நீங்கள் செல்லவே கூடாது. புயங்கக் கூத்துடைய பெருமானது அழகிய திருடிவகளையே மிகுதியும் சிந்தியுங்கள். ஒழிந்தன வெல்லாம் நமக்கு வேண்டப்படா, அவற்றைப் பற்றாது அவைதாமே அகன்றொழிய விட்டு விடுங்கள்.

## 11.5. பொய் நீக்கிப் பொன் அடிக்கே செல்வோம் :

தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்;
யாம் ஆர்? எமது ஆர்? பாசம் ஆர்? என்ன மாயம்? இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும், அவன் தன் குறிப்பே
குறிக்கொண்டு,
போம்ஆறு அமைமின் பொய் நீக்கிப் புயங்கன் ஆள்வான்
பொன்னடிக்கே.

தம் வயமுடையார் தாமே தமக்கு உறவினராவர். தாமே தமக்குக் கட்டளை விதிக்கும் வகையினர் நாம் ஆர், எம்முடையது யாது, நம்மைப் பந்தித்த மலக்கட்டு யாது, இவைகளெல்லாம், என்ன மயக்கங்கள், இவை யொழியும்படி, நமது அரசனுடைய பழைய அடியாரோடு சேர்ந்து அவனது திருவுள்ளக் குறிப்பே நமது நோக்கமாகக் கொண்டு நிலையாதனவற்றை விடுத்து புயங்கக் கூத்தனாய நம்மை யாள்கின்றவனது அழகிய திருவடிக்கே போய்ச் சேருமாறு தகுதியாகுங்கள்.

## 11.6 .அவன் திருக்குறிப்பைக் கடைப்பிடிப்பீராக :

அடியார் ஆனீர் எல்லீரும், அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்து அடைந்து. கடைக் கொண்டு இருமின்
திருக்குறிப்பைச்
செடி சேர் உடலைச் செல நீக்கிச் சிவலோகத்தை நமை வைப்பான்
பொடி சேர் மேனிப் புயங்கன் தன், பூவார் கழற்கே புகவிடுமே.

அடியாராகிய நீங்கள் எல்லாரும், உலகில் விளையாடு தலைத் தூரவிட்டிடுங்கள், மணம் பொருந்திய இறைவன் திருவடியையே போய்ச் சேர்ந்து அவனது திருவுள்ளக் குறிப்பைக் கடைப்பிடித்திருங்கள். பாவம் ஏறுதற்குரிய உடம்பு ஒழியக் களைந்து சிவலோகத்திலே நம்மை அமர்த்துவனாகிய நீறணிந்த திருமேனியை யுடைய புயங்கக் கூத்துடையானது மலர் நிறைந்த திருவடிக்கே உங்கள் உள்ளத்தைச் செலுத்துங்கள்.

## 11.7. காலம் இனி இல்லை; ஒருப்படுமின் :

விடுமின் வெகுளி. வேட்கை நோய்; மிக ஓர், காலம் இனி இல்லை;

உடையான் அடிக்கீழ்ப் பெரும் சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்ற;

அடைவோம், நாம் போய்ச் சிவபுரத்துள், அணியார் கதவு அது அடையாமே;

புடைபட்டு உருகிப் போற்றுவோம், புயங்கன் ஆள்வான் புகழ்களையே.

கோபம், ஆசை முதலிய பிணிகளைக் களையுங்கள், மேன்மைப்பட வேறொரு சமயம் இல்லை. முதல்வனது திருவடிக் கீழ்ப்பெரிய அடியார் கூட்டத்துடன் போயடைவதற்கே இசையுங்கள். சிவலோகத்தின் அழகு நிறைந்த கதவுகள் அடைபடுமுன்னமே போய்ச் சேர்வோம். அதன் மருங்கு பொருந்தி, உள்ளமுருகிப் புயங்கப் பெருமானாகிய நம்மை யாள்பவனது கீர்த்திகளையே துதிப்போமாக.

## 11.8. நெஞ்சம் உருகி நிற்போம் :

புகழ்மின்; தொழுமின்; பூபிபுனைமின்; புயங்கன் தாளே புந்திவைத்திட்டு,

இகழ்மின் எல்லா அல்லலையும்; இனி, ஓர் இடையூறு அடையாமே,

திகழும் சீரார் சிவபுரத்துச் சென்று, சிவன் தாள் வணங்கி. நாம்,

நிகழும் அடியார் முன்சென்று, நெஞ்சம் உருகி. நிற்போமே.

புயங்கப் பெருமானது திருவடிகளையே புகழுங்கள், வணங்குங்கள், அவைகளுக்கே மலர் சூடுங்கள், அவைகளையே அறிவிற் பதித்து எல்லாத் துன்பங்களையும் இகழுங்கள். இனிமேல் நாம் ஒருவகையான தீங்கும் நம்மை யடையாவண்ணம், விளங்கும் புகழ் நிறைந்த சிவபுரத்துக்குப்போய்ச் சேர்ந்து அங்கே சிவபெருமான் திருவடிகளை வணங்கி. அங்கே வாழும் அன்பர்முன் போய் மனமுருகி நிற்போமாக.

## 11.9. நில்லா உலகில் நில்லோம் :

நிற்பார் நிற்க; நில்லா உலகில் நில்லோம்; இனி, நாம் செல்வோமே;

பொற்பால் ஒப்பாம் திரு மேனிப் புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே

நிற்பீர் எல்லாம், தாழாதே, நிற்கும் பரிசே, ஒருப்படுமின்;

பிற்பால் நின்று, பேழ்கணித்தால், பெறுதற்கு அரியன், பெருமானே.

நிலையில்லாத உலகிலே நிற்க விரும்புவார் நிற்பாராக. அங்கே நாம் நிற்கமாட்டோம். இனி நாம், அழகினால் தன்னையே ஒத்த திருமேனியுடைய புயங்கப் பெருமானாகிய நம்மை யாள்பவனது பொன்போன்ற திருவடிகட்கே நாம் செல்வோமாக. அவனது கொன்படி யடைதற்கே நிற்கின்றீ ரெல்லீரும், தாமதியாமல் நிற்குமுறையையே

கடைப்பிடியுங்கள். பிற்பட்ட பகுதியில் நின்று பெருமை பாராட்டினால் இறைவன் பெறுதற் கரியனாவன்.

குறிப்புகள்

## 11.10. திருக்கதவம் திறந்துள்ளது :

பெருமான் பேரானந்தத்துப் பிரியாது இருக்கப் பெற்றீர்காள்,
அருமால் உற்றுப் பின்னை நீர், அம்மா! அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம் திறந்துபோதே, சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப் புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே.

சிவபெருமானது பேரின்பம் நீங்காதிருக்கப் பெற்றீர்கள். நீர் (அதனை விடுத்துக்) கடத்தற்கரிய உலக மயக்கமுற்றுப் பிற்பாடு, துன்புற்று அம்மா வென்றலறாதே, சிவபுரத்தின் அழகிய பெருமணிகள் பதித்த திருக்கதவுகள் திறந்திருக்கும்போதே திருமாலறிய வொண்ணாத திருப்புயங்கப் பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்வோமாக.

## 11.11. பொய்யை விட்டுச் செல்வோம் :

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்;
போரில் பொலியும் வேற்கண்ணாள் பங்கன், புயங்கன், அருளமுதம்
ஆரப் பருகி ஆராத ஆர்வம் கூர அழுந்துவீர்!
போரப் புரிமின் சிவன் கழற்கே, பொய்யில் கிடந்து புரளாதே.

சிவபுரஞ் சேர்வதை யெண்ணி, உள்ளத்தைத் திருத்தமாக அமைத்து இறையடியையே நினையுங்கள். போரில் விளங்கிப் பயன்படும் வேல்போன்ற கண்ணையுடைய உமைபாகனாகிய புயங்கப் பெருமானது திருவருள் அமுதத்தை நிரம்ப உண்டு முடிவுறாத அன்பு மிகுதிப்படப் பேரின்பத்தில் ஆழ்வீர்கள். நிலையற்ற பொய்வாழ்விற் கிடந்து புரளாமல், சிவனது திருவடியையே போய்ச் சேரவிரும்புங்கள்.

## 11.12. இன்றே வந்து ஆள் ஆகாதீர் மருள்வீர்:

புரள்வார், தொழுவார், புகழ்வாராய், இன்றே வந்து. ஆளாகாதீர்,
மருள்வீர்; பின்னை, மதிப்பார் ஆர்? மதியுள் கலங்கி, மயங்குவீர்;
தெருள்வீர் ஆகில், இது செய்மின்; சிவலோகக் கோன்.
திருப்புயங்கன்
அருளார் பெறுவார், அகல்இடத்தே? அந்தோ! அந்தோ! அந்தோவே!

அன்பினாலே புரண்டு வலம் வருவாராயும், வணங்குவா ராயும் இறைவனைப் போற்றித் துதிப்பாராயும் இப்பொழுதே வந்து ஆளாகாமற் போனீராயின் பிற்பாடு, மருட்சியடைவீர், அறிவினுட் கலக்கமடைந்து மயங்குவீர்கள். உங்களை யார் மதிப்பார். (ஒருவரும் மதியார்) தெளிவடைவீராகில், ஆட்படுதலாகிய இதனைச் செய்யங்கள். சிவலோக

நாதனாகிய புயங்கப் பெருமானது திருவருளை உலகத்தே யார் பெறுதல்கூடும்.



## 11.13. தொகுத்துக் காண்போம்:

இறைவன் என்பவன் உண்மையின் வடிவமானவன் என்பதை உணர்ந்து பொய்யை நீக்கி வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

இவ்வுலக வாழ்க்கை என்பது நிலையில்லாதது என்பதை உணர்ந்து நிலையான இறைவனின் திருவடிகளைப் பற்ற வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

உள்ளத்தூய்மைதான் பக்தியின் முதற்படி என்பதை மணிவாசகர் அறிவுறுத்துவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 11.14. சோதித்து அறியும் வினாக்கள்:

1. அடியார்களின் கூட்டம் பற்றி திருவாசகம் யாது கூறுகின்றது?
2. பிரிவும் துன்பமும் பற்றி மாணிக்கவாசகர் எவ்வாறு பேசுகின்றார்?

## 11.15. பயிற்சி வினாக்கள்:

1. பொய்நீக்கி மெய் அன்பு கொண்டால் அவனுடைய திருவடிகளை எளிதில் அடைந்துவிடலாம் என்பதை மணிவாசகரின் பதிகம் கொண்டு மெய்ப்பிக்க.
2. யாத்திரைப்பத்து உரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## 11.16. மேலும் பயில்வதற்கான நூல் :

1. கா.சு.பிள்ளை, திருவாசகம் உரை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

# பிரிவு-4 சித்தர் - வள்ளலார் - மஸ்தான் சாகிபு - இரட்சண்ய மனோகரம

## கூறு-12 சித்தர் - குதம்பைச் சித்தர்

### 12.1. குதம்பைச் சித்தர் - அறிமுகம் :

"எங்கும் நிறைந்தே இருக்கின்ற சோதியை
அங்கத்துள் பார்ப்பாயடி குதம்பாய்
அங்கத்துள் பார்ப்பாயடி"

என்று அழகாகப் பாடியவர் குதம்பைச் சித்தர். கடவுளாகிய சோதி எங்கும் நிறைந்தே இருந்தாலும், அந்தச் சோதியாகிய இறைவனை நம் உடம்பிற்குள்தான் பார்க்க வேண்டும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

குதம்பை என்பது பெண் சிறுமியர் அணியும் ஒரு காதணி. அந்த அணிகலனை அணிந்த பெண்ணை முன்னிலைப்படுத்தி இவர் தம் பாடலை இயற்றியுள்ளதால் இவர் குதம்பைச் சித்தர் எனப்பட்டார். இவர் இயற்றிய பாடல்தோறும் 'குதம்பாய்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

யாதவக் குலத்தில் கோபாலன் - முத்தம்மாள் இணையருக்கு ஆடி மாத விசாக நட்சத்திரத்தன்று ஓர் ஆண் பிறந்தது. பல ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாமல் வாடிய பெற்றோர், அந்தக் குழந்தையின் முகம் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர். குழந்தை ஆணாக இருந்தாலும், அதனிடம் பெண்மையின் சாயல் நிறைந்திருப்பதை முத்தம்மாள் கவனித்தாள். அதனால் குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணுக்குச் செய்யும் அலங்காரங்களைச் செய்து அழகு பார்த்தாள் முத்தம்மாள்.

அந்தக் குழந்தையின் காதுகளில் குதம்பை என்னும் பெண் அணிகலனை அணிவித்து, அவை மெல்ல அசைந்தாடும் அழகில் மயங்கி மனம் மகிழ்ந்தாள் முத்தம்மாள். பெற்றோர் இருவரும் அந்தக் குழந்தையைக் "குதம்பை.........குதம்பை" என்று வாயார அழைத்து மகிழ்ந்தனர். உறவினர்கள் அனைவரும் அக்குழந்தையைக் "குதம்பை.........குதம்பை" என்றே அழைக்கத் தொடங்கினர்.

குதம்பை, இளமைப் பருவம் எய்தினான். ஒருநாள் அதிகாலையில் எழுந்து, நன்னீராடி கோயிலுக்குச் சென்றான். அப்பொழுது ஒரு முதியவர் அங்கு வந்தார். அவரை வணங்கி நின்றான் குதம்பை. அப்பொழுது அந்த முதியவர் குதம்பையரைப் பார்த்து, "குதம்பை...! சென்ற பிறவியில் நீ பிறவிப் பெரும்பயனை அடைவதற்காகக் கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தாய். ஆனால், உனது தவம் கைகூடவில்லை. அதற்குள் உன் பிறவி முடிந்து விட்டது. அந்தத் தவத்தின் மேன்மைதான் இப்போது என்னை உன்னிடம்

ஈர்த்திருக்கிறது. இந்தப் பிறவியில் அந்தத் தவ வாழ்வைத் தொடர்ந்து பரிபூரணமடைவாய்!" என்று பேசி முடித்ததும் சட்டென மறைந்தார் முதியவர் வேடத்தில் வந்த சிவபெருமான்.

அன்றிரவே யாருக்கும் தெரியாமல் பக்கத்திலிருந்த அத்திமரக் காட்டுக்குள் புகுந்தார் குதம்பைச் சித்தர். அங்கிருந்தபடியே பாடல்கள் எழுதத் தொடங்கினார். குதம்பைச் சித்தர் பாடிய பாடல்கள் கடவுள் வாழ்த்து நீங்க 229 கண்ணிகள் ஆகும். இவர் மயிலாடுதுறையில் சமாதியானார் என்று கூறுவர்.

## 12.2. குறிக்கோள்கள்:

குதம்பைச் சித்தரின் பாடல்களில் உண்மையான ஞானி யார் என்பது இனங்காட்டப்பட்டுள்ள தன்மையைத் தெரிந்து கொள்வீர்கள்.

சித்தர்களின் யோக ஞானத்தால் அனைத்தையும் பெற்றுவிட முடியும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

பொய்மையான புறவழிபாடுகளால் எந்த நன்மையும் இல்லை என்பதையும் குதம்பைச் சித்தர் தெளிவாக எடுத்துரைத்துதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 12.3. தவத்தின் சிறப்பைப் பாடுதல்:

1. **வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்**

   **பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்**

   **பட்டயம் ஏதுக்கடி?**

பல ஆண்டுகளாகக் கடுந்தவம் புரிந்து ஞானம் பெற்ற பின், ஆகாயம் என்னும் வெட்ட வெளிதான் (சிதாகாசம்) உண்மையானது, என்ற முடிவுக்கு வந்து அந்தச் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்ட ஞானிக்குத் தாமிரசாசனம் பட்டயம் எதற்காக? காதணி அணிந்த பெண்ணே! பட்டயம் எதற்கு?

2. **மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்ஞானிக்கு**

   **கற்பங்கள் ஏதுக்கடி – குதம்பாய்**

   **கற்பங்கள் ஏதுக்கடி?**

உண்மையான பொருள் இது தான் எனக் கண்டு, பிறப்பு, இறப்பு அற்று விளங்கும் உண்மையான ஞானிக்கு, இறக்காமல் இருக்கப் பயன்படும் காய கற்பம் எதற்காக? காதணி அணிந்த பெண்ணே! கற்பங்கள் எதற்கு? கற்பம் என்பது காயகற்பம் என்ற மருந்தாகும். அதை உண்டவர்கள் இளமையுடனும், நோயின்றியும், நீண்டகாலம் வாழலாம்.

குறிப்புகள்

யோகிக்கு இந்தக் காயகற்பம் தேவையில்லை. யோகியானவர் தம்முடைய அட்டாங்க யோகத்தினால் அட்டமாசித்திகளையும், சிவசாயுச்சியமும் பெற்று விடுவதால் அவருக்கு இந்தக் காயகற்பம் தேவையில்லை என்கிறார் குதம்பைச் சித்தர்.

3. **காணாமற் கண்டு கருத்தோடு இருப்போர்க்கு**

**வீணாசை ஏதுக்கடி – குதம்பாய்**

**வீணாசை ஏதுக்கடி?**

## 12.4. ஆசையை நீக்குக:

ஒன்றைக் காணாமலேயே, தன் ஞானக்கண்ணால் கண்டு, நம்பிக்கையுடன், ஆசையின்றி இருப்பவருக்கு வீணான ஆசை(பற்று) எதற்கு? காதணி அணிந்த பெண்ணே! வீணாசை எதற்கடி?

4. **வஞ்சகம் அற்று வழிதன்னைக் கண்டோர்க்கு**

**சஞ்சலம் ஏதுக்கடி – குதம்பாய்**

**சஞ்சலம் ஏதுக்கடி?**

ஏமாற்றம் இன்றி வாழும் வழிமுறையை அறிந்தவர்க்கு, துயரம் எதற்காக? காதணி அணிந்த பெண்ணே! துயரம் எதற்கு?

5. **ஆதாரமான அடிமுடி கண்டோர்க்கு**

**வாதாட்டம் ஏதுக்கடி – குதம்பாய்**

**வாதாட்டம் ஏதுக்கடி?**

ஆதாரமான மூலத்தையும், சிதாகாசத்தையும் கண்டறிந்தவர்களுக்குச் சொற்போர் எதற்கு? காதணி அணிந்தவளே! சொற்போர் எதற்கு?

6. **நித்திரை கெட்டு நினைவோடு இருப்போர்க்கு**

**முத்திரை ஏதுக்கடி – குதம்பாய்**

**முத்திரை ஏதுக்கடி?**

தூக்கத்தை விட்டு விழிப்புடன் இருப்பவர்க்கு முத்திரைகளான பைரவி - மூக்கு முனை, சாம்பவி – நெற்றிக்கண், கேசரி – உச்சிக்கண் ஆகிய முத்திரைகள் எதற்கு? காதணி அணிந்த பெண்ணே! முத்திரை எதற்கு? யோகிகள் மூக்கு முனையில் கவனத்தைச் செலுத்தி மனத்தை ஒரே நிலையில் நிற்கச் செய்வார்கள். இது ஒரு திரை நீக்கமாகும். நெற்றிக் கண்ணான ஆக்ஞாவிலும், உச்சிக் கண்ணான துரியத்திலும் உள்ள திரைகளைத் தங்களது யோக சாதனையால் நீக்கிக் கொள்வார்கள்.

7. **தந்திரமான தலந்தன்னில் நிற்போர்க்கு**

**மந்திரம் ஏதுக்கடி – குதம்பாய்**

**மந்திரம் ஏதுக்கடி?**

## 12.5. எது ஞானம் என உணர்தல்:

ஞானம் தரும் நூல்களைக் கற்று, அதன் வழியில் நடப்போர்க்கு மந்திரம் எதற்கு? காதணி அணிந்தவளே! மந்திரம் எதற்கு?

8. சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு

உத்தியம் ஏதுக்கடி – குதம்பாய்

உத்தியம் ஏதுக்கடி?

உண்மையான தவத்தில் இருப்பவர்க்கு யாகம் எதற்கு? காதணி அணிந்தவளே! யாகம் எதற்கு? சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு அந்தத் தவமே மேலானதாகும். அவர்களுக்கு யாகங்களால் எந்தப் பயனும் இல்லை என்பது கருத்து.

9. நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு

வாட்டங்கள் ஏதுக்கடி – குதம்பாய்

வாட்டங்கள் ஏதுக்கடி?

## 12.6. உண்மையான ஞானி என்பவர் யார்?

குறிக்கோளுடன் சிகாரமாகிய உருத்திரனைச் சேர்வோர்க்கு வருத்தம் எதற்கு? காதணி அணிந்தவளே! வருத்தங்கள் எதற்கு?

10. முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்

சத்தங்கள் ஏதுக்கடி – குதம்பாய்

சத்தங்கள் ஏதுக்கடி?

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் கற்றும் துதித்தும், இசைத்தும், ஆடியும் இறைவனுடன் இணைந்த உண்மையான ஞானிக்கு முறையீடு ஆகிய கூப்பாடு எதற்கு? காதணி அணிந்தவளே! சத்தங்கள் எதற்கு?

11. உச்சிக்கு மேற்சென்று உயர்வெளி கண்டோர்க்கு

இச்சிப்பிங்கு ஏதுக்கடி – குதம்பாய்

இச்சிப்பிங்கு ஏதுக்கடி?

தலை உச்சியாகிய துரியாதீதத்திற்கு மேலே உள்ள சிதாகாசம் கண்ட சித்தருக்கு, ஆசையாகிய விருப்பம் எதற்கு? காதணி அணிந்தவளே! இச்சிப்பு எதற்கு? ஆறு யோக ஆதாரங்களையும் கடந்து அதற்கப்பால் துரியமும் கடந்து உயர்வெளியான சிதாகாசம் அடைந்த யோகி,

இறைவனைச் சேர்ந்தவனாகின்றான். இவ்வாறு இணைந்தவனுக்கு உலகப்பற்று நீங்கும்.

12. வேகாமல் வெந்து வெளியினைக் கண்டோர்க்கு

மோகாந்தம் ஏதுக்கடி – குதம்பாய்

மோகாந்தம் ஏதுக்கடி?

## 12.7. பற்று அற்று இருத்தலே சிறப்பு:

மூலாக்கினியால் வேகாமலே வெந்து, எல்லாப் பற்றும் அற்றவர்களுக்கு, மோகம் உண்டாக்கும் அழகு எதற்கு? காதணி அணிந்தவளே! மோகாந்தம் எதற்கு? சுழுமுனை நாடி அக்கினி மண்டலம் ஆகும். இதன் மூலம் யோகத்தில் ஈடுபாடு கொள்பவர்கள் மூலாக்கினியால் தாக்கப்படுகின்றனர். இவர்களுக்குப் பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்ற மூன்று ஆசைகளும் நீங்கி, எதன் மீதும் பற்று இருக்காது. அப்படிப்பட்டவர்கள் தம்மை பிறர் விரும்பும்படி வீண் வேடம் தரிப்பது எதற்காக?

13. சாகாமல் தாண்டி தனிவழி போவோர்க்கு

ஏகாந்தம் ஏதுக்கடி – குதம்பாய்

ஏகாந்தம் ஏதுக்கடி?

இறந்து போகாமல் இருக்கும் வழியில் செல்பவர்க்கு, தனிமை எதற்கு? காதணி அணிந்தவளே! தனிமை எதற்கு? சாகாமல் இருக்கும் வழியில் செல்வதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழியில் சென்று, காயகற்பம் என்னும் யோகமருந்தை உண்ண வேண்டும்.

14. அந்தரம் தன்னில் அசைந்தாடும் முத்தர்க்குத்

தந்திரம் ஏதுக்கடி – குதம்பாய்

தந்திரம் ஏதுக்கடி?

## 12.8. முத்தி பெற்றவர்களின் சிறப்பு:

ஆகாயத்திலே அசைந்தாடும் முத்தி பெற்றவர்க்கு ஞானநூல்கள் எதற்கு? காதணி அணிந்தவளே! ஞானநூல்கள் எதற்கு?

15. ஆனந்தம் பொங்கி அறிவோடு இருப்போர்க்கு

ஞானந்தான் ஏதுக்கடி? குதம்பாய்

ஞானந்தான் ஏதுக்கடி?

ஆனந்தம் பொங்கி, அனைத்து அறிவும் நிரம்பப் பெற்ற ஞானிக்கு, இறைவனை வழிபடும் மார்க்கம் எதற்கு? காதணி அணிந்தவளே! ஞானம்தான் எதற்கு?

16. சித்திரக் கூடத்தைத் தினந்தினம் காண்போர்க்குப்

பத்திரம் ஏதுக்கடி – குதம்பாய்

பத்திரம் ஏதுக்கடி?

## 12.9. புறப்பூசை வழிபாடுகள் தேவையில்லை:

குறிப்புகள்

இறைவனை யோகநிலையில் தன்னுள் நாள்தோறும் காண்பவர்க்கு, இலையை அர்ச்சனைப் பொருளாகப் பயன்படுத்திச் செய்யும் புறப்பூசை எதற்கு? காதணி அணிந்தவளே! புறப்பூசை எதற்கு?

17. முக்கோணம் தன்னில் முளைத்த மெய்ஞ்ஞானிக்கு

சட்கோணம் ஏதுக்கடி – குதம்பாய்

சட்கோணம் ஏதுக்கடி?

முக்கோணமாகிய மூலாதாரத்தில் முளைத்த உண்மை ஞானிக்கு, அறுகோணச் சக்கரமாகிய அநாகதம் எதற்கு? காதணி அணிந்தவளே! சட்கோணம் எதற்கு? மூலாதாரச் சக்கரம் முக்கோண வடிவம் கொண்டது. அதிலிருந்தே ஞானி உருவாகின்றான். அநாகதச் சக்கரம் ஆறு கோணங்களை உடையது. முக்கோணத்தில் உருவான அந்த ஞானிக்கு, ஆறுகோணம் தேவையில்லை.

18. அட்டதிக்கெல்லாம் அசைந்தாடும் நாதர்க்கு

நட்டணை ஏதுக்கடி? – குதம்பாய்

நட்டணை ஏதுக்கடி?

எட்டுத் திசைகளிலும் அசைந்தாடக் கூடிய இறைவனுக்கு, நடிப்பு எதற்கு? காதணி அணிந்தவளே! நட்டணை எதற்கு? இறைவன் எல்லாத் திசைகளிலும் இருக்கிறான். அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவனே நாடகமாடும் கூத்தாடி. அவனுக்கு உன் நடிப்பு எதற்கு?

19. முக்திபெற்று உள்ளம் முயங்குமெய்ஞ் ஞானிக்குப்

பத்தியம் ஏதுக்கடி – குதம்பாய்

பத்தியம் ஏதுக்கடி?

முக்தி அடைந்து உள்ளம் தழுவும் உண்மையான ஞானிக்கு, பத்தியமாகிய பாட்டு எதற்கு? காதணி அணிந்தவளே! பாட்டு எதற்கு?

20. அல்லலை நீக்கி அறிவோடு இருப்போர்க்கு

பல்லாக்கு ஏதுக்கடி – குதம்பாய்

பல்லாக்கு ஏதுக்கடி?

துயரங்களை நீக்கி, ஞானத்தோடு இருப்பவர்க்கு, பல்லாக்கு ஏதுக்கடி? காதணி அணிந்தவளே! பல்லாக்கு ஏதுக்கடி?

21. அட்டாங்க யோகம் அறிந்த மெய்ஞ் ஞானிக்கு

முட்டாங்கம் ஏதுக்கடி – குதம்பாய்

முட்டாங்கம் ஏதுக்கடி?

## 12.10. ராஜயோகம் அறிந்திருத்தல்:

அட்டாங்க யோகம் என்னும் ராஜயோகம் அறிந்த உண்மை ஞானிக்குப் போர்த்திக் கொள்ளும் போர்வை எதற்கு? காதணி அணிந்தவளே! முட்டாங்கம் எதற்கு?

22. வேகம் அடக்கி விளங்கு மெய்ஞ் ஞானிக்கு

யோகம்தான் ஏதுக்கடி – குதம்பாய்

யோகம்தான் ஏதுக்கடி?

மனத்தின் வேகத்தை நிலை நிறுத்திய உண்மை ஞானிக்கு இறைவனை மனத்தால் வழிபடும் மார்க்கம் எதற்கு? காதணி அணிந்தவளே! யோகம் எதற்கு?

23. மாத்தானை வென்று மலைமேல் இருப்பபோர்க்குப்

பூத்தானம் ஏதுக்கடி? குதம்பாய்

பூத்தானம் ஏதுக்கடி?

பெரியதாகிய ஆசையை வென்று, மலைமேல் இருப்போர்க்குப் புதுமை எதற்கு? காதணி அணிந்தவளே! புதுமை எதற்கு?

24. செத்தாரைப் போலத் திரியும் மெய்ஞ் ஞானிக்கு

கைத்தாளம் ஏதுக்கடி – குதம்பாய்

கைத்தாளம் ஏதுக்கடி?

இறந்தவரைப் போல் (மனம் இன்றி) திரியும் உண்மை ஞானிக்கு, கையால் கொட்டும் தாளம் எதற்கு? காதணி அணிந்தவளே! கைத்தாளம் எதற்கு?

25. கண்டாரை நோக்கிக் கருத்தோடு இருப்போர்க்குக்

கொண்டாட்டம் ஏதுக்கடி – குதம்பாய்

கொண்டாட்டம் ஏதுக்கடி?

உண்டாக்கிய இறைவனை நோக்கி ஒரு மனதுடன் இருப்பவர்க்கு, கொண்டாடும் மகிழ்ச்சி எதற்கு? காதணி அணிந்தவளே! கொண்டாட்டம் எதற்கு?

26. காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்

கோலங்கள் ஏதுக்கடி – குதம்பாய்

கோலங்கள் ஏதுக்கடி?



## 12.11. அகங்காரம் நீக்கியவர் ஞானி:

இயமனை வென்ற ஞானிக்கு அலங்காரம் எதற்கு? காதணி அணிந்தவளே! அலங்காரம் எதற்கு? இயமனை வென்ற ஞானிகளுக்கு அலங்காரம் செய்து அழகாக உலவும் கோலங்கள் தேவையில்லை என்பது கருத்து.



27. வெண்காயம் உண்டு மிளகுண்டு சுக்குண்டு

உண்காயம் ஏதுக்கடி – குதம்பாய்

உண்காயம் ஏதுக்கடி?

வெண்காயம், மிளகு, சுக்கு ஆகியவை இருக்கும்போது, உட்கொள்ள வேறு மருந்து எதற்காக? காதணி அணிந்தவளே! உண்ணும் வேறு மருந்து எதற்கு?

28. மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்

தேங்காய்ப்பால் ஏதுக்கடி – குதம்பாய்

தேங்காய்ப்பால் ஏதுக்கடி?

சித்தர்களின் கடினமான யோகப் பயிற்சியினால் ஐம்புலன்களையும் அடக்கிய ஒரு ஞானிக்கு, மலைமுகடாகிய தலை உச்சியிலே மாங்காய் வடிவத்திலுள்ள சுரப்பியிலிருந்து ஞானப்பால் சுரக்கிறது. இந்த ஞானப்பால் பசியையும், ஆசையையும் ஒருமித்து அடக்கி விடுகிறது. பின்பு ஆடம்பர உணவாகிய தேங்காயின் பால் வேண்டுவது இல்லை. காதணி அணிந்தவளே! தேங்காய்ப்பால் ஏதுக்கடி?

29. பட்டணம் சுற்றிப் பகலே திரிவோர்க்கு

முட்டாக்கு ஏதுக்கடி – குதம்பாய்

முட்டாக்கு ஏதுக்கடி?

பட்டணத்தைச் சுற்றிப் பகலில் திரிபவர்க்குத் தலையில் மூடும் முக்காடு எதற்கு? காதணி அணிந்தவளே! முக்காடு எதற்கு?

30. தாவார மில்லை தனக்கொரு வீடில்லை

தேவாரம் ஏதுக்கடி - குதம்பாய்

தேவாரம் ஏதுக்கடி?

இறைவழிபாட்டில் உள்ளத் தூய்மைதான் முதன்மையானது. அதை விட்டுவிட்டு புறவழிபாடுகளால் எந்தப் பயனுமில்லை.

31. தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்

பின்னாசை ஏதுக்கடி – குதம்பாய்

பின்னாசை ஏதுக்கடி?



ஐம்புலன் ஆசைகளை நீக்கி ஞானத்தால் தன்னையறிந்து தலைவனாகிய இறைவனடி சேர்ந்தவர்க்குப் பின்பு எந்த ஆசையுமில்லை.

32. பத்தாவுந் தானும் பதியோ டிருப்போர்க்கு

உத்தாரம் ஏதுக்கடி – குதம்பாய்

உத்தாரம் ஏதுக்கடி?

இறைவனோடு இரண்டறக் கலந்த பின்பு அந்த உள்ளத்தை யாருடைய கட்டளையும் கட்டுப்படுத்தாது.

## 12.12. தொகுத்துக் காண்போம் :

குதம்பைச் சித்தரின் பாடல்களில் உண்மையான ஞானி யார் என்பது இனங்காட்டப்பட்டுள்ள தன்மையைத் தெரிந்து கொண்டீர்கள்.

சித்தர்களின் யோக ஞானத்தால் அனைத்தையும் பெற்றுவிட முடியும் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

பொய்மையான புறவழிபாடுகளால் எந்த நன்மையும் இல்லை என்பதையும் குதம்பைச் சித்தர் தெளிவாக எடுத்துரைத்துதைத் தெரிந்து கொண்டீர்கள்.

## 12.13. சோதித்து அறியும் வினாக்கள்:

1. தவத்தின் மேன்மையை குதம்பைச் சித்தர் எவ்வாறு காட்டுகின்றார்?
2. ஞானத்தின் தன்மையை குதம்பைச் சித்தர் எவ்வாறு அடையாளம் காட்டுகின்றார்?
3. பற்றறுத்தலைப் பற்றி குதம்பைச் சித்தர் யாது கூறுகின்றார்?

## 12.14. பயிற்சி வினாக்கள்:

1. குதம்பைச் சித்தரின் பாடல்கள் உணர்த்தும் தத்துவத்தைப் புலப்படுத்துக.
2. ஞானத்தையும் வாழ்க்கை முறைகளையும் குதம்பைச் சித்தர் பாடல்கள் எவ்விதம் ஒப்பிட்டுக் காட்டுகின்றன?

## 12.15. மேலும் பயில்வதற்கான நூல் :


1. ஆசிரியர் குழு, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

# கூறு-13 13.1. சிவப்பிரகாசர் - சோணசைல மாலை (முதல் 30 பாடல்கள்) இராமலிங்க வள்ளலார் - தெய்வமணிமாலை

குறிப்புகள்

### 13.1.1. சோணசைல மாலை மற்றும் தெய்வமணிமாலை – அறிமுகம்:

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த அற்புதமான பனுவல் சோணசைல மாலையாகும். சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகிய மாலை கொண்டு திருவண்ணாமலைத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனைப் பாடுவதாக இம்மாலை அமைந்துள்ளது. பஞ்சபூதத் திருத்தலங்களில் அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலையில் சிவபெருமானே மலையாகக் காட்சி தருகின்றார். திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதருக்கு இறைவன் காட்சி கொடுத்து ஏற்றுக் கொண்ட தலமாகவும், பிரம்மனும், திருமாலும் சிவபெருமானின் முடியையும் திருவடியையும் தேடிய அற்புதம் நிகழ்ந்த தலமாகவும் விளங்குகின்றது.

வள்ளற்பெருமான் வழிபட்ட திருக்கோயில்களில் திருவொற்றியூர்க் கடவுளும், திருத்தணிப் பெருமானும், கந்தகோட்டத்து முருகனும் மிகவும் பாடவைத்த கடவுளாவர். கந்தகோட்டத்து முருகப் பெருமான் மேல் பாடிய நெடியவனமான பாடல்களே இங்கே ‘தெய்வமணி மாலை’ என்னும் பெயர் பெறுகின்றது. தெய்வம் என்னும் சொல் ஒளியைக் குறிக்கும். எனவே, ஒளியில் தோன்றிய முருகன் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். முப்பத்தொரு விருத்தப் பாடல்களும் அவருக்கு ஒரு மாலையாகின்றது.

முழுமுதற் கடவுளான செம்பொருட் சிவமே அன்புருவான ஒளியிற் பிறந்த முருகன் என்ற உண்மையை உணர்த்துதல் போன்று ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்,

**“தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே”**

என்ற பாடல் அடி அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். பாடல்களிலே இடம்பெற்றுள்ள கருத்துகள், இறைவியலையும் இறையன்பியலையும் உலக உண்மையியலான தத்துவங்களையும் நமக்குப் பாடமாகக் கற்பிக்கின்றன.

### 13.1.2. குறிக்கோள்கள்:

சோணசைல மாலையில் சிவப்பிரகாசர் திருவண்ணாமலைத் திருத்தலத்தின் சிறப்பினைப் புகழ்வதைத் தெரிந்து கொள்வீர்கள்.

உடம்பினை நீக்கி இறையருளைப் பெறுதல் குறித்தும், ஆணவமல ஒடுக்கம் குறித்தும் தெரிந்து கொள்வீர்கள்.

அருட்சோதி வடிவமாகிய அண்ணாமலை ஈசனை வணங்கினால் பிறவி வினை கழிந்துபோகும் என்றும், எமபயம் நீக்கும் என்றும் உறுதியாகத் தெரிந்து கொள்வீர்கள்.

இப்பூவுலகில் நல்லவர்களோடு இணைந்து இருக்கும்போது நல்லனவும், தீயவர்களோடு சேர்ந்திருக்கையில் தீயனவும் வந்து சேர்ந்துவிடும் ஆதலால் நல்ல அடியார்களோடு சேர்ந்திருக்கும் பாக்கியத்தை இறைவனிடம் வள்ளலார் வேண்டுவதை அறிந்து கொள்வீர்கள்.

கலங்கமில்லாத தூயமனம் வேண்டும் என்றும், குற்றமே செய்யாத குணமான வாழ்க்கை வேண்டும் என்றும், இறைவனை எப்போதும் பாடிக் கொண்டே இருக்கும் பாடும்பணி கிடைக்க வேண்டும் என்றும் பாடுவதை அறிந்து கொள்வீர்கள்.

அலைபாயும் மனதைக் கட்டுக்குள் கொண்டுவர இறையருளைக் கேட்கின்றார். பழவினைகளைத் தீர்க்கும் இறைனை நம்பிக்கையுடன் வழிபட்டால் உய்திபெற முடியும் என்பதை இம்மாலை இலக்கியம் நமக்கு எடுத்துரைப்பதை அறிந்து கொள்வீர்கள்.

**காப்பு**

சதுரனெழிற் சோண லைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங் - குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

## 13.1..3. கருத்து விளக்கம்:

1. அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா
   வன்றியென் கவியுநின் றனக்காம்
   பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற்
   பாணிமா னொலியுமேற் றிலையோ
   விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
   வெயிலொரு புடையுற வொருபால்
   தண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண
   சைலனே கைலைநா யகனே.

## 13.1.4. சமயக்குரவர்களால் பாடப்பட்ட பெருமை:

வானமளாவிய திருமுடியோடு வடக்கில உள்ள மேருவினைப் போல, சூரியநேத்திரம் ஒருபால் வெயிலை வீசவும் மற்றொபால் சந்திநேத்திரம் தண்ணிய சந்திரிகையை வீசவும், வளர்ந்தோங்கிய சோணசைல வடிவரே! கைலைமலைக்கு நாயகரே! பெருமைவாய்ந்த மிக்க புகழினையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்திநாயனார் ஆகிய சமய குரவர்கள் மூவரும், தேவரீருக்கு

அணிந்த அரிய திருப்பாடல்களேயன்றி எனது புன்கவியும் தேவரீருக்கு அங்கீகாரமாகும் இருவர்களுடைய பண்ணமைந்த இசையையேற்கும் திருச்செவியில் உமது திருக்கரத்தமைத்தமானின் கொடூரமான இசையையும் அங்கீரித்திலீரோ? (இவ்வேதுவினால்)

2. துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந்

துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்

உவப்புட னிலைத்து மரிக்குமோர் பதியு

மொக்குமோ நினைக்குநின் னகரைப்

பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்

படர்பவர் திகைப்பற நோக்கித்

தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண

சைலனே கைலைநா யகனே.

## 13.1.5. சிவத்தலங்களில் சிறப்புப் பெற்ற திருவண்ணாமலை:

பிறப்பென்னும் கடலைத்தாண்டி முத்தியென்னும் அழகிய கரையின்கண் அடைய விரும்புவோர், அங்ஙனம் கடக்குங்கால் நிகழும் கலக்கமற நோக்கிக்கொண்டு, தவமென்னும் மரக்கலத்தை நடத்துதற்கே உயர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, பின் சரீரம் வாராத நிலைமையளிக்கும் தகைமை அறிந்து அச்சரீரம் ஒழிதற்பொருட்டுப் பிறக்க விரும்பும் திருவாரூரும், பின்னும் பிறவித் துயரமுறாதபடி அடைந்து தரிசித்தற்குரிய திருச்சிற்றம்பலமும், மகிழ்வுடன் வசித்து இறத்தற்குரியதொரு காசிப்பதியும், தியானிக்கத்தக்க நினது நகரை நிகர்க்குமோ? நிகராகாது.

3. நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற

னிலையுளே னவைதுரந் திடுமுன்

வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி

வந்தன னின்குறிப் பறியேன்

ஆங்குறை மதியே தாங்கியென் றுலக

மறைகுறை யறநிறை மதியுந்

தாங்கிய முடியோ டோங்கிய

சோண சைலனே கைலைநா யகனே.

## 13.1.6. உடம்பினை நீக்கி இறையருளில் கலக்க விரும்புதல்:

குறைந்த பிறைமதியையே சூடினவரென்று உலகத்தோர் கூறும் குறைவு நீங்க, முடியை உடையராய் ஓங்கி விளங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, நீங்கற்கரிய துயரினைச் செய்யாநின்ற வாத பித்த சிலேஷ்மங்களின் இடமாகிய சரீரத்திலிருக்கும் அம்மூன்றும் என்னைத்

துரத்துதற்கு முன்னரே, முத்தியெனப்படும் உம்முடைய தனிவீட்டினைச் சுதந்திரமாகப் பெற்று அதில் நிலைபேறாக வசிக்கக் காதலித்தடைந்தேன், தேவரீர் திருவுள்ளம் எங்ஙனமோ? உணரேன்.

குறிப்புகள்

4. கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங்
கன்மனக் கொடியனுக் கென்னீ
துனிமலை பிறவி தவிர்த்தனை யெனநிற்
சுளிபவ ரிலையெனக் கிரங்காய்
பனிமலை கதிர்வந் துறநிலை யாடி
பயின்றபீ டிகையென வுதயத்
தனிமலை யிருப்ப வளர்ந்தெழுஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

## 13.1.7. சிற்றின்ப ஆசைகளை நீக்கிப் பேரின்பம் காட்டுவாய்:

பனியைப் போக்காநின்ற சூரியன் உதயமலையில் தோன்றுங்கால் அம்மலை நிலைக்கண்ணாடி அமைத்து வைத்த பீடம்போலக் குணதிசையில் எதிர்நிற்க, இறைமைபூண்டு ஓங்கி விளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, கோவைக் கனியையுங் கீழ்ப்படுத்தும் சிவந்த வாயினையுடைய மங்கையர்பொருட்டு வருந்திநிற்கும் கொடியவனுக்கு, துன்பத்தைக் கொண்ட பிறப்பினைத் தேவரீர் யாது காரணத்தால் நீக்கியருளினீரென்று உம்மைச் சினப்பவர் இல்லை ஆகையால் எனக்கு அருள்புரிவீராக.

5. சுடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித்
துயர்ந்துநின் றலமரு மனநின்
நடவில் சரண பங்கய நினைந்து
நைந்துநைந் துருகுநா ளுளதோ
மடலவிழ் மரைமாட் டெதினென வருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.8. என் கல்மனம் உருகவில்லையே:

இதழ்விரிந்த செந்தாமரையினருகே அன்னந்தங்கி நின்றாற்போல, கார்த்திகை தீபமானது தனதருகே சந்திரனிருக்கும்படி விசாலித்த திருமுடியிலே விளங்கும் வண்ணம் வளர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, காந்திபெற்ற இலை வடிவமைத்த நீண்ட வேல்போலும் கருங்கண்களை வாய்ந்த மகளிர்கள் மயலால் உருகி. துயரடைந்திருந்த என் மனமானது, நடனஞ்செய்யாநின்ற தேவரீருடைய செந்தாமரை

மலர்போலும் திருவடிகளைப் பலகாம் நினைந்து குழைந்து உருகுங் காலமும் உளதோ?

6. அருங்கவி வாத வூரனே முதலோ
ரன்பிலே மென்றது வேண்டி
இரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா
னியம்பலே மெய்யெனக் கருளாய்
கருங்கட முமிழு மீங்கவுட் பனைக்கைக்
கரியுரிக் கஞ்சுகங் கடுப்பத்
தரங்கமுண் டெழுகார் முகில்பயில் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.9. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும்:

கரிய மதசலம் பொழியும் குளிரிந்த கன்னங்களையும் பனைபோலுந் துதிக்கையையும் உடைய யானைச் சட்டையை மலையுருக்கொண்ட இப்பொழுதும் அணிந்திருத்தல் அலைகளையுடைய சமுத்திர நீரைப்பருகி யெழுந்த கரிய மேகங்கள் படிகின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, திருவாசகம் திருக்கோவை யாரென்னும் அரிய திருப்பாடல்களை அருளிய திருவாதவூரில் அவதரித்த மாணிக்கவாசக சுவாமிகளாதியோர், தேவரீரிடத்தே பத்தியின்மை உடையோமென்று அது தந்தளிக்கப் பிரார்த்தித்து வருந்தல் யதார்த்தமன்று, பகத்தியின்மையுடையேனென அடியேன் விண்ணப்பித்தலே சத்தியமாகையால் அடியேனுக்கு அப்பத்தியை அருள்வீராக.

7. புரத்துறு மவுணக் குழாமும்வண் டிசைகூர்
பூங்கணை மதனுமுன் பெறுநின்
சிரித்த வண் ணகையு நுதல்விழி நோக்குஞ்
சிறியனே னிருண்மலம் பெறுமோ
கருத்தினுங் கருத வரியநுண் ணியனென்
கடனற வுலகெலாங் காண்பான்
தரித்ததி தூல வடிவறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.10. ஆணவ மலம் ஒடுங்க வேண்டுதல்:

கருத்தாலும் கருதற்கரிய சிற்றுரவனென்று கூறும் முறைமை நீங்கும்படி உலகமுற்றும் எளிமையிற்கண்டு தரிசிக்கும் வண்ணம், மிகப்பருத்த திருவுருவைக் கொண்டு விளங்கும் சோணசைலரே!

கைலைநாயகரே! முந்புரவாசிகளான அவுணர்கள் கூட்டமும் வண்டுகள் இசைபாடும் புட்பாணங்களை ஏந்திய மன்மதனும் முன்னே தேவரீரிடமாகப் பெற்ற. விளக்கமமைந்த வெண்முறுவலையும் நெற்றிக்கண் பார்வையையும் சிறியேனது இருள்மயமான ஆணவமலம் பெறுமா?

8. ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ்

சமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை
தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றனைநின்
றிருவடிக் கண்பனாக் கிலையே
கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவ ரகத்திரு ளனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.11. விசத்தை உண்டு தேவர்களைக் காத்த அருள்செயல்:

கார்த்திகை தீபத்தை அழகிய முடியிலே தாங்கி. அத்தீபத்தையும் அதனைத் தாங்கிய தேவரீரையும் உயர்ந்தோங்கியிலகும் சோணசைலரே! கைலைநாயகரே!, முழங்கி எழுகின்ற அலைகள் மடங்கிவீசும் கடலில் தோன்றிய ஆலகாலத்தை, திருவமுதாகக் கொண்டருளிய பெரும்புகழ்ச்சியின் தனிமையை நீக்கத் திருவுளத்தே சிந்தித்து, பயனற்றவனாகிய என்னை நினது திருவடிக்கு அடிமையாக்கிக் கொண்டீரில்லையே!

9. தொடையுடைத் திரடோ ணமன்புறத் துடலந்

தொலைக்குமுனகத்துட றொலைத்துத்
தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத்
தமியனேற் கருளுநா ளுளதோ
புடையினிற் கரிக்கோ டிளம்பிறை புரையப்
பொங்குசோ தியங்கொடி விரித்த
சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.12. உலகக் காட்டுக்களிலிருந்து விடுவிக்க வேண்டுதல்:

பக்கத்திலிருக்கிற யானைக்கோடு குறைந்த பிறைமதியை ஒத்திருக்க. பிரகாசிக்கின்ற அழகிய சோதிக்கொடிகள் விரித்துவிட்ட சடையைப் போல நாற்புறமும் கிடந்து திகழப்பெற்ற சோணசைலரே! கைலைநாயகரே!, வெற்றி மாலைபுனைந்த திரண்ட தோள்களையுடைய இயமன் எழுவகைத் தாதுக்களாலாகிய இப்புறவுடலை அடியேனுக்குப் புரிபட்டகமெனப்படும் சூக்கும சரீரத்தையும் கொடுத்து பந்தம் அகல

விளங்கும் மெய்ஞ்ஞானமே சொரூபமாகப் பாவித்தருளும் காலமும் உளதோ? அறியேன்.

10. கண்புன றுளிப்ப வழற்படு மிழுதிற்
        கரைந்துகு நெஞ்சினின் றனையே
    பெண்பயி லுருவ மொடுநினைந் தெனது
        பெண்மய லகற்றுநா ளுளதோ
    வண்புனல் வேந்த னார்கலிக் குடத்து
        மணிமுகிற் கலயத்தின் முகந்து
    தண்புன லாட்ட வாடுறுஞ் சோண
        சைலனே கைலைநா யகனே.

## 13.1.13. அம்மையப்பராகக் காட்சி தருமாறு வேண்டுதல்:

வளமையுடைய புனலரசனான வருணன் கடலென்னும் குடத்தினின்றும், மேகமென்னும் இரத்தினக் கலசத்தினால் மொண்டு, அபிடேகம் ஆடியருளப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, கண்கள் நீரைப்பொழிய அழலிற்பட்ட வெண்ணெய்போலக் கரைந்துருகும் நெஞ்சத்திலே, தேவரீரையே அம்பிகையார் ஒருபாலமர்ந்த உருவத்தினோடு தியானித்து, அடியேனது பெண்மயக்கத்தை நிவர்த்திக்கும் காலமும் உண்டோ?

11. வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின்
        மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே
    ஏலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய்
        யெனுமெனக் கருள்புரிந் திடாயோ
    காலநன் குணர்ந்து சினகரம் புகுந்து
        காண்பரி தெனாதுல கனைத்துஞ்
    சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண
        சைலனே கைலைநா யகனே.

## 13.1.14. உடலின் மீது இருக்கும் பற்றை நீக்குவாய்:

உலகினர் அனைவரும் தரிசித்தற்குரிய காலத்தை நன்றாகவுணர்ந்து ஆலயம்புகந்தும் கண்டிடும் சோணசைலனே கைலைநாயகனே சமுத்திரமாகிய அழகிய ஆடைசூழ்ந்த பரந்த இடமுடைய உலகின்கண், உடலினைப் பொய்யென்று மதிப்பவர்க்கே எழுந்தருளி மிகவும் அருள் பாலிப்பதல்லது, உடலினை நிலைத்ததென மதிக்கும் எனக்கு நினதருளைப் பாவிக்கமாட்டீரோ?

12. மயலினா லழுந்தும் பிறவியா மளற்றை
        வளர்தரு நின்பெருங் கருணை
    வெயிலினா லுலர்த்தி யெனதுளக் கமலம்

விரிக்குமொண் பரிதிநீ யலையோ
பயிலுமா லயமோர் சைலமோர் சைலம்
பகைப்புல முருக்குகார் முகமோர்
சைலமா துலனா மெனக்கொளுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

### 13.1.15. பிறவி வேர் அறுப்பாய்:

தினமும் அமருமாலயம் கைலைமலையாகும். பகைவராகிய திரிபுராதிபர்களுடைய இடத்தையழிக்கும் வில் மேருமலையாகும், எனக்கொளும் சோணசைலனே கைலைநாயகனே கைலைநாயகரே!, மயக்கம் காரணமாக அழுந்துதற்குரிய பிறப்பென்னும் சேற்றினை, வளர்தரும் நின் பெருங்கருணை வெயிலினால் உலர்த்தி எனது இருதயக் கமலத்தை விரியச் செய்யும் அழகிய சூரியன் தேவரீரன்றோ? ஆகையால் அருளவேண்டும்.

13. புலம்பரி துயரங் கழன்றுநின் கழற்கால்
புந்தியஞ் சினகரத் திருத்தி
நலம்புரி மனிதர் பேரவை தமியே
னணுகுவா னருளுநா ளுளதோ
வலம்புரி மனிதர் கடலென வொலித்து
வளைவுற நடுவண்மந் தரம்போல்
தலம்புரி தவத்தி னின்றொளிர் சோண
சைலனே கைலைநா யகனே.

### 13.1.16. அடியார் கூட்டத்தோடு தன்னையும் சேர்க்குமாறு வேண்டுதல்:

அடியவர்கள் கடல்போல அரகரவென்று துதித்துக்கொண்டு வளைந்திருக்க, மத்தியில் மந்தரமலையைப போல, ஓங்கிவிளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, விஷயங்களால் விளைக்கப்படும் துயரங்கள் நீங்கி, தேவரீரது வீரக்கழல் அணிந்த திருவடிகளை, மனமாகிய அழகிய ஆலயத்தின்கண் அமர்த்தி, நன்மையைப் பாலியா நின்ற அடியவர்களுடைய பெரியகூட்டத்தின் கண் தனியனான யான் அடையும்படி கிருபை அருளும் நாளும் உண்டோ? அறியேன்.

14. நீரினி லெழுமொக் குளினழி யுடம்பு
நிலையென நிலைக்குமா னந்த
வாரிதி படிய வறிந்திடா துழலு
மடைமையே னுய்யுநா ளுளதோ
ஏரியல் பதமுன் றேடுமக் கேழ
லின்றுநா டியகிளைத் திடல்போற்

சாரலி னேன மருப்புழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.17. அறியாமையைப் போக்குமாறு வேண்டுதல்:

அழகமைந்த தேவரீர் திருவடியை முன்னர்த்தேடிய அந்தத் திருமாலாகிய வராகம், இப்பொழுதும் அத்திருவடியையே தேடப் பூமியைக் கிண்டுதல்போல, பக்கங்களில் பன்றி தனது கொம்புகளால் உழுதலைப் பெற்றுள்ள சோணசைலரே! கைலைநாயகரே! நீரினிடத்தே தோன்றுங் குமிழிபோன்று அழியக்கூடிய உடலினை நிலையுடையதென்று கருதி, நிலைக்கும் ஆனந்தம் வாரிதி படிய அறிந்திடாது உழலும் மடமையேன் அழியாத் தன்மையையுடைய பேரின்ப சமுத்திரத்தில் மூழ்கி நிற்க அறியாது விஷய வாசனையில் உழலும் அறியாமையுடைய யான் உய்யுங்காலமும் உளதோ? அறியேன்.

15. கருத்திடை நினது கருணைமா மேனி
கண்டெழுத் தைந்துநா வியம்பச்
சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான்
தினம்வலம் புரியுமா றருளாய்
வரத்திரு முடியின் மதிதிரு முடியின்
வனைந்துகந் தரத்தினி லிருள்கந்
தரத்தினி லிருத்தி விளக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.18. பிறை அணிந்த பெம்மானைப் பாடுதல்:

மேன்மை தங்கிய திருமுடியின்கண் இருந்த சந்திரனை இம்மலை வடிவங்கொண்ட இப்போதும் அழகிய உச்சியின்கண் சூடியும், முன் கண்டத்திலமைத்த விஷக் கருமையாகும் இருளை இப்போது குகைகளிடமாக இருத்தியும், கைலைநாயகனே மனத்தின்கண் தேவரீருடைய கருணைமயமான சிறந்த திருமேனியைத் தியானித்துக் கொண்டு, பஞ்சாக்கரங்களையும் நா உச்சரிக்க, சிரத்தின் கண் குவித்த கைகளோடும், தேவரீரை அடியேன் நாடோறும் பிரதட்சனம் செய்து வாழும்படி அருள் புரிவீராக.

16. பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப்
பயனென வுணர்ந்துநா டொறுமா
ரூரனா ரவையி னிகழ்ந்தசொற் றுதியி
னுவக்குநின் பதந்தொழ வருளாய்
ஏருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா





குறிப்புகள்

லிலங்குறு மண்டகோ ளகையாச்
சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

குறிப்புகள்

## 13.1.19. இகழ்ச்சியும் புகழ்ச்சியும்:

அழகமைந்து விளங்கும் இவ்வண்டச்சுவரே ஆலயத்தின் மதிலாகவும், பிரகாசிக்கின்ற அண்டத்தின் மூடியே ஆலயத்தின் மேற்பாவாகிய விமானமாகவும், சாரும் ஆலயத்தில் இலிங்கம் ஆம் கைலைநாயகனே உலகமெலாம் இகழும் இகழ்ச்சிமொழியையும் புகழுச்சிப் பயனுடையனவாக தேவரீர் கொண்டருள்வீரெனத் தெளிந்து, திருநாவலூரர் தக்கவர்கள் நிறைந்த சபையின்கண் இகழ்ந்தசொற்களை. தினந்தோறும் துதிபோல விரும்பியருளும் தேவரீருடைய திருவடிகளை அடியேன் தொழத் திருவருள் பாவீப்பீராக.

17. இந்தியங் கரண முடலமவே றாக்கி
யிருண்மலப் படலமுங் கீறிக்
கந்தமு மலரு மெனநினை யென்னிற்
காண்பறக் காணுநா ளுளதோ
வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற
மலிபகை தவிர்ப்பவெண் ணிகந்த
தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.20. ஊனக் கண்ணும் ஞானக் கண்ணும்:

தாருகவன் முனிவர் பகைகொண்டு வந்த களிறொன்றும் புலியொன்றும் கொன்றருளிய மிக்கபகையினை நீக்கிக் கொள்வதற்கே, எண் இகந்த தந்தியும் புலியும் வளர்த்திடும் சோணசைலனே கைலைநாயகனே. பஞ்சேந்திரியம் அந்தக் கரணம் தேகம் இவற்றினை யானல்லவென்று வேறுபடுத்தி, இருண்ட ஆணவமல மறைப்பினையும் சேதித்து, தேவரீரை என்னுள்ளே மணமும் மலரும் போல ஒற்றுமைப்பட ஊனக் கண்ணாலன்றி ஞானக்கண்ணால் காணுங்காலமும் உண்டோ?

18. முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன்
மொய்குழன் மகளிர்தம் மயலாற்
புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற்
புகவிடுத் தளிக்கும்நா ளுளதோ
வழங்குவெண் டிரையா றவிர்சடை கரப்ப
மணிமுடி நின்றிழந் திடல்போல்
தழங்குவெள் ளருவி யழிந்தொளிர் சோண

சைலனே கைலைநா யகனே.

### 13.1.21. மங்கையர்பால் மயக்கம் நீக்குவாய்:

வெள்ளிய அலைகளைக்கொழிக்குங் கங்காநதி மறைவின்றி அழகிய முடியிலிருந்து ஒழுகுதல்போல, தழங்கு வெள்ளருவி இழிந்து ஒளிர் சோணசைலனே கைலைநாயகனே கைலைநாயகரே! இசைபாடும் வண்டினங்கள் புதிதுண்ணும் தேனிறைந்த பூமாலைசூடிய கூந்தலினையுடைய மங்கையர் மயக்கத்தால், வெதும்பும் என்னைத் தேவரீரது திருடிவடி நிழல் அடைவித்துக் காக்குங்காலமும் உண்டோ? அறியேன்.



19. குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங்
கொடுஞ்சிலை மதனவே ளெனவும்
புன்றொழின் மனிதர்ப் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும்
புலமைதீர்த் தெனக்கருள் புரியாய்
ஒன்றொரு தினந்தோட் குட்குழைந் தனமென்
றுறாதுநா டொறுமக மேரு
தன்றலை தாழ்ப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

### 13.1.22. முருகனுக்கு ஒப்பான சிவனைப் பாடவேண்டும்:

திரிபுரசங்கார காலமான ஒரு தினத்தில் இச்சிவபெருமான் திருக்கரத்துக்குள்ளே வில்லாகக் குழையப்பெற்றனம் என்று நினைவுற்று அவ்வளவில் மகிழ்ச்சி உற்றிராமல், கைலைநாயகனே அற்பச் செய்கையுடைய மனிதர்களை, மலைகடோறும் திருவிளையாடல் புரியும் குமாரக்கடவுளை ஒப்பானவனே என்றும், வளைந்த கருப்புவில்லை ஏந்திய மன்மதனே என்றும், புகழ்ந்து பாழ்க்கு இறைக்கும் புலமை தீர்த்து எனக்கு அருள் புரியாய் அடியேனுக்குத் தேவரீரையே பாடும் பரிசு தந்து அருள்புரிய வேண்டும்.

20. வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்துசெய் துறும்பெரு மிடியுங்
கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுமிக்
கொடியனேற் கருளுநா ளுளதோ
வண்டுழுங் குவளை மலர்தடஞ் சுனையின்
மற்றவைா னவர்க்குரித் தன்றிச்
சண்டியுண் மகிழ்ந்து கொளமலர் சோண
சைலனே கைலைநா யகனே.

### 13.1.23. அடியார்களைக் காத்த பெருங்கருணை:

வண்டுகள் கிண்டியூதுங் குவளைமலர்கள் அகன்ற சுனைகளிலே, பிறதேவர்களுக்கு உரிமையாகாது, சண்டேசுரநாயனார் திருவுளம் களித்துப்

புனைந்து கொள்ளும்படி மலர்கின்ற சோணசைலரே! வெண்ணிற விபூதியைப்புனையும் மிக்க தவமுடைய அன்பர்களுக்கு அரிது அமுதுசெய்வித்துச் செல்வச் செலவினால் நேர்ந்த பெரிய தரித்திரமும், கொண்ட நல்விரதத்து இளைக்கும் யாக்கையும் மேற்கொண்ட நல்ல விரத அனுட்டானத்தாலே மெலியுஞ் சரீரத்தையும் இத்தீமையேனுக்குத் தந்தருளும் நாளும் உளதோ? அறியேன்.

21. வந்துமா மறலி யெனதுயி ருண்பான்
மயிலையுண் சிரலினிற் கின்றான்
முந்திநீ யெனையா னந்தவா ரிதியின்
மூழ்குற விடுத்தருள் புரியாய்
நந்துளான் மலையே யென்றுசா திப்ப
நனைமலர் வேங்கையு மசோகுஞ்
சந்துமேன் முளைப்பச் செய்துகொள் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.24. எமபயத்தை நீக்கியருளி முக்தி தருவாய்:

சிவசொரூப மெனக்கொள்ளாது வளர்ந்த மலையேயென்று உறுதிகூறும்படி, காட்சிதரும் கைலைநாயகனே தேன்செறிந்த மலர்களை உடைய வேங்கையும் அசோகும் சந்தனமுமாகிய மரங்களை மேலே உதிப்பச் செய்து கொண்டு விளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, மாமறலி எனது உயிர் உண்பான் வந்து மயிலை உண் சிரலின் நிற்கின்றான். கரிய இயமன் எனதுயிரை அபகரிக்கும்படி மீனைக் கவர நிற்கும் மீன்குத்திப் பறவைபோல நிற்கின்றனன், தேவரீர் அவ்வியமன் கவரும் முன்னரே அடியேனை ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கிடச்செய்து அருள்புரிவீராக.

22. பூமழை யமரர் பொழியமா தவர்கட்
புனன்மறு கிடைப்பொடி யடக்கத்
தூமொழி மனைநீ தூதுபோம் பயனில்
சொற்பதர் புடைத்திளைக் கின்றேன்
யாமுணர் மிகுபே ருருவமாய் வரினு
மிருவரு முணர்த்திடி னன்றித்
தாமுணர் கிலரென் றெழுந்துயர் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.25. சுந்தரருக்காக இறைவன் தூது சென்ற பெருமையைப் பாடுதல்:

நாம் எல்லாராலும் எளிமையில் அறியத்தக்க மிக்கபெரிய வடிவமுடையேமாய்த் தோன்றினும், இருவரும் உணர்த்திடின் அன்றி தாம் உணர்கிலர் என்று எழுந்து உயர் சோணசைலனே கைலைநாயகனே.

தேவர்கள் புஷ்பவருஷம் வருஷிக்கவும் மிக்க தவசிகளுடைய கண்கள் ஆராமையால் பொழிந்த ஆனந்த அருவி திருவீதிகளில் உள்ள பொடிகளை அடக்கவும். செவ்விய மொழிகளைக் கூறும் பரவை நாச்சியாரது திருமனைக்குத் தேவரீர் தூதுபோகக்கூடிய அவ்வளவு பொருட்பிரயோசனமில்லாத, சொற்களாகிய பதர்களைத் தூற்றித்தூற்றி மெலிகின்றனன். நான் என்செய்வேன்.

23. கழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங்

கமருகு மமிழ்தின்மங் குறாமல்
விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம்
விழைகுநர்க் கேவல்செய் திலனே
மழைமதக் களிநல் யானைமத் தகம்பாய்
வள்ளுகி ரோடுசெல் லரிமாத்
தழைசிறைச் சிம்புள் கொண்டெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.26. சரணாகதியை அளிக்க வேண்டுதல்:

மழைபோலும் மதப் பெருக்கும் செருக்குமுடைய இலக்கணம் அமைந்த யானையினது, மத்தகத்திலே செலுத்திய கூரிய நகங்களோட செல்லுகின்ற சிங்கத்தை, தழை சிறை சிம்புள் கொண்டு எழும் சோணசைலனே கைலைநாயகனே. கரும்பின் ரதம் போலும் மொழிகளையுடைய கொடிபோல்வாரான பெண்களுக்கு ஏவல் தொழிலைச் செய்து ; இச்சரீரம் பூமியின் வெடிப்பிலூற்றிய அமிர்தம் போல வீணேயழிந்திடாமல் சகல பற்றுக்களையும் முற்ற வொழித்து, தேவரீருடைய திருவடித்தாமரைகளையே விரும்பி நிற்கும் சரணர்கட்குத் தொண்டு செய்யாதவனாயினேன். என்செய்வேன்.

24. கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங்

கணைபுரை மதாரிக் கருங்கண்
தார்தரு குவவுக் கொங்கைநுண் மருங்குற்
றையலார் மையலென் றொழிவேன்
சீர்தரு மணியி னணிந்தன வெனக்கட்
செவியுமொண் கேழலின் மருப்புஞ்
சார்தரு முலக விளக்கெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.27. பெண் மயக்கத்தைத் தீர்ப்பாய்:

முன் சிறப்பமைந்த ஆபரணமாகத் தரிக்கப்பட்டன போலப் பாம்பும் அழகிய பன்றிக்கொம்பும் இப்பொழுதும் நிலைபெற்ற. உலகவிளக்கு எனும்

சோணசைலனே கைலைநாயகனே மேகம் போலச் சுருளுற்ற மெல்லியகூந்தலும், கூரிய அம்பையொத்த களிப்புவாய்ந்த அரிபரந்த கண்களும், ஆரம்பூண்ட குவிந்த தனங்களும், சிறிய இடையுமுடைய மகளிரால் அணுகும், மயக்கங்களை என்று நீங்கப்பெறுவேன்.

25. நந்துகைத் தலத்து நாரணற் கயற்கு

நவமணிக் கரகநீ ரிருந்தும்

மைந்துறக் குறித்து மாட்டியுங் காண்பான்

மதித்திடா துனையெதிர்ந் திலரே

ஐந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு

மறுமுகம் படைத்த கேசரியுந்

தந்தெமைப் புரக்குங் கருணைகூர் சோண

சைலனே கைலைநா யகனே.

## 13.1.28. தேடிக் காண முடியாத திருவடிகள்:

ஐந்து திருக்கரங்களையும் ஒற்றைக்கொம்பையும் உடைய விநாயக்கடவுளென்னும் ஒரு பெரிய யானையினையும், ஆறுமுகங்களை உடைய சுப்பிரமணியக் கடவுளென்னும் சிங்கத்தினையும் தோற்றுவித்தருளி. அடிமையாகிய எங்களைக் காத்தருளும் கிருபைமிக்க சோணசைலரே! கைலைநாயகரே!, விஷ்ணுமூர்த்திக்குச் சங்கமும் பிரமதேவருக்கு நவமணிகுயின்ற கமண்டலதீர்த்தமும் திருக்கரங்களில் வாய்ந்திருந்தும், முறையே உமது சந்நிதியில் வன்மை பொருந்த ஊதியும் திருமுடியில் திருமஞ்சனம் செய்தும் பக்தியால் உம்மைக் காணாராயினர். என்னே!.

26. வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர்

விருந்தினுக் குதவிலேன் முந்திற்

றுனையிரந் திடுவான் வந்தனன் பதநீ

யுதவியென் றுயரொழித் தருளாய்

இனியபைந் தமிழின் பொதியமால் வரைபோ

லிசைக்குரு காதிம மலையின்

தனையயின் றீஞ்சொற் குருகுறுஞ் சோண

சைலனே கைலைநா யகனே.

## 13.1.29. திருஞானசம்பந்தருக்கு அருள்புரிந்த தன்மையைத் தனக்கும் வேண்டுதல்:

இனிய பசிய தமிழினையுடைய பொதிய மலைபோல இராகத்திற்கு உருகாமல், இன் தீமசொறகளுக்கு உருகும் சோணசைலனே கைலைநாயகனே. வினையற்ற சீர்காழிக்குத் தலைவராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார் தமது திருமணப்பந்தரில் அளித்த முத்திவிருந்தினுக்கு யான் அடையாமல் போயினேன், அது அடியேன் இச்சரீர மெடுத்தற்கு

முற்காலத்தது ஆதலால் தேவரீரை வேண்டி அம்முத்திப் பெற அடைந்தனன். தேவரீர் உமது பதவியளித்து எனது துயரத்தை ஒழித்தருள வேண்டும்.

27. பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண்
பேதையர்ப் புகழ்ந்தவந் திரிவேன்
பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென் கினுநீ
பயன்றர லறிந்துநிற் புகழேன்
கண்ணுறுங் கவின்கூ ரவயவங் கரந்துங்
கதிர்ணூ றாயிரங் கோடித்
தண்ணிறங் கரவா துயர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.30. இறைவனைப் புகழ்ந்து பாடுதல்:

காணப்படும் அழகுமிக்க திருவவயவங்களை மறைத்தும், நூறாயிரம் கோடி கதிர்கள் தண் நிறம் கரவாது உயர்ந்து எழும் சோணசைலனே கைலைநாயகனே - குளிர்ந்த ஒளியை மறையாது வளர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே! பெண்களுக்குள் அரிய ஆபரணம் போல்பவரே! அமுதம் போல்பவரே! என்று புகழ்ந்து ஒரு பயனுமெய்தாது திரிகின்ற நான். இசையமைந்த செய்யுட்களில் பித்தனேயென்று உம்மை அழைக்கினும், விரும்பிய பயனைத் தேவரீர் அளித்தலை அறிந்து வைத்தும் உம்மைப் புகழ்ந்திலேன். என்னறியாமை இருந்தவாறு என்சொல்கேன்.

28. உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்கு
லொளிமணிப் பாம்புதீண் டுதலால்
மயங்குவேன் றனக்குன் பதமருந் துதவி
மயக்குமென் றொழித்தருள் புரிவாய்
முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு
முத்துவெண் பந்தரீந் தகல்வான்
தயங்குமீன் முத்துப் பந்தர்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.31.திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் அருளியமை:

மிக்க சீர்த்தி தங்கிய அழகிய சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்திக்கு, வெண்முத்தங்களால் ஆகிய பந்தலைத் தந்தருளி, மீன் முத்து தயங்கும் அகல் வான் பந்தர் வாழ் சோணசைலனே கையிலை நாயகனே— உடுக்களென்னும் முத்தங்கள் விளங்கும் அகன்ற ஆகாயமாகிய பந்தரின்கீழ் வாழும் சோணசைலரே!கைலைநாயகரே! அசையா நின்ற நூலொத்த இடையினையும் மலர்சூடிய கூந்தலையுமுடைய

மங்கையரது, நிதம்பமென்னும் ஒளியமைந்த மணியிணையுடைய பாம்பு தீண்டப்பெற்றமையால், மயக்கமெய்திக் கிடப்பேனோகிய எனக்குத் தேவரீருடைய திருவடியென்னும் மருந்தினைத் தந்து, மயக்கம் என்று ஒழித்து அருள் புரிவாய் - அம்மயக்கத்தினை என்று நீக்கி அருள்புரிவீரோ? அறியேன்.

29. மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும்
விளங்குமா கமவுணர்ச் சியினும்
புத்தலர் கொடுநிற் பரவுபூ சையினும்
பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய்
முத்துமு மரவ மணிகளுமெறிந்து
முதிர்தினைப் புனத்தெயின் மடவார்
தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.32. திருத்தொண்டு புரிய அருள் வேண்டுதல்:

விளைந்த தினைப்புனத்தில் காவல் பூண்டுள்ள வேட்டுவப் பெண்கள். முத்துக்களையும் நாகமணிகளையுமே கற்களாக வீசி அத்தினைக் கதிர் கவரவரும் கிளிகளை ஓட்டும் சாரலினை உடைய அழகிய சோணசைலரே! கைலைநாயகரே!, யாவராலும் அங்கீகரிக்கப் பட்டுத் திகழும் சிவாகமங்களை ஆராய்ந்து தெளிதலினும், அன்றலர்ந்த மலர்களைக் கொண்டு தேவரீரை வழிபடும் பூசைத்தொண்டினும், காலங்கழித்து வாழும் பேற்றினை அடியேனுக்கு அளிப்பீராக.

30. பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற்
பழமொழி யொழியமெய் யடியார்
ஆயுமென் மலரோர் மலையள வணிய
வமர்ந்தநின் கோலம்யான் மறவேன்
தூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச்
சூழ்பசுங் கொடிபயி லுருவச்
சாயைசென் றுறநின் றிலங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

## 13.1.33. மலை வடிவ இறைவனை மலர்களால் அர்ச்சித்தல்:

வெள்ளிய சந்திரனிடத்தில் களங்கமென்று கூறும்படி, படர்ந்துள்ள பசிய கொடிவடிவங்களில் பொருந்திய சாயைகள் சென்று படியும் வண்ணம், ஓங்கிவிளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே! பரவிய வெள்ளிய திரைகளையுடைய பெரிய கடல்வளைந்த இவ்வுலகின்கண். மலையளவு தெய்வத்திற்கு மலையளவு புஷ்பம் சாத்துவதுண்டோ? என்று கூறும் பழமொழி நீங்க, நின் கோலம் யான் மறவேன் உண்மைத் தொண்டர்கள்

ஆய்ந்தெடுக்கப்பட்ட மெல்லிய மலர்களை ஒரு மலையளவே அருச்சித்து வணங்க எழுந்தருளிய தேவரீர் திருக்கோலத்தைச் சிறியேன் மறக்க மாட்டேன்.



## 13.2.இராமலிங்க வள்ளலார் - தெய்வமணி மாலை :

**திருவோங்கு புண்ணியச் செயலோங்கி அன்பருள்**
**திறலோங்கு செல்வமோங்கச்**
**செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்**
**திகழ்ந்தோங்க அருள்கொடுத்து**
**மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க**
**வளர்கருணை மயமோங்கியோர்**
**வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி ஆனந்த**
**வடிவாகி ஓங்கிஞான**
**ஒருவோங்கும் உணர்வின்நிறை ஒளியோங்கி ஓங்கும்மயில்**
**ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்**
**உறவோங்கும் நின்பதமென் உளமோங்கி வளமோங்க**
**உய்கின்ற நாளெந்தநாள்?**
**தருவோங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-1)**

## 13.2.1. என்னுள் முருகா உன் திருவடி ஓங்கட்டும்:

அருள் தருதலில் ஓங்கித் திகழும் சென்னையில் அமைந்த கந்தகோட்டமென்னும் திருக்கோயிலில் ஒளி சுடரும் கந்தவேளே! குளிர்ந்த முகங்காட்டும் தூய சிவந்த மணியாகவும், அகத்திலே அன்புநெறி கொண்ட சைவமணியாகவும் ஆறுமுகங்கொண்ட கந்தழியாம் தெய்வமணியாகவும் விளங்கும் முருகக்கடவுளே! உன் திருவடியொளியானது, எவ்வகைப் பட்டவுயிர்களுக்கும் நல்லுறவை அளிக்கின்றது; அதுவே செல்வ வளம் செழிக்கச் செய்து அறச் செயல்களை வளர்க்கின்றது; அன்பருள்ளத்தில் செயல் திறனால் செல்வம் ஓங்கச் செய்கின்றது; பலநூல் படிப்பறிவால் நுட்பமும் திட்பமும் தந்து நிறைந்த இன்பத்தை அளிக்கின்றது. மேலும், உன் திருவடி திகழ்ந்தோங்கி எல்லோருக்கும் அருள் கொடுத்து, மணங்கமழும் செந்தாமரை மலரின் வண்ணம் காட்டியும், வளர்கின்ற அருளுருவாகி வரம் தரும் தெள்ளமுத நிலைகாட்டியும், இன்ப வடிவாகி ஓங்கி மெய்யறிவில் ஒருமைப்படும் உணர்வும் நிறைந்த ஒளி திகழச் செய்தும் அழகோங்கி ஒரு மயில்மேல் ஏறி வருகின்றது.

இப்பெரிய உறவு தரும் உன் திருவடி என் உள்ளத்தில் வந்து தங்கி, வளங்கள் ஓங்கி, உய்ந்து இனிதே வாழ்கின்ற நாள் என்று வருமோ? நீயே அதை அருள வேண்டும் என வேண்டுகின்றார்.

குறிப்புகள்

### 13.2.2. தீயவர்களொடு சேராமல் காப்பாய்:

**பரமேது வினைசெயும் பயனேது பதியேது**
**பசுவேது பாசமேது**
**பத்திஏது அடைகின்ற முத்தியேது அருளேது**
**பாவபுண் யங்களேது**
**வரமேது தவமேது விரதம்ஏது ஒன்றுமிலை**
**மனம்விரும் புணவுண்டுநல்**
**வத்திரம் அணிந்துமட மாதர்தமை நாடிநறு**
**மலர்சூடி விளையாடிமேல்**
**கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு**
**கலந்துமகிழ் கின்றசுகமே**
**கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனும்**
**கயவரைக் கூடாதருள்!**
**தரம்மேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே!**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே.**

பலவகைச் சிறப்புடைய சென்னையிலே, கந்தகோட்டத்தில் ஒளி தந்து ஓங்கித் திகழும் கந்தவேளே! குளிர் முகங்காட்டித் தூய செம்மணியாயும் அகத்தில் அன்பொளி காட்டிச் சைவமணியாயும் ஆறுமுகங் கொண்ட தெய்வமணியாயும் வீற்றிருக்கும் முருகவேளே!

உலகிலே மேலான மெய்பொருள் எது என்றும், வினை செய்தலால் அடைகின்ற பயனெது என்றும், தலைவன் எவன் என்றும், உயிர் தளை (அன்பு) எவை என்றும், இறையன்பு – அடைகின்ற பிறவி விடுதலை - அருள் - தீவினை - அறச்செயல் - இறைவரம் பெறுதல் - தவம் செய்தல் - நோன்பு நோற்றல் ஆகியன எவை என்றும் ஒன்றுமே தெரியாமல், அறிவில்லாத மூடமாய் மனம் போன போக்கிலே, விரும்பிய உணவுகளை உண்டும் பகட்டான ஆடைகளை உடுத்தியும், இளம்பெண்களை நாடிச் சென்று அவருக்கு நறுமண மலரைச் சூடிக் களியாட்டம் போட்டும், அவரைத் தழுவி முலையினைத் தொட்டும் வாழ்ந்து, அவரோடு கலந்து மகிழும் இன்பமே கண்கண்ட இன்பமும் கண்கண்ட பயனுமாகும் என்று வெட்கம் விட்டுச் சொல்கின்ற சிறுமைப் பண்புடைய கயவரோடு சேராமலும் நட்புக் கொள்ளாமலும் நான் அருள்நெறியிலே வாழ நீ அருள் வழங்க வேண்டும்.

### 13.2.3. உன்னை அடைய முடியாமல் தவிக்கிறேன்:

**துடியென்னும் இடைஅன்னம் பிடியென்னும் நடைமுகில்**
**துணையெனும் பிணையலளகம்**
**சூதென்னும் முலைசெழுந் தாதென்னும் அலைபுனல்**
**சுழியென்ன மொழிசெய் உந்தி**
**வடியென்னும் விழிநிறையும் மதியென்னும் வதனமென**
**மங்கையர்தம் அங்கமுற்றே**
**மனமென்னும் ஒருபாவி மயலென்னும் அதுமேவி**
**மாழ்கநான் வாழ்க இந்தப்**
**படியென்னும் ஆசையைக் கடியென்ன என்சொல்லிப்**
**படியென்ன அறியாதுநின்**
**படியென்ன? என்மொழிப் படியின்ன வித்தைநீ**
**படியென்னும்; என்செய்குவேன்?**
**தடிதுன்னும் மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-3)**

முகில்கள் படியும் உயரமான மதிலையுடைய, சென்னையிலுள்ள கந்தகோட்டத்தில் ஒளியோங்கித் திகழும் கந்தவேளே! குளிர் முகங்காட்டும் தூய சிவந்த மணியொளியாயும் அகத்திலே அன்புச் சிவங்காட்டும் சைவமணியாயும் ஆறுமுகமுடைய தெய்வமணியாயும் விளங்கும் முருகவேளே!

துடி போன்ற இடையழகும், அன்னமும் பிடியும் போன்ற நடையழகும், கார்முகில் போன்ற கூந்தலில் மலர் மாலை சூடிய அழகும், விளையாடும் வட்டுப் போன்ற முலையழகும், பூந்தாதோடு பொங்கிவரும் ஆற்றுநீர்ச் சுழிபோன்ற உந்தி (கொப்பூம்) யழகும், மாவடு போன்ற விழி வடிவ அழகம் முழுமதி போன்ற முகஅழகும் கொண்ட மங்கையரின் உறுப்பழகிலே ஈடுபட்டு, மனமென்னும் ஒரு தீவினை வடிவம் காதல் மயக்கை அடைந்தது.

இதனால் நான் உன்னையடையத் தடைப்பட்டது. நான் அருள் வாழ்க்கை வாழ்தற்காக, மனத்தை நோக்கி, “இந்த உலகியல் ஆசையை விட்டொழி! இதுவே என் கொள்கை” என்று சொல்லவும், அது அறியாமையால், “உன்சொல்படி நடக்க முடியாது; என் சொல்படியே உலகியல் இன்பக் கல்வியை நீ படி!” என்று சொல்லி என் கொள்கையை

மறுக்கின்றது. ஐயோ! முருகா! இதற்கு நான் என்ன செய்வேன்? அதை அடக்கும் அறிவாற்றலை எனக்குக்கொடு!

### 13.2.4. உன்னையன்றி வேறு தெய்வமில்லை:



தள்ள முடியாத சென்னையில் கந்தகோட்டத்தில் வீற்றிருந்து அருளொளியோங்கும் கந்தவேளே! குளிர் முகங்காட்டித் தூயமணியொளியாயும் அகத்திலே அன்புநெறி காட்டும் சைவமணியாயும், ஆறுமுகங் கொண்ட தெய்வமணியாயும் விளங்கும் முருகவேளே! புகழ்ந்து போற்றும் உண்மையைப் பெறுகின்ற அமைதியான நிலை பெறும் முழுமதியமே! மாசற்ற இயற்கையான பேரொளி வடிவமே! அழகுத் தோகை விரிக்கும் மயில் மீது ஒளிவீசி வரும் தெய்வத் தோன்றலே! புகழ்ச்சியைக் கடந்த அரிய நல்ல துணையே!

உயிர்த் தலைவனான சிவனுக்குச் செய்யும் பூசனை முதலான நல்ல வழிபாட்டுச் செய்கையால் மனமென்னும் உயிர்க்குரிய கருவி இங்கே தூய்மையற்ற நிலைபெறும்; அடுத்த உயர்நிலையான மெய்ப்பொருள் ஒளித்தவத்தில் தூயசெய்கை பெறும். இந்த இரு செயல் வழிபாடுகளால் முடிய இருளான (பாச) மாசுகள் அற்றுப் போகவே, உயிரும் அறிவும் ஒளிநிலையடையும். இந்தத் தகுதி பெறவே, இதில் மாறுபாடற்ற ஒளிமயமான மெய்யறிவு (ஞானம்) வாய்க்கும். இதனால் உயிருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லாத பெருவாழ்வு வாய்க்கும் என்றெல்லாம் எனது உள்ளத்திலே வந்து உணர்வு தந்த மெய்க்குருவே! முருகா! உன்னைப் போற்றி வணங்குகின்றேன்.

### 13.2.5. குற்றங்கள் சேராமல் தடுப்பாய்:

**காமவுட் பகைவனும் கோபவெங் கொடியனும்**
**கனலோப முழுமூடனும்**
**கடுமோக வீணனும் கொடுமதம் எனும்துட்ட**
**கண்கெட்ட ஆங்காரியும்**
**ஏமமறு மாச்சரிய விழலனும் கொலையென்று**
**இயம்புபா தகனுமாம்இவ்**
**எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்**
**எனைப்பற்றி டாமலருள்வாய்!**
**சேமமிக மாமறையின் ஓமெனும் அருட்பதத்**
**திறனருளி மலயமுனிவன்**
**சிந்தனையின் வந்தனைஉ வந்தமெய்ஞ் ஞானசிவ**
**தேசிக சிகாரத்னமே**
**தாமமொளிர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்க கந்தவேளே**

**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே(பாடல்-6)**

பெருமையொளிரும் தோரண வாயிலுடைய சென்னையில் கந்தகோட்டத்துள் அருளொளிரும் கந்தவேளே! குளிர்முகங் காட்டும் தூய சிவந்த மணியாயும் அகத்திலே அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகம் காட்டும் தெய்வமணியாகவும் திகழ்கின்ற முருகவேளே!

பொதிகை மலையில் தமிழ் முனிவனான அகத்தியனின் உள்ளத்தில் வந்து, ஆக்கந்தருகின்ற பெருமறை நூலின் கருவான ஓமென்னும் அருட்சொல்லின் பொருளையும் திறனையும் விளக்கியருளினாய்; அப்பெருமை உடைய சிவமெய்யறிவுக் குருக்களுக்கெல்லாம் நீயே முடிமணிபோல் சுடர்விடுகின்றாய்.

இப்பெரிய கடவுளான நீ, சிற்றின்ப மயக்கந்தரும் உட்பகைவன், சினமென்னும் கொடியவன், வன்னெஞ்சக் கஞ்சனென்னும் முழு மூடன், பேராசைப்படுகின்ற வீணன், கொடுமை செய்யும் வெளியுடையவனென்னும் குற்றஞ்செய்கின்ற கண்கெட்ட 'நான்' என்னும் அகச்செருக்குடையவன், காவலற்ற பொறாமையென்னும் செற்ற முடையவன், கொலைசெய்யும் இரக்கமற்ற கொடியவன் ஆகிய இந்த ஏழுபேரும் இவர்களுக்குரிய உறவுடையோரும் என்னைப் பற்றி விடாமல் அருள் செய்வாயாக.

## 13.2.6. தூய மனம் தருவாய்:

அலையசைவில்லாத சிவமெய்யறிவென்னும் பெருங்கடலே! இன்ப அமுதமே! குமுத மலர் போன்ற அணியழகுடைய வாய் கொண்ட பொன்னிறக் கொடியான தெய்வ யானையும், பச்சை நிறக் கொடியான வள்ளியும் புடை சூழ்ந்திருக்க அவ்விருவரும் கொடிகள் படர்ந்தது போலிருக்க அழகு தவழும் பொன்மலைபோல் திகழ்பவனே!

அருளறத் தொண்டர்களின் தலைவர்கள் புகழ்ந்து போற்றும் சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலிலே எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர் முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவ மணியாயும் ஆறுமுகம் காட்டும் தெய்வ மணியாயும் திகழும் முருகவேளே!

ஆசையற்ற நிலையான பண்புடையவளென்னும் உயர்ந்த குலப்பெண்டிரோடு, அடக்க அமைதியென்னும் திருமகனும், உயர்நெறியில் வாழச் செய்யும் மிகவுயர்ந்த அருட்பண்பென்னும் நற்பொருளும், அறியாமையிருளை நீக்கும் அறிவென்னும் துணைவனும், கருத்து முரண்பாடும் செருக்குமில்லாத உயர் பண்பென்னும் நண்பனும் பண்பட்ட தூய மனமென்னும் நல்ல ஏவலனும், உலகப் பற்றுக்களோடு கூடியிருக்கும்

உயிர் நிலையென்னும் சகலமும் உலகப் பொருள்களோடு கூடியறிவு பெறாமல் தனித்திருக்கும் உயிர்நிலையென்னும் கேவலமும் இல்லாத உயர்ந்த இடமும் பெற்று வாழ்கின்ற அனைத்து முழுமையான வாழ்வை எனக்கு அருள்வாயாக!

குறிப்புகள்

## 13.2.7. ஒளிநெறியைக் காட்டுவாய்:

**ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவுவேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவுகல வாமை வேண்டும்**
**பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை**
**பேசா திருக்க வேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்**
**பிடியா திருக்க வேண்டும்**
**மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டுமுனை**
**மறவா திருக்க வேண்டும்**
**மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற**
**வாழ்வில்நான் வாழ வேண்டும்**
**தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-8)**

அறப்பணிகள் மிகுதியாய் நிகழ்கின்ற சென்னை மாநகரிலே கந்தகோட்டமென்னும் கோயிலிலே திகழ்கின்ற கந்தவேளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங் காட்டும் தெய்வமணியாகவும் ஒளிர்கின்ற முருகவேளே! உனது திருமலர் போன்ற திருவடியை மன ஒருமையுடன் நினைக்கின்ற தூயவரின் உறவே எனக்கு வேண்டும்; உள்ளத்தில் தீய கருத்தை வைத்துக் கொண்டு, மற்றவரிடத்தில் நல்ல கருத்தைச் சொல்வதுபோல் நடித்துப் பேசுபவரின் தொடர்பும் உறவும் என்னிடம் வந்து சேராமலிருக்க வேண்டும்.

நான், எல்லோரிடத்திலும் பெருமையும் நன்மையும் தருகின்ற உனது திருப்புகழையே பேச வேண்டும்; பொய்யான செய்திகளையும் கேடு விளைக்கும் கற்பனைக் கருத்துக்களையும் பேசாமலிருக்க வேண்டும்; மாந்தருலகிற்கு நல்வாழ்வு தரும் ஒளிநெறியான பெரிய நெறியையே வாழ்க்கையில் கொண்டு கடைப்பிடிக்க வேண்டும்; பிறருக்குத் தீமை

விளைக்கும் நெறியான மதமென்னும் பேய் என்னைப் பிடித்துக் கெடுக்கமாலிருக்கக் காத்துக் கொள்ள வேண்டும்.

சிற்றின்பம் பெறுகின்ற நோக்கிலே கற்பில்லாத பெண்ணிடம் செல்லும் தீய ஆசையை உடனே மறக்க வேண்டும்; உண்மை நெஞ்சில் உன்னையே எப்போதும் மறவாதிருக்க வேண்டும்.எனக்குக் கூரிய நேரிய அறிவு வேண்டும். உனது அருளாகிய செல்வமே வேண்டும்; எந்தவொரு நோயும் தாக்காத நல்வாழ்வில் நான் வாழவேண்டும். இதுவே என் விண்ணப்பம்.

குறிப்புகள்

## 13.2.8. வாய்மையும் தூய்மையும் தருவாய்:

**ஈயென்று நானொருவர் இடம்நின்று கேளாத**
**இயல்புமென் னிடம்ஒருவர்ஈந்**
**திடுவென்ற போதவர்க்கு இலையென்று சொல்லாமல்**
**இடுகின்ற திறமும் இறையாம்**
**நீயென்றும் எனைவிடா நிலையும்நான் என்றுமுள்**
**நினைவிடா நெறியும் அயலார்**
**நிதியொன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று**
**நெகிழாத திடமும்உலகில்**
**சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்**
**தீங்குசொல் லாததெளிவும்**
**திரமொன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்**
**திருவடிக் காளாக்குவாய்**
**தாயொன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-9)**

அருள் வழங்கும் தாய் (சத்தி), வாழ்கின்ற சென்னை நகரில் கந்தகோட்டத்துக்குள்ளே அருளோங்கி வீற்றிருக்கும் கந்தவேளே! குளிர் முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமணியாயும் திகழும் முருகவேளே! நான் ஒருவரிடம் நின்று, 'எனக்கு உதவுக' என்று தாழ்ந்து இரக்காத இயல்பையும், மற்றொருவர் வந்து என்னிடம் "உதவிடுக" என்று வேண்டும்போது அவர்க்கு இல்லையென்று சொல்லாமல் உதவுகின்ற திறமையையும் எனக்கு நீ அருள வேண்டும். கடவுளான நீ என்னை என்றும் கைவிடாத நிலையையும், நான் உன்னை என்னுள்ளே என்றும் விடாத பற்று நிலையையும் அருள வேண்டும்.

இன்னும் நான், அயலாரின் செல்வத்தில் எதையும் விரும்பாத தூய மனத்தையும், உண்மையொழுக்கத்திலிருந்து வழுவாத திட்பத்தையும் அருள வேண்டும். உலகிலே பரிவுக்குரிய எவரையும் 'சீ' என்றும் பேய் என்றும்' நாயென்றும் வைது வருந்த வைக்காத அறிவையும் எனக்கு அருள வேண்டும். வாழ்விற்கு இன்றியமையாத உறுதியான வாய்மை நெறியையும் நெஞ்சத் தூய்மையையும் கொடுத்து, என்னை உன் திருடிவத் தொண்டுக்குத் தொண்டனாய் ஆக்க வேண்டும்.

## 13.2.9. அடியாரின் உறவு வேண்டும்:

நாட்டில் புகழுயர்ந்த சென்னையிலே, கந்தகோட்டமென்னும் கோயிலில் திருவீற்றிருக்கும் ஒளி வடிவான கந்தவேளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறிகாட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமணியாயும் விளங்கும் முருகவேளே! உயரழகுடைய தெய்வயானையோடும் குறவரின் மான் போன்ற அழகிய வள்ளியும் உள்ளம் மகிழ்ச்சியடையத் திகழும் உயர்ந்த செவ்வொளியான மலையே!

மேட்டிலே அமர்ந்து கொண்டு, கருங்காக்கை போல் வீண் கதைகளைப் பேசி உதிர்ப்பவர் உண்டு. அவர் கதறுகின்ற கதறலில் அவர் வாயானது, கள்ளுண்டவரின் வாய் போல் தீய நாற்றமடிக்கும்; வாய் அழுக்கான ஊத்தையோ காததூரம் நாறும்; வாயிலிருந்து வரும் கடும் பொய்யோ இரண்டு காத தூரம் நாறும். இங்கே இத்தகையோர், "தருக்கவாதம்" செய்வதும் உண்டு. இவரன்றி, மணங்கமழும் மலர்போல் வாயுடையவர் சிவனைப் பற்றிப் பேசாமல் வாய்மூடி அமைதியாய் அமர்ந்திருப்பதும் உண்டு. இவரெல்லாம் கடமையைச் செய்யாமலிருப்பதால் இவரை மூடரென்றே சொல்லி வழக்கிடலாம்; எனினும் நான் அவரையெல்லாம் பேசிட விரும்பவில்லை. ஆதலால், முருகா! உன் புகழைப் பேசுபவரோடு உறவு பெறவே விழைகின்றேன். அதற்கு நீ அருள்செய்வாயாக!

## 13.2.10. மயக்கத்தைத் தீர்ப்பாய்:

உயிர்க்காட்சியிலே நீ மிகவுயர்ந்த, பண்புடையவனாயும், எங்கும் பரந்து விரிந்த முழுமுதற் பொருளாயும், எல்லாவுலகிற்கும் தாங்கும் அடிப்படையாற்றலாயும், அருளாற்றலாயும், செம்பொருட் சிவத்தின் அறிவு வடிவமாயும் உள்ளபடி திகழ்கின்றாய்; இத்தகைய நீ பிரியாமல் சென்னை நகரிலுள்ள கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கிக் கந்தவேளாக விளங்குகின்றாய்; குளிர்முகம் காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும், ஆறுமுகங்காட்டும் தெய்வமணியாயும் புகழ்ந்து வணங்கப் பெறுகின்றாய்.

இப்பெரிய கடவுளான உன்னை மறைநூல் கொள்கையரான "வேதாந்திகள்" புரிந்து போற்றாமல் அறிவு மயங்குகின்றனரே.

அவர்கள் தங்களையே, "நாமே முழுமுதற் கடவுளாகிய பிரமம்; நம்மையன்றி வேறொரு கடவுள் இல்லை; நன்மையென்றும், தீமையென்றும் எதுவுமில்லை; பேசப்படும் அகவழிபாட்டிலும் புறவழிப்பாட்டிலும் பொதுவாய் ஒன்றி நடுவாக நின்றது முழு முதலான பிரமம்" என்றெல்லாம் பேசிப் பேசி வாழ்நாட்களை வீணாகக் கழிக்கின்றனர்.

இவர்கள் எடுத்துரைக்கும் முழுமுதன்மையான அறம் என்னும் "பிரமநீதி" யைக் கேட்போரையெல்லாம் சொக்கிப் போகும்படியே கற்பிப்பதோடு, தங்கள் கருத்தையே உண்மையென்றும் முடிவாகக் கூறுவர். தமது குறையுடைய புன்மையான இந்த நெறியைக் கைவிட மாட்டார்கள். ஆனால், தமக்குப் பழவினையால் துன்பம் வந்து தாக்கும்போது, தமது பிரமக் கொள்கையைப் போகவிட்டு விடுவார்கள். சாகக்கூடிய பிரமமான இவர்கள் கொண்ட "தாம்பிரமம்" என்னும் அறிவானது, கயிற்றைக் கண்டு பாம்பெனக் கருதும் மயக்க அறிவைப் போன்றதாகும். முருகா! இவர்களுக்கு உண்மையறிவை நீயே உணர்த்த வேண்டும்.

### 13.2.11. மெய்ப்புகழ் பெற வேண்டுதல்:

**பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்**
**பார்முகம் பார்த்திரங்கும்**
**பண்பும்நின் திருவடிக்கு அன்பும்நிறை ஆயுளும்**
**பதியும்நல் நிதியுமுணர்வும்**
**சீர்கொண்ட நிறையுமுட் பொறையும்மெய்ப் புகழும்நோய்த்**
**தீமையொரு சற்றுமணுகாத்**
**திறமும்மெய்த் திடமும்நல் லிடமும்நின் அடியர்புகழ்**
**செப்புகின் றோரடைவர்காண்**
**கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலுமொரு**
**கோழியங் கொடியும் விண்ணோர்**
**கோமான்தன் மகளுமொரு மாமன்தன் மகளும்மால்**
**கொண்டதின் கோலமறவேன்**
**தார்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-12)**

நீண்ட தெருக்களும் உயரிய மாட வீடுகளும் கொண்ட சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளொளி ஓங்கித்

திகழும் கந்தவேளே! உனது கூர்மையுள்ள நீண்ட இலை வடிவான ஒளிசுடரும் வேலையும் மயிலையும், ஒரு கோழிக் கொடியையும், தேவர் தலைவனாம் இந்திரனின் மகளாம் தெய்வ யானையும் சிறந்த மான் ஈன்ற மகளாம் வள்ளியும் காதல் கொண்டு மயங்கிய கோலத்தையும் நான் மறக்க மாட்டேன்.

உன் அடியவரின் புகழைப் போற்றிப் பிறருக்கு எடுத்துரைக்கும் ஆர்வலர்கள் நற்பயன் பெறுவார்கள். உலக வாழ்வில் பசிக்கொடுமையால் வந்து இரப்பவரின் வாடிய முகத்தைப் பார்த்து இரங்கி உணவளிக்கும் ஒப்புரவுப் பண்பும், உன் திருவடியை வழிபடும் உயர்ந்த அன்பும் நிறைந்த வாழ்நாளும், வாழ்தற்குரிய ஊரும், அறநெறியில் ஈட்டும் செல்வமும், சிறந்த உணர்வும், பெருமை தரும் நிறைவான கற்பும், பொறுத்தாற்றும் மனப்பொறுமையும், அழியாத உண்மைப் புகழும், நோய்க் கேடு சிறிதும் அணுகாத தனித் தன்மையும், உடல் வலிமையும் நல்ல நட்புச் சூழலும் அவர்கள் அடைவார்களென்பது உறுதி.

## 13.2.12. அடியவரை வணங்குவதே பேரின்பம்:

புகழ் படைக்கின்ற சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலிலுள்ள ஒளியோங்கும் கந்தவேளே! வலிய பெரிய நெருப்பை ஒரு மிகச் சிறு புழுவானது நெருங்க முடியாது. வான மண்டலத்தை ஒரு மான் தாவியடைய முடியாது. பெரிய வலிமையுள்ள புலியை ஒரு சிறிய எலியால் சீறிப்பாய முடியாது. ஒரு பெரிய மலையை ஓர் ஈயின் சிறகால் துன்புறும்படி அசைக்க நினைக்கவும் முடியாது. வலிமை வாய்ந்த தூணொன்றைச் சிறிய துரும்பால் துண்டாக்க முடியாது. கதிரவனின் கதிர்களை இருள் சூழ்ந்து மறைக்க முடியாது. கற்றால் மழைத் துளிகளை உறைய வைக்க முடியாது.

இவை போன்றே உன் அன்புருவான அடியவரின் அழகுத் திருவடியை நினைக்கின்றவரின் அடிமலரைத் தமது தலை முடியில் அணிந்து கொண்டவரைத் துன்ப அவலமோ சிற்றின்பக் கொடுமையோ கடுஞ்சினமோ அணுக முடியாது. மனத்திலே சிறுமையான எண்ணமோ தீய கொடுஞ்செயலோ தோன்றாது.

## 13.2.13. திருவடிப் பெருமை:

**கானலிடை நீரும்ஒரு கட்டையில் கள்வனும்**
**காணுறு கயிற்றில் அரவும்**
**கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்**
**கதித்தபித் தளையினிடையும்**
**மானலில் கண்டுள மயங்கல்போல் கற்பனையை**
**மாயையில் கண்டு வீணே**

**மனையென்றும் மகவென்றும் உறவென்றும் நிதியென்றும்**
**வாழ்வென்றும் மானமென்றும்**
**ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளமென்றும்**
**உள்ளென்றும் வெளியென்றும்வான்**
**உலகென்றும் அளவறுவி காரமுற நின்றவெனை**
**உண்மையறி வித்தகுருவே**
**தானமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-14)**

அறக்கொடைகள் வழங்கும் புகழ்மிக்க சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருள் தரும் கந்தக் கடவுளே! எனது மயக்க அறிவால், கோடையிலே தெரியும் கானலை நீரென்றும், இருளில் கிடக்கும் மரக்கட்டையை ஒரு கள்வன் படுத்துக் கிடக்கின்றானென்றும், இருட்டிலே காணும் ஒரு கயிற்றைப் பாம்பென்றும், வெள்ளைநிறக் கிளிஞ்சிலை வெள்ளிக் கட்டியென்றும், பளபளக்கும் பித்தளையைத் தங்கமென்றும் கருதி ஏமாறுதல் போல உலகப்படைப்பைச் செய்யும் அன்னையாம் (பராசக்தி) மாயை கற்பனை செய்து வழிப்படுத்திய வாழ்வை உண்மையென நம்பி வீண் போனேன்.

முறையான மனைவியென்றும் குழந்தையென்றும் உறவென்றும் செல்வமென்றும் உயரிய வாழ்வென்றும் மானவுணர்வென்றும் ஊனாலான உடலென்றும் உயிரென்றும் உள்ளமென்றும் உள்ளென்றும் வெளியென்றும் வானுலகென்றும் அளவற்ற வாழ்வியற் கூறுகளில் விழைவு கொண்டிருந்த என்னறிவைத் திருத்தி, உண்மையினைக் கற்பித்த என் ஒளிக்குருவே!

## 13.2.14. உடல் பற்றை நீக்குவாய்:

சிறிது சிறிதாக விரிவடையும் சென்னை நகரிலே அமைந்த கந்தகோட்டமென்னும் கோயிலில் அருள் தந்து காக்கும் கந்தக் கடவுளே! குளிர் முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்திலே அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமணியாயும் திகழும் முருகக் கடவுளே!

பலநூல்களைக் கற்றுத் தெளிந்து ஒளியறிவு பெற்ற உணர்வுடையோர் விரும்பாத இந்தப் பெரிய பழவினைத் தொடர்ச்சியால் பிறந்த உடலானது, பல பருவங்களாக வளர்ந்து முடியும். பருவங்களிலொன்றான இளமை திகழும் பருவம்தான், பகலில் பூசும் ஒப்பனையழகென மாயுமோ? கடல் நீரின் அலை நுரையென அழியுமோ? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நடிக்கும் கரவு நாடகமோ? கடும்

வெயிலில் தோன்றும் மஞ்சள் நிறமானது நிலைமாறுவதுபோல் மாறக்கூடியதோ? வானிலே அழகாய்த் தோன்றும் வண்ணவில் பின் அழிவதுபோல் அழியுமோ? நீரிலே உடனே தோன்றி உடனே அழிகின்ற குமிழியோ? கொல்லன்பட்டறையில் நெருப்புக்கு ஊதுகின்ற (பருத்துச் சுருங்கும்) துருத்தி என்னும் தோல் கருவியோ? இவ்வாறு நான் நினைப்பதன்றி வேறு தெரியவில்லையே!

இந்த அழியும் உடம்பை உறுதியாகப் பற்றிக் கொண்ட நான் பெண்களின் கண்வலையில் அகப்பட்டு அறிவு கெட்டுப் போனேன். அதை எண்ணி வருந்தித் தீவினையே செய்வேன். உன் திருவடியில் அணுவளவும் பற்றுக் கொள்ளாமல் வீணே வாழ்வைக் கழிக்கின்றேன்.

## 13.2.15. நிலையான செல்வத்தை நாடும் மனம் தருவாய்:

**சடமாகி இன்பம் தராதாகி மிகுபெருஞ்**
**சஞ்சலா காரமாகிச்**
**சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடுமித்**
**தன்மைபெறு செல்வமந்தோ!**
**விடமாகி ஒருகபட நடமாகி யாற்றிடை**
**விரைந்துசெலும் வெள்ளமாகி**
**வேலையலை யாகிஆங் காரவலை யாகிமுதிர்**
**வேனிலுறு மேகமாகிக்**
**கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்**
**காலோடும் நீராகியே**
**கற்பிலா மகளிர்போல் பொற்பிலாது உழலுமிது**
**கருதாத வகையருளுவாய்**
**தடமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே!**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-16)**

வழிபடும் பெரியோர் தடம்பதிக்கும் சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் திருவருள் வழங்கும் கந்தக் கடவுளே! உலகியல் செல்வமானது, உயிரறிவு இல்லாத ஒரு பொருளாயும், உண்மை இன்பம் தராததாகியும், மனக்கலத்துக்கெல்லாம் அடிப்படையாகியும், சில (சற்று) நானே தங்கியிருக்கக் கூடியதாகியும், வெளியிலுள்ளவர்களை மயக்கிப் பற்றுக் கொள்ள வைக்கும் திறன் கொண்டதாகியும் ஓடிச் சுழன்று கொண்டே இருக்கும் இயல்புள்ளதாகின்றது.

இச்செல்வம் தீமைகளையும் விளைக்கின்றதே சில நேரங்களில் சில மாந்தரிடம் செல்வமானது, நஞ்சாக அமைகின்றது. ஒரு கரவு செய்து

வஞ்சித்து மயக்கிக் கூத்தாடுகின்றது. ஆற்றில் திடீரென வெள்ளம் வந்து சில நாட்களிலேயே வற்றுதல் போலாகின்றது. கடலில் அலைபோல ஓங்கியுயர்ந்து விழுந்து மறைகின்றது. செருக்குடையவரின் கை வலைபோல் பிறரைப் பிடிக்க உதவுகிறது. முதிர்ந்த கோடையில் முகில்கள் நிற்காமல் கலைந்து போவது போல் ஆகிவிடுகிறது.

இன்னும் அச்செல்வம் ஒருவரிடம் நிலைத்திருக்காமல் குடமுடைய சகடை வண்டியின் கால்போல் உருண்டோடி விடுகிறது. நீண்ட வாய்க்காலில் ஓடும் நீரைப் போல் சென்று பலரிடம் சேர்ந்து விடுகின்றது. கற்பில்லாத மகளிரின் அழகற்ற (மாசுடைய) உள்ளம் போல் தீயவரிடமும் சென்று உழலுகின்றது. இறைவா! இத்தகைய ஒழுக்கமில்லாத செல்வத்தை நான் கருதாதவாறு அருள்புரிவாயாக.

## 13.2.16. ஆசையைத் துறக்கச் செய்வாய் :

தவறுகள் நேராத சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கித் திகழ்கின்ற கந்தவேளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறிகாட்டும் சைவ மணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமணியாயும் விளங்கும் முருகவேளே! இந்த உடம்பானது உப்பு வைத்திருந்த மண்பாண்டம், அரித்துப் பல ஓட்டையாகி விடுதல் போல ஒன்பது ஓட்டைகளையுடையது. இவ்வழியே கழிவுப்பொருளான மலம் அசும்பு ஒழுகும்.

இந்நாற்றமுடைய உடலை, வான் மேலே விட்டெறிந்த ஒரு கல்லானது கீழே விழுதல் போல் விழுவது என்றும், மலையிலிருந்து விழுகின்ற அருவி போன்றது என்றும், காற்றிலே வைத்த சூடான விளக்கு அணைந்து விடுதல் போன்றதென்றும், வான்முகில்களுக்கிடையில் தோன்றும் மின்னல் உடனே அழிந்து விடுதல் போன்றதென்றும், வீசுகின்ற காற்றிலகப் பட்ட பஞ்சானது சிதைந்து மறைதல் போன்றது என்றும், வானத்து முகில்கள் படர்ந்து வந்த நிலையில் ஓடி மறைதல் போன்றதென்றும், பயன்தராத பகட்டான ஒப்பனைப் பொய் அழிதல் போன்றதென்றும் பறந்து சென்ற பறவை தங்கியிருந்த, மரக்கிளையில் அமைத்த பறவைக் கூடு போன்றதென்றும், பொய்த்துப் பொன கனவு போன்றதென்றும், நீரில் எழுதிய எழுத்து உடனே அழிதல் போன்றதென்றும் நான் மனத்தில் உணர்ந்திருந்தும்அவ்வுடலின்மேல் கொண்ட ஆசையைக் கைவிடவில்லையே, அந்தோ! என்னறிவை என்னவென்று சொல்வேன்! வேறு என்ன செய்வேன்?





குறிப்புகள்

குறிப்புகள்

## 13.2.17. பாடும் பணியைத் தருவாய்:

**எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்**
**ஏக்கற்றி ருக்கும்வெறுவாய்**
**எங்கள்பெரு மானுனை வணங்காத மூடர்தலை**
**இகழ்விறகு எடுக்கும்தலை**
**கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கள்**
**கலநீர் சொரிந்த அழுகண்**
**கடவுள் நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி**
**கைத்திழவு கேட்கும்செவி**
**பந்தமற நினையெணாப் பாவிகள் தம்நெஞ்சம்**
**பகீரென நடுங்கும்நெஞ்சம்**
**பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை**
**பலியேற்க நீள்கொடுங்கை**
**சந்தமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-18)**

அழகுமிக்க சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருள் திகழும் கந்தவேளண்ணலே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்பு நெறிகாட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வ மணியாயும் சுடர்விடும் முருகக் கடவுளே! உன்னை வழிபடாத மனிதனை எண்ணியே முறையிட்டு இங்கே உரைக்கின்றேன். எந்தையே! உன்னை வாழ்த்தாத பேய் போன்றவரின் வாய் கூழுக்கும் ஆசைப்பட்டு அது கிடைக்காமல் வெறும் வாயாகி வருந்துமே.

எங்கள் பெருமானே! உன்னை வணங்காத அறிவிலிகளின் தலையனது, பிணஞ்சுட எடுத்துச் செல்ல வேண்டிய விறகைத் தூக்கிச் சுமக்கின்ற தலையாகிவிடுமே, நறுமணங்கமழும் உன் திருமேனியைக் காணாத கயவரின் கண்களோ, அளவில்லாத நீரைச் சொரிகின்ற அழும் கண்ணாகும். கடவுளே! உன் புகழைக் கூறக் கேட்காத வீணர்கள் செவிகளோ, வருத்தம் தரும் இழவுச் செய்தியைக் கேட்கும் செவிகளாகும். பற்றற்ற நிலையில் உன்னை எண்ணியுருகாத தீவினையோரின் நெஞ்சமானது, பகீர் என அஞ்சி நடுங்கும் நெஞ்சமாகும்.

மேலான முழுமுதற்கடவுளே! உன் திருமுன்னே வந்து நின்று குவித்து வணங்கி வழிபடாத வஞ்சகரின் கைகள், உணவை இரந்து பெறுதற்கு நீட்டும் கொடுமையுடைய கைகளாகுமே அந்தோ!

இவர்களுக்கெல்லாம் நல்லறிவைக் கொடுத்து 'மனிதம்' வெல்ல நீயே அருள் செய்ய வேண்டும்.





### 13.2.18.அடியார்களின் மெய்யுள்ளம்:

மலைபோல் உயர்ந்த புகழுடைய சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கி வழங்கும் கந்தவேள் அண்ணலே!உனை வழிபடுவோரெல்லாம் நற்பேறு பெற்றவரேயாவர். ஐயனே! உன் சீரையும் சிறப்பையும் பேசுகின்ற அன்புச் செல்வரின் வாய், நல்ல அருள்முதுண்டு இனித்த அழகு வாயாகும். அப்பனே! உன் திருவடியொளியை வணங்கியவரின் தலைமுடியானது, உனது திருவடியையே அணிந்து கொண்டு பெருவாழ்வில் வாழ்கின்ற தலையாகும். வாய்மை வடிவானவனே! உனது அழகு பொன்மேனியைக் கண்டு மகிழ்ந்த அறவோரின் கண்கள் பேரொளி பெற்ற அருட்கண்களாகும்.

வேலவனே! உனது புகழுரையைக் கேட்ட அறிஞர்களின் திருச்செவிகள், இன்பத் திருவிழாவைப் பற்றிய நலச் செய்திகளைக் கேட்கும் இன்பச் செவிகளாகும். தூய அழகனே! உன் திருவடியை எண்ணியுருகும் உயர்ந்த அறிவொழுக்கமுடையவர்களின் நெஞ்சம், மெய்யின்ப வடிவான நெஞ்சமாகும். அருளண்ணலே! உன் திருமுன்னே வந்து குவித்து வணங்கிய பெரியோரின் கைகள், எல்லோருக்கும் தங்கக் காசுகளை வழங்கும் கைகளாகும்.

### 13.2.19.எனக்கு கதி நீதான்:

**உழலுற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றிமலம்**
**ஒத்தபல பொருளீட்டிவீண்**
**உறுவயிறு நிறையவெண் சோறடைத்து இவ்வுடலை**
**ஓதிபோல் வளர்த்துநாளும்**
**விழலுற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்**
**வெய்யவுடல் பொய்யென்கிலேன்**
**வெளிமயக் கோமாய விடமயக் கோஎனது**
**விதிமயக் கோ அறிகிலேன்**
**சுழலுற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்**
**கருணையை விழைந்துகொண்டெம்**
**களைகணே ஈராறு கண்கொண்ட என்றனிரு**
**கண்ணேஎ னப்புகழ்கிலேன்**
**தழைவுற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**

**சண்முகத் தெய்வமணியே (பாடல்-20ு**

அறிவும் செல்வமும் தழைத்த சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் வீற்றிருந்தருளும் கந்தக் கடவுளே! என் வாழ்வை எப்படி எடுத்துரைப்பேன்? உழைப்புமிக்க உழவுத்தொழில் முதல் சிறப்புத் தொழிலனைத்தையும் செய்து, அவற்றால் கழிவுப் பொருளை (மலம்) நிகர்த்த பல பொருள்களை ஈட்டியவன் நான். வீணே பெரிய வயிறு நிறைய வெள்ளைச் சோற்றையடைத்து இந்த உடலை ஓதியமரம் போல் வளர்த்தேன். நாள்தோறும் வீழ்ந்த பயனற்ற வாழ்க்கையை விரும்பினேன்.

முருகையனே! இந்த எனது கொடிய உடலைப் பொய்யென்று எண்ணவில்லை. இப்படி நான் எண்ணாதது உலகியல் வாழ்வின் மயக்கமோ, மாயை தரும் நச்சு மயக்கமோ, எனது தலைவிதியால் ஏற்பட்ட மயக்கமோ என்னால் அறிய முடியவில்லை. நான், கழலணிந்த உன் திருவடி மலரை வணங்கி, உனது அருளிரக்கத்தை வேண்டிக் கொண்டு, “எம் வாழ்விற்குரிய பற்றுக்கோடே! பன்னிரண்டு கண்ணுடைய என் இரு கண்ணே!” என்று புகழந்து போற்றாமலிருக்கின்றேனே, அந்தோ! நான் கடைத் தேறுவேனா?.

## 13.2.20. அரக்கர்களை அழித்துத் தேவர்களைக் காத்தவன்:

சென்னை நகரில் இடஞ்சிறந்த அழகிய சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கி வழங்கும் கந்தவேளே! நீ அருளால், தேவர்களையழித்து தீயசெயல்புரிந்த அரக்கரான தாருகனையும், இலங்கும் ஆயிரம் முகங்கொண்டவனான சிங்கமுகனையும், எண்ணுதற்கரிய வலிமைபெற்றவனான சூரனையும் மறமென்னும் பொறுத்தாற்றும் அருட்பண்பாலே அழித்துப் பின்னர் அவர்களைப் (மயிலாகவும் சேவற் கொடியாகவும்) பணிகொள்ளவில்லையென்றால், ஒன்றுமே இல்லை எனலாம்.

விண்ணுலகமென்று ஒன்று இருக்காது. அங்கே தேவரென்றே போற்றப்படுவார் இருக்கமாட்டார். தேவர்கள் அருந்தும் அமுதமும் இருக்காது. அவருக்குள்ள மாட்சி இல்லாமல் போயிருக்கும், அவருடைய அறிவாராய்ச்சியும் தேவ மன்னனான இந்திரனின் அரசாட்சியும் நடைபெற்றிருக்காது. மெய்யறிவென்பதும் முனிவர்களின் தவமென்பதும் நிகழ்ந்திருக்காது. நான்முகனின் படைத்தல் தொழிலும் திருமாலின் காத்தல் தொழிலும் செயல்பட்டிருக்காது. மறைநூல் எடுத்துரைக்கும் நல்லொழுக்கமும் கைகூடியிருக்காது. ஆகவே, முருகா! எல்லாம் உனது திருவருளே என்று உணர்கின்றேன்.

## 13.2.21. மனதை அடக்க வழி கூறுவாய்:

**மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்**

**மதித்திடான் நின்னடிச்சீர்**

**மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம**
**மடுவினிடை வீழ்ந்துழல்வான்**
**சினமான வெஞ்சுரத்து உழலுவன் உலோபமாம்**
**சிறுகுகையின் ஊடுபுகுவான்**
**செறுமோக இருளிடைச் செல்குவான் மதமெனும்**
**செய்குன்றில் ஏறிவிழுவான்**
**இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே**
**இறங்குவான் சிறிதுமந்தோ**
**என்சொல்கே ளான்எனது கைப்படான் மற்றிதற்கு**
**ஏழையேன் என்செய்குவேன்**
**தனநீடு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-22)**

குறிப்புகள்

செல்வம் செழிப்புறும் சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருள்தந்து ஒளிரும் கந்தவேள் கடவுளே! எனக்கு வாய்த்த மனமென்னும் ஒரு சிறுவன் முரடன், பண்படாதவன். ஆதலால், ஆள வேண்டிய அறிவென்னும் ஆசானை மதிக்க மாட்டான், உன் திருவடியின் புகழை மகிழ்ந்து சொல்லும் கல்வியையும் கற்க மாட்டான், சும்மாவும் இருக்காமல் கொடிய வேலையில் ஈடுபடுகின்றான். காமம் என்னும் ஆழமான மடுவிலே வீழ்ந்து அழுந்துகின்றான். சினமென்னும் காய்ந்த கொடிய பாலையில் சென்று உழலுவான். கஞ்சத்தனம் என்னும் சிறிய குகையில் புகுந்து ஒளிவான். கடுமையான ஆசையென்னும் இருளுக்குள்ளே சென்று மாட்டிக் கொள்வான். மதம் என்னும் செய்குன்றிலே விளையாடுதல் போன்று ஏறி நின்று விழுவான்.

தீய பண்புக்கு இனமான பொறாமையென்னும் கொடிய குழியின் உள்ளே இறங்குவான். ஐயோ! சிறிதளவும் என் சொல்லைக் கேட்க மாட்டான். எனது கையிலும் அகப்பட மாட்டான் ஏழையான நான் இதற்கு என்ன செய்வேன்? இறைவா! முருகா! நீயே மனமான சிறுவனைத் திருத்த வேண்டும்.

## 13.2.22. அலைபாயும் மனதை அடக்குவிப்பாய்:

**வாய்கொண்டு உரைத்தலரிது என்செய்கேன் என்செய்கேன்**
**வள்ளலுன் சேவடிக்கண்**
**மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை**
**வாய்ந்துழலும் எனதுமனது**
**பேய்கொண்டு கள்ளுண்டு கோலினால் மொத்துண்டு**

**பித்துண்ட வன்குரங்கோ**
**பேதுறு குலாலனால் சுழல்கின்ற திகிரியோ**
**பேதைவிளை யாடுபந்தோ**
**காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்**
**காற்றினால் சுழல்கறங்கோ**
**காலவடி வோஇந்திர சாலவடி வோஎனது**
**கா்மவடி வோஅறிகிலேன்**
**தாய்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளா்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (ாடல்-23)**

அருளன்னையின் இரக்கச் செயல்கள் கொண்ட சென்னை நகரிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கி திகமும் கந்தக் கடவுளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறு முகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிரும் முருகக் கடவுளே! வள்ளலான உன் திருவடியிலே என் மனம் நிலைத்திருக்காமல், பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை ஆகிய மூன்றையும் கொண்டு அலைந்துழல்கின்றதே, இதை வாயால் எப்படி விளக்குவேன்? முடியாதே, ஐயோ!

எனது மனம் நிலை தவறி, பேய் பிடித்தும் கள்ளுண்டும் கோலினானல் குரங்காட்டியிடம் அடிபட்டும் பித்துக் கொண்ட வலிய குரங்கு போலாயிற்று. அறியாமையில் மயங்கிக் குயவன் பானை வனையும் பொழுது சுற்றுகின்ற சக்கரம் போல் சுழல்கின்றது. சிறுமிகள் விளையாடும் பந்தைப் போல் எவ்வி ஓடுகின்றது. சீற்றங்கொண்டு பாயும் கொடிய விலங்கு போலவும், பெருங்காற்றால் சுழலும் காற்றாடி போலவும், காலனாகிய எமனின் கடுகடுப்புத் தோற்றம் போலவும், இந்திர சாலம் காட்டுதல் போலவும், எனது தீவினைப் பயன் உருவெடுத்து வந்தது போலவும் கொடுஞ்செயல்கள் புரிகின்றதே, அறிவில்லாத நான் என்ன செய்வேன்? முருகா! மனம் பண்பட நீயே அருள வேண்டும்.

## 13.2.23. குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய்:

தனக்குத்தானே நிகரான சென்னை நகரில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கி திகழ்கின்ற கந்தப் பெருமானே! ஆவிடையான எருதில் ஏறிவரும் ஒரு பெருந்தகையான சிவத்தின் அருளுருவைப் பெற்று ஒளிரும் பெருஞ்சுடரே! ஓங்காரப் பொருளுக்குக் கருவாயும், அறிவொளியாயும், தூய அழகிய செஞ்சுடருருவாயும் வேறுபாடின்றித் திகழ்கின்ற மேலான முழுமுதற்கடவுளே!

அறிவிலியான நான், கற்ற நூலறிவுடைய சான்றோரோடு கூடிக் கலந்து பழக மாட்டேன், கல்வி கற்கும் நெறிமுறையை அறிந்து கொண்டு அறிவு தரும் சிறந்த கல்வியைக் கற்க மாட்டேன். உனது திருவடியை அன்பு கனிந்து ஒரு நாளும் கனவிலும் கருதியதில்லை. ஆதலால், நான் நல்லவன் இல்லை, குற்றமே செய்வது எனது இயல்பாயிற்று. இறைவா! நீயோ. பெருங்குற்றங்கள் அனைத்தையும் நற்பண்பாகவே ஏற்றுக் கொள்வது உனக்கு அமைந்த அருட்பண்பாகும். இது உண்மையென்றால் எனது குறையைத் தவிர்த்து எனக்கு அருள் செய்ய வேண்டும்.

## 13.2.24. மெய்ப்பொருளும் அருள்நெறியும்:

**பாய்ப்பட்ட புலியன்ன நாய்ப்பட்ட கயவர்தம்**
**பாழ்ப்பட்ட மனையில்நெடுநாள்**
**பண்பட்ட கழுநீரும் விண்பட்ட இன்னமுது**
**பட்டபா டாகுமன்றிப்**
**போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும்நற்**
**பூண்பட்ட பாடுதவிடும்**
**புன்பட்ட உமியுமுயர் பொன்பட்ட பாடவர்கள்**
**போகம்ஒரு போகமாமோ?**
**ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்னடிக்**
**காட்பட்ட பெருவாழ்விலே**
**அருள்பட்ட நெறியும்மெய்ப் பொருள்பட்ட நிலையுமுற**
**அமர்போக மேபோகமாம்!**
**தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-25)**

தாய்மைப் பண்பால் நிறைந்த சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கி திகழ்கின்ற கந்தக் கடவுளே! குளிர்முகங்காட்டும் தூயமணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிரும் முருகக் கடவுளே!

இந்த உலகிலே, பாயும் புலி போலச் சினந்து சீறியும் நாய் போல் குரைத்து மனம் வருந்தப் பேசியும் வாழும் கயவரின் பாழான (பயன்தராத) மனையில், பல நாட்களாய்ச் சேர்த்து நாற வைத்திருந்த அரிசி கழுவிக் களைந்த கழுநீரும் விண்ணகத்தில் தேவர்கள் உண்ணும் இனிய அமுதின் மதிப்பைப் பெற்று விடும். கயவரின் மனையைச் சுற்றியுள்ள புல்லும் அழகு மலரும் தங்கமணி மாலை போன்ற மதிப்பைப் பெற்றுவிடும். அவர் மனையில் இருக்கின்ற தவிடும் உமியும் கூடப் பொன்விலையைத்

தந்துவிடும். இப்படி அவர்கள் இரக்கமின்றி இறுக்கமாகவும் கஞ்சத்தன்மை கொண்டும் வாழ்கின்ற வாழ்விலே எப்படி உண்மையான இன்பம் கிடைக்கும்? கிடைக்காது.

இறைவா! ஆராய்ச்சிக்குரிய மறைநூலின் முடிவுக் கருத்துக்கு அப்பாலுக்கு அப்பாலதென்று பேசப்படுகின்ற உனது திருவடிக்கு அடிமைப்பட்ட பெருவாழ்வில் வாழும் அருளாளர் கொண்ட அருள்நெறியின் இன்பமும் மெய்ப்பொருள் தரும் இன்பமுமே நிலைத்த பேரின்பமாகும். இந்த இன்பத்தையே நீ எனக்குத் தந்தருளினாய்.

### 13.2.25. நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு உணர்த்துவாய்:

நன்செய் நிலம் வளம் தரும் சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கித் திகழும் கந்தவேட் கடவுளே! அழகிய சேவற் கொடி கொண்ட உன்னை எண்ணி வணங்காமல், வேறு சில தெய்வங்களை சிந்தை செய்பவர். இனிக்கும் செங்கனியை உண்ணாமல் விட்டுவிட்டு வேம்பின் கசக்கும் கனியை உண்ணும் ஒரு சிறிய கருங்காக்கை போன்றவராவர்.

நாவின் சொல்வன்மையும் இனிமையும் இன்றி. வேறு பல செய்திகளையும் வேற்றவரையும் புகழ்ந்து பேசி. உன நற் புகழைப் போற்றிப் பாடி வணங்காதவர் நாயின் பாலை விரும்பி. ஆவின் தூய பாலை விரும்பாத குற்றமுடைய பேயராவர். நீ வலிமையும் வளமும் தரவும் உனது தொண்டைச் செய்யாமல் இருந்துவிட்டு, மற்றவருக்குக் குற்றேவல் புரிபவர், பயன்தரும் நெல்லுக்கு நிரை இறைக்காமல் பயன்தராத புல்லுக்கு இறைக்கின்ற நீண்ட வெறுமையான வீணராவர். இவ்வாறு உணர அருள் தருவாய் முருகா!

### 13.2.26. பழவினைகளைத் தீர்ப்பாய்:

**பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ**
**பெய்சிறையில் இன்னுமொருகால்**
**பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்**
**பெறுந்துயர் மறந்துவிடுமோ**
**இரவுநிறம் உடையியமன் இனியெனைக் கனவிலும்**
**இறப்பிக்க எண்ணமுறுமோ**
**எண்ணுறான் உதையுண்டு சிதையுண்ட தன்னுடல்**
**இருந்தவடு எண்ணுறானோ**
**கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனையொரு**
**காசுக்கும் மதியேனெலாம்**
**கற்றவர்கள் பற்றும்நின் திருவருளை யானும்**
**கலந்திபடப் பெற்றுநின்றேன்**

**தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-27)**

தகுதி சிறந்த சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கித் திகழும் கந்தவேளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிரும் முருகவேளே! படைப்போனாகிய நான்முகன் இனிமேல் என்னைப் பிறக்கச் செய்ய வல்லவனோ? இல்லை! அவன் இன்னும் ஒரு முறை சிறையில் அடைபட்டுக் கிடக்க விரும்பி நிற்பானோ? மாட்டான்! முன்னே அவன் உன்னிடம் குட்டுப்பட்ட துயரை மறந்துவிட மாட்டானே!

இருள் நிறமுடைய காலன் இனி என்னைக் கனவிலும் வந்து இறக்கச் செய்ய எண்ண மாட்டான். அவன் சிவனால் உதைக்கப்பட்டும் உடல் சிதைக்கப்பட்டும் (திருக்கடையூரில்) தழும்புபட்ட நிலையை நினைக்கவே செய்வான். மறைந்திருந்து வந்து பிறவி தோறும் தாக்கும் பழவினை என்னை நலியச் செய்யுமோ? நான் அதனை ஒரு காசுக்கும் மதிக்க மாட்டேன். நானோ எல்லா நூல்களும் எல்லாத் துறைகளும் கற்றுவல்ல அறிஞர்கள் பற்றிக் கொள்ளும் உன் திருவருளை ஊன் கலக்க உயிர் கலக்கப் பெற்றுவிட்டேன். ஆதலால், எனக்குப் பிறப்பில்லாமலும் இறப்பில்லாமலும், பழவினையில்லாமலும் பெருவாழ்வு தந்து அருளினாய். என்னே. உன் பெருந்தகைமை!

## 13.2.27. எனக்கு எல்லாம் கிடைக்கும்:

நீண்ட பெருமை கொண்ட சென்னையில் கந்தகோட்டமென்னும் கோயிலில் அருள் வழங்கித் திகழும் கந்த கடவுளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிர்கின்ற முருகக் கடவுளே!

தேனையுண்டு வண்டு தங்கும் கடப்பம் பூமாலையணியும் உனது திருவடியை உள்ளே ஒன்றி நினைந்து உருகும் வாழ்வுண்டானால், என்னையாளும் அரசே! இந்த உலக உயிர்களுக்கெல்லாம் இன்றியமையாத அத்தனைப் பொருள்களும் உண்டு எனச் சொல்வேன்.

நீரும் அதைப் பொழிகின்ற கார்முகிலும் உண்டு. அதனால் விளைகின்ற நிலமும் அதன் பயனும் உண்டு. செல்வ வளமும் போற்றும் புகழும் அறிவு நுட்பமும் கல்வியும் உண்டு. வாழ்வுக்கு வழிகாட்டும் நன்னெறியும் நிலைபேறும் உண்டு. தக்க ஊரும் நற்பேரும் புகழ் மணிமாலையும் உயிர்களுக்குச் செய்யும் பணிகளும் உண்டு. நல்ல

உடைகளும் பலருக்கும் கொடுக்கக் கூடிய கொடைத் திறனும், வேண்டும்போது உண்டு மகிழ இனியவுணவும், அல்லலற்ற அமைதியுடைய உள்ளமும், பொருள் வளமும் அருள் வளமும் உண்டு. மேலும், நாட்டை அறநெறியிலே ஆட்சி புரிவோருக்குத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய படைகள் உண்டு. மற்றுள்ள ஆளுகைக்கு வேண்டிய எல்லாச் செல்வங்களும் நிறைய உண்டு. ஆதலால், முருகா! உன்னை நினைக்க எல்லோருக்கும் தெளிவைக் கொடுப்பாயாக.

## 13.2.28. உன் அருள் வேண்டி நிற்கிறேன்:

**உளமெனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை**
**ஓல்லைவிட் டிடவுமில்லை**
**உன்பதத் தன்பில்லை என்தனக் குற்றதுணை**
**உனையன்றி வேறுமில்லை;**
**இளையனவ னுக்கருள வேண்டுமென் றுன்பால்**
**இசைக்கின்ற பேருமில்லை,**
**ஏழையவ னுக்கருள்வது ஏனென்றுன் எதிர்நின்று**
**இயம்புகின் றோருமில்லை,**
**வளம்மருவும் உனதுதிரு அருள்குறைவ தில்லைமேல்**
**மற்றொரு வழக்குமில்லை,**
**வந்திரப் போர்களுக்கு இல்லையென்ப தில்லைநீ**
**வன்மனத் தவனுமில்லை,**
**தளர்விலாச் சென்னையில் கந்கோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-29)**

அயராது சுறுசுறுப்பாய் இயங்கும் சென்னையிலே கந்தகோட்டமென்னும் கோயிலில் அருளோங்கித் திகழும் கந்தவேட் கடவுளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிர்கின்ற முருகவேட் கடவுளே! எனது பழவினை என்னைவிட்டு நீங்காமல் இப்பொழுதும் உள்ளது. அதனால் என்னுள்ளம் என் (உயிர்) வசம் நிற்காமல் எங்கோ கண்டபடி ஓடுகின்றது. உனது திருவடிக்கு நான் அன்பு வைக்கவில்லை, என்றாலும் எனக்கு உற்ற உரிய துணை உன்னையன்றி வேறு யாருமில்லை.

எனக்காகப் பரிந்து, "இளையவன் என்பதால் அவனுக்கு அருள வேண்டும்" என்று உன்னிடம் வந்து சொல்பவரும் இல்லை, "ஏழையான அறிவில்லாதவன், அவனுக்கருள்வதால் என்ன பயன் தரும்?" என்று உன்

எதிரே நின்று சொல்கின்றோருமில்லை. இந்த நிலையில் வளம் செழித்த உனது திருவருள் குறைவதில்லையே, நீ அருளாவிடினும் உன் மேல் வழக்கொன்றும் தொடுக்க எனக்குத் தகுதியில்லையே. ஆயினும், முருகா! நீ வன்மையான மனமுடையவன் இல்லை, நானும் என்னிடம் வந்து இரப்பவருக்கெல்லாம் இல்லையென்னாமல் இருப்பதை அன்புடன் கொடுக்கின்றேன். எனவே நீ என்னைப் புரிந்து கொண்டு அருள் புரிய வேண்டும்.

### 13.2.29. உன் திருவடிகளில் பற்றுக் கொள்ளச் செய்:

கடல் நீரலை முழங்கும் சென்னையில் கந்தகோட்மென்னும் கோயிலில் அருள் வழங்கித் திகழ்கின்ற கந்தவேளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் ஒளிர்கின்ற முருகவேளே!

எத்திசையில் பார்த்தாலும் என்னுள்ளம் இன்பம் நுகர்கின்ற இன்ப அழகனே! எனது உயிருக்கு உயிர் தந்த ஓர் ஒப்பற்ற சுடரான ஒருவனே! இன்ப நுகர்ச்சியே! தவத்தில் ஒளிரும் ஒளியே! எனக்கு வாய்த்த பெருஞ்செல்வமே! பிறவி விடுதலைக்கு அடிப்படையான முதற் கடவுளே! மெய்யறிவின் படிவமே! முடிவிலாத அழகின்பமாம் முருகனே! நெடிய திருமாலுக்கு மருமகனென்னும் முறைபெற்றவனே! சிவத்தந்தை முத்தம் கொடுக்கின்ற அருமை மகனே.

உண்மை அன்பு செய்வாருக்கு மகிழ்ந்து பரிவோடு அருள் செய்யும் உனது திருவடியில் பற்றுக் கொள்ள எனக்கு அருள வேண்டும். என்னை இந்த மண்ணுலகிலே உழன்று வருந்துகின்ற குடியிலே ஒருவனாய். இருக்கச் செய்யாமல், என்னை ஆண்டு உனக்கு அடியனாய் ஆளாக்க வேண்டும். இதுவே என் வேட்கை.

### 13.2.30. வறுமையைத் தீர்ப்பது உன்செயல்:

**நான்கொண்ட விரதம்நின் அடியலால் பிறர்தம்மை**
**நாடாமை ஆகுமிந்த**
**நல்விரத மாம்கனியை இன்மையெனும் ஒருதுட்ட**
**நாய்வந்து கவ்வி அந்தோ!**
**தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்**
**தளராமை என்னுமொருகைத்**
**தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்**
**தண்முகம் பார்த்தருளாய்**
**வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை**
**மழையே மழைக்கொண்டலே**
**வள்ளலே என்னிருகண் மணியேஎன் இன்பமே**





குறிப்புகள்

**மயிலேறு மாணிக்கமே**
**தான்கொண்ட சென்னையில் கந்கோட் டத்துள்வளர்**
**தலமோங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே (பாடல்-31)**

சென்னை மாநகரில் தான் கொண்ட கந்தகோட்மென்னும் கோயிலில் அருள் வழங்கி வரும் வழங்கி வரும் கந்தக் கடவுளே! குளிர்முகங்காட்டும் தூய செம்மணியாயும் அகத்தில் அன்புநெறி காட்டும் சைவமணியாயும் ஆறுமுகங்காட்டும் தெய்வமாணியாயும் திகழ்கின்ற முருகக் கடவுளே! மிகவுயர்ந்த பேரின்பப் பெரு வாழ்வளிக்கும் தெள்ளமுதமாம் அருட்கடலே! மிகுந்த உலகமெல்லாம் பொழிகின்ற தயவென்னும் அருள்மழையே! மழைபொழியும் குளிர்ந்த காற்றே! அருள் வழங்கும் வள்ளலே! என் கண்ணினுள்ளிருக்கின்ற ஒளிமணியே! எனது இன்ப வாழ்வே! மயிலில் தகதகக்க ஏறிவரும் செம்மணிச்சுடரான உருவமே!

நான் உறுதியாகக் கொண்ட பற்றாகிய விரதம் உன் திருவடிப் பற்றேயாகும். இதுவன்றி வேறு பிறரை நாடுதல் இல்லை! இத்தகைய நல்ல பற்றாகிய கனியை ஐயோ! வறுமையாகிய ஒருகொடிய நாய்வந்து கவ்விக் கொண்டு போய் விட்டதே! இதற்கு நான் என்ன செய்வேன் என்ன செய்வேன்? மனம் தளராமை என்னும் ஒரு கைத்தடியைக் கொண்டு அந்த நாயை அடிக்கவோ எனக்கு வலிமையில்லையே, சிறியேனான என்னால் என்ன செய்ய முடியும்? வருந்தும் என்னை உன் குளிர்ந்த முகத்தாலே பார்த்து, அந்த வறுமையைப் போக்கியருள வேண்டும்.

## 13.2.31. தொகுத்துக் காண்போம்:

சோணசைல மாலையில் சிவப்பிரகாசர் திருவண்ணாமலைத் திருத்தலத்தின் சிறப்பினைப் புகழ்வதைத் தெரிந்து கொண்டீர்கள்.

உடம்பினை நீக்கி இறையருளைப் பெறுதல் குறித்தும், ஆணவமல ஒடுக்கம் குறித்தும் தெரிந்து கொண்டீர்கள்.

அருட்சோதி வடிவமாகிய அண்ணாமலை ஈசனை வணங்கினால் பிறவி வினை கழிந்துபோகும் என்றும், எமபயம் நீக்கும் என்றும் உறுதியாகத் தெரிந்து கொண்டீர்கள்.

இப்பூவுலகில் நல்லவர்களோடு இணைந்து இருக்கும்போது நல்லனவும், தீயவர்களோடு சேர்ந்திருக்கையில் தீயனவும் வந்து சேர்ந்துவிடும் ஆதலால் நல்ல அடியார்களோடு சேர்ந்திருக்கும் பாக்கியத்தை இறைவனிடம் வள்ளலார் வேண்டுவதை அறிந்து கொண்டீர்கள்.

கலங்கமில்லாத தூயமனம் வேண்டும் என்றும், குற்றமே செய்யாத குணமான வாழ்க்கை வேண்டும் என்றும், இறைவனை எப்போதும் பாடிக் கொண்டே இருக்கும் பாடும்பணி கிடைக்க வேண்டும் என்றும் பாடுவதை அறிந்து கொண்டீர்கள்.

அலைபாயும் மனதைக் கட்டுக்குள் கொண்டுவர இறையருளைக் கேட்கின்றார். பழவினைகளைத் தீர்க்கும் இறைனை நம்பிக்கையுடன் வழிபட்டால் உய்திபெற முடியும் என்பதை இம்மாலை இலக்கியம் நமக்கு எடுத்துரைப்பதை அறிந்து கொண்டீர்கள்.

சமய இலக்கியம்

குறிப்புகள்

## 13.2.32. சோதித்து அறியும் வினாக்கள்:

1. திருவண்ணாமலைத் திருத்தலத்தைப் பாடிய சமயக்குரவர்கள் யார்?
2. சோணசைல மாலை உணர்த்தும் பேரின்பம் எது?
3. இறைவன் விடமுண்டு உயிர்களைக் காத்த தன்மையை விவரி.
4. பிறவி வேரறுப்பவன் இறைவன் என்பதை விளக்குக.
5. இராமலிங்க வள்ளலார் தூயநெறி காட்டுமாறு இறைவனிடம் வேண்டுவனவற்றை எழுதுக.
6. வாய்மையும் தூய்மையும் நிலைபெற என்ன செய்ய வேண்டுமென வள்ளலார் சுட்டிக்காட்டுகின்றார்?
7. அடியார்களின் உறவின் அவசியத்தைப் புலப்படுத்துக
8. இறைவனின் திருவடிப்பெருமையை தெய்வமணிமாலை எவ்வாறு பாடுகின்றது?
9. பழவினைகள் தீர்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

## 13.2.33. பயிற்சி வினாக்கள்:

1. அண்ணாமலை இறைவனின் அருட்தன்மையைச் சிவப்பிரகாசர் தன் சோணசைல மாலையில் எங்ஙனம் விதந்தோதுகின்றார்?
2. இறைவனின் திருவிளையாடல்களை சோணசைல மாலை பாடுவதைச் சான்றுகளுடன் விளக்குக.
3. தெய்வமணிமாலையில் இராமலிங்க அடிகளார் இறைவனிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.
4. மனத்தூய்மையின் அவசியத்தையும் வழிபாட்டின் சிறப்பையும் வள்ளலார் எவ்விதம் வலியுறுத்துகின்றார்?

## 13.2.34. மேலும் பயில்வதற்கான நூல்கள்:

---


1. சிவப்பிரகாசர், சோணசைலமாலை உரை, கழக வெளியீடு.
2. புலவர் மணிவாசகன், திருவருட்பா எளியவுரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2014.

குறிப்புகள்

# கூறு-14 மஸ்தான் சாகிபு - பராபரக்கண்ணி எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை - இரட்சண்ய மனோகரம்

## 14.1. மஸ்தான் சாகிபு - பராபரக்கண்ணி

### 14.1.1. பராபரக்கண்ணி – இரட்சண்ய மனோகரம் - அறிமுகம்:

தென்தமிழ் நாட்டின் முகவை மாவட்டத்தில் குணங்குடி என்னும் ஊரில் நயினார் முகமது-பாத்திமா என்னும் பெற்றோருக்கு மகவாகத் தோன்றி சுல்தான் அப்துல் காதிர் என்னும் திருப்பெயருடன் வளர்ந்த இசுலாமிய குடும்பத்தைச் சார்ந்தவர். திருக்குர்ஆனை ஆழந்து பழத்து ஆலிம் சிறப்பினைப் பெற்ற பெருந்தகை. இளமையிலேயே முறையாகத் துறவு பூண்டு துறவற ஒழுக்கங்களில் சிறப்புற்றிருந்தார். பல்வேறு இடங்களிலும் தங்கி இறுதியாகச் சென்னை இராயபுரம் பாலா லெப்பை சாகிப் தோட்டத்தில் நிறைவடைந்தார். அவர் அவ்வப்போது எழுதிய பாடல்களின் தொகுப்பே குணங்குடி மஸ்தான் பாடல்கள் என்னும் இந்நூலாகும். இது 1079 பாடல்களைக் கொண்டது. குணங்குடியாரின் பாடல்கள் குர்ஆன் திருமொழிகளைப் பிரதிபலிப்பதாக தத்துவமும் வித்தகமும் நிறைந்து காணப்படுகின்றன. சமய வேறுபாடுகளைக் கடந்து உலகில் ஒருவழிச் சமயம் உருவாகும் வகையில் செயல்படும் பணியில் உன்னதமான இடத்தினைத் தக்கவைத்துக் கொண்டவர் குணங்குடியார். இறைவன் தன் கருணையால் உயிர்கள் செய்கின்ற பாவங்களை எல்லாம் தான் சுமந்து கொண்டு, உயிர்களுக்கு இன்பத்தை அருளுகிறான் என்று எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை தன்னுடைய இரட்சண்ய மனோகரத்தில் பாடுவதையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

### 14.1.2. குறிக்கோள்கள்:

எல்லையற்றுப் பரந்துள்ள இறைவன் அடியவர்களின் உள்ளங்களில் எளிமையாக வீற்றிருக்கின்றான் என்பதை அறிந்து கொள்வீர்கள்.

தன்முனைப்பின்றி அனைத்தும் அவனே என்று இறைவனைச் சரணாகதி அடையும்போது அனைத்தும் சித்திக்கும் என்ற நம்பிக்கையை இப்பாடல்கள் ஏற்படுத்துவதை அறிந்து கொள்வீர்கள்.

இறைவன் நல்லவர்களை மட்டுமே காப்பான் என்பது உண்மையன்று, தீமை செய்தோரையும் திருத்தி நல்வழிப்படுத்திக் காப்பான் என்பதை பராபரக்கண்ணியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் உணர்த்துவதை அறிந்து கொள்வீர்கள்.

உலக உயிர்கள் செய்கின்ற பாவங்களை எல்லாம் தன் தோளில் சுமந்து கொண்டு இரட்சிப்பதற்காகவே இறைவன் அவதாரம் செய்ததைத் தெரிந்து கொள்வீர்கள்.

பாவமூட்டைகளைச் சுமந்து கொண்டிருக்க வேண்டாம் என்றும், என் பாதங்களில் அவற்றை இறக்கி வைத்துவிட்டுத் தூய மனதுடன் வாழவும் இறைவனுக்குச் சேவை செய்யவும் வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை வேண்டுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

செய்த தவறுகளையும் பாவங்களையும் உணர்ந்து கொண்டு இறைவனிடம் பாவமன்னிப்பு வேண்டி நிற்கும்போது அவை மன்னிக்கப் படுகின்றன என்பதை இரட்சண்ய மனோகரத்தின் வழியாகத் தெரிந்து கொள்வீர்கள்.

### 14.1.3. பராபரத்தின் இயல்பும் இயக்கமும்:

பராபரமானவனே! அண்டங்களிலும் உலகத்திலும் எல்லா காலங்களிலும் நீ ஆடிக் கொண்டிருக்கக் கூடிய திருக்கூத்தினை, தரிசனம் செய்து நான் மகிழ்ந்திடும் படியாக, எனக்குக் காட்டி அருள வேண்டும்.

**ஆதியாய் ஆண்டவனாய் அததுவாய் நின்ற பெருஞ்**
**சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே**

முதற்பொருளாகவும், இறைவனாகவும், அது அதுவாகவும், சோதி வடிவமாகவும், ஏதுமற்ற நிர்மலப் பொருளாகவும் எங்களைச் சூழ்ந்துள்ளாய்!

**வேத மறைப்பொருளை வேதாந்தத் துஉட்கருவை**
**ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே**

பராபரமானவனே! வேதத்தின் பொருளினையும் வேதாந்தத்தின் உட்கருவான பொருளினையும் ஓத, அதன்மூலமாக உன்னை அறிந்தவர்கள் யார் இருக்கின்றார்கள்?

**அண்ட புவனமுடன் ஆகாசமென்று உசும்பிக்**
**கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே**

அண்டங்களும், உலகங்களும், வானில் வாழ்கின்றவர்களும் என்று அனைவரும் அனைத்துப் பொருள்களும், வணங்கிக் கொண்டாடக் கூடிய உண்மைஞானக் கூடத்தானவனே!

**நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்**
**பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே**

பராபரமானவனே! நாவினால் புகழ்ந்திடக் கூடிய செயலாலும் தொடமுடியாத உயர்ந்த தன்மையுடைய நாயகனே! இனிய இசையானது பூவின் வாசம் எங்கும் பரவுவது போன்ற தன்மையுடன் மலர்ந்த மலர் நீயே ஆவாய்.

**பேரால் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு**

குறிப்புகள்

**ஆராருந்தும் பலன்ஆமோ பராபரமே**

பெயர் சொன்னாலேயே அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய அளவில் புகழ் பெற்ற பெரிய பொருளாக விளங்கிடக்கூடியவனே! ஏழையாகிய எனக்கு யார் இருந்தும் அதனால் என்ன பயன் உள்ளது.

**மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே**
**பாராயோ ஐயா பகராய் பராபரமே**

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கிடைத்திடாத உயர்ந்த தன்மை உடைய உன்னுடைய திருவருள் நிலையானது எனக்குக் கைக்கூடும் படியாக அருள் செய்திட மாட்டாயா?

**ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்**
**தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே**

எப்படியானாலும் உன்னுடைய திருவடிகளை அடைந்திட விரும்பி வேண்டுவதற்கும், நீயாகவே மனமிரங்கி அருள் செய்திட வேண்டும்.

**நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்**
**மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே**

பராபரமானவனே! நாதத்துவத்தின் முடிவான மூலத்தின் நடுவிட்டினுள் எழுந்தருளியுள்ள பெருமையுடைவர்களான தவ ஆற்றல்களை உடையவர்களின் நட்புக்குரிய பொருளானவனே!

**உடலுக்கு உயிரெ என் உள்ளமே உன்பதத்தைக்**
**கடலுமலை யும்திரிந்து காணேன் பராபரமே**

உடலினுள்ளிருக்கின்ற என்னுடைய உயிரே! என்னுடைய மனமே! உன்னுடைய திருவடிகளைக் கடலிலும் மலையிலும் அலைந்து திரிந்து தேடியும் கூட காணவில்லை நான்!

**மாந்திரத்துக்கு எட்டா மறைப்பொருளே மன்னுயிரே**
**சேர்ந்தஎழு தோற்றத்தின் சித்தே பராபரமே**

பராபரமானவனே! எல்லா விதமான உயர்ந்த மந்திரங்களாலும் கூட உணர்ந்திட முடியாத வேதப் பொருளானவனே! நிலைத்த தன்மை உடைய உயிரே! சேர்ந்துள்ளதான ஏழுவகையான பிறவிகளிலும் ஆடிடக் கூடிய சித்துப் பொருளானவனே!

பராபரமானவனே! இந்த உலகத்தில் எந்த ஒரு துணையும் ஆதரவுமில்லாமல், அநியாயமாய்த் தனிமையாகக் கிடந்து கெட்டழிவதில் உனக்கு விருப்பமோ?

**ஓடித் திரிந்து அலைந்தும் உன்பாதம் காணாமல்**
**வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே**

பராபரமானவனே! நான் பல இடங்களிலும் தேடி, ஓடித்திரிந்தும், அலைந்தும் உன்னுடைய திருவடிகளைக் காணாமல், மனம் வாடிக் கலங்கி

நிற்கின்றேன். ஆகையினால், இனியாவது. தேவரான நீா் இந்த ஏழையின் முன்னர் எழுந்து அருள் செய்து காட்சிதர வரவேண்டும்.

பராபரமானவனே! மிக நீண்ட தூரங்களெல்லாம் அலைந்து திரிந்தும், அங்கெல்லாம் உன்னுடைய பாதங்களைத் தரிசனம் செய்ய முடியாமல், நான் வீணான பாவியானதனை எண்ணிப் பயந்தேன்.

**தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே**
**ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே**

## 14.1.4. ஈடு இணையில்லாதவன் இறைவன்:

பராபரமானவனே! தேடினாலும் கிடைத்திடாத செல்வமே! தேனான கடலே! தலைவனே! உனக்கு இணையானவா் யாா் இருக்கின்றாா்கள்?

அருமையான பெரிய பொருளே நீ என்மேல் அன்பான ஒரு சொல்லை, மனப்பூா்வமாகச் சொல்ல வேண்டும்.

**ஐயோ எனக்கு உதவும் ஆதரவை விட்டுவிட்டுத்**
**தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே**

அய்யா, அடியவனான எனக்கு உதவி செய்யக் கூடியவரான உங்களையும் உங்கள் ஆதரவினையும் விட்டுவிட்டு பெண்களின் மீது ஆசைகொண்டு தேடி அலைந்து கொண்டிருந்தேன்.

பராபரமானவனே! எந்தத் திசையைப் பாா்த்தாலும், பொருத்தமில்லாத திருக்கூத்தினை ஆடியபடி நீ விளையாட்டினை வித்தையாகச் செய்து கொண்டிருப்பாய்.

**எப்பொழுதும் உன்பதத்தில் என்கருத்தே எய்துதற்கு**
**இப்பொழுதே கைப்பிடித்தாய் இறையே பராபரமே**

## 14.1.5. என்னை இப்போதே ஆட்கொள்வாய்:

பராபரமானவனே! எல்லாக் காலங்களிலும் உன்னுடைய திருவடிகளிலேயே என்னுடைய மனமானது பதிந்து கிடக்க வேண்டும். அதற்காக இப்பொழுதே, அடியவனாகிய என் கையினைப் பிடித்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்.

வாதம் செய்வதனையே தொழிலாக உடையவா்கள் வீணான வம்புகளைத்தேடி அலைவா். அவா்களைப் போன்று பாவியாகிய என்னுடைய மனமும் அலைந்து கொண்டிருப்பது ஏன்? நான் அத்தகைய வலிமை உடையவன் இல்லை.

**கண்ணே மனோன்மணியே கண்பாா்வைக் கெட்டாத**
**விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! மனோன்மணியே! கண்ணின் பாா்வைக்கு எட்டாமல் விரிந்து ஆகாயத்திலும் அடங்கிடாத வெட்ட வெளியாக உள்ளவனே!

ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது என்பது மிகவும் அரிய செயலாகும். ஆனாலும், அப்பொறிகளைக் கட்டி வைத்து அடக்கி ஆளக்கூடிய அறிவினை எனக்கு அருளிச் செய்திடவேண்டும்.

**எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை**
**முத்த ரொருபோது முற்றார் பராபரமே**

உயிரானது முக்திநிலையினை அடைந்த தவத்தில் சிறந்த பெரியவர்கள், எத்தகைய கடினமான தவங்களைச் செய்து கொண்டிருந்தாலும், உன்னுடைய திருவடிகளை எப்போதும் மறவாமல் இருப்பார்கள்.

வார்த்தைகளில் அடக்கிடமுடியாத உயர்ந்த தன்மையுடைய மந்திரங்களின் பொருளினை உணர்ந்து கொண்டிருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆகின்றது.

**நாற்றச் சடலமதை நம்பார் முகர்ந்திருக்க**
**பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே**

## 14.1.6. உடல் நிலையற்றது:

பராபரமானவனே! நாற்றம் வீசக்கூடிய இந்த உடலானது நிலையற்றது என்பதனை நம்பாதவர்கள், முகர்ந்து பார்த்திடும்படியாக பூத்த மலர்ப் பூவே!

சோற்று மூட்டையினைப் போன்ற இந்த உடலினைச் சுமந்து, திரிந்து, அலைந்ததனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் ஏற்பட்ட களைப்பினால் அழுதேன்.

**காற்றுத் துருத்தினைக் கல்லாய் அணைந்திருக்கச்**
**சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே**

பராபரமானவனே! காற்றுத் துருத்தியான உடல் கல்லினைப் போன்றதென்று நினைத்து நான் அதையே சேர்ந்திருந்தேன். அதனுள் நீ சூத்திரமாய் நிறைந்திருந்தாய்.

பெண்களின் மீது கொண்ட ஆசையின் காரணமாக, அழகான என்னுடைய உடலானது, ஆலையில் பட்ட கரும்பினைப் போல மெலிந்து விட்டது.

**கேளாயோ என்கவலை கேட்டுஇரங்கி யேஎன்னை**
**ஆளாயோ ஐயாபாழ் ஆனேன் பராபரமே**

பராபரமானவனே! என்னுடைய துன்பம்தரும் கவலைகளைக் கேட்டுநீ, மனமிரங்கி. என்னை, உன்னடிமையாக ஆட்கொள்ள மாட்டாயா? நானே உன்பாற்பட்டவன் அல்லவா?

நான் எவ்வளவு தவறுகளைச் செய்தாலும், அவை அனைத்தையும் நீ பொறுத்துக் கொள்வது ஓர் அழகாகும்!

**அல்லல் வினையால் அறிவுகெட்ட ஆன்மாவாய்**
**நெல்லும் பதரும்என நின்றேன் பராபரமே**

பராபரமானவனே! நான், துன்பத்தினை ஏற்படுத்தக் கூடிய, நல்வினை, தீவினைகளினால், அறிவு நிலை கெட்டுத் திரியும் ஆத்மாவுடன் நெல்லும், பதரும் போல் நிலையில்லாமல் இருந்தேன்.

சொல்வதற்கு அரிய ஞானஒளியாகத் திகழ்பவனே! ஒரு வார்த்தையான உபதேசமொழியினை, நீ எனக்குச் செல்வம் நிறையும் படியாகச் சொல்லித் திருவருள் செய்திட வேண்டும்.

**நித்தம் உனைத்தொழா நிர்மூட னாய்இருக்கும்**
**பித்தனாய் ஏன்காண் பிறந்தேன் பராபரமே**

பராபரமானவனே! ஒவ்வொரு நாளும் உன்னை வணங்காத முழு அறிவற்றவனாகப் பைத்தியம் போன்ற இயல்புடைய நான் ஏன் பிறந்தேன்?

சுற்றத்தவர்களாலும். உறவின் முறையோர்களாலும், என் பெற்றோர்களாலும், நான் உன்னைப் பிரிந்து விட்டேன்.

**ஏழை முகம்பார்த் தெளியேனை யெப்பொழுதும்**
**ஆழாம லாண்டருளென் னழகே பராபரமே**

பராபரமானவனே! அழகிய வடிவுடையவனே! நீ, ஏழையாகிய என்னுடைய முகத்தினைப் பார்த்து, உன்னடிமையாகிய என்னை, எல்லாக் காலங்களிலும், தீவினையினுள் மூழ்கி விடாமல் ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும்.

பாவமாகிய உடல் எடுத்து நான் பாவியாய் அலைந்து, அதனால் என்னுடைய உயிரானது சீர் அழிவது என்பது உனக்கு அழகாகுமோ?

**வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கா லென்றன்முகம்**
**பாராயோ சற்றே பகராய் பராபரமே**

பராபரமானவனே! என்னிடம் நீ எழுந்தருள மாட்டாயா? அப்படி ஒரு முறையாவது வந்து என்னுடைய முகத்தினைக் கொஞ்சமும் நீ பார்க்க மாட்டாயா? அதை நீயே சொல்வாய்!

பார்ப்பதற்குப் பல கோணங்களில், பல உயிர்களுக்குள்ளும் நீ நிறைந்திருக்கக் கூடிய அச்செய்தியினை யாருமே தெரிந்து கொள்ள முடியாதபடி உள்ளாய்.

**ஆனாலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்**
**ஏனோ வெடுத்தேனா னெந்தாய் பராபரமே**

பராபரமானவனே! என்னுடைய தந்தையே! எப்படியானாலும், பொல்லாத கொடிய பாவியான நான் ஏன் இந்த உடலினை எடுத்தேன்?

கற்பூரத்தினுள் தோன்றும் ஒளியினைப் போன்று, எனக்கு உன்னுடைய அழகான காட்சியினைத் தந்து அருள்செய்து என்னுடைய பழைமையான வினைகள் யாவும் பாழாகும்படி செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

**கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்**
**அரும்பொருளாய் நின்ற வழகே பராபரமே**

பராபரமானவனே! கரும்பே! நவரசமே! கடலில் தோன்றிய அமிர்தமே! என்னுடைய கண்ணின் மணிக்குள் அருமையான பொருளாய் நிறைந்திருக்கக் கூடிய அழகே!

ஏழை அடியவனான என்னை எவ்விதத்திலாவது, கைப்பிடித்து ஆட்கொள்ளாமல் இருப்பது உனக்கு அழகான செயலாகுமா?

**ஆளாயோ வையா யடியேன் பிதற்றுதலைக்**
**கேளாயோ வென்றன் கெதியே பராபரமே**

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கதியானவனே! என்னை ஆட்கொண்டு அருள் செய்திடமாட்டாயா? நான் புலம்புவதனையும் கேட்க மாட்டாயா?

ஊனாகவும், அதனுள் கலந்துள்ளதான உயிரினில் ஒட்டாத கரவாகவும், தானாகவும் இயங்கிடக் கூடிய தனுவே!

**பொன்னால் மயக்கெடுத்துப் புத்திகெட்டு நானெனவே**
**பன்னாளு நின்றாற் பலனோ பராபரமே**

## 14.1.7. அனைத்தும் நீயே:

பராபரமானவனே! தங்கம் முதலான செல்வங்களின் மீது மயக்கம் கொண்டும், அதனால் அறிவுநிலை தடுமாறி, நான் என்ற ஆணவத்துடன் பலகாலமும் வளர்வதனால் என்ன பலன் உண்டாகும்?

என்னையே நான் மறந்து, எப்போதும் உன்னையே ‘இல்லல்லாகூ’ என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கான உண்மை ஞானச் சுடரே! தேவனே எனக்குத் திருவருள் செய்திட வேண்டும்.

**ஐயோ வடிவமைதனக் காரிருந்து மென்னபலன்**
**கையாற் கவந்தணைக்கக் காணேன் பராபரமே**

பராபரமானவனே! அந்தோ! அடியவனான எனக்கு யார் இருந்தும் என்ன பயன்? கைகளினால் என்னைக் கட்டி அணைத்திடும் வழியினைக் காணமுடியவில்லை.

நான் எத்தகைய இயல்புடையவனாக இருந்தாலும் ஏழையாகிய இந்த அடியவனுக்கு, நான் ஆசைப் பட்டதனை அடைந்திடும் படியாக, நீ தான் மனமிரங்கித் திருவருள் செய்திட வேண்டும்.

**தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்**

**வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே**

பராபரமானவனே! தூங்கிக் கொண்டிருந்துவிட்டு, உன்னை வணங்கக் கூடியவர்களின் முகங்களைப் பார்க்கின்ற போது வேங்கைப் புலியினைப் போன்று கொதித்தெழும்படி செய்திடுவாய்.

கண்ணே! என்னுடைய கருத்தானவனே! என்றன் கண்மணியே! என்றன் கண்ணினுள் நிறைந்துள்ள ஆகாயத்தினுள்ளும் அடங்கிடாத வெட்ட வெளியாக இருக்கக் கூடியவனே!

**காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த**

**தோஷியாய் நின்றேன் துணையே பராபரமே**

## 14.1.8. உலகப் பற்றுக்களைக் களைந்து முத்தி தருவாய்:

பராபரமானவனே! பணத்தின் மீது ஆசை கொண்டு அதனால் மனம் கலங்கிக் கெட்டு அழிந்து பாவியாக நிற்கின்றேன்.

என்னுடைய துன்பங்களைப் பற்றி யாரிடம் சொல்லிக்கையெடுத்து வணங்கி வேண்டப் போகின்றேன்.

**என்னதான் செய்திடுவேன் என் விதியைச் சொல்லியழ**

**உன்னையன்றி வேறெனக்கும் உண்டோ பராபரமே**

பராபரமானவனே! நான் என்னதான் செய்வேன்? என்னுடைய விதியினைப் பற்றிச் சொல்லி அழுவதற்கு உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கின்றார்கள்?

மூன்று கண்களில் ஒளியானவனே! முக்தியினை அளித்திடக் கூடியவனான உத்தமனே! உன்னுடைய ஞானக்கண்ணினைப் போல் தம்முடைய அகத்தின் கண்களைத் திறந்தவர்களுக்கு அறிவாகத் திகழ்ந்திடக் கூடியவனே!

**முப்பாழும் பாழாய்நன் முத்திபெற் றிருக்களனைக்**

**கைப்பிடிப்ப தெப்போதென் கண்ணே பராபரமே**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! என்னுடைய அனைத்து வினைகளும் பாழாய்ப் போய் அழிந்து முக்தியினை அடையும்படியாக என்னைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வது எப்போது?

மகிழ்ச்சி என்னும் ஒளியானது என்னுடைய மனம் முழுவதும் பரவும் படியாக உன்னுடைய அருட்செல்வம் பொழியும் ஒரு வார்த்தை சொல்லுவாயாக!

**மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்**

**காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே**

பராபரமானவனே! கண்ணே! மாச்சரியம் செய்யக் கூடிய மதமானது ஒடுங்கி நான் முக்தியினை அடைந்திடும் படியாக எனக்குக் காட்சி கொடுப்பது எப்பொழுது?

குருவே! என்னைப் பார்க்கின்றவர்கள் பெரும்பாலும் சண்டாளன் என்று என்னை இகழ்ந்த போதும், என்னைக் கொண்டணைத்து ஆதரிப்பது உன்னுடைய பொறுப்பாகும்.

**முத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணாமற்**
**செத்திறத்து போனாலென் செய்வேன் பராபரமே**

முக்தியினைத் தரக்கூடிய உண்மை ஞானம் தரும் முச்சுடரைக் காணாமலேயே நான் இறந்து போனால் என்ன செய்வேன்?

நான் என்னை உணர்ந்து கொண்ட பின்னர், தலைவனான உன்னையும் அறிந்து கொள்ளும்படியாக எனக்கு ஒரு வார்த்தை 'இப்படித்தான் செய்ய வேண்டும்' என்று சொல்லவாய்!

**களியேகண்டு உன்னுடைய கைப்பிடிப்போ மென்றுசற்றே**
**எளியேன் முகம்பார்த்து இரங்காய் பராபரமே**

## 14.1.9. என் மீது இரக்கம் காட்டுவாய்:

பராபரமானவனே! உன்னுடைய கைகளைப் பிடித்து மகிழ்ச்சியினை அடைந்திடலாம் என்று ஏங்குகின்ற ஏழை எளியவனாகிய என்னுடைய முகத்தினைப் பார்த்து, சிறிதாவது என்மீது இரக்கம் கொள்வாயாக.

பாசம் என்னும் நல்வினை, தீவினைகளை நீக்கி, பல செயல்களையும் அழித்து விலக்கி உன்மீது பற்று வைத்திருப்பவர்களுக்கு அருள் செய்திடக் கூடியவனே!

**ஆளவரு வோம்என்று அன்பாய் ஒருவார்த்தை**
**ஏழை முகம்பார்த்து இயம்பாய் பராபரமே**

பராபரமானவனே! 'நான் வந்து உன்னை ஆட்கொண்டு அருள் செய்திடுவேன்' என்று இந்த ஏழையின் முகத்தினைப் பார்த்து ஒரு சொல்லாவது சொல்வாயாக!

உண்மை இதுதான் என்று உணரச் செய்யக்கூடிய, இந்த உடலும் உண்மையானது என்று உறுதியாக நினைத்துச் செயல்படக் கூடிய புலையாட்டல்கள் என்றைக்கு விலகிச் செல்லுமோ?

**பார்க்கப் பலவிதமாய்ப் பலசமய மாகஒரு**
**வாக்கை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே**

பராபரமானவனே! பார்ப்பதற்குப் பலவிதங்களாகவும், பல சமயங்களாகவும் உள்ள நீங்கள், எனக்கு ஒரு வார்த்தையினை வெளிப்படுத்திட வேண்டும்.

உன்னுடைய அடியவன் நான் ஆனாலும் எனக்கு எந்த விதமான ஆதரவும் இல்லை என்பது உனக்கு அழகாகுமோ, அதனைச் சொல்ல வேண்டும்.

**நீச்சாப் பெருகிவர நிரம்பும் ஆனந்தவெள்ளம்**
**பாய்ச்சாயோ ஐயா பகராய் பராபரமே**

பராபரமானவனே! அய்யா! நீங்காமல் பெருகி வந்து நிறைந்திடக் கூடிய ஆனந்த மென்னும் வெள்ளம் பாய்ந்திடும் படியாகச் செய்திடுவாயா? என்று சொல்ல வேண்டும்.

எண்ணிட முடியாத அளவில் உன்னைக் கெஞ்சுகின்ற ஏழையான எனக்கு, உதவி செய்திடக் கூடிய உறவினர்கள் என்று, உன்னைத்தவிர எனக்கு வேறு யாராவது இருக்கின்றார்களா?

**கன்ன மிடுங்கருவி கரணமதைச் சுட்டோர்கள்**
**தன்னுக்குள் தானாம் தனுவே பராபரமே**

பராபரமானவனே! தவறு செய்திட உதவுகின்ற கருவிகளையும், காரணங்களையும், சுட்டொழித்தவர்களுக்குள், தானாகவே, நிறைந்திருக்கக் கூடிய தனுவானவன் நீயே ஆவாய்!

காயாமல் காய்ந்துக் கனிந்து, சொரிவதற்காக மாயமான முறையில் பூத்த மலர் நீயே!

**உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமையே**
**தயையா யெனக்குதவி தந்தாள் பராபரமே**

பராபரமானவனே! உயிரின் உயிராக விளங்கிடக் கூடிய உட்கருவினுக்குள் இருக்கக் கூடிய அமைப்பே! என்மீதும் கருணைகாட்டி என்னை ஆட்கொள்ள வேண்டும்.

உண்மை அறிவினை உணர்ந்தவர்களுக்குள்ளே, ஆனந்த வெள்ளமாகக் கரைகடந்து பொங்கிடக் கூடிய கடல் போன்றவனே!

**மறைப்பொரு ளைக்காணா மடையனிவ றென்றியம்பிச்**
**சிரிப்பார் சிரிக்கிலென்ன செய்வேன் பராபரமே**

பராபரமானவனே! வேதப் பொருள்களின் நிலைகளை உணர்ந்து காணாத அறிவு நிலையில் குறைந்த மடையன் இவன் என்று என்னைப் பார்த்துச் சொல்லிச் சிரிப்பார்கள். அப்போது நான் என்ன செய்வேன்?

ஐயனே! கொள்கையினை விளக்கி உரைத்திடக் கூடிய குருவின் திருவடிகளை உயர்ந்த நோக்கத்துடன் வணங்கிப் போற்றுதல் செய்யாமல், நான் என்னுடைய அறிவு நிலையில் மயங்குகின்றேன்.

**வல்லாரைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்திட்**

**டில்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே**

## 14.1.10. தீமைகளிலிருந்து என்னைக் காப்பாய்:



பராபரமானவனே! வலிமையுடையவர்களிடம் கெஞ்சியும், கால்களைப் பிடித்தும் வலிமை இல்லாதவர்களை நம்பியும் இதுவரை வாழ்ந்தேன்.

சொல்லக்கூடிய பதர் போன்ற வார்த்தைகளைத் தூற்றி சூத்திரம் என்பதன் உண்மைப் பொருளினைப் பார்த்திடாமல், கல்லையும் நெல்லையும் போலக் கலந்து கிடந்தேன்.

**செகமுழுதுஞ் சுற்றியுமுன் சீர்பாதங் காணாமற்**
**றிகைத்தழுதே னீயுந் தெரிவாய் பராபரமே**

பராபரமானவனே! பதினான்கு உலகங்களையும் சுற்றி வந்தும் கூட, உன்னுடைய திருவடிகளைக் காணமுடியாமல் நான், என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து அழுது கொண்டிருந்தேன் என்பது உனக்கும் தெரியும்.

தீய எண்ணங்களை அடியோடு ஒழித்து விட்டவர்களுள் உள்ளே எழுந்தருளியிருக்கக் கூடிய உண்மையான ஞான ஒளியானவனே!

**கும்பிக் கிரைவிரும்பிக் கொடுப்பார் தமைத்தெடிச்**
**சம்பித் திரிந்தே சலித்தேன் பராபரமே**

பராபரமானவனே! வயிற்றிற்கான உணவினைத் தேடித்தரக் கூடியவர்களைத் தேடித்தேடி திரிந்து என்னுடைய மனம் சலித்து விட்டேன்.

காணக் கூடியவற்றில் எல்லாம் ஆசைப்பட்டுக் கடித்தால் என்னுடைய காலும் முகமும் வீங்கிவிடும் அல்லவா? தலைவனே! இது என்னவிதியோ?

**தூங்காமற் தூங்கித் தொழுதிருக்க வென்னுடைய**
**ஆங்கார மெல்லா மகற்றாய் பராபரமே**

பராபரமானவனே! தூங்காமல் தூங்கித் தொழுது வணங்கிக் கொண்டிருக்கக் கூடிய என்னுடைய ஆணவங்களை எல்லாம் நீங்கிட வேண்டும்.

தன் அமிர்தமானது ஊற்றெடுக்கவும், திவ்வியமான மதுரம் சிந்தவும் கூடிய தன்மையினைப் போன்ற ஒரு சொல்லினைத் தாமாகவே எனக்கு அருள் செய்யவேண்டும்.

**சாத்திரங்க ளோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத**
**சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே**

பராபரமானவனே! சாத்திரங்களை எல்லாம் தெளிவாக ஓதிடக் கூடிய அந்தணர்களுக்கும் எட்டாத மந்திரப் பொருளாக நிற்கின்ற சுழியே!

மற்றவர்களால் உணர்ந்திட முடியாத வேதாந்தங்களில் உணர்த்தப் பட்டுள்ள, ரகசியமான உண்மைப் பொருளினை உணர்ந்தவர்கள் அடைந்திடக்கூடிய பயனே!

**சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்**

**போதும்போ தும்போதும் போதும் பராபரமே**

பராபரமானவனே! சுற்றத்தவர்களுடன் சேர்ந்து வாழ்ந்ததனால் இதுவரை அடைந்துள்ள துன்பங்களே எனக்குப் போதுமானதாகும்.

உறவினர்களை நம்பியிருந்து அதனால் எந்த ஒரு பயனும் இல்லாமல் இறந்து விட்டால் எனக்கு அதுவே ஒரு அவமானச் சின்னமாகிவிடும்.

**செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற்**
**கல்லுமரம் போலானேன் கண்ணே பராபரமே**

பராபரமானவனே! செல்லக் கூடிய வழியினை உணர்ந்து சென்று, உன்னை அடைந்திடும் வழியினைப் பற்றித் தெரிந்திடாமையினால், கல்லினையும், மரத்தினையும் போல நான் கிடந்தேன்.

என்னுடைய கண்போன்றவனே! அந்தோ! உன்னை உணர்ந்தும் கூட, அதனால் ஒரு பயனையும் காணாமல் போய்விடாதபடியாக என்னை நீ காத்து அருள் செய்திட வேண்டும்.

**உன்னை யறிவதற்கோ வுடலெடுத்தே னென்றென்னைச்**
**சின்னஞ்சொல் வார்கட்கென் செய்வேன் பராபரமே**

உன்னை உணர்ந்திடுவதற்குத்தானா இந்த உடலினை எடுத்தேன் என்று நினைத்து என்னைக் கேலி செய்பவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?

பராபரமானவனே! யாரும் அறிந்திடாத ஆனந்தத்தின் தெளிவாகவும், திருவருள் மயமாகவும், இருக்கக் கூடியதான பரிபூரணத்தினால் நீ என்னைச் சிறிது தயவுடன் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

**ஆச்சி தனைத்தேடி யாசைவைத் தலையாமற்**
**பூச்சியா யேனோ பிறந்தேன் பராபரமே**

பராபரமானவனே! ஆச்சியினைத்தேடி (தாய் என்ற பொருள்) அவள்மீது ஆசை வைத்து அன்பு கொண்டு அலைந்திடாமல் பூச்சியாக ஏன் பிறந்தேனோ?

உன்னுடைய பாதங்களில் ஆசை வைத்து அலைந்திடாமல் பணத்தின் மீது ஆசை வைத்து, அதனால் கலங்கிய மனதுடன் அலைந்து கலங்கித் திரிகின்றேன்.

**சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்**
**பாகமா யாகமுகம் பாராய் பராபரமே**

## 14.1.11. கருணை காட்டுவாய்:

பராபரமானவனே! நான் சாகாமல் இருக்க வேண்டும். அப்படி ஒருவேளை மரணம் நேர்ந்தாலும், தோன்றக் கூடிய சத்துச் சித்து ஆனந்த

குறிப்புகள்

நிலைகளை அடைந்திட தேவரீர் திருமுகம் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

வரமாட்டாயா? அப்படி வந்தாலும் மனதில் கருணையுடன் எனக்கு அருள் செய்திட வேண்டும் என்று எண்ணிடமாட்டாயா? இச்செய்தியினைப் பற்றி எனக்குச் சிறிது கருணை செய்ய வேண்டும்.

**ஆசைவழிப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து**
**வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே**

பராபரமானவனே! ஆசை என்ற வலையினைத் தோற்றுவிக்கக் கூடிய பாசத்தின் வழிகளை எல்லாம் கட்டறுத்து என்னை சரம் என்கிற குதிரையின் மீது ஏற்றி ஆட்கொள்ள வேண்டும்.

வேஷங்களைப் போட்டு வேதாந்த சாத்திரங்களைப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே நான் கற்றுக் கொண்டேன்.

என்னுடைய கண்ணே! நான் செய்தவை அனைத்தும் தவறுகளே ஆகும். ஆனாலும் என்மீது மனமிரங்கி, என்னைக் கை தூக்கிவிட்டு ஆதரிக்க வேண்டும்.

**மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான் தழுவி**
**ஆளாக்கிக் கொள்வாயென் றையா பராபரமே**

பராபரமானவனே! நீக்கிட முடியாத மயக்கங்களையும் நீக்கி, மனதின் களங்கங்களையும் நீக்கி என்னை உன்னுடைய அடிமையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

என்னுடைய கண்ணே! பார்வையானது இங்கும் அங்கும் அலைகின்ற போது நாதாந்தத்தின் மோட்ச நிலையினைக் காட்ட மாட்டாய். ஆனாலும் என்னைச் சேர்த்துக் கொண்டு அருள் செய்திட வேண்டும்.

**சிந்தை தனைத்தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த**
**உன்றன் குணங்குடியார்க் குயிரே பராபரமே**

பராபரமானவனே! மனதினைத் தெளிவடையச் செய்து, முத்தியினையும், சித்தினையும் பெற்று உயர்நிலை யடைந்த உன்னுடைய குணங்குடியார்க்கும் உயிராய்த் திகழ்பவனே!

## 14.2.1. இரட்சண்ய மனோகரம்

**பத்தியாய்ச் செபம் பண்ணவே**
**சுத்த மாய்த்தெரி யாதையா**
**புத்தி யோடுமைப் போற்றநல்**
**சித்தம் ஈந்திடும் யேசுவே**

## 14.2.2. உள்ளம் பெருங்கோயில்:

இயேசுபெருமானே! உம் அருள் வேண்டுவது எப்படி என்று அறியாமல் இருக்கிறேன். நான் நல்லறிவோடு உம்மை வாழ்த்திப் புகழும் வண்ணம் நீவிர்தான் நல்ல மனத்தைத் தந்தருள வேண்டும்.

**பாவ பாதையை விட்டு நான்**
**சீவ பாதையில சேரநல்**
**ஆசி தந்தெனை யாட்கொளும்**
**தேவ தேவ குமாரனே**

ஒண்பொருளான முழுமையே! இறைவனின் திருமகனாக அவதரித்தவரே! நான் பாவம் நிறைந்த மண்ணுலக வாழ்வை விட்டுவிட்டு உம் அருள் வெளியில் வாழும் வண்ணம் நல்ல மனத்தையும் நல்ல ஆன்மாவையும் எனக்குத் தந்தருள வேண்டும்.

**ஆசை யோடுமக் காட்செயும்**
**மாசி லாமனம் நல்கியே**
**நேசம் வைத்தெனை ரட்சியும்**
**யேசு நாத சுவாமியே!**

இயேசுவே! எனக்கு இறைவனானவரே! உம் அருளுக்குக் கட்டுப்பட்டு உமக்கு அடிமைப் பணிசெய்யும் நல்ல மனத்தைக் கொடுத்து அன்பால் என்னைக் காத்தருள வேண்டும்.

வானுலகத் தலைவரே! இரவுக் காலத்தில் என்னைத் தீமைகள் சூழாதவாறு ஆள்கின்ற இறைவா! என்னுடைய வணக்கங்கள் பத்தாயிரமும் உமக்கே உரிமையுடையனவாகட்டும்.

**நாலும் ஆறும் நயந்திடாப்**
**பால னிப்பரு வத்துனைச்**
**சால வேதொழ நீயருள்**
**மூல காரண மூர்த்தியே**

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் தோன்றி நிலைபெறக் காரணமாக இருக்கின்றவரே! பத்து வயதே நிரம்பிய சிறுவனாகிய நான் உம்மை வணங்குவதற்குரிய மனநிலையினையும் உம் நிறைவான அருளையும் நீரே தந்தருள வேண்டும்.

தடைகளற்ற அருள் வெள்ளமே! தீயவர்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகில் நான் அவர்களோடு சேர்ந்து தவறான வழியில் சென்றுவிடா வண்ணம் என் கரம்பிடித்து நீவிர்தான் நல்வழியில் செல்ல அருள்புரிய வேண்டும்.

**பஞ்சி நானொரு பாவியேன்**
**தஞ்சம் உன்னிரு தாளையா**

**அஞ்ச வென்றருள் வாய்பரன்**
**மஞ்ச னே, மனு வேலனே!**

இயேசுவே! இறைவனின் மைந்தனாக மண்ணுலகில் அவதரித்தவரே! என்னை விட்டு நீங்காமல் என்னுள் நிறைந்திருப்பவரே! உயர்வான பொருளானவரே! நான் காற்றால் அலைக்கழிக்கப்படும் பஞ்சுபோல் எளியவன். மனத்தில் குற்றம் நிறைந்தவன். உம் திருவடிகளே நான் அடைக்கலமாகின்ற இடம். இவ்வுலக வாழ்வில் துன்பங்களைக் கண்டு பயம் கொள்ள வேண்டாம் என எனக்கு நீவிரே சொல்லியருள வேண்டும்.

உண்மைத் தன்மையுடன் எழுந்தருளிய இறைவன் நீவிரே. மேன்மைத் தன்மை உடையவரே! நான் உம்மால் காக்கப்பட வேண்டியவன். என்னைக் கைவிடாமல் காத்து உம் அருள் வெளியில் உய்க்க வேண்டியது உம் கடமையன்றோ!

**இந்த நாளிலெப் பாவமும்**
**சிந்தை யாலும் செய்யாமலே**
**முந்த வுன்கிருபை தந்துகா**
**வந்த னம்மனு வேலனே**

## 14.2.3. கைவிடாமல் காத்தருள்வாய்:

எனக்குள் இருந்து என்னை ஆள்பவரே! உம்மை நான் வாழ்த்தி வணங்குகிறேன். நான் பூலகில் வாழ்கின்ற இந்த நாட்களில் நீவிர்தான் என்னைக் காத்தருள்வதற்குரியவர். என் மனத்தில் எந்தவிதமான தீய நினைவுகளும் ஏற்படா வண்ணம் நீவிர்தான் என்னை உம் திருவருளால் வழிநடத்த வேண்டும்.

இறைவா! உலகப் பொருள்களில் எல்லாம் நிறைந்திருப்பவரே! எனக்குத் தாயும் தந்தையும் நீவிர்தான். உம்மையே நான் எல்லாமும் என நினைத்து அடைக்கலமாக அடைந்தேன். நீவிர்தான் என்னைக் காத்தருள வேண்டும்.

**நீச னேனித யத்துளே**
**மாசி லாவிசு வாசமும்**
**நேச முந்தின நீடவே**
**யேசு வேயரு ளிவையே**

இயேசுபிரானே! மனம் கீழ்மைக் குணம் உடையது. தீயவற்றை நினைக்கும் தன்மை உடையது. அதனால் சிறிதும் குற்றம் இல்லாத நன்னம்பிக்கையும் அன்பும் பெருகுமாறு நீவிர்தான் என்னை உம் மேன்மையான அருளைத் தந்து காக்கவேண்டும்.

அருளையே வடிவமாகக் கொண்டிருப்பவரே! சரணடையத் தக்க இடமும் எந்நாளும் நிறைவான வாழ்வும் நீவிரே என்று உணர்ந்தேன். உம் மேன்மையான அருளைத் தந்து என்னைக் காத்தருள வேண்டும்.

**பொய்யும் வஞ்சமும் போக்கியே**
**மெய்யும் அன்பும் விடாமல்யான்**
**தெய்வ மேயுனைச் சேவித்திங்(கு)**
**உய்யும் நல்வரம் உதவுவாய்**

## 14.2.4. இறைவழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்துவாய்:

இயேசுவே! என் கள்ளம் மிக்க மனத்தில் இருந்து தீமையை விளைவிக்கும் பொய்யினையும் ஏமாற்றும் குணத்தையும் என்னைவிட்டு நீங்குமாறு செய்து உண்மை, அன்பு இரண்டும் பெருக வரமருள வேண்டும்.

அன்னை, தந்தை. உறவினர்கள், என்னைச் சார்ந்திருப்பவர்கள் என இவர்களால் எனக்கு எந்தப் பலனும் இல்லை. ஆனால் நீவிரே முதன்மையானவர்; ஒப்புமை கூற இயலாத அருளே வடிவானவர். உம்மையன்றி யார் எனக்குத் துணையாகும் தகுதி பெற்றவர்? எனக்கு நீரே நல்ல துணையாவீர்.

**உன்றி ருப்புகழ் ஓதவும்**
**உன்றி ருப்புகழ் கேட்கவும்**
**உன்ற னக்கெனை உதவவும்**
**என்ற னக்கருள் யேசுவே!**

இயேசுவே! உம்மைப் பற்றிப் புகழ்கின்ற நூல்களைப் படித்தறியவும் உம்முடைய நற்புகழை எல்லாம் பிறர் எடுத்துக்கூறி நான் அதைக் கேட்டறியவும், உமக்கு அடிமைப் பணி செய்யவும், எமக்கு நீங்கள் அருள்புரிந்து காக்கவேண்டும்.

உலகப் பொருள்களோடு ஒப்புமைப்படுத்த இயலாதவரே! உயர்வான பொருளானவரே! இரவு, பகல், காலை. மாலை என எல்லாக் காலங்களிலும் உம் நினைவேயன்றி வேறு நினைவு எழாமல் நீவிர்தான் என்னுள் எழுந்தருளி என்னைக் காக்க வேண்டும். உம் மேன்மையான திருவடிகளை நான் வணங்கிட நன்னிலை அடைய அருள்வீராக.

**என்னை யோர்பொரு ளாகவும்**
**உன்னி மானிட உருவமாய்ப்**
**பன்ன ருந்துயர் பட்டனை**
**என்ன ஈடுள தேசுவே**

## 14.2.5. அனைத்தும் உன் விருப்பமே:

இயேசுவே! ஒண்பொருளே! என்னையும் ஒரு பொருளாக நினைத்தீர். மண்ணுலகில் பிறவி எடுத்து அளவற்ற துன்பங்களை அனுபவித்தீர்.

இதற்கு மாற்றாக உமக்கு நான் என்ன செய்யப்போகிறேன்? மனிதனாகப் பிறப்பெடுத்த என்னால் உம் உயரிய அருளின் முன்பு என்னதான் செய்துவிட முடியும்?

உம் அருளுக்கும் மாற்றாக உமக்கு என்ன செய்யப்போகிறேன்? உம் அருளால் நிறைந்து நன்னிலை அடைந்த மனத்தை உமக்கு அடைக்கலமாகக் கொடுத்துவிட்டேன். இனி அது உம்முடையது. என்னுடையது அல்ல. உம் சித்தம் எப்படியோ! அப்படியே ஆகட்டும்.

**நாடி யுன்புகழ் நாயினேன்**
**பாடி டப்பதி னாயிரம்**
**கோடி நாவுள தாயினும்**
**கூடு மோகும ரேசனே!**

முழுமையே! இறைவனின் மைந்தரே! நான் நாயினும் கீழானவன். உம்மை ஆராயவோ, உம் புகழைப் பாடவோ இயலாதவன் நான். பத்தாயிரம் கோடி நாக்குகள் எனக்கு வாய்த்தாலும் அருள் வெள்ளமான உம்மை என்னால் பாடிவிட முடியாது.

ஒளியானவரே! தாயின் கருவில் நான் குடிகொண்டிருந்தபோது என்னைச் சூழ்ந்த பாவங்களால் அப்போதே அழிந்துவிடாமல் பூவுலகில் பிறப்பெடுக்கக் காரணமாக அமைந்தவரே! இனியும் உம் அருள் எனக்கு வேண்டும். உம் அருள் பார்வையே என்னை நல்வழியில் நடத்த வேண்டும்.

**மனமும் வாக்கும் அசுத்தமாய்த்**
**தினமும் பாவமே செய்துநான்**
**சினமும் சாபமும் சேர்ந்தனன்**
**அனக னேமன்னிப் பருளுவாய்**

சிறிதும் கலங்கமற்றவரே! மனத்தில் குற்றத்தையும் சொற்களில் கடுமையினையும் சேர்த்துக் கொண்ட காரணத்தால் நான் குற்றங்கள் செய்தவற்கு உரியவனானேன். அதனால் கோபம் என்னை வந்தடைந்தது. பிறர்கூறும் சாப மொழிகளையும் ஏற்றுக்கொண்டேன். இவ்வுலகில் குற்றமே வடிவாக உலவுகின்ற எனக்கு நீவிர்தான் பாவமன்னிப்பு வழங்கி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இறைவனின் திருமகனாகப் பூமியில் பிறந்தருளியவரே! நான் நாயினும் கீழானவன். நன்றி இல்லாதவன். எனினும் தாயைவிட அளவு கடந்த அன்பை என்னிடம் காட்டி ஆட்கொண்டு அருளினீர்கள். இதற்குக் கைமாறாக உமக்கு நான் என்ன செய்யப்போகிறேன்?

**உனது சித்தம் உவந்ததே**
**எனது பாக்கியம் என்னுநல்**
**மனது தந்தெனை வாழ்வியாய்**

**புனித புண்ணிய மூர்த்தியே!**

## 14.2.6. பாவங்களை மன்னித்து அருள்வாய்:

இயேசுவே! நல்ல அறச் செயல்களின் தொகுதியானவரே! என்மேல் உமக்கு அருள் வந்தது. அதனை மனத்தால் உணர்ந்தேன். எனக்கு நல் மனத்தையும் நற்சிந்தனையினையும் தந்து நீவிர்தான் என்னைக் காத்தருள வேண்டும்.

நான் கொடுமைத் தன்மையே வடிவாக உள்ள பிசாசுகளின் பிடியில் சிக்கித் துன்பங்களை அடையாமல், குணமாறுபாடு கொண்டு அவற்றின் செயலால் தீயவனாக மாறும் நிலையினை அடையாமல் உம் மேன்மையான ஆவியை எனக்குத் துணையாக்க வேண்டும். உம் அருள் வெளியில் என்னைக் கலக்கச் செய்யவேண்டும்.

**எனக்கு மற்றவ னெதுசெய**
**மனக்கொள் வேனதை மற்றவன்**
**தனக்கு யான்செயத் தகுமனம்**
**எனக்கு நல்கிடம் யேசுவே**

இயேசுபிரானே! மற்றவர்கள் எல்லாம் சிறிதும் தீமை இல்லாத நல்ல செயல்களை எனக்குச் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதுபோல நானும் மற்றவர்களுக்கு நன்மையே செய்யும் வண்ணம் சிறிதும் குற்றமற்ற நல்ல உள்ளத்தை எனக்குத் தந்தருள வேண்டும்.

என் உயிருக்குத் துன்பம் நேர்ந்தாலும், நான் கொடுமையான துன்பங்களை அனுபவித்தாலும் எந்நாளும் நேர்மையான வழியில் இருந்து தீமையான பாதைக்குச் சென்றுவிடாமல் நீவிர்தான் அருள் வழங்க வேண்டும். நல்ல மனத்தைத் தந்தருள வேண்டும்.

**வஞ்ச மில்மனச் சாட்சியும்**
**நெஞ்சும் ஒத்துநன் னெறியிலே**
**செஞ்செ வேசெலத் திருவருள்**
**விஞ்ச நல்கிடும் விமலனே**

இயேசுபிரானே! சிறிதும் குற்றமற்ற மனமும் நன்மையே விளையும் உள்ளமும் எனக்கு அமையுமாறு நீவிரே உம் மேன்மையான அருளை வழங்கி என்னைக் காத்தருள வேண்டும்.

அருளே வடிவானவரே தனியறையில் ஆள் அரவமற்ற நிலையில் என் மனம் தடம் புரளாமல் எப்போதும் உம்மை வணங்கி நன்னிலை அடையும் ஒழுக்கத்தை எனக்கு வழங்கியருள வேண்டும்.

**தீங்கெ னக்கெவன் செய்யினும்**
**தாங்கி நன்மை தனைச்செய**
**ஓங்கு நல்மனம் உதவுவாய்**

**வீங்கு பேரருள் வித்தகா**

இயேசுபிரானே! நல்லருளும் எதனோடும் ஒப்புமை கூறமுடியாத நல்லறிவும் நிறைந்தவரே நான் துன்புறுமாறும் மனக்கலக்கம் கொள்ளுமாறும் பிறர் செய்கின்ற துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ளும் மனத்தையும் தீமையே செய்தவர்களுக்கும் நான் நன்மை செய்யும் தெளிவான மனத்தையும் எனக்குத் தந்தருள வேண்டும்.

நான் செய்த பாவங்களை எல்லாம் யாரும் அறியக்கூடாது என்பதற்காக மனத்துக்குள் மூடி மறைத்துவிட்டேன். நான் சிறிதும் அறிவற்றவன் செய்த பாவங்களுக்கு அளவற்ற தண்டனையை அனுபவித்துவிட்டேன். நான் படும் துன்பங்களைப் பார்த்து என்மேல் இரக்கம் காட்டி நல்லருள் புரியவேண்டும்.

**வேத கீதம் விடாமலே**
**ஓதி யோதிஉள் ளன்பினால்**
**பாத பங்கயம் பரவவென்**
**மீதி ரக்கம்வை வேதனே**

இயேசுவே! வேதத்தில் பொருளானவரே! வேதத்தையும் வேதம் சார்ந்த பாடல்களையும் நான் மீண்டும் படித்தறியவும் உம்மேல் கொண்ட அன்பினால் உம்மைப் பாடவும் நீவிர்தான் எனக்கு அருள் கண்காட்டியருள வேண்டும். உம் அன்பில் உருகும் மனநிலையை நீவிர்தான் எனக்கு வழங்க வேண்டும்.

என் மனம் குற்றங்களின் வடிவானது. நான் துன்பங்கள் நிறைந்த உலகத்தில் இருந்து துன்பங்களை அனுபவிக்கிறேன். என்னைத் துன்பம் என்னும் பேய்கள் துன்புறுத்துகின்றன. இவ்வுலகம் எனக்குத் துன்பம் நிறைந்ததாக இருக்கிறது. இவ்வுலக வாழ்வில் இருந்து என்னை நீக்கி உம் அருள் வெளியில் என்னை வாழச் செய்யவேண்டும்.

**திரணம் நானொரு சிறியன்உள்**
**கரணம் ஓய்ந்துடல் கைவிட**
**மரண பாசம் வளைக்கையில்**
**சரண பங்கயம் தாஜயா**

### 14.2.7. எனக்கு அடைக்கலம் தருவாய்:

இறைவா! மேன்மையானவரே! உம் அருளின் முன்னால் நான் சிறு துரும்பானவன். என் உடல் உறுப்புகள், மனம். உயிர் எல்லாம் ஒடுங்கி ஒருநாள் செயல்படாமல் செய்கின்ற வேளையில் உம் மேன்மையான அருள் வெளியில் உம் பாதங்களை அடைக்கலமாக அடைந்து உம்முள் கலந்து பிறவியை ஒழிக்க அருள்புரிய வேண்டும்.

நீ சிலுவையில் அறையப்பட்ட போது உம்மை வேண்டி நின்ற கள்வனுக்கு அந்நிலையிலும் அருள் தந்தவரே! நீவிர் உம் மனத்தில் என்னையும் நினைத்து உமக்கு அடிமைப்பணி செய்யும் அடிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறிதும் குற்றம் இல்லாத நன்னிலையை நான் அடைய அருள்புரிய வேண்டும்.

**தழுவு சீவபுத் தகத்திலே**
**பிழைப டாமலென் பேரையும்**
**எழுதி வைத்திக ழாதுநீ**
**முழுதுங் காத்தருள் மூர்த்தியே**

அருளையே வரமாகக் கொண்டிருப்பவரே! உம் அருள் நிறைந்த உலகில் வாழத் தகுதியானவர்களின் பெயர்களை எழுதும் புத்தகத்தில் என் பெயரும் இடம்பெற நீவிரே அருள் செய்யவேண்டும். நான் நாயினும் கீழானவன் எனினும் எனக்கு உம் மேன்மையான அருளை வழங்கியருள வேண்டும்.

நான் சிறுபருவத்தவன். உம்மை முழுமையாக அறிந்து போற்றும் நிலையை அடையாதவன். அதனால் உம்மை அறிந்து போற்றவும் உம் மேலான அன்பு என் மனத்துள் நிலைத்திருக்கவும் நீவிரே அருள்புரிய வேண்டும்.

**சிறந்த வேதநற் செம்பொருள்**
**அறிந்தி டற்கென் அகத்தினைத்**
**திறந்து வைத்தருள் சிலுவைமீ (து)**
**இறந்து யிர்த்தஎன் யேசுவே**

சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தீர். ஆனால் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தீர். இயேசு பிரானே! உம்மேன்மையான புகழ் நிறைந்த திருமறையினை நான் மனத்தால் நன்றாக அறிந்து போற்றுமாறு நீவிர்தான் எனக்கு அருள் வழங்க வேண்டும்.

ஒளியின் வடிவானவரே! நான் வல்லமையாகக் கல்வி கற்கவேண்டும். நான் கற்ற கல்வியின் பயனால் உம்மை உணர்ந்து பற்றிக் கொள்ள வேண்டும். மனத்தில் குழப்பங்கள் இல்லாமல் என்னைத் தெளிவடையச் செய்ய வேண்டும்.

**அண்ண லேஉன தாலயம்**
**நண்ணி நல்லுணர் வோடுனை**
**எண்ணி யெண்ணி இறைஞ்சவுன்**
**கண்ணில் இன்னருள் காட்டுவாய்**

## 14.2.8. உனக்குச் சேவை செய்ய அருள்வாய்:

குறிப்புகள்

இயேசுவே! மேலானவனே! உம்முடைய ஆலயத்திற்குச் சென்று தெளிவான மனத்துடன் உம்மை வணங்குவதற்கு அருளவேண்டும். உம் நினைவில் நான் அமிழ்ந்திருக்குமாறு உம் அருள் நிறைந்த கண்களால் என்னைப் பார்த்தருள வேண்டும்.

என் தந்தையாக இருப்பவரே! இவ்வுலக வாழ்வில் நான் விரும்பிய பொருள்களை எல்லாம் எனக்குக் கிடக்குமாறும் அவற்றால் நான் மகிழ்ச்சியடையுமாறும் செய்தீர். நான் இறக்கும் நாள் வரைக்கும் உம் மேன்மை மிக்க திருவடிகளுக்கு அடிமைப் பணி செய்யும் நல்லருளை எனக்கு வழங்கியருள வேண்டும்.

**உம்ப ருக்கர சேயுனை**
**நம்பி னேனுனை நம்பினேன்**
**வெம்பி என்னுயிர் வீடுநாள்**
**செம்ப தத்துணை சேர்த்தியால்**

வானுலகத் தேவர்களுக்கெல்லாம் தலைவரே! நான் நன்னிலை அடைய உம்மையே நம்பி என்னை ஒப்படைத்திருக்கிறேன். என் உடல் தளர்ந்து மனம் ஓய்ந்து உடலைவிட்டு உயிர் பிரிகின்ற நாளில் உம் மேன்மை மிக்க திருவடிகளில் என்னைச் சேர்த்தருள வேண்டும்.

இயேசுவே! நன்மையின் வடிவமானவரே! மண்ணுலகில் வாழ்பவர்களும், என்னோடு இவ்வுலகில் பிறந்தவர்களும் நன்னிலை அடைந்து உம் உலகை அடையும் பொருட்டு எனக்கு நல்லருளை வழங்கியருள வேண்டும்.

**அகில லோகமு மநுதினம்**
**இகலி லாதுனை யேத்தியே**
**புகலி டம்பெறப் புனிதமார்**
**பகவனே கிருபை பாலியாய்**

தூய்மையின் வடிவமே! நீவிரே முழுமை என்று உலகம் எல்லாம் உம்மைப் பணிந்து நன்னிலை அடைந்து பிறவாப் பெருநிலை உடைய நீவிரே அருள் புரிவீராக.

நீவிரே உலகில் உள்ள பொருள்களையும் உலகத்தையும் படைத்தருளினீர்கள். உலகில் வாழும் மக்களின் பாவங்கள் எல்லாம் நீங்குமாறு இயேசு கொடுத்தருளிய இறைவனே! எப்போதும் உம் அருளுக்கு மேன்மை உண்டாகட்டும்.

**வேதம் வாழ்கமெய் வேதியர்**
**போதம் வாழ்கவிப் புன்சொலார்**
**கீதம் வாழ்ககி றித்துவின்**
**பாதம் வாழ்கபல் லூழியே**

உம் புகழைக் கூறும் வேதம் வாழட்டும். உன் வேதத்தைக் கற்று எடுத்துரைப்பவர்களும் அருள்வாக்கும், அருளுரையும் நிலைபெற்று வாழட்டும். என் சிறுமைத் தன்மை உடைய சொற்களால் அமைந்த பாடல்கள் வாழட்டும். இயேசுவே! உம் மேன்மை மிக்க திருவடிகள் வாழட்டும்.

**பாசாட வியூடு பதைத்துமனம்**
**வேசாறி விடாய்த்துயிர் வீடுவலோ**
**ஈசாநர தேகமி யைந்தபா**
**வாசாஅருள் ஞான வரோதயனே**

## 14.2.9. பாவங்களை மன்னித்து இரக்கம் காட்டுவாய்:

இறைவா! மனித உடலோடு வானுலகில் இருந்து பிறப்பெடுத்துப் பூமியில் அவதரித்தவரே! அருளே வடிவானவரே! அறிவு நிறைந்தவரே! உம்மை விடுத்து நான் ஆசைகள் அலையடிக்கும் உலகத்தில் புகுந்து உம்மை மறந்திருந்து உயிர்விடுவேனோ!

தெவிட்டாத அமுதமாக இருப்பவரே! இன்ன என்றும் இதனால் இதுவரும் என்றும் அறியாமல் நான் நிறையத் துன்பங்களைச் செய்துவிட்டேன். அவை எல்லாம் இப்போது என் கண்முன் நிழலாடுகின்றன. அவற்றால் வருத்தம் கொள்கிறேன். இந்நிலையில் நீவிர்தான் உம் அருளைத் தந்து காத்தருள வேண்டும்.

**நல்லானொரு தந்தையை நாடிவரும்**
**பொல்லாமக னிற்கொடி யேன்புலையேன்**
**எல்லாமறி யுந்திரு வுள்ளமிரங்**
**கல்லாயெனி லார்புகல் ஆண்டவனே!**

குணத்தில் சிறந்த தந்தையைத் தேடிவரும் கொடுமைத் தன்மையுடைய மகனினும் நான் கொடுமையான குணம் உடையவன் நான். தீமையே உருவானவன். அனைவருக்கும் அருள் வழங்கும் நீவிர்தான் எனக்கு அருளவேண்டும். உம்மையன்றி என்மேல் இரக்கம் காட்டுபவர் யார் இருக்கிறார்கள்?

வானவர்கள் வணங்கும் தன்மையரே! இறைவா! இனிய சொற்களைப் பேசும் பெண்களிடம் மோகம் கொண்டு அவர்கள் மேல் விருப்பம் கொண்டு என் நாட்களை எல்லாம் வீணாக்கிவிட்டேன். என்னை ஆட்கொள்ளும் பொருட்டு அருள்தந்து ஆதரிக்க வேண்டும்.

**அன்றஞ்சு றுதீநர காழவரும்**
**என்றஞ்சி மலங்கி யிடர்ப்படுவேன்**
**உன்றஞ்ச மலாலொரு தஞ்சமிலேன்**
**இன்றஞ்ச லெனாஅரு ளெம்பரனே!**

மேன்மையான புகழை உடையவரே! நான் உயிர் பிரியும் காலத்தில் முன்பு செய்த துன்பங்களினால் நரக உலகம் கிடைக்குமோ என்று துன்புறுவதையே வழக்கமாக கொண்டிருப்பேன். நீவிர் இல்லாமல் நான் எங்கு போவேன்? நீவிர்தான் நான் அடைக்கலமாக வேண்டிய இடம். இந்நிலையில், நான் இருக்கிறேன், அஞ்சாதே என்று நல்வார்த்தை சொல்லியருள வேண்டும்.

## 14.2.10. தொகுத்துக் காண்போம் :

எல்லையற்றுப் பரந்துள்ள இறைவன் அடியவர்களின் உள்ளங்களில் எளிமையாக வீற்றிருக்கின்றான் என்பதை அறிந்து கொண்டீர்கள்.

தன்முனைப்பின்றி அனைத்தும் அவனே என்று இறைவனைச் சரணாகதி அடையும்போது அனைத்தும் சித்திக்கும் என்ற நம்பிக்கையை இப்பாடல்கள் ஏற்படுத்துவதை அறிந்து கொண்டீர்கள்.

இறைவன் நல்லவர்களை மட்டுமே காப்பான் என்பது உண்மையன்று, தீமை செய்தோரையும் திருத்தி நல்வழிப்படுத்திக் காப்பான் என்பதை பராபரக்கண்ணியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் உணர்த்துவதை அறிந்து கொண்டீர்கள்.

உலக உயிர்கள் செய்கின்ற பாவங்களை எல்லாம் தன் தோளில் சுமந்து கொண்டு இரட்சிப்பதற்காகவே இறைவன் அவதாரம் செய்ததைத் தெரிந்து கொண்டீர்கள்.

பாவமூட்டைகளைச் சுமந்து கொண்டிருக்க வேண்டாம் என்றும், என் பாதங்களில் அவற்றை இறக்கி வைத்துவிட்டுத் தூய மனதுடன் வாழவும் இறைவனுக்குச் சேவை செய்யவும் வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை வேண்டுவதைத் தெரிந்து கொண்டீர்கள்.

செய்த தவறுகளையும் பாவங்களையும் உணர்ந்து கொண்டு இறைவனிடம் பாவமன்னிப்பு வேண்டி நிற்கும்போது அவை மன்னிக்கப் படுகின்றன என்பதை இரட்சண்ய மனோகரத்தின் வழியாகத் தெரிந்து கொண்டீர்கள்.

## 14.2.11. சோதித்து அறியும் வினாக்கள்:

1. பராபரத்தின் இயல்பையும் இயக்கத்தையும் விளக்குக.
2. இறைவன் ஈடுஇணையில்லாதவன் என்னும் கூற்றை மெய்ப்பிக்க.
3. உடல் நிலையில்லாதது என்பதை குணங்குடி மஸ்தான் எவ்வாறு அறிவிக்கின்றார்?
4. தீமைகளிலிருந்து தன்னை விடுவிக்குமாறு அடியார் எவ்வாறு இறைவனிடம் வேண்டுகின்றார்?

6. இறைவழிபாட்டில் தனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்துமாறு அடியார் எவ்விதம் வேண்டுகின்றார்?

7. பாவமன்னிப்புப் பற்றி எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை யாது கூறுகிறார்?

8. இறைவனிடம் அடைக்கலம் அடைவது குறித்து இரட்சண்ய மனோகரம் யாது கூறுகிறது?

## 14.2.12. பயிற்சி வினாக்கள்:

1. எல்லையற்ற பரவெளியாகப் பரந்துள்ள இறைவனின் ஆற்றல்களை குணங்குடியார் எவ்விதம் வெளிப்படுத்துகின்றார்?

2. குணங்குடி மஸ்தானின் பராபரக்கண்ணிப் பாடல்கள் நமக்கு எதனை அறிவிக்கின்றன?

3. எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை இரட்சண்ய மனோகரத்தில் வேண்டுவன யாவை?

4. பாவமன்னிப்புக் குறித்தும் இறைவழிபாடு குறித்தும் இரட்சண்ய மனோகரம் உணர்த்துவன யாவை?

## 14.2.13. மேலும் பயில்வதற்கான நூல்கள்:

1. கே.இரா.கமலாமுருகன், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், சாரதா பதிப்பகம், சென்னை, 2000.

2. முனைவர் கதிர் முருகு, இரட்சண்ய மனோகரம் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2000.

குறிப்புகள்

**தொலைநிலைக் கல்வி இயக்கம்**
**இளங்கலை இலக்கியம் -(பிலிட். )**
**இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்**
**தாள் 10731 - சமய இலக்கியம்**
**மாதிரி வினாத்தாள்**

**பகுதி – அ**

**மதிப்பெண்:75** **நேரம்: 3 மணி(10 x 2 =20)**

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.**

1. 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' - இக்கூற்று யாருடையது? எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?
2. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' யார்? அவர் பாடியவை எவையெவை?
3. திருவாலவாய் பதிகம் யாரால் எங்கு பாடப்பட்டது?
4. திருநாவுக்கரசரின் திருப்புத்தூர் பதிகம் எத்திருமுறையில் இடம்பெற்றுள்ளது? இத்தலத்தின் இறைவன் பெயர் என்ன?
5. இராமபிரானால் எழுந்தருளுவித்த திருத்தலம் எது? இத்தலத்தைப் பாடிய தேவார முதலி யார்?
6. திருப்பூவணப் பதிகத்தில் பல்வேறு வடிவங்களில் இறைவனைக் கண்டு வழிபட்டவர் யார்?
7. மணிவாசகரின் திருவாசகம் எத்தனையாவது திருமுறையாக இடம்பெற்றுள்ளது? இதில் எத்தனை பதிகங்கள் இடம்பெற்றுள்ளன?
8. தத்துவ சிந்தனை மிகுந்த பாடல்களைப் பாடிய சித்தர் யார்?
9. சோணசைலம் எனச் சுட்டப்படும் திருத்தலம் எது? இதன் மீது மாலை பாடியவர் யார்?
10. இரட்சண்ய மனோகரம் என்னும் நூலைப் படைத்தவர் யார்? அதன் பாடுபொருள் என்ன?

**பகுதி – ஆ**

(5x5=25)

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

11. (அ). ஆண்டாள் மழை வேண்டிப் பாடும் தன்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ). பாவை நோன்பின் சிறப்பினை திருப்பாவை எவ்விதம் பறைசாற்றுகின்றது?

12. (அ) திருப்புத்தூர் திருப்பதிகம் உணர்த்தும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகரின் எண்ணப்பதிகம் எதனை விளக்குகின்றது?

13. (அ) திருப்பூவணத்து வடிவேறு எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் இடம்பெற்றுள்ள இயற்கை வளத்தைக் காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சிவப்பிரகாசரின் சோணசைலமாலையில் திருத்தலப் பெருமை பதிவாக்கப்பட்டுள்ள தன்மையை விவரி

14. (அ) மணிவாசகரின் யாத்திரை பத்து பதிகம் உரைப்பன யாவை?

(அல்லது)

(ஆ) திருமால் செய்த வழிபாட்டை திருவீராமேச்சுரப் பதிகம் கொண்டு விளக்குக.

15. (அ) இரட்சண்ய மனோகரத்தில் இயேசுவிடம் விண்ணப்பம் செய்யப் படுவன யாவை?

(அல்லது)

(ஆ) தத்துவங்களைச் சொல்வது சித்தரின் வேலை - இக்கூற்றை மெய்ப்பிக்க.



**பகுதி - இ**

(3x10=30)

**ஏதேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.**

16. திருமூலர் தன் வரலாற்றை எடுத்துரைக்கும் பாங்கினை விவரி.

17. திருநாவுக்கரசரின் திருவாலவாய்ப் பதிகங்கள் இரண்டின் பொருண்மையை விளக்குக.

18. குதம்பைச் சித்தர் பாடல்களின் தத்துவநெறியை விவரி.

19. குணங்குடி மஸ்தான் சாகிபு பராபரக்கண்ணியில் இறைவனிடம் வேண்டுவன யாவை

20. தெய்வமணிமலையில் இராமலிங்க வள்ளலார் முருகனிடம் வேண்டி நிற்கும் வரங்களை விவரி.